II இராஜாக்கள் - முன்னுரை

காலமும் இடமும்

1இராஜாக்கள், 2இராஜாக்கள் ஆகிய இரண்டு புஸ்தகங்களும் பாலஸ்தீன தேசத்தில் சுமார் கி.மு. 1046 - 606 ஆகிய வருஷக் காலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ராஜாக்களின் ஆட்சிக் காலத்திலும் ஊழியம் செய்து வந்த தீர்க்கதரிசிகள் அல்லது சம்பிரதிகள் அந்தந்தக் காலங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எழுதினார்கள். இந்த ஆவணங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து, பிற்காலத்து ஆசிரியர்கள் அதை "ராஜாக்கள்" என்னும் ஒரே புஸ்தகமாகத் தொகுத்தார்கள். கி.மு. 294 - 289 ஆகிய வருஷங்களில் எபிரெய மொழியின் பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப் பட்டு, செப்துவஜிந்த் பதிப்பு வெளிவந்தது. செப்துவஜிந்தில் ராஜாக்கள் புஸ்தகம் 1இராஜாக்கள், 2இராஜாக்கள் என இரண்டு புஸ்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ராஜாக்கள் புஸ்தகங்களைத் தொகுத்து எழுதியவர்கள் ஏசாயா, எரேமியா ஆகியோர் தீர்க்கதரிசிகளாக இருக்க வேண்டும். கி.மு. 743 - 683, கி.மு. 782 - 606 ஆகிய வருஷக்காலத்தில் ராஜாக்கள் புஸ்தகம் தொகுத்து நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆசிரியர்

ஏசாயாவும், எரேமியாவும் இஸ்ரவேலுடைய ராஜாக்களின் நடபடிகளைத் தொகுத்தார்கள். நாத்தான், காத், இத்தோ, அகியா, யெகூ ஆகியோர் ராஜாக்களின் நடபடிகளை அந்தந்த காலத்தில் எழுதி வைத்திருந்தார்கள். (2நாளா 9:29; 2நாளா 12:15; 2நாளா 20:34; 2நாளா 26:22; 2நாளா 32:22).

யூதருடைய பாரம்பரிய வரலாற்றின் பிரகாரம், எரேமியாவே ராஜாக்கள் புஸ்தகத்தின் தொகுப்பாசிரியர் என்பது தெரிய வருகிறது. ஆனால் 2நாளா 32:32 ஆவது வசனத்தில் ஏசாயா இதை எழுதியதாகக் குறிப்பு உள்ளது. எசேக்கியாவின் காலம் வரையிலும் ஏசாயா ராஜாக்களின் புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும். (1இராஜா 1:1 - 2இராஜா 20:21) அதற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து சிறையிருப்புக்காலம் வரையிலுமுள்ள வரலாற்றை எரேமியா எழுதி இந்தப் புஸ்தகத்தை நிறைவு செய்திருக்க வேண்டும். (2இராஜா 21-25).

மையக்கருத்து

சாலொமோனின் காலத்திலிருந்து பாபிலோனின் சிறையிருப்புக் காலம் வரையிலுமுள்ள இஸ்ரவேல், யூதா, ஆகிய ராஜாக்களின் வரலாறு. இதில் 413 வருஷங்களில் நடைபெற்ற வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

தாவீதின் ராஜ்யம் தொடர்ந்து நிலைத்து நிற்காமல் போனதற்குக் காரணமும், இஸ்ரவேல் தேசம் அந்நியருடைய சிறையிருப்புக்குப் போனதற்குக் காரணமும் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 25

வசனங்கள் - 719

கேள்விகள் - 118

புதிய தீர்க்கதரிசனங்கள் - 27

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 560

கட்டளைகள் - 118

வாக்குத்தத்தங்கள் - 3

முன்னறிவிப்புக்கள் - 65

2இராஜாக்கள் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (2இராஜா 1:3,15; 2இராஜா 2:21; 2இராஜா 3:16; 2இராஜா 4:43; 2இராஜா 7:1; 2இராஜா 8:1,10; 2இராஜா 9:1,6,26; 2இராஜா 10:30; 2இராஜா 19:6,20; 2இராஜா 20:1,5,16; 2இராஜா 21:10; 2இராஜா 22:15; 2இராஜா 23:27)

II இராஜாக்கள் - முன்னுரை

பொருளடக்கம்

I. அகசியாவின் ஆட்சி - இஸ்ரவேலின் ஒன்பதாவது இராஜா - இரண்டு வருஷங்கள்

1. மோவாபின் கலமும் அகசியாவின் நோயும் (1:1-2)
2. அகசியாவின் மரணத்தை எலியா முன்குறித்து கூறுகிறார் (1:3-8)
3. வானத்திலிருந்து அக்கினியிறங்கி 102 பேரை பட்சித்தது (1:9-14)
4. எலியா தன்னுடைய தீர்க்கதரிசனத்தை அகசியா விடம் கூறுகிறான் (1:15-16)
5. அகசியாவின் மரணம் - யோராம் அரசனானான் - இஸ்ரவேலின் பத்தாவது இராஜா (1:17-18)
6. எலியா எடுத்துக்கொள்ளப்படுவதை வெளிப்படுத்துகிறான் (2:1-6)
7. யோர்தான் இருபாகமாக பிரிந்தது (2:7-8)
8. எலியாவினுடைய ஆவியின் வரம், எலிசாவுக்கு இரட்டிப்பாக கிடைத்தது (2:9-10)
9. எலியா எடுத்துக்கொள்ளப்படுகிறான் (2:11-12)

II. எலிசாவின் ஊழியம்

1. எலிசாவின் முதலாவது அற்புதம் (2:13-15)
2. தீர்க்கதரிசிகளின் அவிசுவாசம் (2:16-18)
3. தண்ணீரும் வறண்ட நிலமும் ஆரோக்கியமாயிற்று - இரண்டாவது அற்புதம் (2:19-22)
4. பிள்ளைகள் நிந்தித்ததற்கு சாபம் - மூன்றாவது அற்புதம் (2:23-25)
5. யோராமின் இராஜ்ஜியபாரமும் அவனுடைய குணமும் - இஸ்ரவேலின் பத்தாவது இராஜா (3:1-3)
6. மோவாபின் கலகம் - யோராமும் யோசபாத்தும் உடன்படிக்கை பண்ணுகிறார்கள் (3:4-9)
7. யோராமும் யோசபாத்தும் உடன்படிக்கை பண்ணுவதை எலிசா ஏற்றுக் கொள்ள வில்லை (3:10-15)
8. மழையில்லாமல் தண்ணீரும் வெற்றியின் வாக்குத்தத்தமும் - 4, 5ஆவது அற்புதங்கள் (3:16-20)
9. தண்ணீர் இரத்தம்போல சிவப்பாக காணப்பட்டது - ஆறாவது அற்புதம் (3:21-23)
10. மோவாபியரின் தோல்வி (3:24-27)
11. விதவையின் எண்ணெய் பெருகிற்று (4:1-7)
12. சூனேமில் கனம்பொருந்திய ஸ்திரீ எலிசாவுக்கு விருந்து உபசரிக்கிறாள் (4:8-11)
13. சூனேமிய ஸ்திரீக்கு ஒரு குழந்தை பிறக்கிறது - எட்டாவது அற்புதம் (4:12-17)
14. சூனேமிய ஸ்திரீயின் குழந்தையின் வியாதியும் மரணமும் (4:18-21)
15. கர்மேல் மலையில் சூனேமிய ஸ்திரீ எலிசாவைக் கண்டுபிடிக்கிறாள் (4:22-27)
16. சூனேமிய ஸ்திரீயின் வீட்டிற்கு எலிசா அவளோடு வருகிறான் (4:28-31)
17. சூனேமிய ஸ்திரீயின் குமாரனை எலிசா உயிரோடு எழுப்புகிறான் - ஒன்பதாவது அற்புதம் (4:32-37)
18. பானையிலிருந்த விஷத்தை எலிசா அகற்றுகிறான் - பத்தாவது அற்புதம் (4:38-41)
19. நூறு மனுஷருக்கு உணவு பெருகுகிறது - 11வது அற்புதம் (4:42-44)

II இராஜாக்கள் - முன்னுரை

20. நாகமானின் குஷ்டரோகத்தை குணப்படுத்துகிறான் - 12வது அற்புதம் (5:1-14)

21. எலிசாவுக்கு வெகுமதி கொடுக்க நாகமான் திரும்பி வந்து இஸ்ரவேலின் தேவனிடத்தில் தனக்குள்ள பக்தியை வெளிப்படுத்துகிறான் (5:15-19)

22. கேயாசின் பொய்யும், ஏமாற்றும் (5:20-24)

23. கேயாசின் ஏமாற்று வெளிப்படுவதும், அவனுக்கு வாதையும் (5:25-27)

24. எலிசா இரும்பை மிதக்க வைக்கிறான் (6:1-7)

25. எட்டாவது சீரிய யுத்தம் - இரகசியங்களை வெளிப்படுத்துதல் - 16, 17, 18 ஆகிய அற்புதங்கள் (6:8-12)

26. ஒன்பதாவது சீரிய யுத்தம் - எலிசா தன் ஊழியக்காரரின் கண்களைத் திறக்கிறான் - பத்தொன்பதாவது அற்புதம் (6:13-17)

27. எலிசா சீரியருடைய சேனைகளின் கண்களை குருடாக்கி அவர்களைப் பிடிக்கிறான் - 20, 21 ஆகிய அற்புதங்கள் (6:18-19)

28. எலிசா சீரியருடைய சேனையின் குருடை குணமாக்குகிறான் - 22வது அற்புதம் (6:20-23)

29. சீரியர் சமாரியாவை முற்றுகையிடுகிறார்கள் - இஸ்ரவேலில் மனுஷரை தின்கிறார்கள் - பத்தாவது சீரிய யுத்தம் (6:24-29)

30. இந்த பிரச்சனையினால் யோராம் எலிசாவை குற்றப்படுத்துகிறான் (6:30-31)

31. எலிசா அறிவை உணர்த்தும் வசனத்தை பயன்படுத்துகிறான் (6:32-33)

32. அவிசுவாசிகளுக்கு உணவும் மரணமும் (7:1-2)

33. சீரியருடைய இராணுவம் வெறுமையாக இருப்பதை நான்கு குஷ்டரோகிகள் காண்கிறார்கள் (7:3-5)

34. சீரியருடைய குழப்பமும் தப்பித்து ஓடுவதும் (7:6-8)

35. நான்கு குஷ்டரோகிகள் இராஜாவிடம் நடந்ததைக் கூறுகிறார்கள் - விசாரணை ஆரம்பமாகிறது (7:9-15)

36. எலிசாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது (7:16-20)

37. ஏழு வருஷங்களாக வானம் அடைக்கப் படுகிறது (8:1-2)

38. சூனாமிய ஸ்திரீயின் சுதந்தரத்தை யோராம் மீட்டுத் தருகிறான் (8:3-6)

39. வெளிப்படுத்துதலின் மூன்று அற்புதங்கள் (8:7-15)

III. யூதாவின் இராஜா

1. யோராமின் ஆட்சி, யூதாவின் ஐந்தாவது இராஜா, எட்டு வருஷங்கள்

    (1) அவனுடைய குணாதிசயங்கள் (8:16-19)

    (2) ஏதோமியரும் லிப்னா பட்டணத்தாரும் கலகம் பண்ணினார்கள் (8:20-22)

    (3) யோராமின் மரணம் - அகசியா இராஜாவானான் (8:23-24)

2. அகசியாவின் ஆட்சி - யூதாவின் ஆறாவது இராஜா - ஒரு வருஷம்

    (1) அவனுடைய குணாதிசயங்கள் (8:25-27)

    (2) இஸ்ரவேலின் யுத்தங்களில் யோராமுக்கு அகசியா உதவி செய்கிறான் - பதினொறாவது சீரிய யுத்தம் (8:28-29)

II இராஜாக்கள் - முன்னுரை

IV. யெகூவின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினொறாவது இராஜா - இருபத்தெட்டு வருஷங்கள்

1. அவனுடைய அபிஷேகம் (9:1-3)

2. ஆகாபின் வீட்டார் அனைவரையும் அழிக்கும் யெகூவின் கட்டளை (9:4-10)

3. இஸ்ரவேலின் இராணுவத்தினர் யெகூவை இராஜாவாக அறிவிக்கிறார்கள் (9:11-13)

4. இஸ்ரவேலின் இராஜாவாகிய யோராமை யெகூ கொன்றுபோடுகிறான் - உள்நாட்டு குழப்பம் (9:14-26)

5. யூதாவின் இராஜாவாகிய அகசியாவை யெகூ கொன்று போடுகிறான் (9:27-29)

6. யெகூ யேசபேலை கொன்றுபோடுகிறான் (9:30-37)

7. யெகூ ஆகாபின் குமாரரை கொன்று போடுகிறான் (10:1-11)

8. ஆகாபின் குமாரத்தியின் சந்ததியாரையும் யூதாவின் பிரபுக்களையும் யெகூ கொன்றுபோடுகிறான் (10:12-14)

9. ஆகாபின் வீட்டாரில் மீதமுள்ளோரை யெகூ கொன்று போடுகிறான் (10:15-17)

10. பாகாலை வழிபடுவோர் எல்லோரையும் யெகூ கொன்று போடுகிறான் - அவர்களுடைய தெய்வங்களைச் சுட்டெரிக்கிறான் (10:18-28)

11. யெகூ விக்கிரகாராதனையை தொடர்கிறான் (10:29-31)

12. இஸ்ரவேலின்மீது தேவன் தமது நியாயத்தீர்ப்பை துவங்குகிறார் - தேசத்தை விட்டு அவர்களைத் துரத்துகிறார் (10:32-33)

13. யெகூவின் மரணம் - யோவாகாஸ் இராஜாவானான் - இஸ்ரவேலின் பன்னிரெண்டாவது இராஜா (10:34-36)

V. யூதாவின் இராஜாக்கள்

1. அத்தாலியாளின் அரசாட்சி - யூதாவிலும் இஸ்ரவேலிலும் ஒரே பெண் ஆட்சியாளர்

   (1) ஆட்சிக்கு வருவதும் அவளுடைய சுபாவமும் (11:1-3)

   (2) யோய்தாவின் கலகம் (11:4-12)

   (3) அத்தாலியாள் கொலைசெய்யப் படுகிறாள் (11:13-16)

   (4) யோய்தாவின் மூலமாக எழுப்புதல் (11:17-21)

2. யோவாஸ் அல்லது யோவாகாசின் ஆட்சி - யூதாவின் ஏழாவது இராஜா - நாற்பது வருஷங்கள்

   (1) யூதாவின் மூன்றாவது நல்ல இராஜா (12:1-3)

   (2) விசுவாசமில்லாத ஆசாரியர்கள் (12:4-8)

   (3) தேவாலயம் பழுதுபார்க்கப்படுகிறது (12:9)

   (4) தேவாலய பராமரிப்புக்கு வசூலித்த காணிக்கைகள் (12:10-16)

   (5) யோவாஸ் எருசலேமை மீட்கிறான் - பன்னிரெண்டாவது சீரிய யுத்தம் (12:17-18)

   (6) யோவாசின் மரணம் - அமத்சியா இராஜாவானான் - யூதாவின் எட்டாவது இராஜா (12:19-21)

II இராஜாக்கள் - முன்னுரை

VI. இஸ்ரவேல் யூதா ஆகியவற்றின் இராஜாக்கள்

1. யோவாகாசின் ஆட்சி - இஸ்ரவேலின் பன்னிரெண்டாவது இராஜா - பதினேழு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் அவனுடைய சுபாவமும் (13:1-2)

(2) சீரியர்கள் இஸ்ரவேலரை ஒடுக்குகிறார்கள் - பதினான்காவது சீரிய யுத்தம் (13:3-7)

(3) யோவாகாசின் மரணம் - யோவாஸ் இராஜாவானான் - இஸ்ரவேலின் பதிமூன்றாவது இராஜா (13:8-9)

2. யோவாசின் ஆட்சி - இஸ்ரவேலின் பதிமூன்றாவது இராஜா - பதினாறு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் அவனுடைய சுபாவமும் (13:10-11)

(2) யோவாசின் மரணம் - இரண்டாம் யெரொபெயாம் இராஜாவானான் - இஸ்ரவேலின் பதினான்காவது இராஜா (13:12-13)

(3) எலிசா வியாதியாக இருந்தபோது யோவாஸ் அவனை வந்து சந்திக்கிறான் - வெளிப்படுத்தலும், தீர்க்கதரிசனமும் (13:14-19)

(4) எலிசாவின் மரணம் - பிரேதம் எலிசாவின் எலும்புகளின்மேல் பட்டபோது அவன் உயிரோடு எழுந்தான் (13:20-21)

(5) இஸ்ரவேலின் இராஜாவாகிய யோவாகாசின் வெற்றிகள் (13:22-25)

3. அமத்சியாவின் ஆட்சி - யூதாவின் எட்டாவது இராஜா - இருபத்தைந்து வருஷங்கள்

(1) யூதாவின் நான்காவது நல்ல இராஜா (14:1-7)

(2) இஸ்ரவேலின் யோவாகாசோடு யுத்தம் - உள்நாட்டு குழப்பம் (14:8-14)

(3) யோவாகாசின் மரணம் (14:15-16)

(4) அமத்சியாவின் மரணம் - அசரியா அல்லது உசியா இராஜாவானான் (14:17-22)

4. இரண்டாம் யெரொபெயாமின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினான்காவது இராஜா - நாற்பத்தொரு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் (14:23-24)

(2) யோனாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது - பதினைந்தாவது சீரிய யுத்தம் (14:25-27)

(3) இரண்டாம் யெரொபெயாமின் மரணம் - சகரியா இராஜாவானான் (14:28-29)

5. அசரியா அல்லது உசியாவின் ஆட்சி - யூதாவின் ஒன்பதாவது இராஜா - ஐம்பத்திரண்டு வருஷங்கள்

(1) யூதாவின் ஐந்தாவது நல்ல இராஜா (15:1-4)

(2) உசியாவின் குஷ்டரோகம் (15:5)

(3) உசியாவின் மரணம் - யோதாம் இராஜாவானான் (15:6-7)

6. சகரியாவின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினைந்தாவது இராஜா - ஆறு மாதங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் (15:8-9)

(2) சகரியாவின் மரணம் - தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் (15:10-12)

7. சல்லூமின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினாறாவது இராஜா - ஒரு மாதம் - உள்நாட்டு குழப்பம் (15:13-15)

8. மெனாகேமின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினேழாவது இராஜா - பத்து வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் - உள்நாட்டு குழப்பம் (15:16-18)

(2) இஸ்ரவேலின்மீது அசீரியாவின் முதலாவது படையெடுப்பு (15:19-20)

(3) மெனாகேமின் மரணம் - பெக்காகியா இராஜாவானான் (15:21-22)

9. பெக்காகியாவின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினெட்டாவது இராஜா - இரண்டு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் (15:23-24)

(2) பெக்காகியாவின் மரணம் - உள்நாட்டு குழப்பம் (15:25-26)

10. பெக்காவின் ஆட்சி - இஸ்ரவேலின் பத்தொன்பதாவது இராஜா - இருபது வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் (15:27-28)

(2) இஸ்ரவேலின்மீது அசீரியாவின் இரண்டாவது படையெடுப்பு (15:29)

(3) பெக்காவின் மரணம் - ஓசெயா இராஜாவானான் - உள்நாட்டு குழப்பம் (15:30-31)

VII. யூதாவின் இராஜாக்கள்

1. யோதாமின் ஆட்சி - யூதாவின் பதினொறாவது இராஜா - பதினாறு வருஷங்கள்

(1) யூதாவின் ஆறாவது நல்ல இராஜா (15:32-35)

(2) பதினாறாவது சீரிய யுத்தம் (15:36-37)

(3) யோதாமின் மரணம் - ஆகாஸ் இராஜாவானான் - யூதாவின் பன்னிரெண்டாவது இராஜா (15:38)

2. ஆகாசின் ஆட்சி - யூதாவின் பன்னிரெண்டாவது இராஜா - பதினாறு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் (16:1-4)

(2) உள்நாட்டு குழப்பம் - யூதா அல்லது இஸ்ரவேலோடு சீரியாவின் கடைசி யுத்தம் (16:5-6)

(3) ஆகாஸ் அசீரியாவோடு உடன்படிக்கை பண்ணுகிறான் (16:7-8)

(4) மூன்றாவது அசீரிய படையெடுப்பு (16:9)

(5) ஆகாசின் விக்கிரகாராதானையின் பலிபீடம் (16:10-16)

(6) ஆகாஸ் தேவாலயத்தை அசுசிப்படுத்துகிறான் (16:17-18)

(7) ஆகாசின் மரணம் - எசேக்கியா இராஜாவானான் - யூதாவின் பதிமூன்றாவது இராஜா (16:19-20)

II இராஜாக்கள் – முன்னுரை

VIII. அசீரியர் இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தாரைச் சிறைபிடித்துச் செல்லுகிறார்கள்

1. ஓசெயாவின் ஆட்சி - இஸ்ரவேலின் இருபதாவது இராஜா

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும் (17:1-2)

(2) இஸ்ரவேலரின்மீது அசீரியரின் நான்காவது படையெடுப்பு (17:3)

(3) இஸ்ரவேலரின்மீது அசீரியரின் ஐந்தாவது படையெடுப்பு - இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தாரை அசீரியர் சிறைப்பிடித்துச் செல்லுகிறார்கள் (17:4-6)

2. இஸ்ரவேலர் சிறைப்பிடித்து செல்லப் பட்டதற்குக் காரணமான பத்து பாவங்கள் (17:7-12)

3. இஸ்ரவேலரோடு தேவன் மன்றாடியது அவர்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தியது - இஸ்ரவேலரின் பதினெட்டு பாவங்கள் (17:13-18)

4. யூதாவும் தன்னுடைய பாவங்களுக்காக சிறையாக கொண்டுபோகப்படுவாள் (17:19-20)

5. தேவனுடைய நீதியினால் இஸ்ரவேல் தண்டிக்கப்பட்டது (17:21-23)

6. இஸ்ரவேலின் பட்டணங்களில் அசீரியர்கள் மறுபடியும் ஜனங்களைக் குடியமர்த்தினார்கள் - புதிய ஏற்பாட்டுக்கால சமாரியரின் வரலாறு ஆரம்பம் (17:24)

7. இஸ்ரவேலில் புதிதாக குடி பெயர்ந்துள்ளவர்கள் மத்தியில் தேவன் சிங்கங்களை அனுப்பினார் (17:25-26)

8. இஸ்ரவேலின் தேவனை சமாதானப் படுத்துவதற்கு அசீரியரின் பரிகாரம் (17:27-28)

9. விக்கிரகாராதனை செய்வதற்காக தேவன் இஸ்ரவேலை தண்டித்தார் - அவர்கள் அதே பாவத்தை தொடர்ந்து செய்கிறார்கள் (17:29-41)

IX. யூதாவின் இராஜாக்கள் - இஸ்ரவேலர் சிறைப்பட்டுப் போனதற்கும் யூதா சிறையாக போவதற்கும் இடைப்பட்ட காலம்

1. எசேக்கியாவின் ஆட்சி - யூதாவின் பதிமூன்றாவது இராஜா - இருபத்தொன்பது வருஷங்கள்

(1) யூதாவின் ஏழாவது நல்ல இராஜா (18:1-3)

(2) எசேக்கியாவின்கீழ் எழுப்புதல் (18:4-6)

(3) எசேக்கியா அசீரியாவுக்கு எதிராக கலகம் பண்ணுகிறான் (18:7)

(4) எசேக்கியா பெலிஸ்தரை முறியடிக்கிறான் (18:8)

(5) எசேக்கியா யூதாவில் நான்காம் வருஷம் ஆட்சி செய்தபோது அசீரியர் இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தாரையும் சிறைப் பிடித்துச் சென்றார்கள் (18:9-12)

(6) பத்து வருஷ சமாதானத்தின் முடிவு - யூதாவின்மீது அசீரியரின் முதலாவது படையெடுப்பு (18:13)

(7) எசேக்கியா கீழ்ப்படிந்து அசீரியருக்கு பகுதிப்பணம் கட்டுகிறான் - ஆனால் அது போதவில்லை (18:14-16)

(8) யூதா நிந்திக்கப்பட்டது (18:17-25)

(9) யூதாவின் பதில் (18:26)

(10) அசீரியர் தேவனை நிந்தித்தார்கள் (18:27-37)

(11) உதவிக்காக எசேக்கியா தேவனை நோக்கிப் பார்த்தான் (19:1-4)

(12) அசீரியர் தோல்வியடைவார்கள் என்னும் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் (19:5-7)

II இராஜாக்கள் - முன்னுரை

(13) சனகெரிப் தேவனைத் தூஷிக்கிறான் (19:8-13)

(14) எசேக்கியா மறுபடியும் ஜெபிக்கிறான் (19:14-19)

(15) ஏசாயாவின் இரண்டாவது தீர்க்கதரிசனம் - அசீரியர் தோல்வியடைவார்கள் (19:20-34)

(16) அசீரியர்கள் அற்புதத்தினால் தோல்வியடைந்தார்கள் (19:35-37)

(17) எசேக்கியாவின் வியாதியும் அவன் குணமாவதுபற்றிய தீர்க்கதரிசனமும் (20:1-7)

(18) எசேக்கியாவின் குணமாதலுக்கு அற்புத அடையாளம் (20:8-11)

(19) யூதாவின் சிறையிருப்பைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனம் (20:12-19)

(20) எசேக்கியாவின் மரணம் - மனாசே இராஜாவானான் (20:20-21)

2. மனாசேயின் ஆட்சி - யூதாவின் பதினான்காவது இராஜா - ஐம்பத்தைந்து வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் அவனுடைய பதினாறு பாவங்களும் (21:1-9)

(2) மனாசேயின்மீது நியாயத்தீர்ப்பு பற்றிய தீர்க்கதரிசனம் (21:10-15)

(3) மனாசேயின் தொடர்ந்த பாவம் (21:16)

(4) மனாசேயின் மரணம் - ஆமோன் இராஜாவானான் (21:17-18)

3. ஆமோனின் ஆட்சி - யூதாவின் பதினைந்தாவது இராஜா - இரண்டு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் அவனுடைய குணாதிசயமும் (21:19-22)

(2) ஆமோனின் மரணம் - யோசியா இராஜாவானான் - உள்நாட்டு குழப்பம் (21:23-26)

4. யோசியாவின் ஆட்சி - யூதாவின் பதினாறாவது இராஜா - முப்பத்தொரு வருஷங்கள்

(1) யூதாவின் எட்டாவது இராஜாவும் கடைசி இராஜாவும் (22:1-2)

(2) தேவாலயம் பழுதுபார்க்கப்பட்டது (22:3-7)

(3) நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டது (22:8-10)

(4) பாவம் உணர்த்தப்படுகிறது - உண்மையான மனந்திரும்புதல் (22:11-14)

(5) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு பற்றிய உல்தாளின் தீர்க்கதரிசனம் (22:15-20)

(6) ஜனங்களுக்கு நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுகிறது (23:1-2)

(7) யோசியா தேவனோடு செய்து கொண்ட உடன்படிக்கை (23:3)

(8) மேலும் இருபது சீர்திருத்தங்கள்

(அ) பாகால் ஆராதனையும் அதன் ஆசாரியர்களும் அழிக்கப் பட்டார்கள் (23:4-6)

(ஆ) இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப்போட்டான் (23:7)

(இ) விக்கிரகாராதனையின் மேடைகளை இடித்துப்போட்டான் (23:8-9)

II இராஜாக்கள் - முன்னுரை

(ஈ) மோளேகுக்கு தீக்கடக்கப் பண்ணியதை அழித்தான் (23:10)

(உ) சூரிய ஆராதனையையும் அதன் குதிரைகளையும் இரதங்களையும் அக்கினியில் சுட்டெரித்தான் (23:11)

(ஊ) விக்கிரகராதனையின் பலிபீடங்களை அழித்தான் (23:12)

(எ) மற்ற விக்கிரக தெய்வங்களை அழித்தான் (23:13-14)

(ஏ) பெரொபெயாமின் பலிபீடத்தையும் பெத்தேலிலிருந்த மேடையையும் அழித்தான் (23:15-18)

(ஐ) சமாரியா எங்குமுள்ள மேடைகளை அழித்தான் - விக்கிரகாராதனையின் ஆசாரியர்களைக் கொன்றான் (23:19-20)

(ஒ) பஸ்கா பண்டிகையைப் புதுப்பித்தான் (23:21-23)

(ஓ) அஞ்சனக்காரர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் அழித்தான் (23:24-25)

(9) யோசியாவின் மறுமலர்ச்சிக்கு நடுவிலும் யூதாவிற்கு பிரச்சனை வந்தது (23:26-28)

(10) யோசியாவின் மரணம் - யோவாகாஸ் இராஜாவானான் (23:29-30)

5. யோவாகாசின் ஆட்சி - யூதாவின் பதினேழாவது இராஜா - மூன்று மாதங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும் (23:31-32)

(2) இஸ்ரவேலும் எகிப்தும் நடத்திய நான்காவது யுத்தம் - யோவாகாசின் மரணம் - யோயாக்கீம் இராஜாவானான் (23:33-35)

X. யூதா பாபிலோனுக்குச் சிறைபிடித்துச் செல்லப்பட்டது

1. யோயாக்கீமின் ஆட்சி - யூதாவின் பதினெட்டாவது இராஜா - பதினொரு வருஷங்கள் (23:36-37)

2. யோயாக்கீமின் கீழ்ப்படிதலும் பாபிலோனுக்கு எதிரான கலகமும் (24:1)

3. யூதாவின் இராஜ்ஜியபார முடிவு ஆரம்பமாகிறது - பாபிலோனுக்கு யூதாவின் முதலாவது சிறையிருப்பு (24:2-4)

4. யோயாக்கீமின் மரணம் - யோயாக்கீன் இராஜாவானான் (24:5-6)

5. பாபிலோன் எகிப்தின்மீது வெற்றி பெற்றது (24:7)

6. யோயாக்கீனின் ஆட்சி - யூதாவின் பத்தொன்பதாவது இராஜா - மூன்று மாதங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும் (24:8-9)

7. பாபிலோனுக்கு யூதாவின் இரண்டாவது சிறையிருப்பு (24:10-16)

8. சிதேக்கியாவின் ஆட்சி - யூதாவின் இருபதாவது இராஜாவும் கடைசி இராஜாவும் - பதினொரு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும் (24:17-19)

9. சிதேக்கியா பாபிலோனுக்கு எதிராக கலகம் பண்ணுகிறான் (24:20)

10. பாபிலோனுக்கும் இஸ்ரவேலுக்கும் ஏற்பட்ட ஐந்தாவது யுத்தமும், கடைசி யுத்தமும் (25:1-3)

II இராஜாக்கள் - முன்னுரை

11. இஸ்ரவேலின் தோல்வி - சிதேக்கியா பாபிலோனுக்கு சிறைப்பிடித்துச் செல்லப்படுகிறான் (25:4-7)

12. எருசலேமும் தேவாலயமும் அழிக்கப் படுகிறது (25:8-10)

13. பாபிலோனுக்கு யூதாவின் மூன்றாவதும் கடைசியுமான சிறையிருப்பு (25:11-12)

14. தேவாலயத்தின் தட்டுமுட்டுக்களும் பாத்திரங்களும் பாபிலோனுக்கு எடுத்துச்செல்லப்பட்டன (25:13-17)

15. நேபுகாத்நேச்சார் பிரதான ஆசாரியனரயும் மற்றவர்களையும் கொன்றுபோடுகிறான் (25:18-21)

16. மீதமுள்ள யூதர்களுக்கு கெதலியா ஆளுநராக நியமிக்கப்படுகிறான் (25:22-24)

17. இஸ்ரவேலில் குழப்பம் (25:25)

18. மீதமுள்ளோர் எகிப்துக்கு ஓடிப்போகிறார்கள் (25:26)

19. பாபிலோனில் யோயாக்கீன் விடுதலையாகிறான் (25:27-30)

II இராஜாக்கள் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. அகசியாவின் ஆட்சி - இஸ்ரவேலின் ஒன்பதாவது இராஜா - இரண்டு வருஷங்கள் - (1:1-18; 2 நாளா 20:35; 1இராஜா 22:51-53; 1:1-2:11; 1இராஜா 17:1-21:29)

1. மோவாபின் கலகமும் அகசியாவின் நோயும்

2இராஜா 1:1 ஆகாப் மரணமடைந்தபின், மோவாபியர் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணிப் பிரிந்து போனார்கள்.

2இராஜா 1:2 அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல் வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான்.

மோவாபியரின் கலகம்

2இராஜா 1:1 ஆவது வசனம் "ஆகாப் மரணமடைந்தபின்" என்னும் வாக்கியத்தோடு ஆரம்பமாகிறது. இந்த வாக்கியத்தில் "-பின்" "then" என்னும் வார்த்தை இந்தப் புஸ்தகம் 1இராஜாக்கள் புஸ்தகத்தின் தொடர்ச்சியாக இருப்பதை உறுதிபண்ணுகிறது. ஆரம்பத்தில் இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒன்றாகவே இருந்தன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் செப்துவஜிந்த் பதிப்பு வெளியானபோது, இந்தப் புஸ்தகம் 1இராஜாக்கள், 2இராஜாக்கள் என இரண்டு புஸ்தகங்களாகப் பிரிக்கப்பட்டு விட்டது.

தாவீது மோவாபியரைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். (2சாமு 8:2; 2சாமு 23:20). தாவீதுக்குப் பின்பு, இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கு, தெற்கு என இரண்டு ராஜ்யங்களாகப் பிரிந்து போயிற்று. மோவாபியர் வடக்கு ராஜ்யத்தின் ஆளுகைக்குட் பட்டிருந்தார்கள். உம்ரியும், ஆகாபும் மோவாபியரை மிகவும் ஒடுக்கினார்கள். ஆகாப் மரித்துப்போனான். அதன் பின்பு, மோவாபின் ராஜாவான மேஷா இஸ்ரவேலுக்கு எதிராகக் கலகம் பண்ணி, தனி சுதந்தர நாடாகப் பிரிந்தான்.

மேவாப் தேசத்திலுள்ள தீபோனில் (Dibon) 1868 ஆம் ஆண்டில் ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. கி.மு. 140 ஆம் வருஷம் வரையிலும் பயன்படுத்தப்பட்ட பழைய எபிரெய எழுத்து வடிவத்தில் அது எழுதப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள எபிரெய எழுத்து வடிவத்திற்கும், கல்வெட்டில் காணப்படும் எழுத்து வடிவத்திற்கும் வித்தியாசம் உண்டு.

இந்தக் கல்வெட்டில் மோவாபின் ராஜாவான மேஷாவைப் பற்றியும், உம்ரியும், ஆகாபும் மோவாபியரைப் பல வருஷங்களாக ஒடுக்கியது பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. மேஷா இஸ்ரவேல்மீது பண்ணிய யுத்தமும், இந்த யுத்தத்தில் மேஷாவுக்குக் கிடைத்த வெற்றியும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

மோவாபியரின் தெய்வத்திற்கு கீமோஷ் (Chemosh) என்று பெயர். இந்தத் தெய்வம் கோபமடைந்ததினால் மோவாபியர் இஸ்ரவேலுக்கு அடிமையானார்கள் என்றும், கீமோஷ் தெய்வமே மோவாபியரை இஸ்ரவேலின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது எனவும் இந்தக் கல்வெட்டுக் குறிப்புக்கள் கூறுகிறது. (2இராஜா 3:1-27)

"கிராதி" (lattice) - இது ஜன்னலுடைய கிராதியாகவோ, மேற்கூரையின் கிராதியாகவோ இருக்கலாம். ஒருவேளை இவன் கிராதியின் வழியாக எட்டிப் பார்த்தபோது கிராதி உடைந்து போயிருக்கலாம். (நியா 3:20; 1இராஜா 17:19; 2இராஜா 4:10). கீழே விழுந்ததினால், இவனுடைய சரீரத்தில் காயம் உண்டாயிற்று. வியாதிப் படுக்கையில் இருந்தான். வியாதி சீக்கிரம் குணமடையாமல், நீண்டநாள் வியாதியிலேயே இருக்கிறான்.

"எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள்" - இது புறஜாதியாரின் தெய்வம். அகசியா கர்த்தரை விட்டு முழுவதுமாகப் பின்வாங்கிப் போய் விட்டான். ஆகையினால் கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்குப் பதிலாகப் பாகால்சேபூபிடத்தில் (Baal-zebub) விசாரிக்கிறான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

1 அதிகாரம்

2. அகசியாவின் மரணத்தை எலியா முன்குறித்து கூறுகிறார்

2இராஜா 1:3 கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூ பிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்?

2இராஜா 1:4 இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான்; அப்படியே எலியா போய்ச் சொன்னான்.

2இராஜா 1:5 அந்த ஆட்கள் அவனிடத்திற்குத் திரும்பிவந்தபோது: நீங்கள் திரும்பி வந்தது என்ன என்று அவன் அவர்களிடத்தில் கேட்டான்.

2இராஜா 1:6 அதற்கு அவர்கள்: ஒரு மனுஷன் எங்களுக்கு எதிர்ப்பட்டுவந்து: நீங்கள் உங்களை அனுப்பின ராஜாவினிடத்தில் திரும்பிப் போய், இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப் போகிறாய்; இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவனோடே சொல்லுங்கள் என்றான் என்று சொன்னார்கள்.

2இராஜா 1:7 அப்பொழுது அவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு எதிர்ப்பட்டு வந்து, இந்த வார்த்தைகளை உங்களிடத்தில் சொன்ன மனுஷன் எப்படிப்பட்டவன் என்று கேட்டான்.

2இராஜா 1:8 அதற்கு அவர்கள்: அவன் மயிர் உடையைத் தரித்து, வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக்கொண்டிருந்தான் என்றார்கள்; அப்பொழுது அவன்: திஸ்பியனாகிய எலியாதான் என்று சொல்லி;

"கர்த்தருடைய தூதன்" - இது சாதாரண தூதனா அல்லது திரித்துவத்தில் ஒரு நபரா என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆபிரகாம், மோசே ஆகியோருக்கும் மேலும் பல பரிசுத்தவான்களுக்கும் கர்த்தர் தம்மைத் தூதனாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 1

"நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய்" (2இராஜா 1:4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறாய்" - அகசியாவின் தாயார் யேசபேல் பாகாலை ஆராதித்தவள். பாகால் ஆராதனையில் பழக்கப்படுத்தி அவள் அகசியாவை வளர்த்திருக்கிறாள். ஆகையினால் அகசியா கர்த்தரை முழுவதுமாக மறந்து விட்டான். யேசபேல் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குத் தன்னுடைய பந்தியில் போஜனம் கொடுத்தாள். (1இராஜா 18:19). அகசியாவும் பாகாலை ஆராதித்து வருகிறான். (1இராஜா 22:51-53). கர்த்தருடைய வல்லமையைப் பற்றி அகசியா எலியா மூலமாகக் கேள்விப்பட்டிருந்த போதிலும், அவன் தன்னுடைய மனதில் கர்த்தருக்கு இடம் தரவில்லை. பாகாலையே நம்புகிறான்.

தீர்க்கதரிசன எண் - 2

"நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய்" (2இராஜா 1:6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. 2இராஜா 1:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது.

"மயிர் உடை" - அகசியா தன் ஆட்களிடம் எலியாவைப் பற்றி விசாரிக்கிறான். எலியா மயிர் உடையைத் தரித்து, வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக்கொண்டிருந்தான். தீர்க்கதரிசிகள் பொதுவாக இதுபோன்ற வஸ்திரங்களை அணிவது வழக்கம். (சக 13:4; மத் 3:4). எலியாவைப் பற்றி விவரித்தவுடன், அகசியா அது எலியாதான் என்பதைப் புரிந்து கொள்கிறான். ஆகையினால் அவனுக்குக் கர்த்தரைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. பாகால்சேபூபிடத்தில் விசாரித்துக் கேட்பது கர்த்தருக்கு எதிராகச் செய்யும் பாவம்.

1 அதிகாரம்

3. வானத்திலிருந்து அக்கினியிறங்கி 102 பேரை பட்சித்தது

2இராஜா 1:9 அவனிடத்திற்கு ஒரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும் அனுப்பினான்; மலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிற அவனிடத்தில் இவன் ஏறிப்போய்: தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னை வரச்சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 1:10 அப்பொழுது எலியா, அந்த ஐம்பதுபேரின் தலைவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பது பேரையும் பட்சித்தது.

2இராஜா 1:11 மறுபடியும் அவனிடத்திற்கு வேறொரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும், அனுப்பினான். இவன் அவனை நோக்கி: தேவனுடைய மனுஷனே, ராஜா உன்னைச் சீக்கிரமாய் வரச்சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 1:12 எலியா அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது.

2இராஜா 1:13 திரும்பவும் மூன்றாந்தரம் ஒரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும் அனுப்பினான்; இந்த மூன்றாந்தலைவன் ஏறிவந்தபோது, எலியாவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, அவனை வேண்டிக்கொண்டு: தேவனுடைய மனுஷனே, என்னுடைய பிராணனும், உமது அடியாராகிய இந்த ஐம்பதுபேரின் பிராணனும் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக.

2இராஜா 1:14 இதோ, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, முந்தின இரண்டு தலைவரையும், அவரவருடைய ஐம்பது சேவகரையும் பட்சித்தது; இப்போதும் என்னுடைய பிராணன் உமது பார்வைக்கு அருமையாயிருப்பதாக என்றான்.

"அவனிடத்திற்கு ஒரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும் அனுப்பினான்" - அகசியா எலியாவை எதற்காக வரச் சொன்னான் என்று தெரியவில்லை. அகசியாவின் ஆட்களை எலியா தடுத்து நிறுத்தி, அவர்களிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறான். இதனால் கோபமடைந்த அகசியா எலியாவைச் சிறைப்பிடிப்பதற்காகத் தன்னுடைய மனுஷரில் 51பேரை அனுப்பியிருந்திருக்க வேண்டும். ஒரு காலத்தில் எலியா யேசபேலுக்குப் பயந்து ஓடி ஒளிந்தான். ஆனால் இப்போதோ அகசியாவுக்குப் பயப்படவில்லை. அகசியாவின் ஆட்கள் வரும்போது எலியா மலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிறான்.

"அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக் கடவது" - லூக்கா 9:54 ஆவது வசனத்தில் இது மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"மறுபடியும் அவனிடத்திற்கு வேறொரு தலைவனையும், அவனுடைய ஐம்பது சேவகரையும், அனுப்பினான்" - இந்தத் தலைவனும், முந்தி அனுப்பப்பட்டவனைப்போல பெருமைக்காரனாக இருந்தான். தன்னைத் தாழ்த்தவில்லை. ஆகையினால் இவனுக்கும், இவனோடு போன ஐம்பதுபேருக்கும், இதற்கு முன்னால் எலியாவைப் பார்க்கப் போனவர்களுக்குக் கிடைத்த தண்டனையே கிடைத்தது. தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது.

II இராஜாக்கள் - தொகுப்புரை

1 அதிகாரம்

"மூன்றாந்தலைவன் ஏறிவந்தபோது, எலியாவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, அவனை வேண்டிக்கொண்டு" - மூன்றாவது தலைவன் மற்ற இரண்டு தலைவர்களைப்போல பெருமைப்படாமல், தன்னைத் தாழ்த்துகிறான். மலையிலிருந்து எலியாவை இறங்கி வரச்சொல்வதற்குப் பதிலாக இந்தத் தலைவன் எலியா இருக்கும் மலையுச்சிக்கு ஏறிப்போகிறான். எலியாவுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, தன்னுடைய பிராணனுக்காகவும், தன்னோடு கூடவந்திருக்கும் ஐம்பதுபேரின் பிராணனுக்காகவும் எலியாவிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். (2இராஜா 1:13-14). எலியா இவனுக்குப் பதில் கூறுவதற்கு முன்பாக, கர்த்தருடைய தூதன் எலியாவிடம் பேசுகிறான். அவனோடேகூட இறங்கிப்போகுமாறு கர்த்தருடைய தூதன் எலியாவிடம் கூறுகிறான். (2இராஜா 1:15).

4. எலியா தன்னுடைய தீர்க்கதரிசனத்தை அகசியாவிடம் கூறுகிறான்

2இராஜா 1:15 அப்பொழுது கர்த்தருடைய தூதன் எலியாவை நோக்கி: அவனோடே கூட இறங்கிப்போ, அவனுக்குப் பயப்படாதே என்றான்; அப்படியே அவன் எழுந்து அவனோடேகூட ராஜாவினிடத்திற்கு இறங்கிப்போய்,

2இராஜா 1:16 அவனைப் பார்த்து: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூபிடத்தில் விசாரிக்க ஆட்களை அனுப்பினாய்; ஆதலால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"அவனுக்குப் பயப்படாதே" - எலியாவைக் கொலைபண்ண வேண்டுமென்று அகசியா திட்டம் பண்ணியிருக்கிறான். ஆகையினால் ஒருவேளை எலியா அகசியாவுக்குப் பயந்துபோய், மலையுச்சியில் அமர்ந்திருக்க வேண்டும். அதை அறிந்த கர்த்தருடைய தூதன் எலியாவைப் பார்த்து, "அவனுக்குப் பயப்படாதே" என்று தைரியப்படுத்துகிறான்.

"இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்க ஆட்களை அனுப்பினாய்" - எலியா முதன் முறையாக இதே செய்தியை அகசியாவின் ஆட்களிடத்தில் கூறி அனுப்பினான். இப்போது அதே செய்தியை எலியா அகசியா ராஜாவிடத்தில் பயப்படாமல் மறுபடியும் கூறுகிறான். (2இராஜா 1:6). ராஜாவைப் பார்த்தவுடன் எலியா தன் செய்தியை மாற்றிக் கொள்ளவில்லை.

தீர்க்கதரிசன எண் - 3

"நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய்" (2இராஜா 1:16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மூன்றாம் முறையாக இந்த வாக்கியம் கூறப்பட்டிருக்கிறது.

5. அகசியாவின் மரணம் - யோராம் அரசனானான் - இஸ்ரவேலின் பத்தாவது இராஜா - (1:3-4,15-16)

2இராஜா 1:17 எலியா சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே அவன் இறந்து போனான்; அவனுக்குக் குமாரன் இல்லாதபடியினால், அவன் ஸ்தானத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத்துடைய குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்தில் யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

2இராஜா 1:18 அகசியாவின் மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"அவன் இறந்து போனான்" - எலியா அகசியாவுக்குத் தீர்க்கதரிசனம் கூறிய பின்பு, எவ்வளவு காலம் கழித்து, அகசியா இறந்து போனான் என்று தெரியவில்லை. எலியா அகசியாவிற்கு ஏதாவது ஆலோசனை கூறினானா என்பதும் தெரியவில்லை. எலியா கர்த்தருடைய வார்த்தையைக் கூறினான். அந்த வார்த்தையின் பிரகாரம் அகசியா இறந்து போனான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

1 அதிகாரம்

"யோசபாத்துடைய குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்தில் யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" - இஸ்ரவேலின் ராஜாக்களுக்கும், யூதாவின் ராஜஹூபின் குமாரன். இந்த அகசியாவுக்கு குமாரர் யாரும் பிறக்கவில்லை.

"இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகம்" - ராஜாக்கள், நாளாகமம் ஆகிய புஸ்தகங்களைத் தவிர இஸ்ரவேல் ராஜாக்களின் வரலாற்றைத் தனியாக வேறொரு புஸ்தகமும் விளக்கிக் கூறுகிறது. ஆனால் அந்தப் புஸ்தகம் இப்போது யாருடைய கையிலும் இல்லை. இந்த வாக்கியத்தை வாசிக்கும்போது அப்படி ஒரு புஸ்தகம் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

2 அதிகாரம்

6. எலியா எடுத்துக் கொள்ளப் படுவதை வெளிப்படுத்துகிறான்.

2இராஜா 2:1 கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் போகிறபோது, எலியா எலிசாவோடேகூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான்.

2இராஜா 2:2 எலியா எலிசாவை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னைப் பெத்தேல்மட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு எலிசா: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே இருவரும் பெத்தேலுக்குப் போனார்கள். 2இராஜா 2:3 அப்பொழுது பெத்தேலிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக் கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்றார்கள். அதற்கு அவன்: எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான்.

2இராஜா 2:4 பின்பு எலியா அவனை நோக்கி: எலிசாவே, நீ இங்கே இரு; கர்த்தர் என்னை எரிகோமட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு அவன்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள்.

2இராஜா 2:5 எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற என் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்று அவனைக் கேட்டார்கள். அதற்கு அவன்: எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான்.

2இராஜா 2:6 பின்பு எலியா அவனை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னை யோர்தானுக்கு அனுப்புகிறார் என்றான். அதற்கு அவன்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே இருவரும் போனார்கள்.

கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் போகிறதை ஏற்கெனவே தெரிந்திருக்கிறவர்கள்

1. பெத்தேலில் உள்ள தீர்க்கதரிசிகளின் புத்திரர். (2இராஜா 2:3)
2. எலிசா (2இராஜா 2:3,5)
3. எரிகோவில் உள்ள தீர்க்கதரிசிகளின் புத்திரர். (2இராஜா 2:5)
4. எலியா (2இராஜா 2:9-10)

"சுழல்காற்று" **(whirlwind)** - எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படப் போகிறார் என்பது பலருக்குத் தெரிந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, சுழல்காற்றினாலே அவர் எடுத்துக் கொள்ளப் படப்போகிறார் என்பதும் ஏற்கெனவே பலருக்குத் தெரிந்திருக்கிறது. (2இராஜா 2:1) பெத்தேல், எரிகோ ஆகிய பட்டணங்களைக் கடந்து, யோர்தான் நதியையும் கடந்த பின்பு, கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டார். (2இராஜா 2:2,4,6) கர்த்தரே இந்த இடங்களுக்கெல்லாம் எலியாவை அனுப்பினார்.

"கர்த்தர் என்னைப் பெத்தேல்மட்டும் போக அனுப்புகிறார்" - எலியா எலிசாவைக் கில்கால் மட்டும் தன்னோடுகூட வர அனுமதித்தார். ஆனால் தான் பெத்தேலுக்குப் போகும்போதோ எலிசாவைக் கில்காலிலேயே இருக்குமாறு கூறிவிடுகிறார். (2இராஜா 2:2). ஆனால் எலிசாவோ "நான் உம்மை விடுகிறதில்லை" என்று கூறி, அவன் எலியாவின் பின்னால் தொடர்ந்து போகிறான். பெத்தேலுக்கு மட்டுமல்ல, எரிகோவிற்கும் எலிசா எலியாவின் பின்னால் போகிறான். (2இராஜா 2:4-6). இதற்கான காரணம் விளக்கப்படவில்லை. எலியாவுக்குப் பின்பு தீர்க்கதரிசன ஊழியம் செய்வதற்காக எலிசா அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறான். (1இராஜா 19:16) ஆனால் எலிசா இன்னும் எலியாவின் ஆவியையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளவில்லை. இதை எப்படியாவது பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எலிசா விரும்புகிறான். (2இராஜா 2:9-11). எலிசா எந்த அளவிற்குத் தன்னைப் பின்பற்றுவதில் உறுதியாக இருப்பான் என்பதை எலியா சோதித்துப் பார்க்க விரும்பியிருந்திருக்கலாம்.

2 அதிகாரம்

"பெத்தேல்மட்டும்" - 2இராஜா 2:1 ஆகிய வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கில்கால் எரிகோவிற்கும், யோர்தானுக்கும் நடுவிலுள்ள பிரசித்தமான கில்கால் அல்ல. இது திப்னேவிற்கும், சீலோவிற்கும் இடையிலுள்ள வேறொரு கில்கால் ஆகும். ஆகையினால் இந்த வாக்கியத்தில் "பெத்தேல்மட்டும்" (down to Beth-el) என்று வலியுறுத்திக் கூறப் பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசிகளின் புத்திரர்

எபிரெய மக்களுக்கு இவர்கள் ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கூறுகிறவர்கள். கர்த்தருக்கு அடுத்த காரியங்களில் இவர்கள் ஜனங்களை வழிநடத்துவார்கள். தெய்வ பக்தியிலும், நீதியிலும் இவர்கள் எபிரெய ஜனங்களுக்கு உபதேசம் பண்ணும் தத்துவஞானிகள். இவர்கள் பொதுவாக மற்ற ஜனங்களோடு சேர்ந்து வாழாமல், தனியாக வாழ்வது வழக்கம். தேவனுடைய செய்தியை ஜனங்களுக்குக் கூறும்போது மட்டுமே இவர்கள் ஜனங்கள் மத்தியில் வருவார்கள். இவர்களுடைய வாழ்க்கை முறை மிகவும் எளிமையாகவும், தூய்மையாகவும் இருந்தது.

தீர்க்கதரிசிகளின் புத்திரர் என்பதற்கு தீர்க்கதரிசிகளின் மாணாக்கர் என்று பொருள். இவர்கள் ஆவிக்குரிய காரியங்களிலும், மார்க்கக் காரியங்களிலும் பயிற்சி பெறுகிறார்கள். மோசேயின் நியாயப் பிரமாணத்தையும், தேவனுடைய ஜனங்களின் வரலாற்றையும் தீர்க்கதரிசிகளின் புத்திரர் ஒரு பெரிய தீர்க்கதரிசியிடமிருந்து கற்றுக் கொள்வார்கள். சாமுவேலின் காலத்திலிருந்து புதிய ஏற்பாட்டுக் காலம் வரையிலும் தீர்க்கதரிசிகளின் புத்திரர் பல கலாசாலைகளில் பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள். (1சாமு 10:5,10-12 1சாமு 19:20,24).

கில்காலில்இருந்த தீர்க்கதரிசிகளின் கலாசாலைக்கு எலியா தலைமைப் போதகராக இருந்தார். (2இராஜா 4:28) பெத்தேலிலிருந்த தீர்க்கதரிசிகள் கலாசாலைக்கும், எலியாவே தலைவர். இங்கு யெரொபெயாம் தன் பலிபீடத்தைக் கட்டி, இரண்டு பொன்கன்றுக் குட்டிகளில் ஒன்றை இங்கு ஸ்தாபித்தான். (1இராஜா 12:29; 1இராஜா 13:1-32) எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகளின் கலாசாலைக்கும், மேலும் பல இடங்களிலிருந்த தீர்க்கதரிசிகளின் கலாசாலைக்கும் எலியா தலைவராக இருந்திருக்கிறார். (2இராஜா 2:3-7,15; 1இராஜா 20:35; 1இராஜா 21:10). எலியாவிற்குப் பின்பு, எலிசா தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குத் தலைவரானார். அந்தக் கலாசாலையை விரிவுபடுத்தினார். (2இராஜா 4:1,38; 2இராஜா 5:22;2இராஜா 6:1-7;2இராஜா 9:1).

"எனக்குத் தெரியும்" - எலியா அந்தக் குறிப்பிட்ட நாளில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார் என்பது தனக்குத் தெரியும் என்று எலிசா இரண்டு முறை சாட்சி பகர்ந்திருக்கிறார். (2இராஜா 2:3,5). எலியாவைத் தவிர, மற்ற தீர்க்கதரிசிகள் மூலமாக இந்த வெளிப்பாடு வந்திருக்கலாம். எலியாவுக்கும் தான் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படப்போவது வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. (எபி 11:5). தேவனிடமிருந்து எலியா வார்த்தையைப் பெற்றிருந்தினால் அவருடைய விசுவாசம் வர்த்திக்கப்பட்டது. (ரோமர் 10:17).

7. யோர்தான் இருபாகமாக பிரிந்தது

2இராஜா 2:7 தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் போய், தூரத்திலே பார்த்துக் கொண்டு நின்றார்கள்; அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள்.

2இராஜா 2:8 அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள்.

"தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர்" - இவர்களுடைய எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருக்க வேண்டும். அவர்களில் ஐம்பதுபேரைப் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. (2இராஜா 2:7) யேசபேல் தீர்க்கதரிசிகளில் அநேகரைக் கொன்றுபோட்டாள். ஒபதியா அவர்களில் நூறுபேரைக் காப்பற்றினான். (1இராஜா 18:4) தீர்க்கதரிசிகளின் புத்திரரில் வேறு நூறுபேர் கில்காலில் இருக்கிறார்கள். (2இராஜா 4:38-43).

2 அதிகாரம்

8. எலியாவினுடைய ஆவியின் வரம், எலிசாவுக்கு இரட்டிப்பாக கிடைத்தது

2இராஜா 2:9 அவர்கள் அக்கரைப்பட்ட பின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படு முன்னே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான்.

2இராஜா 2:10 அதற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான்.

"உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" - பரிசுத்த ஆவியானவரின் அளவும், அவருடைய வல்லமையின் அளவும் ஒவ்வொரு நபருக்கும் வித்தியாசமான அளவுகளில் கொடுக்கப் படுகிறது. தாங்கள் பெற்றுக் கொண்ட அளவுக்குத்தக்கதாகவே ஒவ்வொருவராலும் ஊழியம் செய்ய முடியும். (யோவான் 3:34).

பரிசுத்த ஆவியானவரின் வெவ்வேறு அளவுகள்

1. மோசேயின் அளவு (எண் 11:17,25)
2. மோசேயின் அளவு 71 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது (எண் 11:16-17, 25-29)
3. எலியாவின் அளவு (2இராஜா 2:9)
4. இரட்டிப்பான பங்கு (2இராஜா 2:9-10)
5. யோவான் ஸ்நானன்மீது எலியாவின் அளவு (லூக்கா 1:15-17)
6. ஆவியானவரின் அச்சாரம் (2கொரி 1:22; 2கொரி 5:5; 1யோவான் 4:13; பிலி 1:19)
7. அளவில்லாத பரிசுத்த ஆவியானவர் (The Spirit without measure) (யோவான் 3:34; ஏசா 11:2;ஏசா 42:1; ஏசா 61:1; லூக்கா 4:16-21;அப் 10:38); பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் (Spirit baptism or baptismal measure) (மத் 3:11; மத் 20:22-23; லூக்கா 3:16; யோவான் 1:31-34; அப் 1:4-8; அப் 2:1-21; அப் 8:15-24; அப் 10:44-48;அப் 11:14-18; அப் 15:7-11; அப் 19:1-7; கலா 3:14); தேவனுடைய நிறைவு (the fulness of God) (எபே 3:19; ரோமர் 15:29); ஜீவத்தண்ணீருள்ள நதிகள் (the rivers of living water) (யோவான் 7:37-39); உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுதலும், பரிசுத்த ஆவியானவரின் முழுமையான அபிஷேகமும் (the full anointing of the Spirit and enduement of power from on high) (லூக்கா 24:49; யோவான் 14:12-15)

அரிதானது (hard) - קָשָׁה - kaw-shaw' - 7185

வினைச்சொல் - கொடுமையாகு, கடினமாயிரு, விசனமாய்க் காணப்படு, பலத்திரு, கடும், அரிது, பாரம், கடினப்படுத்து, மூர்க்கவெறிகொள் (hard; severe; tough; difficult) (ஆதி 35:16-17); (hard in the sense of being difficult) (உபா 1:17; உபா 15:18). எலிசா எலியாவிடம் அரிதான காரியத்தைக் கேட்டான். ஏனெனில் எலியாவால் தன்னிடத்தில் உள்ளதைவிட அதிகமாகக் கொடுக்க முடியாது. எலிசா கர்த்தரிடத்தில் விசுவாசித்தால் கர்த்தரே அவனுக்கு எலியாவிடத்திலுள்ள ஆவியின் வரத்தை இரட்டிப்பாய் கொடுப்பார்.

எலியா, எலிசா ஆகியோர் செய்த அற்புதங்கள்

எலிசாவின் இரட்டிப்பான வரம் பிரத்தியட்சமாய் நிறைவேறுகிறது. எலியா 16 அற்புதங்களைச் செய்தார். எலிசாவோ 32 அற்புதங்களைச் செய்தான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

2 அதிகாரம்

எலியாவின் அற்புதங்கள்

1. மூன்று வருஷம் பஞ்சம்.(1இராஜா 17:1)
2. காகாங்களால் போஷிக்கப்பட்டது. (1இராஜா 17:2-7)
3. மாவும், எண்ணெயும் அதிகரித்தது. (1இராஜா 17:8-16)
4. மரித்துப்போன சிறியவனை மறுபடியும் உயிரோடு எழுப்பியது. (1இராஜா 17:17-24)
5. வானத்திலிருந்து அக்கினி. (1இராஜா 18:30-40)
6. மூன்றரை வருஷங்களுக்குப் பின்பு மழை. (1இராஜா 18:41-45)
7. முப்பது மைல்களுக்குக் கால்களால் ஓடியது. (1இராஜா 18:46)
8. தேவதூதன் கொடுத்த போஜனத்தினால் 40 நாட்களுக்குத் தெய்வீக வல்லமையைப் பெற்றது. (1இராஜா 18:46)
9. அற்புதமான செய்தி (1இராஜா 21:17-24)
10. அற்புதமான செய்தி (1இராஜா 21:28-29)
11. அற்புதமான செய்தி (2நாளா 21:12)
12. அற்புதமான செய்தி (2இராஜா 1:3-8)
13. வானத்திலிருந்து அக்கினி (2இராஜா 1:9-10)
14. வானத்திலிருந்து அக்கினி (2இராஜா 1:11-12)
15. யோர்தான் நதியை வற்ற வைத்தது. (2இராஜா 2:7-8)
16. எலிசாவின்மேல் தன்னுடைய ஆவியை இரட்டிப்பாய் தந்தது. (2இராஜா 2:9-10)

எலிசாவின் அற்புதங்கள்

1. யோர்தானை வற்றிப்போகப் பண்ணியது. (2இராஜா 2:13-15)
2. தண்ணீரைச் சுத்தப்படுத்தியது. (2இராஜா 2:19-22)
3. காடுகளிலிருந்து வந்த கரடிகள் (2இராஜா 2:23-25)
4. மழையில்லாமல் பள்ளங்கள் தண்ணீரால் நிரம்பியது. (2இராஜா 3:16-20)
5. மோவாபியரின் தோல்வி (2இராஜா 3:18-20, 24-27)
6. பார்வையில் தெரிந்த அற்புதம் (2இராஜா 3:21-23)
7. விதவையின் எண்ணெய் அதிகரித்தது. (2இராஜா 4:1-7)
8. மலட்டுத்தன்மை நீங்கியது. (2இராஜா 4:12-17)
9. மரித்த சிறுவன் உயிரோடு எழும்பியது. (2இராஜா 4:32- 37)
10. பானையில் இருந்த கூழ் சுத்தமானது. (2இராஜா 4:28-41)
11. நூறுமனுஷருக்குப் போஜனம் கொடுத்தது. (2இராஜா 4:42-44)
12. நாகமானின் குஷ்டரோகம் குணமானது. (2இராஜா 5:1-14)
13. கேயாசின் குற்றத்தைக் கண்டுபிடித்தது. (2இராஜா 5:25- 26)
14. நாகமானின் குஷ்டரோகத்தைக் கேயாசிக்குக் கொடுத்தது. (2இராஜா 5:27)
15. இரும்புக்கோடரியை மிதக்கச் செய்தது. (2இராஜா 6:1-7)
16. யுத்த இரகசியங்களை வெளிப்படுத்தியது. (2இராஜா 6:8- 10)
17. யுத்த இரகசியங்களை வெளிப்படுத்தியது.(2இராஜா 6:10- 12)

2 அதிகாரம்

18. யுத்த இரகசியங்களை வெளிப்படுத்தியது. (2இராஜா 6:13)

19. ஊழியக்காரரின் கண்கள் திறந்தது. (2இராஜா 6:13- 17)

20.சீரியருடைய சேனை குருடானது. (2இராஜா 6:18)

21.சீரியரின் சேனை முழுவதையும் பிடித்தது. (2இராஜா 6:19)

22. சீரியருடைய சேனையின் குருட்டைக் குணமாக்கியது. (2இராஜா 6:20-23)

23.ராஜாவின் செய்கையை முன்னறிந்தது. (2இராஜா 6:32-33)

24.அற்புதமான வார்த்தை (2இராஜா 7:1)

25.அற்புதமான வார்த்தை (2இராஜா 7:2)

26. சீரியரின் குழப்பம் (2இராஜா 7:6-8)

27.நூறுவருஷப் பஞ்சம் (2இராஜா 8:1-2) எலியாவின் காலத்தில் மூன்றரை வருஷம் பஞ்சம்.

28.அற்புதமான வார்த்தை (2இராஜா 8:7-11)

29.அற்புதமான வார்த்தை(2இராஜா 8:12)

30.அற்புதமான வார்த்தை (2இராஜா 8:13-15)

31. அற்புதமான வார்த்தை (2இராஜா 9:1-10)

32.அற்புதத்தைப் பற்றிய வார்த்தை (2இராஜா 13:14-19)

9. எலியா எடுத்துக்கொள்ளப்படுகிறான் - (ஆதி 5:11; எபி 11:5; 2கொரி 12:1-3; வெளி 4:1;யோவா 20:17-19; அப் 1:9-11)

2இராஜா 2:11 அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்.

2இராஜா 2:12 அதை எலிசா கண்டு: என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே என்று புலம்பினான்; அவனை அப்புறம் காணாமல், தன் வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்தான்.

"எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" - எலியா தன்னுடைய சரீரத்தில் பரலோகத்திற்கு ஏறிப்போன இரண்டாம் மனுஷன். ஏனோக்கு இதைப்போல ஏற்கெனவே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறான். (ஆதி 5:24; எபி 11:5) இவ்விருவரும் தங்கள் சரீரங்களில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் இருவருமே இன்னும் மரித்துப்போகவில்லை. வரப்போகிற உபத்திரவக்காலத்தில் இவ்விருவரும் இந்தப் பூமியில் இரண்டு சாட்சிகளாக மரிப்பார்கள். (சக 4:11-14; மல் 4:5-6; வெளி 11:3-12)

இவர்கள் இருவர் தவிர, மேலும் இரண்டு பேர் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்பு திரும்பி வந்துவிட்டார்கள்.(2கொரி 12:1-5; வெளி 4:1). இயேசு கிறிஸ்துவும் வானத்திற்குச் சென்று, தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, திரும்பி வந்திருக்கிறார். (யோவான் 20:17-19) அதன் பின்பு, உயிர்த்தெழுந்த ஏராளமான மனுஷருடைய ஆத்துமாக்களையும், ஆவிகளையும் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அவர்களுடைய சரீரங்கள் இன்னும் உயிர்த்தெழவில்லை. (மத் 27:53-54; எபே 4:8-10; எபி 12:23). இந்த நீதிமான்களின் ஆத்துமாக்களும், ஆவிகளும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன்பாக பாதாளத்தில் இருந்தன. கர்த்தர் பாதாளத்திற்கு இறங்கிச் சென்று அங்கு சிறைப்பட்டிருந்த நீதிமான்களின் ஆவிகளை விடுவித்தார். (எபி 2:14-15) இனிமேல் பரிசுத்தவான்கள் மரிக்கும்போது அவர்களுடைய ஆவி பாதாளத்திற்குப் போவதில்லை. நேராகப் பரலோகத்திற்குச் சென்று, தங்களுடைய சரீரங்களின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கும். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23).

"சுழல்காற்று" - சுழல்காற்றும் (2இராஜா 2:11), அக்கினி இரதமும், அக்கினி குதிரைகளும், எலியாவைப் பரலோகத்திற்கு எடுத்துச் சென்றது. (2இராஜா 2:11-12)

2 அதிகாரம்

"அதை எலிசா கண்டு" - எலியா எடுத்துக் கொள்ளப்படுவதை எலிசா கண்டு கொண்டால் அவனுக்கு எலியாவிடத்திலுள்ள ஆவியின் வரம் இரட்டிப்பாய்க் கிடைக்கும். (2இராஜா 2:10). எலிசா எலியா கூறிய நிபந்தனையை நிறைவேற்றுகிறான்.

"தன் வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்தான்" - தன் வஸ்திரத்தைக் கிழித்து விட்டதினால் இனிமேல் அவனால் எலியாவின் வஸ்திரத்தைப் போட்டுக் கொள்ள முடியும். (2இராஜா 2:13) எலியா ஏற்கெனவே எலிசாவின்மேல் தன் சால்வையைப் போட்டிருக்கிறான். (1இராஜா 19:19).

II. எலிசாவின் ஊழியம்

1. எலிசாவின் முதலாவது அற்புதம்

2இராஜா 2:13 பின்பு அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று,

2இராஜா 2:14 எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்.

2இராஜா 2:15 எரிகோவில் பார்த்துக் கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே, எலியாவின் ஆவி எலி சாவின்மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி:

"எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர்" - சுமார் 50 மனுஷர் எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டதற்குச் சாட்சிகளாக இருக்கிறார்கள். எலிசாவின் முதலாவது அற்புதத்திற்கும், இவர்கள் சாட்சிகள். எலியாவின் ஆவி இப்போது எலிசாவின்மீது வந்திருப்பதற்கு இவர்கள் சாட்சி பகருகிறார்கள். ஆகையினால் எலியாவிற்குப் பின்பு, எலிசா தீர்க்கதரிசியாக உடனடியாக அங்கிகரிக்கப்படுகிறான்.

2. தீர்க்கதரிசிகளின் அவிசுவாசம்

2இராஜா 2:16 இதோ, உமது அடியாரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் போய் உம்முடைய எஜமானைத் தேடும்படி உத்தரவுகொடும்; ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின் மேலாகிலும், பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டுபோய் வைத்திருப்பார் என்றார்கள். அதற்கு அவன்: அவர்களை அனுப்பவேண்டாம் என்றான்.

2இராஜா 2:17 அவன் சலித்துப்போகு மட்டும் அவர்கள் அவனை அலட்டிக் கொண்டிருந்தபடியால் அனுப்புங்கள் என்றான்; அப்படியே ஐம்பதுபேரை அனுப்பினார்கள்; அவர்கள் மூன்றுநாள் அவனைத் தேடியும் காணாமல்,

2இராஜா 2:18 எரிகோவிலிருந்த அவனிடத்திற்குத் திரும்பிவந்தபோது, அவன் இவர்களைப் பார்த்து: போக வேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா என்றான்.

"அவர்கள் போய் உம்முடைய எஜமானைத் தேடும்படி உத்தரவுகொடும்" - தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் எலியாவைத் தேடுவதற்கு உத்தரவு கொடுக்குமாறு எலிசாவிடம் கேட்டுக் கொண்டார்கள். கர்த்தருடைய ஆவியானவர் எலியாவை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின் மேலாகிலும், பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டுபோய் வைத்திருப்பார் என்று கூறுகிறார்கள். அவர்கள் எலிசாவிடம் அவன் சலித்துப் போகுமட்டும் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால் எலியாவைத் தேடிப்பார்க்குமாறு அவர்களை அனுப்பினான். அவர்கள் மூன்றுநாள் எலியாவைத் தேடியும் அவனைக் காணாமல் திரும்பி வந்தார்கள். (2இராஜா 2:16-18).

II இராஜாக்கள் - தொகுப்புரை

2 அதிகாரம்

3. தண்ணீரும் வறண்ட நிலமும் ஆரோக்கியமாயிற்று - இரண்டாவது அற்புதம்

2இராஜா 2:19 பின்பு அந்தப் பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள்.

2இராஜா 2:20 அப்பொழுது அவன்: ஒரு புதுத்தோண்டியை எடுத்து, அதிலே உப்புப்போட்டுக் கொண்டுவாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டு வந்தபோது,

2இராஜா 2:21 அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 2:22 எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று.

"இந்தப் பட்டணம்" - எரிகோ பட்டணம். (2இராஜா 2:18). எரிகோவின் தண்ணீரும் கெட்டுப்போயிருக்கிறது. நிலமும் பாழ்ப்பட்டிருக்கிறது. எலிசா ஒரு புதுத்தோண்டியை தன்னிடத்தில் கொண்டுவருமாறு கூறுகிறான். அதில் உப்பைப் போட்டு, நீரூற்றண்டைக்குப்போய், உப்பை அதில் போடுமாறு கூறுகிறான். கெட்ட தண்ணீராக இருந்தது நல்ல தண்ணீராக மாறிற்று. (2இராஜா 2:19-22).

தண்ணீரை ஆரோக்கியமாக ஆக்கிய சம்பவங்கள்

1. மோசே மாராவின் தண்ணீரை ஆரோக்கியமாக்கினார். (யாத் 15:23-25)
2. எலிசா எரிகோவின் தண்ணீரை ஆரோக்கியமாக்கினார். (2இராஜா 2:19-22)
3. கர்த்தர் சவக்கடலின் தண்ணீரை ஆரோக்கியமாக்கினார். (எசே 47)

4. பிள்ளைகள் நிந்தித்ததற்கு சாபம் - மூன்றாவது அற்புதம்

2இராஜா 2:23 அவன் அவ்விடத்தை விட்டுப் பெத்தேலுக்குப் போனான்; அவன் வழிநடந்துபோகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, அவனைப் பார்த்து: மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டைத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தார்கள்.

2இராஜா 2:24 அப்பொழுது அவன் திரும்பி அவர்களைப் பார்த்து: கர்த்தரின் நாமத்திலே அவர்களைச் சபித்தான்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது.

2இராஜா 2:25 அவன் அவ்விடத்தை விட்டுக் கர்மேல் பர்வதத்திற்குப்போய், அங்கேயிருந்து சமாரியாவுக்குத் திரும்பினான்.

2 அதிகாரம்

பிள்ளைகள் (children) - נַעַר - nah'-ar - 5288

ஆ.பெ.சொ. - வாலிபர், வேலைக்காரன், பிள்ளை, வேலைக்காரர், பிள்ளையாண்டான், வாலிபன், இளைஞன், இளையவன், இளைஞர், குமாரன், வேலைக்காரி, சேவகர், காரியக்காரன், ஊழியக்காரன், வாலவயது, இளவயது, ஊழியக்காரர், சிறியோர், வேலையாட்கள், சிறுபிள்ளை, சிறுபையன், பாலகன், சிதறுண்டது, பிள்ளைகள் - எபிரெய மொழியில் "நகர்" (nah'-ar) என்னும் இந்த வார்த்தை சிறுகுழந்தையிலிருந்து வாலிபர் வரையிலும் உள்ளவர்களுக்குப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. 28 வயது ஈசாக்கிற்கும், (ஆதி 22:5), 39 வயதான யோசேப்பிற்கும் (ஆதி 41:12), நன்றாக வளர்ந்திருந்த ரெகொபெயாமிற்கும் (2நாளா 13:7) இந்த எபிரெய வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சிறுபிள்ளைகள் பெத்தேலிலுள்ள பொன்கன்றுக் குட்டியை ஆராதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஆகையினால் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசாவைக் கேவலமாகப் பேசுகிறார்கள். எலிசா அவர்களைச் சபித்தபோது, இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் 42 பிள்ளைகளைக் பீறிப்போட்டது.

"மொட்டைத்தலை" - சில வியாக்கியானத்தின் பிரகாரம், மொட்டைத்தலை என்பது வழுக்கைத் தலையைக் குறிப்பிடாது. இது ஒன்றுக்கும் உதவாத பயனற்ற மனுஷனைக் குறிக்கும் வசைச்சொல் என்பது சிலருடைய கருத்து. கர்த்தரின் தீர்க்கதரிசியாகிய எலிசாவைப் பாகாலை ஆராதிக்கும் சிறுபிள்ளைகள் தூஷணமாகப் பேசுகிறார்கள். எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது போல எலிசாவை பரலோகத்திற்கு ஏறிப்போகுமாறு பாகாலின் பிள்ளைகள் கர்த்தருடைய தீர்க்கதரிசியை ஏளனமாகப் பேசுகிறார்கள்.

3 அதிகாரம்

5. யோராமின் இராஷ்ஜியபாரமும் அவனுடைய குணமும் - இஸ்ரவேலின் பத்தாவது இராஜா

2இராஜா 3:1 யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினெட்டாம் வருஷத்தில் ஆகாபின் குமாரனாகிய யோராம் சமாரியாவிலே இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிப் பன்னிரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணி,

2இராஜா 3:2 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனைப்போலும் தன் தாயைப் போலும் அல்ல; தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான்.

2இராஜா 3:3 என்றாலும் இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை அவன் விட்டு நீங்காமல் அவைகளிலே சிக்கிக் கொண்டிருந்தான்.

"தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலை" - (2இராஜா 10:18,26-27; 1இராஜா 19:18).

6. மாவாபின் கலகம் - யோராமும் யோசபாத்தும் உடன்படிக்கை பண்ணுகிறார்கள்

2இராஜா 3:4 மோவாபின் ராஜாவாகிய மேசா ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந்து, இஸ்ரவேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக் குட்டிகளையும், இலட்சம் குறும்பாட்டுக் கடாக்களையும் செலுத்திவந்தான்.

2இராஜா 3:5 ஆகாப் இறந்துபோனபின் மோவாபின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினான்.

2இராஜா 3:6 அக்காலத்திலே யோராம் என்னும் ராஜா சமாரியாவிலிருந்து புறப்பட்டு, இஸ்ரவேலையெல்லாம் இலக்கம் பார்த்துப்போய்:

2இராஜா 3:7 மோவாபின் ராஜா எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினான்; மோவாபியர்மேல் யுத்தம்பண்ண, என்னோடேகூட வருகிறீரா என்று யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தைக் கேட்டனுப்பினதற்கு; அவன் நான் வருகிறேன்; நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்றான்.

2இராஜா 3:8 எந்த வழியாய்ப் போவோம் என்று கேட்டான்; அதற்கு அவன்: ஏதோம் வனாந்தரவழியாய் என்றான்.

2இராஜா 3:9 அப்படியே இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜாவும் ஏதோமின் ராஜாவும் சேர்ந்து போனார்கள்; ஆனாலும் அவர்கள் ஏழுநாள் சுற்றித் திரிந்தபோது, அவர்களைப் பின் செல்லுகிற இராணுவத்துக்கும் மிருக ஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமற்போயிற்று.

7. யோராமும் யோசபாத்தும் உடன்படிக்கை பண்ணுவதை எலிசா ஏற்றுக்கொள்ளவில்லை

2இராஜா 3:10 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: ஐயோ, இந்த மூன்று ராஜாக்களையும் கர்த்தர் மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்க வரவழைத்தாரே என்றான்.

2இராஜா 3:11 அப்பொழுது யோசபாத்: நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரும் இங்கே இல்லையா என்று கேட்டதற்கு, எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா இங்கே இருக்கிறான் என்று இஸ்ரவேல் ராஜாவின் ஊழியக்காரரில் ஒருவன் மறுமொழியாகச் சொன்னான்.

3 அதிகாரம்

2இராஜா 3:12 அப்பொழுது யோசபாத் அவனை நோக்கி: கர்த்தருடைய வார்த்தை அவனிடத்தில் இருக்கிறது என்றான்; இஸ்ரவேலின் ராஜாவும் யோசபாத்தும் ஏதோமின் ராஜாவும் அவனிடத்தில் போனார்கள்.

2இராஜா 3:13 எலிசா இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: எனக்கும் உமக்கும் என்ன? நீர் உம்முடைய தகப்பனின் தீர்க்கதரிசிகளிடத்திலும், உம்முடைய தாயாரின் தீர்க்கதரிசிகளிடத்திலும் போம் என்றான். அதற்கு இஸ்ரவேலின் ராஜா: அப்படியல்ல, கர்த்தர் இந்த மூன்று ராஜாக்களையும் மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்கிறதற்கு வரவழைத்தார் என்றான்.

2இராஜா 3:14 அதற்கு எலிசா: நான் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் முகத்தைப் பாராதிருந்தால் நான் உம்மை நோக்கவுமாட்டேன், உம்மைப் பார்க்கவு மாட்டேன் என்று சேனைகளுடைய கர்த்தருக்கு முன்நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

2இராஜா 3:15 இப்போதும் ஒரு சுரமண்டல வாத்தியக்காரனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான்; சுரமண்டல வாத்தியக்காரன் வந்து வாசித்தபோது கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கி,

"உம்முடைய தாயார்" - யேசபேல்.

"ஒரு சுரமண்டல வாத்தியக்காரனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" - தீர்க்கதரிசனம் உரைக்கும்போது ஒரு சுரமண்டல வாத்தியக்காரன் இங்கு பயன்படுத்தப்படுகிறான். இதற்கான விளக்கம் தெரியவில்லை. ஒருவேளை சுரமண்டல இசையைக் கேட்கும்போது தீர்க்கதரிசிகளுடைய மனது பக்குவமடையலாம். கர்த்தருடைய வார்த்தையைக் கூறுவதற்கு இந்த இசை உதவி புரியலாம். தீர்க்கதரிசிகளின் புத்திரர் தங்களுடைய கலாசாலைகளில் இசையையும், சங்கீதங்களையும் கற்றுக் கொண்டார்கள். இதனால் தீர்க்கதரிசனத்தில் இசை முக்கியப்பங்கு வகிக்கிறது. (யாத் 15:20; எபே 5:19-20). இதுபோலவே பிரசங்கம் பண்ணுகிறவர்களையும், சங்கீதமும், நல்ல இசையும் உற்சாகப்படுத்தும்.

8. மழையில்லாமல் தண்ணீரும் வெற்றியின் வாக்குத்தத்தமும் - 4, 5ஆவது அற்புதங்கள்

2இராஜா 3:16 அவன் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்.

2இராஜா 3:17 நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காண மாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2இராஜா 3:18 இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்; மோவாபியரையும் உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார்.

2இராஜா 3:19 நீங்கள் சகல கோட்டைகளையும் சகல சிறந்த பட்டணங்களையும் தகர்த்து, நல்ல மரங்களையெல்லாம் வெட்டி, நீரூற்றுகளையெல்லாம் தூர்த்து, நல்ல நிலத்தையெல்லாம் கல்மேடுகளாக்கிக் கெடுப்பீர்கள் என்றான்.

2இராஜா 3:20 மறுநாள் காலமே பலி செலுத்தப்படும் நேரத்தில், இதோ, தண்ணீர் ஏதோம் தேசவழியாய் வந்ததினால் தேசம் தண்ணீரால் நிரம்பிற்று.

தீர்க்கதரிசன எண் - 4

"கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்...." (2இராஜா 3:16-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

3 அதிகாரம்

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும் படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் (2இராஜா 3:17)

2. இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்; மோவாபியரையும் உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார். (2இராஜா 3:18)

3. நீங்கள் சகல கோட்டைகளையும் சகல சிறந்த பட்டணங்களையும் தகர்த்து, நல்ல மரங்களையெல்லாம் வெட்டி, நீரூற்றுகளையெல்லாம் தூர்த்து, நல்ல நிலத்தையெல்லாம் கல்மேடுகளாக்கிக் கெடுப்பீர்கள். (2இராஜா 3:19)

"இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்" - இஸ்ரவேலின் சேனைகளையும், ஏதோமியரையும் இந்தப் பள்ளத்தாக்கு எங்கிலும் வாய்க்கால்களை வெட்டுமாறு எலிசா கூறுகிறான். காற்றும், மழையும் இல்லாமல் கர்த்தர் இந்த வாய்க்கால்களில் தண்ணீரை நிரப்புவார். (2இராஜா 3:16-20). ஏதோமின் வழியாகத் தண்ணீர் வந்தது. தேசம் தண்ணீரால் நிரம்பிற்று. (2இராஜா 3:20).

9. தண்ணீர் இரத்தம்போல சிவப்பாக காணப்பட்டது - ஆறாவது அற்புதம்

2இராஜா 3:21 தங்களோடு யுத்தம்பண்ண ராஜாக்கள் வருகிறதை மோவாபியரெல்லாரும் கேட்டபோது, அவர்கள் ஆயுதம் தரிக்கத்தக்க வயதுள்ளவர்களையும், அதற்கு மேல்தரமானவர்கள் எல்லாரையும் கூட்டி அழைத்துக் கொண்டுவந்து எல்லையிலே நின்றார்கள்.

2இராஜா 3:22 மோவாபியர் அதிகாலமே எழுந்தபோது சூரியன் தண்ணீரின் மேல் பிரகாசித்ததினால் அந்தத் தண்ணீர் அவர்களுக்கு இரத்தம்போல் சிவப்பாய்க் காணப்பட்டது.

2இராஜா 3:23 அதினால் அவர்கள்: இது இரத்தம், அந்த ராஜாக்கள் தங்களைத் தாங்களே ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு மாண்டுபோனார்கள்; ஆதலால் மோவாபியரே, கொள்ளைக்கு வாருங்கள் என்று சொன்னார்கள்.

"இது இரத்தம்" - தண்ணீர் ஏதோமியருக்கு இரத்தம்போல் சிவப்பாய்க் காணப்பட்டது. (2இராஜா 3:22) இதைப் பார்த்த மோவாபியர் ஏதோமின் ராஜாவும், இஸ்ரவேலின் ராஜாவும் தங்களைத் தாங்களே ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு மாண்டுபோனார்கள் என்று கூறினார்கள். ஆகையினால் அவர்களைக் கொள்ளையிடுவதற்காக மோவாபியர் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் இஸ்ரவேலின் பாளயத்திற்கு வந்தபோதோவெனில், இஸ்ரவேலர் எழும்பி, மோவாபியரை முறியடித்தார்கள்.

10. மோவாபியரின் தோல்வி - (வசனங்கள் 18-19)

2இராஜா 3:24 அவர்கள் இஸ்ரவேலின் பாளயத்திற்கு வந்தபோதோவெனில், இஸ்ரவேலர் எழும்பி, மோவாபியரைத் தங்களுக்கு முன்பாக ஓடிப்போகத் தக்கதாய் முறியஅடித்து, அவர்கள் தேசத்திற்குள் புகுந்து, அங்கேயும் மோவாபியரை முறிய அடித்து,

2இராஜா 3:25 பட்டணங்களை இடித்து, சகல நல்ல நிலத்திலும் கல்லெறிந்து நிரப்பி, நீரூற்றுகளையெல்லாம் தூர்த்து, நல்ல மரங்களையெல்லாம் வெட்டிப் போட்டார்கள்; கிராரேசேத்திலேமாத்திரம் அதின் மதில்கள் இன்னும் இடிபடாதிருக்கிறபோது; கவண்காரர் அதைச் சுற்றிக்கொண்டு அதையும் சேதமாக்கினார்கள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

3 அதிகாரம்

2இராஜா 3:26 யுத்தம் மும்முரமாகிறதென்று மோவாபியரின் ராஜா கண்டபோது, அவன் ஏதோமின் ராஜாவின்மேல் வலுமையாய் விழுகிறதற்குப் பட்டயம் உருவுகிற எழுநூறுபேரைக் கூட்டிக் கொண்டு போனான்; ஆனாலும் அவர்களாலே கூடாமற்போயிற்று.

2இராஜா 3:27 அப்பொழுது அவன் தன் ஸ்தானத்தில் ராஜாவாகப்போகிற தன் சேஷ்டபுத்திரனைப் பிடித்து, அலங்கத்தின் மேல் அவனைச் சர்வாங்க தகனமாக பலியிட்டான்; அப்பொழுது இஸ்ரவேலர் மேல் கடுங்கோபம் மூண்டதினால், அவர்கள் அவனைவிட்டுப் புறப்பட்டு, தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிட்டார்கள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

4 அதிகாரம்

11. விதவையின் எண்ணெய் பெருகிறது

2இராஜா 4:1 தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன்கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான் என்றாள்.

2இராஜா 4:2 எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்னசெய்யவேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள்: ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்.

2இராஜா 4:3 அப்பொழுது அவன்: நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டுவாங்கி,

2இராஜா 4:4 உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான்.

2இராஜா 4:5 அவள் அவனிடத்திலிருந்து போய், தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக்கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வார்த்தாள்.

2இராஜா 4:6 அந்தப் பாத்திரங்கள் நிறைந்த பின்,அவள் தன் மகன் ஒருவனை நோக்கி: இன்னும் ஒரு பாத்திரம் கொண்டுவா என்றாள். அதற்கு அவன்: வேறே பாத்திரம் இல்லை என்றான்; அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று.

2இராஜா 4:7 அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன்: நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக்கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங்கள் என்றான்.

"தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ" - தீர்க்கதரிசிகளின் புத்திரர் ஐசுவரியவான்கள் அல்ல. இங்கு தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவன் உயிரோடு இருக்கும்போது அதிகமாகக் கடன் வாங்கினான். அதன் பின்பு மரித்துப்போனான். அவனுக்குக் கடன் கொடுத்தவன் அவனுடைய இரண்டு குமாரரையும் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள வந்திருக்கிறான். அந்தத் தீர்க்கதரிசியின் மனைவி எலிசாவிடம் வருகிறாள். ஏனெனில் தீர்க்கதரிசிகளுடைய புத்திரரின் கலாசாலைக்கு எலிசா தலைவனாக இருக்கிறான். ஆகையினால் இந்த விதவை ஸ்திரீ தன்னுடைய குடும்பத்துப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு உதவி புரியுமாறு எலிசாவிடம் கூறுகிறாள். எலிசா அவளுக்கு அற்புதமாக எண்ணெயை வரவைத்து, அவளுடைய புருஷன் பட்ட கடனை அடைத்துத் தீர்ப்பதற்கு உதவி புரிகிறான். (2இராஜா 4:1-7).

"என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான்" - மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் கடன் கொடுத்தவன், கடன்பட்டவனால் கடனை அடைக்க முடியாத பட்சத்தில், கடன் பட்டவனையோ அல்லது அவனுடைய பிள்ளைகளையோ அடிமைகளாக எடுத்துக் கொள்ள முடியும். யூபிலி வருஷம் வரையிலும் அவர்களை அடிமையாக வைத்திருந்து வேலைவாங்கி, யூபிலி வருஷத்தில் அவர்களை விடுதலை பண்ணிவிட வேண்டும். (லேவி 25:39-41; நெகே 5:5-8; யோபு 24:9; ஏசா 50:1; மத் 25:25).

"குடம்" - இது எண்ணெயைப் பிடித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மண்பாத்திரம். இதற்கு இரண்டு கைப்பிடிகளும் இருக்கும். (மாற்கு 14:13; லூக்கா 22:10)

4 அதிகாரம்

12. சூனேமில் கனம்பொருந்திய ஸ்திரீ எலிசாவுக்கு விருந்து உபசரிக்கிறாள்

2இராஜா 4:8 பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனை போஜனம்பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம்பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்.

2இராஜா 4:9 அவள் தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்.

2இராஜா 4:10 நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்து விளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்.

2இராஜா 4:11 ஒருநாள் அவன் அங்கே வந்து, அந்த அறைவீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான்.

கனம்பொருந்தியவள் (great) - גָּדוֹל - gaw-dole', gaw-dole' - 1419

பெயரடை-பெரிய, மகா, மகத்தான, மூத்த, மிகுந்த, வெகு, பிரதான, திரளான, மிகவும், வல்லமையான, ஏராளமான, உரத்த (great in any sense; high; mighty; noble; rich) - 1சாமு 15:2; 2சாமு 19:32 ஆகிய வசனங்களின் பிரகாரம் இந்த ஸ்திரீ ஐசுவரியவதியாக இருக்க வேண்டும்.

"மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீடு" - இதற்கான எபிரெய வார்த்தை "அலியா" (' aliyah) என்பதாகும். 2சாமு 18:33 ஆவது வசனத்தில் இது கெவுனி வாசலின்மேல்வீடு என்று அழைக்கப்படுகிறது. எலியாவும் சாறிபாத் ஊர் விதவையின் வீட்டில் இதுபோன்று ஒரு மேலறையில் தங்கியிருந்தான். (1இராஜா 17:19,23).

வேதாகமத்தில் இதுபோன்ற மேலறை வீடுகளைப் பற்றிப் பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. அகசியா கிராதியிலிருந்து விழுந்து நோய்வாய்ப்பட்டான். (2இராஜா 1:2) ஏகூத் எக்லோனை இதுபோன்ற ஒரு மேலறையில் கொன்றுபோட்டான்.(நியா 3:20) ஆகாஸ் தன் அரண்மனையின் மேல்வீட்டில் விக்கிரகாராதனைக்குப் பலிபீடங்களைக் கட்டினான்.(2இராஜா 23:12). தானியேல் தினமும் மேலறையில் ஜெபித்தான். (தானி 6:10). புதிய ஏற்பாட்டிலும் மேலறையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (அப் 1:13; அப் 9:37,39; அப் 20:7-8). இயேசு கிறிஸ்து தமது சீஷர்களோடு மேலறையில் பஸ்காவை ஆசரித்தார். (மாற்கு 14:15; லூக்கா 22:12).

13. சூனேமிய ஸ்திரீக்கு ஒரு குழந்தை பிறக்கிறது - எட்டாவது அற்புதம்

2இராஜா 4:12 அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசை நோக்கி: இந்தச் சூனேமியாளை அழைத்துக் கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக்கொண்டு வந்தான்; அவள் அவனுக்குமுன்பாக நின்றாள்.

2இராஜா 4:13 அவன் கேயாசியைப் பார்த்து: இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்: என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள்.

2இராஜா 4:14 அவளுக்குச் செய்ய வேண்டியது என்னவென்று கேயாசியை அவன் கேட்டதற்கு; அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்.

4 அதிகாரம்

2இராஜா 4:15 அப்பொழுது அவன்: அவளைக் கூப்பிடு என்றான்; அவளைக் கூப்பிட்டபோது, அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்.

2இராஜா 4:16 அப்பொழுது அவன்: ஒரு பிராண உற்பத்திகாலத் திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்றான். அதற்கு அவள் ஏது தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்றாள்.

2இராஜா 4:17 அந்த ஸ்திரீ கர்ப்பந்தரித்து, எலிசா தன்னோடே சொன்னபடி, ஒரு உற்பத்திகாலத்திட்டத்தில் ஒரு குமாரனைப் பெற்றாள்.

"என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்" - எலிசா சூனேமிய ஸ்திரீயின் வீட்டில் தங்கியிருக்கிறான். அவளுடைய விருந்து உபசரிப்பிற்காக எலிசா ஏதாவது ஒரு வெகுமதியைத் தரவிரும்புகிறான். விருந்தினரை உபசரிக்கும் ஆவியைக் கர்த்தர் மேன்மைப் படுத்துவார். அதற்காக இப்போதும், வெகுமதி கொடுக்கப்படும். (2இராஜா 4:16) பின்பு எப்போதும் வெகுமதி கிடைக்கும். (மத் 10:40-42; 2கொரி 5:10). மனுஷர் காணும் படியாக நன்மை செய்கிறவர்கள் தங்களுடைய பலனை அடைந்து தீர்ந்தாயிற்று. (மத் 6:1-8).

"அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன்" - சூனேம் ஊர் ஸ்திரீயைப் பற்றி கேயாசி எலிசாவிடம் கூறுகிறான். அவளுக்கு ஒரு பிள்ளை பிறந்தால் அது அவளுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும் என்று கூறுகிறான். எலிசா அந்த ஸ்திரீயைக் கூப்பிட்டு, "ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய்" என்று அவளிடம் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறான். (2இராஜா 4:16). அவளுக்கு இது நல்ல செய்திதான். ஆனாலும், இதை நம்புவதற்கு அவள் பயப்படுகிறாள். (2இராஜா 4:16) எலிசாவின் தீர்க்கதரிசன வார்த்தையின் பிரகாரம் அவள் ஒரு உற்பத்திகாலத்திட்டத்தில் ஒரு குமாரனைப் பெற்றாள். (2இராஜா 4:17).

தீர்க்கதரிசன எண் - 5

"ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக்கொண்டிருப்பாய்" (2இராஜா 4:16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

14. சூனேமிய ஸ்திரீயின் குழந்தையின் வியாதியும் மரணமும்

2இராஜா 4:18 அந்தப் பிள்ளை வளர்ந்தான், ஒரு நாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும்போது,

2இராஜா 4:19 தன் தகப்பனைப் பார்த்து: என் தலை நோகிறது, என் தலை நோகிறது என்றான்; அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில், இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக்கொண்டு போய்விடு என்றான்.

2இராஜா 4:20 அவனை எடுத்து, அவன் தாயினிடத்தில் கொண்டுபோனபோது, அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான்.

2இராஜா 4:21 அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக் கொண்டுபோய்,

வளர்ந்தான் (grown) - גָּדַל - gaw-dal' - 1431

வினைச்சொல் - பெரியதாயிரு, வளர், மகத்துவமாயிரு, மேன்மைப்படுத்து, மகிமைப்படுத்தப்படு, சீமானாயிரு, அருமையாயிரு, சிறந்தவனாயிரு, பெருமைப்பாராட்டு, வல்லவனாயிரு (become large; grow up) - பிள்ளை வளர்ந்தான். ஆனாலும் வயலில் வேலை செய்யும் அளவிற்கு அவன் இன்னும் வாலிபனாகவில்லை.

4 அதிகாரம்

15. கர்மேல் மலையில் சூனேமிய ஸ்திரீ எலிசாவைக் கண்டுபிடிக்கிறாள்

2இராஜா 4:22 தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி: நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு; வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லச்சொன்னாள்.

2இராஜா 4:23 அப்பொழுது அவன்: இது அமாவாசியும் அல்ல ஓய்வுநாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போகவேண்டியது என்ன என்று கேட்கச்சொன்னான். அதற்கு அவள்: எல்லாம் சரிதான், நான் போக வேண்டியிருக்கிறது என்று சொல்லியனுப்பி,

2இராஜா 4:24 கழுதையின்மேல் சேணம் வைத்து ஏறி, தன் வேலைக்காரனை நோக்கி: இதை ஓட்டிக்கொண்டுபோ; நான் உனக்குச் சொன்னால் ஒழிய போகிற வழியில் எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே என்று சொல்லிப் புறப்பட்டு,

2இராஜா 4:25 கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்; தேவனுடைய மனுஷன் தூரத்திலே அவளை வரக்கண்டு, தன் வேலைக்காரனாகிய கேயாசியைப் பார்த்து: அதோ சூனேமியாள் வருகிறாள்.

2இராஜா 4:26 நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள் என்றான். அவள்: சுகந்தான் என்று சொல்லி,

2இராஜா 4:27 பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்தில் வந்து, அவன் காலைப் பிடித்துக்கொண்டாள்; அப்பொழுது கேயாசி அவளை விலக்கி விட வந்தான்; தேவனுடைய மனுஷன்: அவளைத் தடுக்காதே; அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது; கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார் என்றான்.

"நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு" - சூனேம் ஊர் ஸ்திரீ ஐசுவரியமுள்ளவள். இவர்கள் நடப்பதற்குப் பதிலாகப் பொதுவாக கழுதைகளில் ஏறிப்போவார்கள். இவர்களுடைய வேலைக்காரர் இவள் கழுதையில் ஏறிச் செல்லும்போது கூடவே போவார்கள். (பிர 10:5-7).

"இது அமாவாசியும் அல்ல ஓய்வுநாளும் அல்லவே" - தீர்க்கதரிசிகள் ஜனங்களைப் பொதுவாக அமாவாசி அன்றும், ஓய்வுநாள் அன்றும் கூட்டிச் சேர்த்து, அவர்களுக்கு உபதேசம் பண்ணுவது வழக்கம். (ஆமோ 8:5) சூனேம்ஊர் ஸ்திரீ சாதாரண நாளில் எலிசாவைப் பார்க்கப்போவது அவனுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

"எல்லாம் சரிதான்" - சூனேம் ஊர் ஸ்திரீ தன்மனதிலுள்ள இரகசியத்தை வெளிப்படுத்த வில்லை. தான் தீர்க்கதரிசியைப் பார்த்தால் எல்லாம் சரியாய் போய்விடும் என்று மட்டுமே அறிவிக்கிறாள்.

எலிசா சூனேமியாளிடம் கேட்கச் சொன்ன கேள்விகள்

1. நீ சுகமாயிருக்கிறாயா?
2. உன் புருஷன் சுகமாயிருக்கிறானா?
3. உன் பிள்ளை சுகமாயிருக்கிறதா

"சுகந்தான்" - சூனேம்ஊர் ஸ்திரீயின் பிள்ளை செத்துப்போயிற்று. ஆனாலும் விசுவாசத்தோடு "சுகந்தான்" என்று பதில் கூறுகிறாள். எலிசா தனக்கு உதவி புரிவான் என்று அவள் விசுவாசிக்கிறாள். தீர்க்கதரிசிகள் மூலமாக தேவனிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக் கொள்வது அக்காலத்து வழக்கம். தேவனுடைய சித்தத்தை அக்காலத்து ஜனங்கள் எதிர்ப்பதும் இல்லை. அதைக் குறித்து விவாதம் பண்ணுவதும் இல்லை. தீர்க்கதரிசியின் வாயிலிருந்து எவ்வளவு பெரிய வார்த்தை வந்தாலும் அதை அவர்கள் பக்தியோடு ஏற்றுக் கொள்வார்கள்.

4 அதிகாரம்

"கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்துவைத்தார்" - கர்த்தர் தீர்க்கதரிசிகளுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவார். ஆனால் சூனேம் ஊர் ஸ்திரீயின் பிள்ளை மரித்துப்போன செய்தியைக் கர்த்தர் எலிசாவிற்கு இன்னும் அறிவியாமல் மறைத்து வைத்திருக்கிறார்.

16. சூனேமிய ஸ்திரீயின் வீட்டிற்கு எலிசா அவளோடு வருகிறான்

2இராஜா 4:28 அப்பொழுது அவள், நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்று நான் சொல்லவில்லையா என்றாள்.

2இராஜா 4:29 அப்பொழுது அவன் கேயாசியைப் பார்த்து: நீ உன் இடையைக் கட்டிக்கொண்டு, என் தடியை உன் கையில் பிடித்துக்கொண்டு, வழியில் ஒருவனைச் சந்தித்தாலும் அவனை வினவாமலும், உன்னை ஒருவன் வினவினாலும் அவனுக்கு மறுமொழி சொல்லாமலும் போய், என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின்மேல் வை என்றான்.

2இராஜா 4:30 பிள்ளையின் தாயோ: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றாள்; அப்பொழுது அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான்.

2இராஜா 4:31 கேயாசி அவர்களுக்கு முன்னே போய், அந்தத் தடியைப் பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான்; ஆனாலும் சத்தமும் இல்லை, உணர்ச்சியும் இல்லை; ஆகையால் அவன் திரும்பி அவனுக்கு எதிர்கொண்டுவந்து: பிள்ளை விழிக்கவில்லை என்று அவனுக்கு அறிவித்தான்.

"நீ உன் இடையைக் கட்டிக்கொண்டு, என் தடியை உன் கையில் பிடித்துக்கொண்டு" - கேயாசி எலிசா சொன்ன பிரகாரமாக அந்தத் தடியைப் பிள்ளையின் முகத்தின்மேல் வைத்தான்; ஆனாலும் பிள்ளை பிழைக்க வில்லை. சத்தமும் இல்லை, உணர்ச்சியும் இல்லை. போனபிரகாரமாகவே எலிசாவிடம் திரும்பி வந்து விட்டான்.

"நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" - சூனேம் ஊர் ஸ்திரீ ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கிறாள். எலியா, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையிலே, எலிசாவும் அவனைப் பின்பற்றிச் செல்ல வேண்டுமென்று தீர்மானத்தோடு இருந்தான். (2இராஜா 2:2,4,6).

17. சூனேமிய ஸ்திரீயின் குமாரனை எலிசா உயிரோடு எழுப்புகிறான் - ஒன்பதாவது அற்புதம்

2இராஜா 4:32 எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான்.

2இராஜா 4:33 உள்ளே போய்த் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து,

2இராஜா 4:34 கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின்மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப் படுத்துக்கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது.

2இராஜா 4:35 அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்பக் கிட்டப் போய் அவன்மேல் குப்புறப்படுத்தான்; அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்.

2இராஜா 4:36 அப்பொழுது அவன்: கேயாசியைக் கூப்பிட்டு, அந்தச் சூனேமியாளை அழைத்துக் கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக்கொண்டு வந்தான்; அவள் அவனிடத்தில் வந்தபோது; அவன், உன் குமாரனை எடுத்துக்கொண்டு போ என்றான்.

4 அதிகாரம்

2இராஜா 4:37 அப்பொழுது அவள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக் கொண்டு வெளியே போனாள்.

"அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான்" - அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் அந்த சரீரத்தை விட்டுப் பிரிந்து போயிருந்தது. (யாக் 2:26).

"அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்" - மரித்துப்போனவன் மறுபடியும் பிழைத்த சம்பவம் வேதாகமத்தில் இரண்டாம் கூறப்பட்டிருக்கிறது. முதலாவதாக எலியாவின் காலத்திலும் (1இராஜா 17:17-24), அதன் பின்பு எலிசாவின் காலத்திலும் (2இராஜா 4:32-37) மரித்தவர்கள் மறுபடியும் பிழைத்திருக்கிறார்கள். எலிசா மரித்துப்பின்பும்கூட அவனுடைய எலும்புகளின்மீது மரித்துப் போனவனுடைய சரீரம் பட்டபோது மரித்தவன் உயிரோடு எழும்பினான். (2இராஜா 13:20-25). கிறிஸ்து, பேதுரு, பவுல் ஆகியோரும் மரித்தோரை உயிரோடு எழுப்பியிருக்கிறார்கள். (மத் 9:25).

18. பானையிலிருந்த விஷத்தை எலிசா அகற்றுகிறான் - பத்தாவது அற்புதம்

2இராஜா 4:38 எலிசா கில்காலுக்குத் திரும்பிப் போய் இருக்கையில், தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று; தீர்க்கதரிசிகளின் புத்திரர், அவனுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள்; அவன் தன் வேலைக்காரனை நோக்கி: நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு என்றான்.

2இராஜா 4:39 ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க்கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்து வந்து, அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான்; அது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதிருந்தது.

2இராஜா 4:40 சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்; அவர்கள் அந்தக் கூழில் எடுத்துச் சாப்பிடுகிறபோது, அதைச் சாப்பிடக்கூடாமல்: தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள்.

2இராஜா 4:41 அப்பொழுது அவன், மாவைக் கொண்டுவரச்சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும் படி அவர்களுக்கு வார் என்றான்; அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று.

"கில்கால்" - (2இராஜா 2:2)

19. நூறு மனுஷருக்கு உணவு பெருகுகிறது - 11வது அற்புதம்

2இராஜா 4:42 பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்; அப்பொழுது அவன்: ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு என்றான்.

2இராஜா 4:43 அதற்கு அவனுடைய பணிவிடைக்காரன்: இதை நான் நூறுபேருக்கு முன் வைப்பது எப்படி என்றான். அதற்கு அவன்: அதை ஜனங்களுக்குச் சாப்பிடக் கொடு; சாப்பிட்டபிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 4:44 அப்பொழுது அவர்களுக்கு முன்பாக அதை வைத்தான்; கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது.

தீர்க்கதரிசன எண் - 6

"அதை ஜனங்களுக்குச் சாப்பிடக் கொடு; சாப்பிட்டபிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக்கும்" (2இராஜா 4:43) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

5 அதிகாரம்

20. நாகமானின் குஷ்டரோகத்தை குணப்படுத்துகிறான் - 12வது அற்புதம்

2இராஜா 5:1 சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ள வனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்.

2இராஜா 5:2 சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள்.

2இராஜா 5:3 அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலி ருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.

2இராஜா 5:4 அப்பொழுது அவன் போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான்.

2இராஜா 5:5 அப்பொழுது சீரியாவின் ராஜா: நல்லது போகலாம், இஸ்ரவேலி ன் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான்; அப்படியே அவன் தன் கையிலே பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டுபோய்,

2இராஜா 5:6 இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது.

2இராஜா 5:7 இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிடவேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்றான்.

2இராஜா 5:8 இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான்.

2இராஜா 5:9 அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.

2இராஜா 5:10 அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான்.

2இராஜா 5:11 அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

5 அதிகாரம்

2இராஜா 5:12 நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப் போனான்.

2இராஜா 5:13 அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்.

2இராஜா 5:14 அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.

"நாகமான்" (Naaman) - இந்தப் பெயருக்கு "பிரியம்" "delight" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "நாகமான்"கள்

1. சீரியா ராஜாவின் படைத்தலைவன் (2இராஜா 5:1-27; லூக்கா 4:27)
2. பென்யமீன் கோத்திரத்தான் (ஆதி 46:21)
3. பேலாவின் குமாரன் (எண் 26:40; 1நாளா 8:3)
4. ஏகூத்தின் குமாரன் (1நாளா 8:5)

ஐந்துவிதமான வேலையாட்கள்

1. ராஜாவின் படைத்தலைவன் (2இராஜா 5:1)
2. நாகமானின் மனைவிக்குப் பணிவிடைக்காரி (2இராஜா 5:2)
3. கர்த்தரின் ஊழியக்காரன் - தீர்க்கதரிசி (2இராஜா 5:8)
4. நாகமானின் சேவகர்கள் (2இராஜா 5:13)
5. தீர்க்கதரிசியின் வேலைக்காரன் (2இராஜா 5:20)

"அவனைக்கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்" - சீரிய தேசத்து ராஜா சீரியாவின் எல்லாப் பகுதியில் வெற்றி பெற்றிருக்கிறான். சமீபத்தில் அந்தத் தேசத்திலுள்ள ஜனங்கள் ராஜாவுக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். நாகமான் அந்தக் கலகங்களையெல்லாம் அடக்கி, ராஜாவிற்கு வெற்றியைத் தேடித்தந்தான். இந்த வாக்கியத்தில் சீரியாவுக்கு இரட்சிப்பு என்பது இஸ்ரவேலிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பு என்று பொருள்படாது. அசீரியரிடமிருந்து சீரியருடைய இரட்சிப்பு என்றே இந்த வாக்கியம் பொருள்படும்.

"அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கி விடுவார்" - நாகமானின் வீட்டு வேலைக்காரி எலிசாவையும், அவனுடைய கர்த்தரையும் நம்புகிறாள். எலிசாவைப் பற்றி இவள் சமாரியாவில் கேள்விப்பட்டிருக்கிறாள். எலியாவின் மூலமாகவும், எலிசாவின் மூலமாகவும் கர்த்தர் செய்த அநேக அற்புதங்களைப் பற்றியும் இந்தச் சிறுபெண் சமாரியாவில் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆகையினால் தன் எஜமானுடைய குஷ்டரோகத்தை நீக்க எலிசாவால் முடியும் என்று நம்பிக்கையோடு கூறுகிறாள்.

"நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" - இது ஒரு விநோதமான விண்ணப்பம். இஸ்ரவேலின் ராஜா கர்த்தரிடத்தில் பக்தியில்லாதவன். இவனுக்கு குஷ்டரோகத்தைக் குணமாக்கும் வல்லமையில்லை. சீரியா ராஜாவையும், நாகமானையும்போல இவனும் ஒரு சாதாரண மனுஷன்தான். இவனைப் பார்த்து, சீரிய தேசத்து ராஜா நாகமானின் குஷ்டரோகத்தை நீக்கிவிடுமாறு ஒரு நிருபத்தின் மூலமாகக் கட்டளையிடுகிறான். அந்த நிருபத்தை வாசித்தவுடன் சீரிய ராஜா தன்மீது யுத்தம் பண்ண ஆயத்தம் பண்ணுவதாக நினைத்து, இஸ்ரவேலின் ராஜா கலங்குகிறான். (2இராஜா 5:6-7).

5 அதிகாரம்

"தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது" - இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான். எலிசாவும் இப்போது சமாரியாவில் இருக்கிறான். இந்தச் செய்தியை எலிசாவும் கேள்விப் படுகிறான். சீரியா ராஜாவின் நிருபத்தை வாசித்துப் பார்த்து, அந்த ராஜா தன்மீது யுத்தம் பண்ண வருகிறான் என்று இஸ்ரவேல் ராஜா தீர்மானம் பண்ணிவிட்டான். அவன் தன்னுடைய கோபத்தில் நாகமானையும், அவனுடைய ஆட்களையும் இஸ்ரவேலின் ராஜா கொன்று போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகையினால், இந்த இக்கட்டான சூழ்நிலையில் எலிசா தலையிடுகிறான்.

தீர்க்கதரிசன எண் - 7

"நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்" *(2இராஜா 5:10)* இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நாகமான் கோபத்தோடு கூறிய வார்த்தைகள்

1. எலிசா வெளியே வந்து நிற்பான் என்று நினைத்தேன்.
2. தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை எனக்காகத் தொழுதுகொள்வான் என்று நினைத்தேன்.
3. தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்.
4. நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ.

"அவன் வெளியே வந்து நின்று" - நாகமான் சீரியா ராஜாவின் படைத்தளபதி. அவனுக்குக் கீழ் அநேக சேவகர்கள் பணிபுரிகிறார்கள். மிகவும் கவனம் பொருந்தியவன். இப்படிப் பட்டவன் எலிசாவின் வீட்டிற்கு வரும்போது எலிசா வீட்டுக்கு வெளியே வந்து, நின்று தன்னை வரவேற்பான் என்று நாகமான் நினைத்தான். ஆனால் எலிசாவோ நாகமானின் விருப்பத்தின்படி செயல்படாமல், ஆவியானவர் ஏவுகிறபடி செயல்படுகிறான். நாகமான் தாழ்மையையும், கீழ்ப்படிதலையும் கற்றுக் கொள்ள வேண்டும். மனுஷருடைய மேன்மையைக் கர்த்தர் அங்கிகரிப்பதில்லை. சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக மனுஷருடைய பெருமை ஒன்றுக்கும் உதவாது. நம்முடைய வழிகள் கர்த்தருடைய வழிகளல்ல. கர்த்தர் மனுஷரைப்போல சிந்திப்பதில்லை. *(ஏசா 55:8-9)*. நாகமான் எதிர்பார்த்ததுபோல எலிசா செய்திருந்தால், அவன் எலிசாவிற்குப் பெரிய வெகுமதியைக் கொடுத்திருப்பான். தான் குணமாக வேண்டுமென்பதைவிட தீர்க்கதரிசி தன்னை வந்து பார்த்து, தன்னைப் பெருமைப் படுத்த வேண்டும் என்னும் எண்ணமே நாகமானிடம் காணப்படுகிறது. நாகமானின் வேலைக்காரர் அவனுக்கு நல்ல ஆலோசனையைக் கூறி, எலிசா சொன்ன பிரகாரம் யோர்தானில் ஸ்நானம் பண்ணச் சொல்கிறார்கள். *(2இராஜா 5:11-14)*.

உக்கிரம் **(rage) חמא - khay-maw' - 2534**

> பெ.பெ.சொ. -கோபம், உக்கிரம், விஷம், மூர்க்கவெறி, கோபக்காரன், மூர்க்கன், கடுங்கோபி, துருத்தி, எரிச்சல் **(heat; anger; fury; indignation)** *(2இராஜா 5:12; நீதி 6:34)*.

"அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா?" - நாகமான் எலிசாவின் செய்கையினால் மிகுந்த கோபமடைகிறான். இஸ்ரவேலோடு யுத்தத்தையே ஆரம்பித்து இருப்பான். இஸ்ரவேலின் ராஜாவும் நாகமானுக்கு ஒன்றும் செய்யவில்லை. தீர்க்கதரிசியும் நாகமானை மதித்துக் கனப்படுத்தவில்லை. மிகுந்த எதிர்பார்ப்போடு வந்தான். பெரிய ஏமாற்றத்தோடும், கோபத்தோடும் திரும்பிப் போகிறான். அவனுடைய உக்கிரக்கோபத்திற்குச் சுயபெருமையே காரணம். நாகமானின் ஊழியக்காரர் அவனுடைய கோபத்தைத் தணிக்கிறார்கள். யோர்தானில் ஸ்நானம் பண்ணுவதைவிட வேறு ஏதாவது பெரிய காரியத்தை எலிசா சொல்லியிருந்தால், நாகமான் ஒருவேளை அதை மனப்பூர்வமாக நிறைவேற்றியிருந்திருப்பான்.

5 அதிகாரம்

எலிசா கூறிய காரியம் மிகவும் சாதாரணமானது. நாகமான் யோர்தான் நதியில் ஏழுதரம் முழுகி ஸ்நானம் பண்ண வேண்டும். அப்போது அவனுடைய குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கும். இது மிகவும் எளிமையான வைத்தியம். தீர்க்கதரிசியின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாவிட்டால், நாகமானால் சொஸ்தமாக முடியாது. இவன் சீரியா தேசத்திற்குத் திரும்பிப்போகும்போது யோர்தான் வழியாகத்தான் போகவேண்டும். ஆகையினால் போகிற வழியில் யோர்தானில் ஏழு தரம் முழுகினான். அப்போது அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான். (2இராஜா 5:14).

21. எலிசாவுக்கு வெகுமதி கொடுக்க நாகமான் திரும்பி வந்து இஸ்ரவேலின் தேவனிடத்தில் தனக்குள்ள பக்தியை வெளிப் படுத்துகிறான்

2இராஜா 5:15 அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான்.

2இராஜா 5:16 அதற்கு அவன்: நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான்.

2இராஜா 5:17 அப்பொழுது நாகமான்: ஆனாலும் இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கத்தக்க இரண்டு பொதி மண் உமது அடியேனுக்குக் கட்டளையிடவேண்டும்; உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை.

2இராஜா 5:18 ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் பணிந்துகொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்குக் கைலாகு கொடுத்து ரிம்மோன் கோவிலிலே பணிய வேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணியவேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான்.

2இராஜா 5:19 அதற்கு அவன்: சமாதானத்தோடே போ என்றான்; இவன் புறப்பட்டுக்கொஞ்சதூரம் போனபோது,

"தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து" - இயேசு கிறிஸ்து ஒருசமயம் பத்து குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினார். அவர்களில் ஒருவன் மட்டும் இயேசு கிறிஸ்துவிடம் வந்து தன்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறான். (லூக்கா 17:12-17). நாகமானும் தன்னுடைய குஷ்டரோகம் நீங்கியவுடன் எலிசாவுக்கு நன்றிகூற திரும்பி வருகிறான். இஸ்ரவேலின் தேவனிடத்தில் தான் வைத்திருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடுகிறான். இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்று எல்லோருக்கும் முன்பாக சாட்சி பகருகிறான். ஆபிரகாமையும், அவனுடைய சந்ததியாரையும் கர்த்தர் தெரிந்தெடுத்தார். அவர்கள் மூலமாகப் பூமியிலுள்ள எல்லா தேசங்களும் ஆசீர்வதிக்கப் பட வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தம். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருந்தால், முழு உலகத்திலுள்ள ஜனங்களும் நாகமானைப்போல சாட்சி பகருவார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையாருக்குக் கர்த்தருடைய புண்ணியங்களை அறிவிக்கும் ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்து, கர்த்தருடைய ஊழியத்தை ஒவ்வொரு விசுவாசியும் செய்ய வேண்டும். அப்போது முழு உலகத்தாரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வார்கள். (மத் 28:20; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15;யோவான் 15:7,16; 2கொரி 12; எபி 2:3-4).

5 அதிகாரம்

"உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ளவேண்டும்" - நாகமான் வற்புறுத்திக் கூறியும் எலிசா அவனிடத்தில் காணிக்கை வாங்க மறுத்துவிடுகிறான். ஏனெனில் நாகமான் குணமானது கர்த்தர் செய்த காரியம். அது எலிசாவின் கிரியையல்ல. ஆகையினால் கர்த்தருக்குரிய கனத்தை இந்த ஊழியக்காரன் தனக்குப் பெற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறான். (2இராஜா 5:15-16).

"ரிம்மோன் கோவில்" - ரிம்மோன் (Rimmon) சீரிய தேசத்தாரின் தெய்வம். இந்தத் தெய்வத்தைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை. ஒருவேளை இந்தத் தெய்வம் சூரிய ஆராதனையோடு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். சீரிய தேசத்து ராஜா ரிம்மோன் கோவிலுக்குப் போகும்போது அவனுடைய படைத்தலைவனாகிய நாகமானும் அவனோடுகூடப் போவான். ரிம்மோனைப் பணிந்து கொள்ள சீரிய ராஜா கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நாகமான் அவனுக்குக் கைலாகு கொடுத்து ரிம்மோன் கோவிலிலே பணியவேண்டியது வரும். இந்தக் காரியத்தைக் கர்த்தர் தனக்கு மன்னிப்பாராக என்று நாகமான் விண்ணப்பம் பண்ணுகிறான். இஸ்ரவேலிலும் இதுபோன்ற பழக்கம் இருந்தது. (2இராஜா 7:2,17). பாரம்பரியத்தின்படி எஸ்தருக்கு இரண்டு ஸ்திரீகள் பணிவிடை செய்து கொண்டிருந்தார்களாம். ஒரு ஸ்திரீ எஸ்தரின் வஸ்திரங்களை ஏந்திப் பிடித்துக் கொண்டு வருவாள். மற்றொரு ஸ்திரீ எஸ்தருக்கு கைலாகு கொடுத்து அழைத்து வருவாள்.

22. கேயாசியின் பொய்யும், ஏமாற்றும்

2இராஜா 5:20 தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் கேயாசி என்பவன், அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார்; நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு,

2இராஜா 5:21 நாகமானைப் பின் தொடர்ந்தான்; அவன் தன் பிறகே ஓடிவருகிறதை நாகமான் கண்டபோது, அவனுக்கு எதிர்கொண்டுபோக இரதத்திலிருந்து குதித்து: சுகசெய்தியா என்று கேட்டான்.

2இராஜா 5:22 அதற்கு அவன்: சுகசெய்தி தான்; தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுது தான் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்றுவஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான்.

2இராஜா 5:23 அதற்கு நாகமான்: தயவுசெய்து, இரண்டு தாலந்தை வாங்கிக்கொள் என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு கைகளில் இரண்டு மாற்று வஸ்திரங்களோடே கட்டி, அவனுக்கு முன்பாகச் சுமந்துபோக, தன் வேலைக்காரரான இரண்டு பேர்மேல் வைத்தான்.

2இராஜா 5:24 அவன் மேட்டண்டைக்கு வந்தபோது, அவன் அதை அவர்கள் கையிலிருந்து வாங்கி, வீட்டிலே வைத்து, அந்த மனுஷரை அனுப்பிவிட்டான்; அவர்கள் போய்விட்டார்கள்.

"அவன் மேட்டண்டைக்கு வந்தபோது" - எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி நாகமானைப் பின்தொடர்ந்துபோய், அவனிடத்தில் இரண்டு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டான். அதைக் கேயாசி தன் வீட்டிலே ஒளித்து வைத்தான். (2இராஜா 5:23-24) அதற்குப் பின்பு, கேயாசி எலிசாவிற்கு முன்பாக நின்றான். கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன்: உமது அடியேன் எங்கும் போகவில்லை என்றான். கேயாசி எலிசாவிடம் பொய்கூறினான். இதனால் கோபமடைந்த எலிசா கேயாசியைப் பார்த்து, நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்று சாபமிட்டான். உடனே கேயாசி குஷ்டரோகியானான். (2இராஜா 5:25-27).

II இராஜாக்கள் - தொகுப்புரை

5 அதிகாரம்

23. கேயாசியின் ஏமாற்று வெளிப் படுவதும், அவனுக்கு வாதையும்

2இராஜா 5:25 பின்பு அவன் உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான்; கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன்: உமது அடியேன் எங்கும் போகவில்லை என்றான்.

2இராஜா 5:26 அப்பொழுது அவன் இவனைப்பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிற போது என் மனம் உன்னுடன்கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக் காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?

2இராஜா 5:27 ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப்புறப்பட்டுப்போனான்.

"வாங்குகிறதற்கு இது காலமா?" - கேயாசி பேராசைபிடித்தவன். நாகமானிடமிருந்து ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட பணத்தினால் வஸ்திரங்களையும், ஒலிவத் தோப்புகளையும், திராட்சத் தோட்டங்களையும், ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தான். ஆனால் அவனுடைய ஆசை நிறைவேறவில்லை.

தீர்க்கதரிசன எண் - 8

"நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும்" (2இராஜா 5:27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

II இராஜாக்கள் - தொகுப்புரை

6 அதிகாரம்

24. எலிசா இரும்பை மிதக்க வைக்கிறான்

2இராஜா 6:1 தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது.

2இராஜா 6:2 நாங்கள் யோர்தான்மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்றார்கள். அதற்கு அவன்: போங்கள் என்றான்.

2இராஜா 6:3 அவர்களில் ஒருவன்: நீர் தயவு செய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும் என்றான். அதற்கு அவன்: நான் வருகிறேன் என்று சொல்லி,

2இராஜா 6:4 அவர்களோடேகூடப் போனான்; அவர்கள் யோர்தான் நதியருகே வந்த போது மரங்களை வெட்டினார்கள்.

2இராஜா 6:5 ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான்.

2இராஜா 6:6 தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்த போது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப் பண்ணி,

2இராஜா 6:7 அதை எடுத்துக்கொள் என்றான்; அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்.

"இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது" - தீர்க்கதரிசிகளின் புத்திரர் ஒரு கலாசாலையில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அங்கு இடநெருக்கடி அதிகமாயிற்று. ஆகையினால் அவர்கள் அங்கு ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று திட்டமிடுகிறார்கள். அவர்கள் யோர்தான் நதியருகே வந்து, உத்திரங்களை வெட்டினார்கள். அப்போது ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது. அப்போது எலிசா ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணினான். (2இராஜா 6:1-7).

25. எட்டாவது சீரிய யுத்தம் - இரகசியங்களை வெளிப்படுத்துதல் - 16, 17, 18ஆகிய அற்புதங்கள் - (2இராஜா 16:5)

2இராஜா 6:8 அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி, இன்ன இன்னஸ்தலத்திலேபாளயமிறங்குவேன் என்று தன் ஊழியக்காரரோடே ஆலோசனை பண்ணினான்.

2இராஜா 6:9 ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி: இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று சொல்லச் சொன்னான்.

2இராஜா 6:10 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து, தனக்குக் குறித்துச்சொன்ன ஸ்தலத்திற்குமனுஷரை அனுப்பிப்பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டான்.

2இராஜா 6:11 இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து: நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்க மாட்டீர்களா என்று கேட்டான்.

6 அதிகாரம்

2இராஜா 6:12 அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்: அப்படியில்லை; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான்.

"சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி" - சீரிய தேசத்து படைத்தளபதியான நாகமானுடைய குஷ்டரோகம் சுகமாக்கப்பட்ட பின்பு, இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. சீரியாவின் ராஜா தம்முடைய ஊழியக்காரரோடு ஆலோசனை பண்ணி, பாளயமிறங்க வேண்டிய இடங்களைப் பற்றி தீர்மானம் பண்ணுகிறான். அவன் இரகசியமாகப் பண்ணிய ஆலோசனையைக் கர்த்தர் எலிசாவுக்கு வெளிப்படுத்துகிறார். எலிசா அந்த இரகசியத்தையெல்லாம் இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிக்கிறான். இதுபோன்று மூன்று முறை நடைபெறுகிறது. (2இராஜா 6:8-10). இந்தக் காரியம் சீரிய ராஜாவின் இருதயத்தைக் குழப்பிற்று. இதற்கு மூலகாரணம் எலிசாதான் என்பதை சீரியராஜா கண்டுபிடிக்கிறான். இதற்காக எலிசாவைப் பிடிப்பதற்கு சீரிய ராஜா தன் சேனை முழுவதையும் அனுப்புகிறான். (2இராஜா 6:11-22).

"நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார்" - சீரிய ராஜா தன் ஆலோசனைக்காரருடன் இரகசியமாக ஆலோசனை பண்ணியது இஸ்ரவேலின் ராஜாவுக்குத் தெரிந்து விடுகிறது. ஆகையினால் தன்னிடத்திலே யாராவது உளவாளிகள் இருப்பார்களோ என்று சந்தேகப்படுகிறான்.

26. ஒன்பதாவது சீரிய யுத்தம் - எலிசா தன் ஊழியக்காரரின் கண்களைத் திறக்கிறான் - பத்தொன்பதாவது அற்புதம்

2இராஜா 6:13 அப்பொழுது அவன்: நான் மனுஷரை அனுப்பி அவனைப் பிடிக்கும்படி, நீங்கள்போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள் என்றான்; அவன் தோத்தானில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.

2இராஜா 6:14 அப்பொழுது அவன் அங்கே குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்துகொண்டார்கள்.

2இராஜா 6:15 தேவனுடைய மனுஷனின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில், இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருக்கக் கண்டான்; அப்பொழுது வேலைக்காரன் அவனை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, என்னசெய்வோம் என்றான்.

2இராஜா 6:16 அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக் கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான்.

2இராஜா 6:17 அப்பொழுது எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்தமலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.

II இராஜாக்கள் – தொகுப்புரை

6 அதிகாரம்

"நீங்கள்போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள்" - எலிசா இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்குச் சீரிய ராஜா வேவுகாரரை அனுப்புகிறான். எலிசா தோத்தானில் இருப்பது தெரியவருகிறது. சமாரியாவின் வடக்குப் பகுதியில் 14மைல் தூரத்தில் தோத்தான் உள்ளது. எலிசாவைப் பிடிப்பதற்கு சீரிய ராஜா தோத்தானுக்கு குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்புகிறான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து தோத்தான் பட்டணத்தை வளைந்துகொண்டார்கள். இவர்களைப் பார்த்த எலிசாவின் வேலைக்காரன் மிகவும் பயந்தான். எலிசாவின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அந்த வேலைக்காரனுடைய கண்களைத் திறந்தார். அப்போது எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்தமலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். (2இராஜா 6:13-17).

"எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்தமலை நிறைந்திருக்கிறது" - ஆவிக்குரிய ஜீவன்கள் வாழும் அதரிசனமான உலகத்தைப் பற்றிய இரண்டாவது தரிசனம். எலியாவுக்காக அக்கினி மயமான குதிரைகளும், இரதங்களும் வந்திருக்கிறது. (2இராஜா 2:11). சாதாரண கண்களால் இவற்றைப் பிரத்தியட்சமாகக் காணமுடியாது. கர்த்தர் மனுஷனுடைய கண்களைத் திறக்கும்போதுதான் அவனால் இந்த ஆவிக்குரிய ஜீவன்களைக் காண முடிகிறது. சக 1, சக 6 ஆகிய அதிகாரங்களில் பலவருண குதிரைகளைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. இவை பூமியிலுள்ள காரியங்களை அறிந்து வருவதற்காகக் கர்த்தரால் அனுப்பப் பட்டவை. வெளி 19:11,14,21 ஆகிய வசனங்களிலும் பரலோகத்தின் சேனைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய ஜீவன்கள் பூமிக்குரிய ஜீவன்களைப் போல மெய்யானவைகள். அளவிலும், உருவத்திலும் ஒன்றுபோல் இருந்தாலும் சரீர அமைப்பில் இவ்விரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது. மனுஷரிடத்திலே நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறவைகளை ஆவிக்குரிய ஜீவன்களிடத்தில் பிரத்தியட்சமாகக் காண முடிவதில்லை. (ரோமர் 1:20; கொலோ 1:15-18).

27. எலிசா சீரியருடைய சேனைகளின் கண்களை குருடாக்கி அவர்களைப் பிடிக்கிறான் - 20, 21ஆகிய அற்புதங்கள்

> 2இராஜா 6:18 அவர்கள் அவனிடத்தில் வருகையில், எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி: இந்த ஜனங்களுக்குக் கண மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலி சாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார்.
>
> 2இராஜா 6:19 அப்பொழுது எலிசா அவர்களை நோக்கி: இது வழி அல்ல; இது பட்டணமும் அல்ல; என் பிறகே வாருங்கள்; நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் நான் உங்களை வழிநடத்துவேன் என்று சொல்லி, அவர்களைச் சமாரியாவுக்கு அழைத்துக் கொண்டுபோனான்.

"அவர்கள் அவனிடத்தில் வருகையில்" - சீரியருடைய சேனை தோத்தானுக்கு அருகில் வந்துவிட்டார்கள். எலிசாவைப் பிடித்துக் கொண்டு போகவேண்டுமென்பதற்காக அவர்கள் வந்திருக்கிறார்கள். எலிசாவோ கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலி சாவுடைய வார்த்தையின்படியே கர்த்தர் அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார். எலிசா அவர்களைச் சமாரியாவிற்கு வழிநடத்திச் சென்றான். (2இராஜா 6:18-19).

"நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் நான் உங்களை வழிநடத்துவேன்" - அவர்கள் எலிசாவைத் தேடிவரவில்லை. இஸ்ரவேலின் ராஜாவைத்தான் தேடி வந்தார்கள். எலிசா அவர்களை ராஜாவினிடத்தில் அழைத்துச் செல்கிறான். (2இராஜா 6:19-23). தோத்தானுக்கும், சமாரியாவிற்கும் இடையில் 14 மைல் தூரமுள்ளது. இந்த 14 மைல் பிரயாணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் விவரிக்கப்படவில்லை. எலிசா சீரியரின் சேனை முழுவதையும் பிடித்து, தேவனுடைய வல்லமையினால் அவர்களைச் சமாரியாவிற்கே வழிநடத்திச் சென்று, அதன் பின்பு அவர்களை விடுவித்து விடுகிறான்.

6 அதிகாரம்

28. எலிசா சீரியருடைய சேனையின் குருடை குணமாக்குகிறான் - 22வது அற்புதம்

2 இராஜா 6:20 அவர்கள் சமாரியாவில் வந்தபோது, எலிசா: கர்த்தாவே, இவர்கள் பார்க்கும்படிக்கு இவர்கள் கண்களைத் திறந்தருளும் என்றான்; பார்க்கும்படிக்குக் கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்கும்போது, இதோ, அவர்கள் சமாரியாவின் நடுவே இருந்தார்கள்.

2 இராஜா 6:21 இஸ்ரவேலின் ராஜா அவர்களைக் கண்டபோது, எலிசாவைப் பார்த்து: என் தகப்பனே, நான் அவர்களை வெட்டிப் போடலாமா என்று கேட்டான்.

2 இராஜா 6:22 அதற்கு அவன்: நீர் வெட்டவேண்டாம்; நீர் உம்முடைய பட்டயத்தாலும், உம்முடைய வில்லினாலும் சிறையாக்கிக் கொண்டவர்களை வெட்டுகிறீரோ? இவர்கள் புசித்துக் குடித்து, தங்கள் ஆண்டவனிடத்துக்குப் போகும்படிக்கு, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்கெதிரில் வையும் என்றான்.

2 இராஜா 6:23 அப்பொழுது அவர்களுக்குப் பெரிய விருந்துபண்ணி, அவர்கள் புசித்துக் குடித்தபின்பு, அவர்களை அனுப்பிவிட்டான்; அவர்கள் தங்கள் ஆண்டவனிடத்துக்குப் போய் விட்டார்கள்; சீரியரின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலே அப்புறம் வரவில்லை.

"பார்க்கும்படிக்குக் கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்கும்போது" - எலிசா சீரியரின் சேனையைச் சமாரியாவிற்கு நடுவில் அழைத்து வந்திருக்கிறான். ராஜாவின் கையில் அவர்கள் ஒப்படைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கண்களைத் திறந்தருளுமாறு எலிசா ஜெபிக்கிறான். கர்த்தர் அவர்கள் கண்களைத் திறந்தார். அங்கு அவர்கள் இரண்டு மனுஷரைப் பார்க்கிறார்கள். ஒருவர் சீரியாவின் ராஜா. மற்றொருவர் தீர்க்கதரிசியாகிய எலிசா. இந்தத் தீர்க்கதரிசிதான் சீரிய ராஜாவின் இரகசியமான ஆலோசனைகளையெல்லாம் இஸ்ரவேலின் ராஜாவிற்கு வெளிப்படுத்தியவன்.

"நான் அவர்களை வெட்டிப் போடலாமா" - சீரியரின் சேனையைக் கொன்றுபோடலாமா என்று இஸ்ரவேலின் ராஜா கேட்கிறான். ஆனால் இவர்களைக் கொல்ல வேண்டாமென்றும், இவர்கள் புசிப்பதற்கு அப்பமும், தண்ணீரும் கொடுத்து, அவர்களுடைய தேசத்திற்கே அவர்களை அனுப்பி விடுமாறும் எலிசா ராஜாவுக்கு ஆலோசனை கூறுகிறான். இஸ்ரவேலர் செய்த நன்மை சீரியருக்கு மிகுந்த அவமானமாயிற்று. இதன் பின்பு, சிறிது காலத்திற்குச் சீரியர் இஸ்ரவேலர்மீது யுத்தம் பண்ண வரவில்லை. (2 இராஜா 6:21-23).

29. சீரியர் சமாரியாவை முற்றுகையிடுகிறார்கள் - இஸ்ரவேலில் மனுஷரை தின்கிறார்கள் - பத்தாவது சீரிய யுத்தம் - (2 இராஜா 16:5)

2 இராஜா 6:24 இதற்குப்பின்பு சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக் கொண்டுவந்து சமாரியாவை முற்றிக்கை போட்டான்.

2 இராஜா 6:25 அதினால் சமாரியாவிலே கொடிய பஞ்சமுண்டாயிற்று; ஒரு கழுதைத் தலை எண்பது வெள்ளிக் காசுக்கும், புறாக்களுக்குப் போடுகிற காற்படி பயிறு ஐந்து வெள்ளிக்காசுக்கும் விற்கப்படுமட்டும் அதை முற்றிக்கை போட்டார்கள்.

2 இராஜா 6:26 இஸ்ரவேலின் ராஜா அலங்கத்தின் மேல் நடந்துபோகையில், ஒரு ஸ்திரீ அவனைப்பார்த்துக் கூப்பிட்டு, ராஜாவாகிய என் ஆண்டவனே, இரட்சியும் என்றாள்.

6 அதிகாரம்

2இராஜா 6:27 அதற்கு அவன்: கர்த்தர் உன்னை இரட்சிக்காதிருந்தால் நான் எதிலிருந்து எடுத்து உன்னை இரட்சிக்கலாம்? களஞ்சியத்திலிருந்தா, ஆலையிலிருந்தா என்று சொல்லி,

2இராஜா 6:28 ராஜா பின்னையும் அவளைப் பார்த்து: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவள்: இந்த ஸ்திரீ என்னை நோக்கி: உன் மகனைத் தா, அவனை இன்று தின்போம்; நாளைக்கு என் மகனைத் தின்போம் என்றாள்.

2இராஜா 6:29 அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி: நாம் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்து விட்டாள் என்றாள்.

"இதற்குப்பின்பு சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்" - எலிசா சீரியரின் சேனையை விடுவித்து பல வருஷங்களாயிற்று. அதன் பின்பு, பெனாதாத் என்பவன் சீரியாவின் ராஜாவானான். இவன் தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக்கொண்டுவந்து சமாரியாவை முற்றிக்கைபோட்டான். இவர்கள் கொள்ளைக்காரர்கள். இஸ்ரவேலைக் கொள்ளையிடுவதற்காக வந்திருக்கிறார்கள்.

"ஒரு கழுதைத் தலை எண்பது வெள்ளிக் காசுக்கும்" - சமாரியாவைப் பெனாதாத் முற்றிக்கை போட்டிருக்கிறான். அதினால் சமாரியாவிலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. கழுதைத் தலை புசிப்பதற்கு சுத்தமானதல்ல. ஆனாலும் அதன் விலைகூட எண்பது வெள்ளிக்காசாக இருக்கிறது. சமாரியாவில் உள்ள ஜனங்கள் அசுத்தமான மிருக ஜீவன்களையும், சிலசமயங்களில் மனுஷரையும் கூட புசிக்கிறார்கள். (2இராஜா 6:24-29). இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தால் அவர்களுக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை உண்டாகும் என்று மோசே ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். (லேவி 26:29; உபா 28:53-57).

"என் மகனை ஆக்கித் தின்றோம்" - (லேவி 26:29; உபா 28:53-57)

30. இந்த பிரச்சனையினால் யோராம் எலிசாவை குற்றப்படுத்துகிறான்

2இராஜா 6:30 அந்த ஸ்திரீயின் வார்த்தைகளை ராஜா கேட்டவுடனே, அலங்கத்தின்மேல் நடந்துபோகிற அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான்; அவன் உள்ளே தன் சரீரத்தின்மேல் இரட்டு உடுத்தியிருக்கிறதை ஜனங்கள் கண்டார்கள்.

2இராஜா 6:31 அவன்: சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவின் தலை இன்றைக்கு அவன்மேல் இருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று சொன்னான்.

"எலிசாவின் தலை இன்றைக்கு அவன்மேல் இருந்தால்" - தேசத்தில் பஞ்சம் உண்டானது. எலிசாவே இதற்குக் காரணம் என்று சமாரியாவின் ராஜா நினைக்கிறான். எலிசாவைக் கொன்றுபோட வேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறான்.

31. எலிசா அறிவை உணர்த்தும் வசனத்தை பயன்படுத்துகிறான் - (1கொரி 12:8; 1இராஜா 14:5)

2இராஜா 6:32 எலிசா தன் வீட்டில் உட்கார்ந்திருந்தான்; மூப்பரும் அவனோடு உட்கார்ந்திருந்தார்கள்; அப்பொழுது ராஜா: ஒரு மனுஷனைத் தனக்கு முன்னே அனுப்பினான்; இந்த ஆள் எலிசாவினிடத்துக்கு வருமுன்னே, அவன் அந்த மூப்பரை நோக்கி: என் தலையை வாங்க, அந்தக் கொலைபாதகனுடைய மகன் ஆள் அனுப்பினான்; பார்த்தீர்களா? அந்த ஆள் வரும்போது, நீங்கள் அவனை உள்ளே வரவொட்டாமல் கதவைப் பூட்டிப்போடுங்கள்; அவனுக்குப் பின்னாக அவன் ஆண்டவனுடைய காலின் சத்தம் கேட்கிறது அல்லவா என்றான்.

6 அதிகாரம்

2இராஜா 6:33 அவர்களோடே அவன் பேசிக் கொண்டிருக்கையில், அந்த ஆள் அவனிடத்தில் வந்து: இதோ, இந்தப் பொல்லாப்பு கர்த்தரால் உண்டானது; நான் இனிக் கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டியது என்ன என்று ராஜா சொல்லுகிறார் என்றான்.

"எலிசா தன் வீட்டில் உட்கார்ந்திருந்தான்; மூப்பரும் அவனோடு உட்கார்ந்திருந்தார்கள்" - சமாரியாவின் ராஜா எலிசாவைக் கொல்ல வேண்டுமென்று தீர்மானம் பண்ணிவிடுகிறான். ஆனால் எலிசாவோ அப்போது தன்னுடைய வீட்டில் மூப்பரோடுங்கூட உட்கார்ந்திருக்கிறான். எலிசா சமாரியாவிற்கு மேலும் ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறான். சமாரியாவில் நாளை இந்நேரத்தில் பஞ்சம் ஓயும் என்றும், செழிப்பு உண்டாகுமென்றும் எலிசா கூறிய வார்த்தை நிறைவேறிற்று. (2இராஜா 6:30-7:2).

II இராஜாக்கள் - தொகுப்புரை

7 அதிகாரம்

32. அவிசுவாசிகளுக்கு உணவும் மரணமும் - (வசனம் 16-25)

2இராஜா 7:1 அப்பொழுது எலிசா கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 7:2 அப்பொழுது ராஜாவுக்குக் கைலாகு கொடுக்கிற பிரதானி ஒருவன் தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா என்றான். அதற்கு அவன்: உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றான்.

"அப்பொழுது" - ராஜாவின் ஊழியக்காரர் எலிசாவினிடத்தில் வந்தபோது, நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே போதுமான அளவு தானியம் உண்டாயிருக்கும் என்று முன்னறிவித்தான். (2இராஜா 7:1-2).

தீர்க்கதரிசன எண் - 9

"கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்......" (2இராஜா 7:1-2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கு விற்கப்படும். (2இராஜா 7:1)
2. இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கு விற்கப்படும்.
3. உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிட மாட்டாய் (2இராஜா 7:2)

"சமாரியாவின் வாசலிலே" - ஜனங்கள் வாசலின் வழியாகப் போக்கும்வரத்துமாக இருப்பார்கள். தானியங்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் இந்த வாசலே ஏற்ற இடமாகும். (நெகே 13:20-21).

"ராஜாவுக்குக் கைலாகு கொடுக்கிற பிரதானி" - எலிசாவைக் கொல்வதற்காக ராஜா இந்த மனுஷனைத்தான் அனுப்பியிருக்கிறான். (2இராஜா 6:32-33).

33. சீரியருடைய இராணுவம் வெறுமையாக இருப்பதை நான்கு குஷ்டரோகிகள் காண்கிறார்கள்

2இராஜா 7:3 குஷ்டரோகிகளான நாலுபேர் ஒலிமுகவாசலில் இருந்தார்கள்; அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?

2இராஜா 7:4 பட்டணத்திற்குள் போவோமென்றாலும் பட்டணத்தில் பஞ்சம் உண்டாயிருக்கிறதினால் அங்கே சாவோம்; நாம் இங்கே இருந்தாலும் சாவோம். ஆகையால் இப்பொழுது சீரியருடைய இராணுவத்திற்குப் போவோம் வாருங்கள்; அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் பிழைக்கிறோம்; நம்மைக் கொன்றால் சாகிறோம் என்று சொல்லி,

2இராஜா 7:5 சீரியருடைய இராணுவத்திற்குப் போக இருட்டோடே எழுந்திருந்து, சீரியருடைய பாளயத்தின் முன்னணியில் வந்தார்கள்; அங்கே ஒருவருமில்லை;

7 அதிகாரம்

"சீரியருடைய இராணுவத்திற்குப் போவோம் வாருங்கள்" - நான்கு குஷ்டரோகிகளும் ஞானமாக முடிவு பண்ணுகிறார்கள். சமாரியாவிற்குள் போனால் அங்கே பஞ்சத்தினாலும், பசியினாலும் இவர்கள் செத்துப்போவார்கள். சீரியருடைய இராணுவத்திற்குப் போனால் அவர்கள் ஒருவேளை இவர்களுக்கு போஜனம் கொடுத்தாலும் கொடுக்கலாம். நான்கு குஷ்டரோகிகளும் சீரியருடைய பாளயத்தின் முன்னணியில் வந்தார்கள். ஆனால் அங்கே ஒருவரும் இல்லை. (2இராஜா 7:3-5).

34. சீரியருடைய குழப்பமும் தப்பித்து ஓடுவதும்

2இராஜா 7:6 ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப் பண்ணினதினால், அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் ராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் என்று சொல்லி,

2இராஜா 7:7 இருட்டோடே எழுந்திருந்து ஓடிப்போய், தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளயத்தையும் அவைகள் இருந்த பிரகாரமாக விட்டு, தங்கள் பிராணன்மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள்.

2இராஜா 7:8 அந்தக் குஷ்டரோகிகள் பாளயத்தின் முன்னணிமட்டும் வந்த போது, ஒரு கூடாரத்திற்குள் பிரவேசித்து, புசித்துக் குடித்து, அதிலிருந்து வெள்ளியையும் பொன்னையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு போய் ஒளித்துவைத்து, திரும்பிவந்து, வேறொரு கூடாரத்திற்குள் பிரவேசித்து, அதிலிருந்தும் அப்படியே எடுத்துக் கொண்டுபோய் ஒளித்து வைத்து,

"ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினதினால்" - எலிசாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்குக் கர்த்தர் ஏற்கெனவே ஓர் அற்புதத்தைச் செய்திருக்கிறார். (2இராஜா 7:1-2). இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் சீரியர்களைக் கேட்கப்பண்ணினார். இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் ராஜாக்களையும் தங்களுக்கு விரோதமாகக் கூலி பொருத்தியதாக சீரியர் நினைத்தார்கள். இருட்டோடே எழுந்திருந்து ஓடிப்போய், தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளயத்தையும் அவைகள் இருந்த பிரகாரமாக விட்டு, தங்கள் பிராணன்மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள். குஷ்டரோகிகள் சீரியரின் கூடாரத்திற்குள் பிரவேசித்து, புசித்து, குடித்து தாங்கள் கண்டதை இஸ்ரவேலின் சமாரியாவின் ராஜாவுக்கு அறிவித்தார்கள். (2இராஜா 7:6-15).

"ஏத்தியரின் ராஜாக்கள்" - இவர்கள் ஐபிராத்து நதியிலிருந்து சின்ன ஆசியா வரையிலும் ஆட்சி புரிந்தார்கள். இவர்கள் பல்வேறு ஜாதிகளாகப் பிரிந்திருந்தார்கள். இவர்களை ஆளுகை செய்ய ஒரு ராஜா இருந்தான். அசீரியருடைய ஆவணங்களில் ஏத்தியரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களில் 12 ஜாதியார் இருந்தார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் நாட்களில் ஏத்தியர்கள் கானான் தேசத்தில் பெலன் மிகுந்தவர்களாக இருந்தார்கள். (ஆதி 15:20; ஆதி 23:10; ஆதி 25:9; ஆதி 26:34; ஆதி 36:2; ஆதி 49:29-30; ஆதி 50:13). யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏத்தியரை மேற் கொண்டார்கள். (யாத் 3:8,17; யாத் 13:5; யாத் 23:23,28; யாத் 33:2; யாத் 34:11; எண் 13:29; உபா 7:1; உபா 20:17; யோசு 1:4; யோசு 3:10; யோசு 9:1; யோசு 11:3; யோசு 12:8; யோசு 24:11). இதன் பின்பு, ஏத்தியரின் ராஜ்யம் வடக்கு பக்கமாகப் பரவி விரிந்தது. அவர்களில் சிலர் கானான் தேசத்திலேயே தங்கிவிட்டார்கள். (நியா 1:26; நியா 3:5; 2சாமு 11:3,6,17,21,24; 2சாமு 12:9-10; 2சாமு 23:29; 1இராஜா 9:20; 1இராஜா 10:29; 1இராஜா 11:1; 1இராஜா 15:5; 2இராஜா 7:6; 1நாளா 11:41; 2நாளா 1:17; 2நாளா 8:7; எஸ்றா 9:1; நெகே 9:8; எசே 16:3,45).

7 அதிகாரம்

“எகிப்தியரின் ராஜாக்கள்” - எகிப்தியருக்குப் பார்வோன் என்னும் ஒரே பேரரசனே இருந்தான். இங்கு ராஜாக்கள் என்று கூறப்பட்டிருப்பது எகிப்தியரின் பிரபுக்களைக் குறிக்கலாம். எகிப்தின் ராஜாவோடு மேலும் பல தேசத்து ராஜாக்கள் உடன்படிக்கை பண்ணியிருந்தார்கள். இவர்களையும் சேர்த்து, இந்த வாக்கியத்தில் “எகிப்தின் ராஜாக்கள்” என்று கூறப் பட்டிருக்கிறது. (2நாளா 12:3; 2நாளா 16:8; எரே 46:9; எசே 30:5; எசே 38:5).

35. நான்கு குஷ்டரோகிகள் இராஜாவிடம் நடந்ததைக் கூறுகிறார்கள் - விசாரணை ஆரம்பமாகிறது

2இராஜா 7:9 பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றார்கள்.

2இராஜா 7:10 அப்படியே அவர்கள் வந்து, பட்டணத்து வாசல் காவலாளனை நோக்கிக் கூப்பிட்டு: நாங்கள் சீரியரின் பாளயத்திற்குப் போய்வந்தோம்; அங்கே ஒருவரும் இல்லை, ஒரு மனுஷனுடைய சத்தமும் இல்லை, கட்டியிருக்கிற குதிரைகளும் கட்டியிருக்கிற கழுதைகளும், கூடாரங்களும் இருந்தபிரகாரம் இருக்கிறது என்று அவர்களுக்குச் சொன்னார்கள்.

2இராஜா 7:11 அப்பொழுது அவன் வாசல்காக்கிற மற்றவர்களைக் கூப்பிட்டான்; அவர்கள் உள்ளே போய் ராஜாவின் அரமனையாருக்கு அதை அறிவித்தார்கள்.

2இராஜா 7:12 அப்பொழுது இராஜா இராத்திரியில் எழுந்து, தன் ஊழியக்காரரை நோக்கி: சீரியர் நமக்குச் செய்கிற காரியத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நாம் பட்டினியாயிருக்கிறோம் என்று அவர்கள் அறிவார்கள்; ஆகையால் நாம் பட்டணத்திலிருந்து புறப்பட்டுப்போனால் நம்மை உயிரோடே பிடித்துக்கொண்டு பட்டணத்திற்குள் பிரவேசிக்கலாம் என்று எண்ணி, அவர்கள் பாளயத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் ஒளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றான்.

2இராஜா 7:13 அவன் ஊழியக்காரரில் ஒருவன் பிரதியுத்தரமாக: இங்கே மீதியான குதிரைகளில் ஐந்து குதிரைகளைக் கொண்டுபோக உத்தரவு கொடும்; இதோ, இங்கே மீதியான இஸ்ரவேலின் சகல ஏராளத்திலும், மாண்டுபோன இஸ்ரவேலின் சகல கூட்டத்திலும், அவைகள் மாத்திரம் மீந்திருக்கிறது; அவைகளை நாம் அனுப்பிப்பார்ப்போம் என்றான்.

2இராஜா 7:14 அப்படியே இரண்டு இரதக் குதிரைகளைக் கொண்டுவந்தார்கள்; ராஜா போய்வாருங்கள் என்று சொல்லி, சீரியரின் இராணுவத்தைத் தொடர்ந்து போகும்படி அனுப்பினான்.

2இராஜா 7:15 அவர்கள் யோர்தான் மட்டும் அவர்களைப் பின்தொடர்ந்து போனார்கள்; சீரியர் தீவிரித்து ஓடுகையில், அவர்கள் எறிந்துபோட்ட வஸ்திரங்களாலும் தட்டு முட்டுகளாலும் வழியெல்லாம் நிறைந்திருந்தது; அனுப்பப்பட்டவர்கள் திரும்பிவந்து ராஜாவுக்கு அதை அறிவித்தார்கள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

7 அதிகாரம்

"சீரியர் நமக்குச் செய்கிற காரியத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்" - சமாரியாவின் ராஜா மறுபடியும் தவறாகவே முடிவு பண்ணுகிறான். தேசத்தில் பஞ்சம் உண்டானதற்கு எலிசாவே காரணம் என்று முதலில் நினைத்தான். (2இராஜா 6:30-31). இப்போது தங்களைப் பிடிப்பதற்குச் சீரியர் தந்திரம் பண்ணுவதாகத் தீர்மானம் பண்ணுகிறான். குஷ்டரோகிகள் சொன்ன செய்தியை உறுதிபண்ண ராஜா தன் வேவுகாரரை அனுப்புகிறான். (2இராஜா 7:13-14) அவர்கள் யோர்தான்மட்டும் அவர்களைப் பின்தொடர்ந்துபோனார்கள்; சீரியர் தீவிரித்து ஓடுகையில், அவர்கள் எறிந்துபோட்ட வஸ்திரங்களாலும் தட்டு முட்டுகளாலும் வழியெல்லாம் நிறைந்திருந்தது; அனுப்பப் பட்டவர்கள் திரும்பிவந்து ராஜாவுக்கு அதை அறிவித்தார்கள். (2இராஜா 7:15).

36. எலிசாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது - (வசனம் 1-2)

2இராஜா 7:16 அப்பொழுது ஜனங்கள் புறப்பட்டு, சீரியரின் பாளயத்தைக் கொள்ளையிட்டார்கள்; கர்த்தருடைய வார்த்தையின்படியே, ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்பட்டது.

2இராஜா 7:17 ராஜா தனக்குக் கைலாகுகொடுக்கிற அந்தப் பிரதானியை ஒலிமுகவாசலில் விசாரிப்பாயிருக்கக் கட்டளை யிட்டிருந்தான்; ஒலி முகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே, ராஜா தேவனுடைய மனுஷனிடத்தில் வந்தபோது சொல்லியிருந்தபடியே, அவன் செத்துப்போனான்.

2இராஜா 7:18 இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும், ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், நாளை இந்நேரத்திலே சமாரியாவின் ஒலிமுகவாசலில் விற்கும் என்று தேவனுடைய மனுஷன் ராஜாவோடே சொன்னதின்படியே நடந்தது.

2இராஜா 7:19 அதற்கு அந்தப் பிரதானி தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும், இந்த வார்த்தையின் படி நடக்குமா என்று சொல்ல; இவன், இதோ, உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய், ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றானே.

2இராஜா 7:20 அந்தப் பிரகாரமாகத் தானே அவனுக்கு நடந்தது; ஒலிமுக வாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே அவன் செத்துப் போனான்.

"ஜனங்கள் புறப்பட்டு, சீரியரின் பாளயத்தைக் கொள்ளையிட்டார்கள்" - சமாரியாவின் பட்டணத்தார் எல்லோருமே புறப்பட்டுப்போய் சீரியரின் பாளயத்தைக் கொள்ளையிட்டார்கள். தங்களுக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் சேகரித்தார்கள். எலிசா சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (2இராஜா 7:1-2,16).

"அந்தப் பிரதானியை ஒலிமுகவாசலில் விசாரிப்பாயிருக்கக் கட்டளையிட்டிருந்தான்" - எலிசாவைக் கொல்வதற்காக ராஜா இவனைத்தான் அனுப்பியிருந்தான். இப்பொழுது இவன் ஒலிமுகவாசலில் விசாரிப்பாய் இருக்கிறான். ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே அவன் செத்துப்போனான். எலிசா சொன்ன பிரகாரமாகவே இந்த மனுஷன் அந்தத் தானியம் எதையும் புசிக்கவில்லை. (2இராஜா 6:31-33; 2இராஜா 7:1-2). பட்டினியாக இருக்கும் ஜனங்கள் இவனை மிதித்துக் கொன்று போட்டார்கள். எலிசாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (2இராஜா 7:16-20).

"தேவனுடைய மனுஷன் ராஜாவோடே சொன்னதின்படியே நடந்தது" - (2இராஜா 7:1-2)

8 அதிகாரம்

37. ஏழு வருஷங்களாக வானம் அடைக்கப்படுகிறது

2இராஜா 8:1 எலிசா தான் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி: நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப் போய் எங்கேயாகிலும் சஞ்சரி; கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார்; அது ஏழுவருஷம் தேசத்தில் இருக்கும் என்று சொல்லியிருந்தான்.

2இராஜா 8:2 அந்த ஸ்திரீ எழுந்து தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படி செய்து, தன் வீட்டாரோடுங்கூடப் புறப்பட்டு, பெலிஸ்தரின் தேசத்தில் போய், ஏழுவருஷம் சஞ்சரித்தாள்.

தீர்க்கதரிசன எண் - 10

“கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார்; அது ஏழுவருஷம் தேசத்தில் இருக்கும்” (2இராஜா 8:1) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எலிசா சூனேம் ஊர் ஸ்திரீயிடம் பஞ்சத்தைப் பற்றி முன்னறிவித்து, இந்தப் பஞ்சத்திலிருந்து தப்பிப்பதற்கு எங்கேயாகிலும் போய், சஞ்சரிக்குமாறு கூறுகிறான். எலியாவின் காலத்தில் உண்டான பஞ்சம் மூன்றரை வருஷம் நீடித்தது. எலிசாவின் காலத்திலோ ஏழு வருஷங்களுக்குப் பஞ்சம் உண்டாயிற்று. (2இராஜா 8:1; யாக் 5:17). சூனேம் ஊர் ஸ்திரீ தன் வீட்டாரோடுங்கூடப் புறப்பட்டு, பெலிஸ்தரின் தேசத்தில் போய், ஏழுவருஷம் சஞ்சரித்தாள் (2இராஜா 8:2).

38. சூனாமிய ஸ்திரீயின் சுதந்தரத்தை யோராம் மீட்டுத் தருகிறான்

2இராஜா 8:3 ஏழுவருஷம் சென்றபின்பு, அவள் பெலிஸ்தரின் தேசத்தை விட்டுத் திரும்ப வந்து, தன்வீட்டுக்காகவும் தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிடும்படி போனாள்.

2இராஜா 8:4 அந்நேரத்தில் ராஜா, தேவனுடைய மனுஷனின் வேலைக்காரனாயிருந்த கேயாசியுடனே பேசி: எலிசாசெய்த அதிசயங்களையெல்லாம் நீஎனக்குவிவரமாய்ச் சொல் என்றான்.

2இராஜா 8:5 செத்துப்போனவனை உயிர்ப்பித்தார் என்பதை அவன் ராஜாவுக்கு அறிவிக்கிறபோது, இதோ, அவன் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயாகிய அந்த ஸ்திரீ வந்து, தன் வீட்டுக்காகவும் தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிட்டாள்; அப்பொழுது கேயாசி: ராஜாவாகிய என் ஆண்டவனே, இவள்தான் அந்த ஸ்திரீ;எலிசா உயிர்ப்பித்த இவளுடைய குமாரன் இவன்தான் என்றான்.

2இராஜா 8:6 ராஜா அந்த ஸ்திரீயைக் கேட்டதற்கு, அவள்: அதை அவனுக்கு விவரித்துச் சொன்னாள்; அப்பொழுது ராஜா அவளுக்கு ஒரு பிரதானியை நியமித்து, அவளுக்கு உண்டானது எல்லாவற்றையும், அவள் தேசத்தை விட்டுப்போன நாள்முதல் இதுவரைக்கும் உண்டான அந்த வயலின் வருமானம் அனைத்தையும் அவளுக்குக் கிடைக்கும் படி செய் என்றான்.

“அவள் பெலிஸ்தரின் தேசத்தை விட்டுத் திரும்ப வந்து” - பஞ்சம் முடிந்து போயிற்று. தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்ப வருகிறாள். அவள் விட்டுச் சென்ற வீட்டையும் நிலத்தையும் மற்றவர்கள் அபகரித்துக் கொண்டார்கள். அப்போது யோராம் இஸ்ரவேலின் ராஜாவாக இருக்கிறான். சூனேம் ஊர் ஸ்திரீ தன் வீட்டுக்காகவும் தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிடும் படி போனாள். ராஜாவினிடத்தில் சூனேம்ஊர் ஸ்திரீ தன்னுடைய வழக்கை விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருக்கும்போது, எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி அங்கே இருக்கிறான். சூனேம்ஊர் ஸ்திரீயின் மகன் செத்துப் போனதையும், அந்தப் பிள்ளையை எலிசா உயிரோடு எழுப்பிய அற்புதத்தையும் கேயாசி ராஜாவுக்கு அறிவிக்கிறான். அப்பொழுது ராஜா அவளுக்கு ஒரு பிரதானியை நியமித்து, அவளுக்கு உண்டானது எல்லாவற்றையும், அவள் தேசத்தை விட்டுப்போன நாள்முதல் இதுவரைக்கும் உண்டான அந்த வயலின் வருமானம் அனைத்தையும் அவளுக்குக் கிடைக்கும்படி செய்தான். (2இராஜா 8:5-6).

8 அதிகாரம்

"தேவனுடைய மனுஷனின் வேலைக்காரனாயிருந்த கேயாசி" - கேயாசிக்குக் குஷ்டரோகம் வருவதற்கு முன்பாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டும். ஏனெனில் குஷ்டரோகம் பிடித்தவனை ராஜா தனக்கு அருகில் வைத்திருக்கமாட்டான். ராஜாக்கள் புஸ்தகத்தை எழுதிய ஆசிரியர் நிகழ்ச்சிகளை வரலாற்று வரிசைக் கிரமமாகத் தொகுக்கவில்லை.

பிரதானி (officer) - סָרִיס - saw-reece', saw-reece' - 5631

ஆ.பெ.சொ. - பிரதானி, சாரீஸ், பிரதானியன், அண்ணகர், அரமனை, வேலைக்காரர் (eunuch) - ராஜாக்களுக்கு அந்தப்புரத்தில் பல ஸ்திரீகள் இருந்தார்கள். அவர்களுக்கு அதிகாரியாக ராஜாக்கள் இந்தப் பிரதானிகளை நியமித்தார்கள். (2இராஜா 9:32). இவர்கள் அரவாணிகள். தாவீதின் அரண்மனையிலும் அரவாணிகள் இருந்தார்கள். (1நாளா 28:1) சாலொமோனின் அரண்மனையிலும், எசேக்கியாவின் அரண்மனையிலும் அரவாணிகள் பிரதானிகளாக இருந்திருக்கிறார்கள். (ஏசா 56:3-4) எசேக்கியாவின் சந்ததியாரில் சிலர் பாபிலோன் ராஜாவினுடைய அரண்மனையில் பிரதானிகளாக இருந்திருக்கிறார்கள். (ஏசா 39:5-8; தானி 1).

39. வெளிப்படுத்துதலின் மூன்று அற்புதங்கள்

2இராஜா 8:7 சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வியாதியாருந்தான்; எலிசா தமஸ்குவுக்கு வந்தான்; தேவனுடைய மனுஷன் இவ்விடத்தில் வந்திருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டபோது,

2இராஜா 8:8 ராஜா ஆசகேலை நோக்கி: நீ உன் கையில் ஒரு காணிக்கையை எடுத்துக்கொண்டு, தேவனுடைய மனுஷனுக்கு எதிர்கொண்டுபோய், நான் இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று அவனைக் கொண்டு கர்த்தரிடத்தில் விசாரிக்கச் சொன்னான்.

2இராஜா 8:9 ஆசகேல் தமஸ்குவின் சகல உச்சிதங்களிலும் நாற்பது ஒட்டகங்களின் சுமையான காணிக்கையை எடுத்துக் கொண்டு, அவனுக்கு எதிர்கொண்டு போய், அவனுக்கு முன்பாக நின்று, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் என்னும் உம்முடைய குமாரன் என்னை உம்மிடத்தில் அனுப்பி, இந்த வியாதி நீங்கப் பிழைப்பேனா என்று கேட்கச் சொன்னார் என்றான்.

2இராஜா 8:10 எலிசா அவனை நோக்கி: நீ போய், வியாதி நீங்கிப் பிழைப்பீர் என்று அவனுக்குச் சொல்லும்; ஆனாலும் அவன் சாகவே சாவான் என்பதைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார் என்றான்.

2இராஜா 8:11 பின்பு தேவனுடைய மனுஷன்: தன் முகத்தைத் திருப்பாமல் அவன் சலித்துப்போகுமட்டும் அவனை நோக்கிக் கொண்டே அழுதான்.

2இராஜா 8:12 அப்பொழுது ஆசகேல்: என் ஆண்டவன் அழுகிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன்: நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்யும் தீங்கை நான் அறிந்திருக்கிற படியினால் அழுகிறேன்; நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்கி, அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்று, அவர்கள் குழந்தைகளைத் தரையோடே மோதி, அவர்கள் கர்ப்பவதிகளைக் கீறிப் போடுவாய் என்றான்.

2இராஜா 8:13 அப்பொழுது ஆசகேல்: இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம் என்றான். அதற்கு எலிசா: நீ சீரியாவின் மேல் ராஜாவாவாய் என்பதைக் கர்த்தர் எனக்குத் தெரிவித்தார் என்றான்.

II இராஜாக்கள் – தொகுப்புரை

8 அதிகாரம்

2இராஜா 8:14 இவன் எலிசாவைவிட்டுப் புறப்பட்டு, தன் ஆண்டவனிடத்தில் வந்த போது, அவன்: எலிசா உனக்கு என்ன சொன்னான் என்று கேட்டதற்கு; இவன் நீர் வியாதி நீங்கிப் பிழைப்பீர் என்று எனக்குச் சொன்னான் என்று சொல்லி,

2இராஜா 8:15 மறுநாளிலே ஒரு சமுக்காளத்தை எடுத்து, தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்தின்மேல் விரித்தான்; அதினால் அவன் செத்துப் போனான்; ஆசகேல் அவனுக்குப் பதிலாய் ராஜாவானான்.

"தேவனுடைய மனுஷன் இவ்விடத்தில் வந்திருக்கிறான்" - சீரியர் எலிசாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். சீரியரின் படைத் தலைவனாகிய நாகமானின் குஷ்டரோகத்தை எலிசா குணப்படுத்தினான். இதன் மூலமாக எலிசா சீரியர் மத்தியில் பிரபல்யமாக இருந்திருக்கிறான்.

"ஆசகேல் தமஸ்குவின் சகல உச்சிதங்களிலும் நாற்பது ஒட்டகங்களின் சுமையான காணிக்கையை எடுத்துக்கொண்டு" - எலிசா இந்தக் காணிக்கைகளை அங்கிகரித்தானா என்று தெரியவில்லை.

"வியாதி நீங்கிப் பிழைப்பீர்" - எலிசா இங்கு விநோதமாக ஒரு தீர்க்கதரிசனம் கூறுகிறான். பெனாதாத் வியாதி நீங்கிப் பிழைப்பான். ஆனால் சாகவே சாவான் என்று தீர்க்கதரிசனம் கூறுகிறான். அதுமட்டுமல்ல, ஆசகேல் பெனாதாத்தைக் கொன்றுபோடுவான் என்றும் முன்னறிவிக்கிறான். (2இராஜா 8:10,15).

தீர்க்கதரிசன எண் - 11

"அவன் சாகவே சாவான் என்பதைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார்" - (2இராஜா 8:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அவன் சலித்துப்போகுமட்டும் அவனை நோக்கிக் கொண்டே அழுதான்" - பெனாதாத் கொலைபண்ணப்படப்போகிற சிந்தனை எலிசாவின் உள்ளத்தில் வந்த படியினால், அவன் அழுது கொண்டிருக்கிறான்.

தீர்க்கதரிசன எண் - 12

"நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்யும் தீங்கை நான் அறிந்திருக்கிறபடியினால் அழுகிறேன்" (2இராஜா 8:12-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்குவாய்.
2. அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்றுபோடுவாய்.
3. அவர்கள் குழந்தைகளைத் தரையோடே மோதுவாய்.
4. அவர்கள் கர்ப்பவதிகளைக் கீறிப் போடுவாய்.
5. நீ சீரியாவின்மேல் ராஜாவாவாய் (2இராஜா 8:13)

"இத்தனை பெரிய காரியத்தைச் செய்ய நாயாகிய உமது அடியான் எம்மாத்திரம்" - எலிசாவின் முன்னறிவிப்பு ஆசகேலுக்கு மிகுந்த ஆச்சரியமாயிற்று. ஆசகேலின் மனதில் பெனாதாத்தைக் கொலை செய்யும் எண்ணம் ஏற்கெனவே உண்டாயிருக்கிறது. எலிசா கூறிய தீர்க்கதரிசனம் மறுநாளில் நிறைவேறிற்று. ஆசகேல் பெனாதாத்தைக் கொன்றுபோட்டான். (2இராஜா 8:15). எலிசாவின் மற்ற முன்னறிவிப்புக்கள் ஏற்ற வேளையில் நிறைவேறிற்று. (2இராஜா 13:3-7).

8 அதிகாரம்

"ஒரு சமுக்காளத்தை எடுத்து, தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்தின்மேல் விரித்தான்" - பெனாதாத் ஏற்கெனவே வியாதிப் படுக்கையில் இருக்கிறான். அவன்மீது ஈர சமுக்காளத்தைப் போட்டு மூடியவுடன், அவன் செத்துப்போனான். அவனுக்குப் பின்பு ஆசகேல் ராஜாவானான். 2இராஜா 8:13 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

III. யூதாவின் இராஜா

1. யோராமின் ஆட்சி, யூதாவின் ஐந்தாவது இராஜா, எட்டு வருஷங்கள் - (2நாளா 21)

(1) அவனுடைய குணாதிசயங்கள்

2இராஜா 8:16 இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் குமாரன் யோராமுடைய ஐந்தாம் வருஷத்தில், யோசபாத் யூதாவிலே இன்னும் ராஜாவாயிருக்கையில், யோசபாத்தின் குமாரனாகிய யோராம் என்னும் யூதாவின் ராஜா ராஜ்யபாரம் பண்ணத் துவங்கினான்.

2இராஜா 8:17 அவன் ராஜாவாகிறபோது முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில்ராஜ்யபாரம் பண்ணினான்.

2இராஜா 8:18 அவன் இஸ்ரவேலின் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபின் வீட்டார் செய்ததுபோலச் செய்தான்; ஆகாபின் குமாரத்தி அவனுக்கு மனைவியாயிருந்தாள்; அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2இராஜா 8:19 கர்த்தர் உன் குமாரருக்குள்ளே எந்நாளும் ஒரு விளக்கை உனக்குக் கட்டளையிடுவேன் என்று தம்முடைய தாசனாகிய தாவீதுக்குச் சொன்னதின்படியே, அவனிமித்தம் அவர் யூதாவை முற்றிலும் கெடுக்கவில்லை.

"அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" - யோராம் அத்தாலியாளை விவாகம் பண்ணினான். இவள் ஆகாபின் குமாரத்தி. யூதாவில் பாகால் விக்கிரகாராதனையை இவள் ஆரம்பித்து வைக்கிறாள். இஸ்ரவேலின் மற்ற ராஜாக்களைப் போல இவனும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். ஐசுவரியத்திற்காகத் தன்னுடைய ஆறு சகோதரர்களையும் கொன்றுபோட்டான். (2நாளா 21:5-20).

"அவர் யூதாவை முற்றிலும் கெடுக்கவில்லை" - யூதா புத்திரரும், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லானதைச் செய்தார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை முற்றிலுமாக அழித்துப்போட வில்லை. தம்முடைய தாசனாகிய தாவீதுக்கு "உன் குமாரருக்குள்ளே எந்நாளும் ஒரு விளக்கை உனக்குக் கட்டளையிடுவேன்" என்று சொன்னதின் நிமித்தம் அவர்களை முற்றிலும் அழிக்காமல் விட்டுவிடுகிறார். யூதாவின்மீது வரவிருக்கிற நியாயத்தீர்ப்பு தாமதமாயிற்று.

"விளக்கு" - இந்த வாக்கியத்தில் விளக்கு என்பது ஒரு ராஜாவையும், ஒரு ராஜ்யத்தையும் குறிக்கும். 2சாமு 7 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தாவீதின் உடன்படிக்கையின் படி தாவீதின் வம்சம் தொடர்கிறது. தாவீதின் விளக்கைப் பற்றி நான்கு வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (2இராஜா 8:19; 2சாமு 21:17; 1இராஜா 11:36; 2நாளா 21:7). யோராம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். யெரொபெயாமும் (1இராஜா 14:10), பாஷாவும் (1இராஜா 16:2-4), ஆகாபும் (1இராஜா 21:20-22) கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தர் தாவீதுக்கு வாக்குப்பண்ணியதின் நிமித்தமாக யூதா முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. ஆனாலும் யோராம் வேறுவழிகளில் தண்டிக்கப்படுகிறான். (2இராஜா 8:22; 2நாளா 21:5-20).

விளக்கு (light) - נִיר - neer - 5216

ஆ.பெ.சொ. - விளக்கு, வெளிச்சம், அகல், குத்துவிளக்கு, தீபம்

8 அதிகாரம்

(2) ஏதோமியரும் லிப்னா பட்டணத்தாரும் கலகம் பண்ணினார்கள் - (2நாளா 21:8-11)

2இராஜா 8:20 அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம்பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

2இராஜா 8:21 அதினாலே யோராம் சகல இரதங்களோடுங்கூடச் சாயீருக்குப் புறப்பட்டுப் போனான்; அவன் இராத்திரியில் எழுந்திருந்து, தன்னை வளைந்துகொண்ட ஏதோமியரையும் இரதங்களின் தலைவரையும் முறிய அடித்தபோது, ஜனங்கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

2இராஜா 8:22 அப்படியே யூதாவுடைய கையின் கீழிருந்த ஏதோமியர், இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, கலகம் பண்ணினார்கள்; அக்காலத்தில் தானே லிப்னா பட்டணத்தாரும் கலகம் பண்ணினார்கள்.

"அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம்பண்ணி" - யோராமின் பாவத்திற்காகக் கர்த்தர் அவனைத் தண்டிக்கிறார். (2இராஜா 8:20-22). ஏதோமியர் அவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். தாவீது ஏதோமியரை வெற்றி பெற்றிருந்தான். (2சாமு 8:14) சாலொமோனின் நாட்களில் ஏதோமியர் தங்கள் கலகத்தை ஆரம்பித்தார்கள். (1இராஜா 11:14-16). யோசபாத்தின் ஆட்சிக் காலத்தில் ஏதோமியர் மறுபடியுமாக அடக்கப் பட்டிருந்தார்கள். (2இராஜா 3:8-26). தங்களுக்கென்று ஏதோமியர் ஒரு ராஜாவை ஏற்படுத்திக் கொண்டு சுதந்தர தேசம் போலவே ஆளுகை செய்து வந்தார்கள். இறுதியில் அசீரியரும், பாபிலோனியரும் அவர்களை ஒடுக்கினார்கள். (எரே 25:21; எரே 49:7-22; எசே 25:12-14; ஆமோ 1:11-14; ஒப 1-14). லிப்னாவும் கலகம் பண்ணிற்று. இது ஆசாரியருடைய பட்டணம். யோராம் தேவாலயத்து ஆராதனையை முறித்துப்போட்டு, பாகால் விக்கிரகாராதனையை ஆரம்பித்த போது, லிப்னாவில் உள்ள ஆசாரியர் யோராமிற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். (யோசு 21:13; 2நாளா 23:1; 2நாளா 24:1-14). அவர்களுடைய கலகம் தொடர்ந்தது. இறுதியில் அவர்கள் அத்தாலியாளை ராஜ்யபாரத்திலிருந்து அகற்றிப்போட்டார்கள். (2இராஜா 11)

(3) யோராமின் மரணம் - அகசியா இராஜாவானான் - (2நாளா 22)

2இராஜா 8:23 யோராமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 8:24 யோராம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுக்குப் பதிலாக அவன் குமாரனாகிய அகசியா ராஜாவானான்.

"யோராமின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 21:1-20)

2. அகசியாவின் ஆட்சி - யூதாவின் ஆறாவது இராஜா - ஒரு வருஷம் - (2நாளா 22)

(1) அவனுடைய குணாதிசயங்கள்

2இராஜா 8:25 இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் குமாரன் யோராமுடைய பன்னிரண்டாம் வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அகசியா ராஜாவானான்.

2இராஜா 8:26 அகசியா ராஜாவாகிற போது, இருபத்திரண்டு வயதாயிருந்து, ஒரே வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம் பண்ணினான்; இஸ்ரவேலின் ராஜாவாகிய ஓம்ரியின் குமாரத்தியான அவன் தாயின் பேர் அத்தாலியாள்.

8 அதிகாரம்

2இராஜா 8:27 அவன் ஆகாபுடைய வீட்டாரின் வழியே நடந்து, ஆகாபின் வீட்டாரைப் போல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; அவன் ஆகாப் வீட்டாரோடேசம்பந்தங்கலந்திருந்தான்.

"அகசியா" (**Ahaziah**) - மத் 1:8 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வம்சவரலாற்று அட்டவணையில் அசரியா, யோவாஸ், அமத்சியா ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்படவில்லை. இவர்கள் எல்லோருமே துன்மார்க்கமாய் மரித்துப் போனார்கள். (2இராஜா 9:27; 2இராஜா 12:20; 2இராஜா 14:19).

"ஒம்ரியின் குமாரத்தி" - இவள் ஒம்ரியின் சந்ததியாளாகவோ அல்லது பேத்தியாகவோ இருக்க வேண்டும். இவள் ஆகாப், யேசபேல் ஆகியோரின் குமாரத்தி. வேதாகமத்தில் குமாரன், குமாரத்தி என்னும் சொற்கள் சில சமயங்களில் சந்ததியாரையும் பொதுவாகக் குறிக்கும். இதற்கு மத் 1:1 ஆவது வசனம் ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த வசனத்தில் ஆகாபின் பெயருக்குப் பதிலாக ஒம்ரியின் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அசீரியருடைய கல்வெட்டுகளிலும், ஒம்ரியின் பெயரே பிரதானமாகக் காணப்படுகிறது. யெகூ கூட ஒம்ரியின் குமாரனென்றே அசீரிய கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

(2) இஸ்ரவேலின் யுத்தங்களில் யோராமுக்கு அகசியா உதவி செய்கிறான் - பதினொறாவது சீரிய யுத்தம் - (2நாளா 22:5-7; 2இராஜா 16:5)

2இராஜா 8:28 அவன் ஆகாபின் குமாரனாகிய யோராமோடே கூடக் கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குச் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம் பண்ணப்போனான்; சீரியர் யோராமைக் காயப்படுத்தினார்கள்.

2இராஜா 8:29 ராஜாவாகிய யோராம் தான் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம்பண்ணுகையில், சீரியர் ராமாவிலே தன்னை வெட்டின காயங்களை ஆற்றிக்கொள்ள யெஸ்ரயேலுக்குப் போயிருந்தான்; ஆகாபின் குமாரனாகிய யோராம் வியாதியாயிருந்தபடியினால், யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அகசியா யெஸ்ரயேலில் இருக்கிற அவனைப் பார்க்கிறதற்குப் போனான்.

"கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குச் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம்பண்ணப்போனான்" - சீரியரின் பிடியிலிருந்து கீலேயாத்திலுள்ள ராமோத்தை மறுபடியும் மீட்பதற்காக யோராம் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம் பண்ணுகிறான். இதற்கு 14 வருஷங்களுக்கு முன்பாகவே ஆகாபும், யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்தை மீட்பதற்காக யுத்தம் பண்ணியிருந்திருக்கிறார்கள். (1இராஜா 22:3-36) இந்த சமயத்தில் ஆசகேல் அசீரியரோடு வடக்கில் யுத்தம் பண்ணிக் கொண்டிருந்தான். இதனால் ஆசகேலோடு யுத்தம் பண்ணுவதற்கு இதுவே தகுந்த சமயம் என்று யோராமும் அவனோடு யுத்தம் பண்ணினான். யோராம் கீலேயாத்திலுள்ள ராமோத்தை மீட்டுக் கொண்டதுபோன்று தெரிகிறது. (2இராஜா 9:14). ஆனாலும் யுத்தத்தில் யோராம் மிகுந்த காயமடைந்தான்.

"சீரியர் யோராமைக் காயப்படுத்தினார்கள்" - யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் யோராமைப் பற்றி எழுதியிருக்கிறார். பட்டணம் முற்றிக்கை போடப்பட்ட சமயத்தில் யோராமின்மீது ஒரு அம்பு பாய்ந்தது என்றும், ஆனாலும் அந்தப் பட்டணம் பிடிக்கப்படும் வரையிலும் யோராம் அங்கு இருந்தான் என்றும் அதன் பின்பு, அவன் யெஸ்ரயேலுக்குத் திரும்பிப் போனான் என்றும் யோசபஸ் எழுதியிருக்கிறார். (2இராஜா 8:29; 1இராஜா 18:45; 1இராஜா 21:1) தன்னுடைய ராணுவத்தை யெகூ என்னும் படைத்தலைவன்கீழ் விட்டுச் சென்றான். (2இராஜா 9:1-5).

9 அதிகாரம்

IV. யெகூவின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினொறாவது இராஜா - இருபத்தெட்டு வருஷங்கள் - (9:1-10:36)

1. அவனுடைய அபிஷேகம்

2இராஜா 9:1 அப்பொழுது தீர்க்கதரிசியாகிய எலிசா தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனை அழைத்து: நீ இடைகட்டிக் கொண்டு, இந்தத் தைலக்குப்பியை உன் கையில் எடுத்துக்கொண்டு, கிலேயாத்திலுள்ள ராமோத்திற்குப் போ.

2இராஜா 9:2 நீ அங்கே சேர்ந்தபோது, நிம்சியின் மகனான யோசபாத்தின் குமாரன் யெகூ எங்கே இருக்கிறான் என்று பார்த்து, அங்கே உட்பிரவேசித்து, அவனைத் தன் சகோதரரின் நடுவிலிருந்து எழுந்திருக்கப்பண்ணி, அவனை உள்ளான ஒரு அறையிலே அழைத்துக் கொண்டுபோய்,

2இராஜா 9:3 தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து: உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி, கதவைத் திறந்து தாமதியாமல் ஓடிப்போ என்றான்.

குப்பி (box) - פך - pak - 6378

ஆ.பெ.சொ. - குப்பி (a flask) box (2இராஜா 9:1,3), vial (1சாமு 10:1).

2. ஆகாபின் வீட்டார் அனைவரையும் அழிக்கும் யெகூவின் கட்டளை - (1இராஜா 21:21-24)

2இராஜா 9:4 அப்படியே தீர்க்கதரிசியின் ஊழியக்காரனாகிய அந்த வாலிபன் கிலேயாத்திலுள்ள ராமோத்திற்குப் போனான்.

2இராஜா 9:5 அவன் உட்பிரவேசித்த போது, சேனாபதிகள் அங்கே உட்கார்ந்திருந்தார்கள்; அப்பொழுது அவன்: சேனாபதியே, உமக்குச் சொல்ல வேண்டிய ஒரு வார்த்தை உண்டு என்றான். அதற்கு யெகூ: எங்களெல்லாருக்குள்ளும் யாருக்கு என்று கேட்டதற்கு, அவன், சேனாபதியாகிய உமக்குத்தான் என்றான்.

2இராஜா 9:6 அவன் எழுந்து, அறைவீட்டிற்குள் பிரவேசித்தான்; அவன் அந்தத் தைலத்தை அவன் தலையின்மேல் வார்த்து, அவனை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன்னைக் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன்.

2இராஜா 9:7 நான் என் ஊழியக் காரராகிய தீர்க்கதரிசிகளின் இரத்தப் பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்தப்பழியையும், யேசபேலின் கையிலே வாங்கும்படிக்கு நீ உன் ஆண்டவனாகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக்கடவாய்.

2இராஜா 9:8 ஆகாபின் குடும்பமெல்லாம் அழியும்படிக்கு, நான் ஆகாபுக்குச் சுவரில் நீர் விடும் ஒரு நாய் முதலாய் இராதபடிக்கு, இஸ்ரவேலிலே அவனுடையவர்களில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் கருவறுத்து,

2இராஜா 9:9 ஆகாபின் குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சரியாக்குவேன்.

2இராஜா 9:10 யேசபேலை யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் தின்றுவிடும்; அவளை அடக்கம் பண்ணுகிறவன் இல்லையென்றார் என்று சொல்லி, கதவைத் திறந்து ஓடிப் போனான்.

9 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 13

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன்னைக் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினேன்........" (2இராஜா 9:6-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்தப்பழியையும், யேசபேலின் கையிலே வாங்கும்படிக்கு நீ உன் ஆண்டவனாகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக் கடவாய். (2இராஜா 9:7)

2. ஆகாபின் குடும்பமெல்லாம் அழியும். (2இராஜா 9:8)

3. நான் ஆகாபுக்கு ஆண்பிள்ளை ஒன்றும் இராதபடிக்கு, இஸ்ரவேலிலே அவனுடையவர்களில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் கருவறுப்பேன்.

4. ஆகாபின் குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சரியாக்குவேன். (2இராஜா 9:9)

5. யேசபேலை யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் தின்றுவிடும் (2இராஜா 9:10)

6. அவளை அடக்கம்பண்ணுகிறவன் இல்லை.

"ஆகாபின் குடும்பத்தை......சரியாக்குவேன்" - (1இராஜா 15:29; 1இராஜா 16:11)

3 இஸ்ரவேலின் இராணுவத்தினர் யெகூவை இராஜாவாக அறிவிக்கிறார்கள்

2இராஜா 9:11 யெகூ தன் ஆண்டவனுடைய ஊழியக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தபோது, அவர்கள் அவனை நோக்கி: சுகசெய்தியா? அந்தப் பயித்தியக்காரன் உன்னிடத்தில் வந்தது என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவன்: அந்த மனுஷனையும், அவன் சொன்ன காரியத்தையும் நீங்கள் அறிவீர்கள் என்றான்.

2இராஜா 9:12 அதற்கு அவர்கள்: அது பொய், அதை எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். அப்பொழுது அவன்: நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று இன்ன இன்ன பிரகாரமாக என்னிடத்தில் சொன்னான் என்றான்.

2இராஜா 9:13 அப்பொழுது அவர்கள் தீவிரமாய் அவரவர் தங்கள் வஸ்திரத்தைப் படிகளின் உயரத்தில் அவன் கீழே விரித்து, எக்காளம் ஊதி: யெகூ ராஜாவானான் என்றார்கள்.

"யெகூ தன் ஆண்டவனுடைய ஊழியக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தபோது" - எலிசாவின் ஊழியக்காரன் யெகூவிற்கு தீர்க்கதரிசனம் சொன்னவுடன், கதவைத் திறந்து ஓடிப்போனான். யெகூ மற்ற சேனாபதிகள் இருக்கும் இடத்திற்குத் திரும்பி வருகிறான். தான் ராஜாவாக அபிஷேகம் பண்ணப் பட்டதை அங்கு கூடியிருப்போருக்கு அறிவிக்கிறான். மற்ற சேனாபதிகள் யெகூவை ராஜாவாக அங்கிகரிக்கிறார்கள். (2இராஜா 9:11-13).

4. இஸ்ரவேலின் இராஜாவாகிய யோராமை யெகூ கொன்று போடுகிறான் - உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

2இராஜா 9:14 அப்படியே நிம்சியின் மகனாகிய யோசபாத்தின் குமாரன் யெகூ என்பவன் யோராமுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு பண்ணினான்; யோராமோ இஸ்ரவேலர் எல்லாரோடுங்கூட கீலேயாத்திலுள்ள ராமோத்திலே சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலினிமித்தம் காவல் வைத்துவைத்தான்.

II இராஜாக்கள் – தொகுப்புரை

9 அதிகாரம்

2இராஜா 9:15 ஆனாலும் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடே பண்ணின யுத்தத்திலே, சீரியர் தன்னை வெட்டின காயங்களை யெஸ்ரயேலிலே ஆற்றிக் கொள்ளுகிறதற்கு, ராஜாவாகிய யோராம் திரும்பிப் போயிருந்தான். யெகூ என்பவன்: இது உங்களுக்குச் சம்மதியாயிருந்தால் யெஸ்ரயேலில் இதை அறிவிக்கிறதற்கு ஒருவரும் பட்டணத்திலிருந்து தப்பிப் போகும்படி விடாதிருங்கள் என்றான்.

2இராஜா 9:16 அப்பொழுது யெகூ இரதத்தின்மேல் ஏறி, யெஸ்ரயேலுக்கு நேராகப் போனான், யோராம் அங்கே வியாதியாய்க் கிடந்தான்; யோராமைப் பார்க்க, யூதாவின் ராஜாவாகிய அகசியாவும் அங்கே வந்திருந்தான்.

2இராஜா 9:17 யெஸ்ரயேலில் கோபுரத்தின்மேல் நிற்கிற ஜாமக்காரன், யெகூவின் கூட்டம் வருகிறதைக் கண்டு: ஒரு கூட்டத்தைக் காண்கிறேன் என்றான். அப்பொழுது யோராம்: நீ ஒரு குதிரைவீரனைக் கூப்பிட்டு, அவர்களுக்கு எதிராக அனுப்பிச்சமாதானமா என்று கேட்கச்சொல் என்றான்.

2இராஜா 9:18 அந்தக் குதிரைவீரன்: அவனுக்கு எதிர்கொண்டுபோய், சமாதானமா என்று ராஜா கேட்கச் சொன்னார் என்றான். அதற்கு யெகூ: சமாதானத்தைப்பற்றி உனக்கு என்ன? என் பிறகே திரும்பிவா என்றான். அப்பொழுது ஜாமக்காரன்: அனுப்பப் பட்டவன் அவர்கள் இருக்கும் இடமட்டும் போனதிலும் திரும்பிவரவில்லை என்றான்.

2இராஜா 9:19 ஆகையால் வேறொரு குதிரைவீரனை அனுப்பினான், அவன் அவர்களிடத்தில்போய்: சமாதானமா என்று ராஜா கேட்கச்சொன்னார் என்றான். அதற்கு யெகூ: சமாதானத்தைப்பற்றி உனக்கு என்ன? என் பிறகே திரும்பிவா என்றான்.

2இராஜா 9:20 அப்பொழுது ஜாமக்காரன்: அவன் அவர்கள் இருக்கும் இடமட்டும் போனபோதிலும் திரும்பிவரவில்லை என்றும், ஓட்டுகிறது நிம்சியின் குமாரனாகிய யெகூ ஓட்டுகிறதுபோல இருக்கிறது; அதிவேகமாய் ஓட்டுகிறான் என்றும் சொன்னான்.

2இராஜா 9:21 அப்பொழுது யோராம்: இரதத்தை ஆயத்தப்படுத்து என்றான்; அவனுடைய இரதத்தை ஆயத்தப் படுத்தினபோது, இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமும், யூதாவின் ராஜாவாகிய அகசியாவும் அவனவன் தன் தன் இரதத்தில் ஏறி யெகூவுக்கு நேராகப் புறப்பட்டு, யெஸ்ரயேலி யனாகிய நாபோத்தின் நிலத்திலே அவனுக்கு எதிர்ப் பட்டார்கள்.

2இராஜா 9:22 யோராம் யெகூவைக் கண்டவுடனே: யெகூவே, சமாதானமா என்றான். அதற்கு யெகூ: உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும் அவளுடைய பில்லி சூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது என்றான்.

2இராஜா 9:23 அப்பொழுது யோராம் தன் இரதத்தைத் திருப்பிக்கொண்டு ஓடிப் போய், அகசியாவை நோக்கி: அகசியாவே, இது சதி என்றான்.

2இராஜா 9:24 யெகூ தன் கையால் வில்லை நாணேற்றி, அம்பு யோராமுடைய நெஞ்சில் உருவிப் புறப்படத்தக்கதாய், அவனை அவன் புயங்களின் நடுவே எய்தான்; அதினால் அவன் தன் இரதத்திலே சுருண்டு விழுந்தான்.

2இராஜா 9:25 அப்பொழுது யெகூ, தன் சேனாபதியாகிய பித்காரை நோக்கி: அவனை எடுத்து, யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் வயல்நிலத்தில் எறிந்து போடு; நானும் நீயும் ஒரு சோடாய் அவன் தகப்பனாகிய ஆகாபின் பிறகே குதிரை ஏறிவருகிறபோது, கர்த்தர் இந்த ஆக்கினையை அவன்மேல் சுமத்தினார் என்பதை நினைத்துக்கொள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

9 அதிகாரம்

2இராஜா 9:26 நேற்று நாபோத்தின் இரத்தத்தையும், அவன் குமாரரின் இரத்தத்தையும் கண்டேன் அல்லவா என்றும், இந்த நிலத்தில் உனக்கு நீதியைச் சரிக்கட்டுவேன் என்றும் அப்பொழுது கர்த்தர் சொன்னாரே; இப்போதும் அவனை எடுத்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே இந்த நிலத்தில் எறிந்துபோடு என்றான்.

"யெஸ்ரயேலில் இதை அறிவிக்கிறதற்கு ஒருவரும் பட்டணத்திலிருந்து தப்பிப்போகும்படி விடாதிருங்கள்" - கீலேயாத்திலுள்ள ராமோத்திலிருந்து ஒருவரும் யோராமிடம்போய் இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறிவிக்கக் கூடாது என்று யெகூ கட்டளையிடுகிறான். மற்ற சேனாபதிகள் ஒருவரையும் தப்ப விடாமல் பார்த்துக் கொள்கிறார்கள். யெகூ உடனடியாக இரதத்தின்மீது ஏறி யோராமைக் கொன்று போடப்போனான். (2இராஜா 9:15-37).

"யெஸ்ரயேலில் கோபுரத்தின்மேல் நிற்கிற ஜாமக்காரன்" - யெகூ வருவதை ஜாமக்காரன் யோராமிற்கு அறிவிக்கிறான். ராஜாவின் இரண்டு குதிரைவீரர்களை யெகூ பிடித்துக் கொண்டான். இறுதியில் யெகூவைச் சந்திக்க யோராமே நேரடியாகப் போகிறான். அங்கு யெகூ யோராமைக் கொன்றுபோட்டான். (2இராஜா 9:12-29).

"உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும்" - யேசபேலின் வேசித்தனங்களும் அவளுடைய பில்லி சூனியங்களும் ஏராளமாயிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேலில் சமாதானம் இருக்க முடியாது. யோராம் மடிந்துபோகவேண்டுமென்று யெகூ வெளிப்படையாகக் கூறுகிறான்.

"பில்லிசூனியங்கள்" **(witchcrafts, spiritism)** (லூக்கா 12:29).

தடைபண்ணப்பட்டிருக்கிற பழக்க வழக்கங்கள்

1. மந்திரவித்தை **(Enchantments)** (யாத் 7:11,22; யாத் 8:7,18; லேவி 19:26; உபா 18:10; 2நாளா 33:6; 2இராஜா 17:17; 2இராஜா 21:6; ஏசா 47:9,12; எரே 27:9; தானி 1:20)
2. சூனியம் **(Witchcraft)** (யாத் 22:18; உபா 18:10; 1சாமு 15:23; 2நாளா 33:6; 2இராஜா 9:22; மீகா 5:12; நாகூம் 3:4; கலா 5:19-21)
3. சூனியம் **(Sorcery)** (யாத் 7:11; ஏசா 47:9,12; ஏசா 57:3; எரே 27:9; தானி 2:2; மல் 3:5; அப் 8:9-11; அப் 13:6-8; வெளி 9:21; வெளி 18:23; வெளி 21:8; வெளி 22:15)
4. நாள்பார்த்தல் **(Soothsaying)** (ஏசா 2:6; தானி 2:27; தானி 4:7; தானி 5:7,11; மீகா 5:12)
5. குறிசொல்லுதல் **(Divination)** (எண் 22:7; எண் 23:23; உபா 18:10-14; 2இராஜா 17:17; 1சாமு 6:2; எரே 14:14; எரே 27:9; எரே 29:8; எசே 12:24; எசே 13:6-7,23; எசே 21:22-29; எசே 22:28; மீகா 3:7; சக 10:2; அப் 16:16)
6. சூனியம் **(Wizardry)** (யாத் 22:18; லேவி 19:31; லேவி 20:6,27; உபா 18:11; 1சாமு 28:3,9; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; 2நாளா 33:6; ஏசா 19:3)
7. செத்தவர்களிடத்தில் குறிகேட்டல் **(Necromancy)** (உபா 18:11; ஏசா 8:19; 1சாமு 28;1நாளா 10:13)
8. மந்திரவாதம் **(Magic)** (ஆதி 41:8,24; யாத் 7:11,22; யாத் 8:7, 18-19; யாத் 9:11; தானி 1:20; தானி 2:2,10,27; தானி 4:7,9; தானி 5:11; அப் 19:19)
9. சன்னதம் கூறுதல் (ஏவல் செய்தல்) **(Charm)** (உபா 18:11; ஏசா 19:3)

9 அதிகாரம்

10. ஜோசியம் **(Prognostication)** (ஏசா 47:13)

11. ஜோசியம் **(Observing times)** (லேவி 19:26; லேவி 18:10; 2இராஜா 21:6; 2நாளா 33:6)

12. ஜாதகம் **(Astrology and star gazing)** (ஏசா 47:13; எரே 10:2; தானி 1:20; தானி 2:2,10; தானி 4:7; தானி 5:7-15)

கர்த்தரை நாம் விசுவாசிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும். இப்படிச் செய்வதற்குப் பதிலாகப் புறஜாதியார்கள் பிசாசுகளையும், அசுத்த ஆவிகளையும் நம்பி, அவற்றின் ஆலோசனையைக் கேட்கிறார்கள். அவற்றின் முடிவு அழிவு. (லேவி 19:31; லேவி 20:6; உபா 18:11; 1சாமு 28; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; 1நாளா 10:13; 2நாளா 33:6; ஏசா 8:19; ஏசா 19:3; ஏசா 29:4. 1தீமோ 4:1-8; 2தெச 2:8-12; மத் 24:24; வெளி 13; வெளி 16:13-16; வெளி 19:20).

"கர்த்தர் இந்த ஆக்கினையை அவன்மேல் சுமத்தினார்" - இது ஆகாபின்மீது கூறப்பட்ட தீர்க்கதரிசனமும், நியாயத்தீர்ப்பும் ஆகும். (1இராஜா 21:21-29).

"நாபோத்தின் இரத்தத்தையும், அவன் குமாரரின் இரத்தத்தையும்" - நாபோத்தின் குமாரரையும் ஆகாப் கொன்றுபோட்டான். (1இராஜா 21:13).

தீர்க்கதரிசன எண் - 14

"இந்த நிலத்தில் உனக்கு நீதியைச் சரிக்கட்டுவேன் என்றும் அப்பொழுது கர்த்தர் சொன்னாரே" (2இராஜா 9:26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. எந்த நாபோத்தின் நிலத்தை அநியாயமாக ஆகாப் பறித்துக் கொண்டானோ அதே நிலத்தில் யோராம் கொலைபண்ணப்படுகிறான். (2இராஜா 9:21,24-26).

5. யூதாவின் இராஜாவாகிய அகசியாவை யெகூ கொன்று போடுகிறான்

2இராஜா 9:27 இதை யூதாவின் ராஜாவாகிய அகசியா கண்டு, தோட்டத்தின் வீட்டுவழியாய் ஓடிப் போனான்; யெகூ அவனைப்பின் தொடந்து: அவனையும் இரதத்திலே வெட்டிப்போடுங்கள் என்றான்; அவர்கள் இப்லேயாம் கிட்ட இருக்கிற கூர்மலையின் மேல் ஏறுகிற வழியிலே அப்படிச் செய்தார்கள்; அவன் மெகிதோவுக்கு ஓடிப்போய் அங்கே செத்துப்போனான்.

2இராஜா 9:28 அவனுடைய ஊழியக்காரர் அவனை இரதத்தின்மேல் எருசலேமுக்குக் கொண்டுபோய், அவனைத் தாவீதின் நகரத்தில் அவன் பிதாக்களோடு அவனுடைய கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள்.

2இராஜா 9:29 இந்த அகசியா, ஆகாவுடைய குமாரனாகிய யோராமின் பதினோராம் வருஷத்தில் யூதாவின்மேல் ராஜாவானான்.

"யூதாவின் ராஜாவாகிய அகசியா .... தோட்டத்தின் வீட்டுவழியாய் ஓடிப்போனான்" - யெகூ அவனையும் பின்தொடர்ந்தான். யெகூவின் மனுஷர் அகசியாவை அவனுடைய இரதத்தில் வெட்டிப்போட்டார்கள். அவனை தாவீதின் நகரத்தில் அவன் பிதாக்களோடு அவனுடைய கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள். (2இராஜா 9:28).

6. யெகூ யேசபேலை கொன்று போடுகிறான் - (1இராஜா 21:23)

2இராஜா 9:30 யெகூ யெஸ்ரயேலுக்கு வந்தான்; அதை யேசபேல் கேட்டபோது, தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு, ஜன்னல்வழியாய் எட்டிப்பார்த்து,

2இராஜா 9:31 யெகூ ஒலிமுகவாசலில் வந்தபோது, அவள்: தன் ஆண்டவனைக் கொன்ற சிம்ரிக்ஷேமம் அடைந்தானா என்றாள்.

9 அதிகாரம்

2இராஜா 9:32 அப்பொழுது அவன் தன் முகத்தை அந்த ஜன்னலுக்கு நேராக ஏறெடுத்து: என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்? என்று கேட்டதற்கு, இரண்டு மூன்று பிரதானிகள் அவனை எட்டிப்பார்த்தார்கள்.

2இராஜா 9:33 அப்பொழுது அவன்: அவளைக் கீழே தள்ளுங்கள் என்றான்; அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்து; அவன் அவளை மிதித்துக்கொண்டு,

2இராஜா 9:34 உள்ளேபோய், புசித்துக் குடித்த பின்பு: நீங்கள் போய் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரீயைப் பார்த்து, அவளை அடக்கம்பண்ணுங்கள்; அவள் ஒரு ராஜகுமாரத்தி என்றான்.

2இராஜா 9:35 அவர்கள் அவளை அடக்கம் பண்ணப்போகிறபோது, அவளுடைய தலையோட்டையும் கால்களையும் உள்ளங்கைகளையுமே அல்லாமல் வேறொன்றையும் காணவில்லை.

2இராஜா 9:36 ஆகையால் அவர்கள் திரும்பவந்து அவனுக்கு அறிவித்தார்கள்; அப்பொழுது அவன்: இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு சொன்ன வார்த்தை; யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் யேசபேலின் மாம்சத்தைத் தின்னும் என்றும்,

2இராஜா 9:37 இன்னது யேசபேலென்று சொல்லக் கூடாதபடிக்கு, யேசபேலின் பிரேதம் யெஸ்ரயேலின் நிலத்திலே வயல்வெளியின்மேல் போடும் எருவைப் போல் ஆகும் என்றும் சொன்னாரே என்றான்.

"யெகூ யெஸ்ரயேலுக்கு வந்தான்" - அடுத்த படியாகிய யெகூ யேசபேலைக் கொலைபண்ண வேண்டும். இதனால் 1இராஜா 21:23 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

"தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு" - பழங்காலத்தில் ஸ்திரீகள் தங்களைச் சிங்காரித்துக் கொள்வது வழக்கம். கண்களுக்கு மையிடுவது ஸ்திரீகளின் பிரதான சிங்காரமாகும். (யோபு 42:14, நீதி 6:25; எரே 4:30; எசே 23:40)

"தன் ஆண்டவனைக் கொன்ற சிம்ரி" - (1இராஜா 16:9-20)

"இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு சொன்ன வார்த்தை" - (1இராஜா 21:23)

10 அதிகாரம்

7. யெகூ ஆகாபின் குமாரரை கொன்று போடுகிறான் - (1இராஜா 21:21)

2இராஜா 10:1 ஆகாபுக்குச் சமாரியாவிலே எழுபது குமாரர் இருந்தபடியினால், யெகூ சமாரியாவிலிருக்கிற யெஸ்ரயேலின் பிரபுக்களாகிய மூப்பரிடத்துக்கும், ஆகாபுடைய பிள்ளைகளை வளர்க்கிறவர்களிடத்துக்கும் நிருபங்களை எழுதியனுப்பினான்.

2இராஜா 10:2 அதில்: உங்கள் ஆண்டவனுடைய குமாரர்கள் உங்களோடிருக்கிறார்களே; இரதங்களும், குதிரைகளும், அரணான பட்டணமும் ஆயுதங்களும் உங்களுக்கு உண்டே.

2இராஜா 10:3 இப்போதும் இந்த நிருபம் உங்களிடத்தில் வரும்போது நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய குமாரரில் உத்தமமும் செம்மையுமாயிருக்கிறவனைப் பார்த்து, அவனை அவன் தகப்பனுடைய சிங்காசனத்தின்மேல் வைத்து, உங்கள் ஆண்டவனுடைய குடும்பத்துக்காக யுத்தம் பண்ணுங்கள் என்று எழுதியிருந்தது.

2இராஜா 10:4 அவர்கள் மிகவும் பயந்து: இதோ, இரண்டு ராஜாக்கள் அவனுக்கு முன்பாக நிற்கவில்லையே; நாங்கள் எப்படி நிற்போம் என்றார்கள்.

2இராஜா 10:5 ஆகையால் அரமனை விசாரிப்புக்காரனும், நகர விசாரிப்புக் காரனும், மூப்பரும் பிள்ளைகளின் விசாரிப்புக்காரரும்: நாங்கள் உமது அடியார்கள், நீர் எங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்வோம்; நாங்கள் ஒருவரையும் ராஜாவாக்குவதில்லை; உமது பார்வைக்குச் சம்மதியானதைச் செய்யும் என்று யெகூவுக்குச் சொல்லியனுப்பினார்கள்.

2இராஜா 10:6 அப்பொழுது அவன்: அவர்களுக்கு இரண்டாம் நிருபத்தை எழுதினான்; அதில்: நீங்கள் என் பட்சத்தில் சேர்ந்து என் சொல்லைக் கேட்பீர்களானால், உங்கள் ஆண்டவனுடைய குமாரரின் தலைகளை வாங்கி, நாளை இந்நேரத்தில் யெஸ்ரயேலுக்கு என்னிடத்தில் வாருங்கள் என்று எழுதியிருந்தது. ராஜாவின் குமாரராகிய எழுபதுபேரும் தங்களை வளர்க்கிற பட்டணத்தின் பெரிய மனுஷரோடு இருந்தார்கள்.

2இராஜா 10:7 இந்த நிருபம் அவர்களிடத்தில் வந்த போது, அவர்கள் ராஜாவின் குமாரராகிய எழுபதுபேரையும் பிடித்து வெட்டி, அவர்கள் தலைகளைக் கூடைகளில் வைத்து, யெஸ்ரயேலிலிருக்கிற அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.

2இராஜா 10:8 அனுப்பப்பட்ட ஆள் வந்து: ராஜகுமாரரின் தலைகளைக் கொண்டு வந்தார்கள் என்று அவனுக்கு அறிவித்த போது, அவன் விடியற்காலமட்டும் அவைகளை ஒலி முகவாசலில் இரண்டு குவியலாகக் குவித்துவையுங்கள் என்றான்.

2இராஜா 10:9 மறுநாள் காலமே அவன் வெளியே வந்து நின்று, சகல ஜனங்களையும் நோக்கி: நீங்கள் நீதிமான்களல்லவா? இதோ, நான் என் ஆண்டவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடுபண்ணி அவனைக் கொன்றுபோட்டேனே; ஆனாலும் இவர்கள் எல்லாரையும் கொன்றவன் யார்?

2இராஜா 10:10 ஆதலால் கர்த்தர் ஆகாபின் குடும்பத்தாருக்கு விரோதமாகச் சொன்ன கர்த்தருடைய வார்த்தைகளில் ஒன்றும் தரையிலே விழவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்; கர்த்தர் தம்முடைய ஊழியக்காரனாகிய எலியாவைக்கொண்டு சொன்னதைச் செய்தார் என்றான்.

10 அதிகாரம்

2இராஜா 10:11 யெஸ்ரயேலிலும் ஆகாபின் குடும்பத்தாரில் மீதியான யாவரையும், அவனுக்கு இருந்த எல்லா மந்திரிகளையும், அவனைச்சேர்ந்த மனுஷரையும், அவனுடைய ஆசாரியர்களையும், அவனுக்கு ஒருவரையும் மீதியாக வைக்காதபடிக்கு, யெகூ கொன்று போட்டான்.

"ஆகாபுக்குச் சமாரியாவிலே எழுபது குமாரர் இருந்தபடியினால்" - ஆகாபுக்கு எழுபது குமாரர்கள் இருக்கிறார்கள். பிள்ளைகளை வளர்க்கிறவர்களிடத்தில் அவர்கள் பாதுகாப்பாக வளர்ந்து வருகிறார்கள். யெகூ சமாரியாவிலிருக்கிற யெஸ்ரயேலின் பிரபுக்களாகிய மூப்பரிடத்துக்கும், ஆகாபுடைய பிள்ளைகளை வளர்க்கிறவர்களிடத்துக்கும் நிருபங்களை எழுதியனுப்பினான். ஆகாபின் குமாரரில் ஒருவனை அவன் தகப்பனுடைய சிங்காசனத்தின்மேல் வைக்குமாறு கூறுகிறான். ஆனால் பிள்ளைகளை வளர்க்கிறவர்களும், மூப்பர்களும் யெகூவுக்கு மிகவும் பயப்படுகிறார்கள். ஆகாபின் பிள்ளைகளுக்கு யெகூ சொன்னபடி செய்வதாக வாக்குப் பண்ணுகிறார்கள். (2இராஜா 10:1-3). யெகூ அவர்களுக்கு இரண்டாம் நிருபத்தை எழுதினான். அந்த நிருபத்தில் ஆகாபினுடைய குமாரரின் தலைகளை வாங்கி, நாளை இந்நேரத்தில் யெஸ்ரயேலுக்கு என்னிடத்தில் வாருங்கள் என்று எழுதியிருந்தது. இந்த நிருபம் அவர்களிடத்தில் வந்த போது, அவர்கள் ராஜாவின் குமாரராகிய எழுபதுபேரையும் பிடித்து வெட்டி, அவர்கள் தலைகளைக் கூடைகளில் வைத்து, யெஸ்ரயேலிலிருக்கிற அவனிடத்திற்கு அனுப்பினார்கள். (2இராஜா 10:4-9). மேலும் யெஸ்ரயேலில் ஆகாபின் குடும்பத்தாரில் மீதியான யாவரையும், அவனுக்கு இருந்த எல்லா மந்திரிகளையும், அவனைச்சேர்ந்த மனுஷரையும், அவனுடைய ஆசாரியர்களையும், அவனுக்கு ஒருவரையும் மீதியாக வைக்காதபடிக்கு, யெகூ கொன்றுபோட்டான். (2இராஜா 10:10-11).

"ராஜகுமாரரின் தலைகளைக் கொண்டு வந்தார்கள்" - தோற்றுப்போனவர்களின் தலைகளை வெட்டுவது அக்காலத்து வழக்கம். தாவீது கோலியாத்தின் தலையை வெட்டி, அதைச் சவுலிடத்தில் கொண்டு வந்தான். (1சாமு 17:51,57). பெலிஸ்தர் சவுலின் தலையை வெட்டினார்கள். (1சாமு 31:9).

"கர்த்தர் ஆகாபின் குடும்பத்தாருக்கு விரோதமாகச் சொன்ன கர்த்தருடைய வார்த்தைகள்" - (1இராஜா 21:19-29).

"ஆகாபின் குடும்பத்தாரில் மீதியான யாவரையும்" - ராஜகுடும்பத்தோடு தொடர்புடைய எல்லோரையும் யெகூ கொன்றுபோட்டான்.

8. ஆகாபின் குமாரத்தியின் சந்ததியாரையும் யூதாவின் பிரபுக்களையும் யெகூ கொன்று போடுகிறான் - (1இராஜா 21:21-24; 2இராஜா 8:18; 2நாளா 22:7-9)

2இராஜா 10:12 பின்பு அவன் எழுந்து சமாரியாவுக்குப் போகப் புறப்பட்டான்; வழியிலே அவன் ஆட்டுமயிர் கத்தரிக்கிற மேய்ப்பரின் ஊர் இருக்கும் இடத்துக்கு வந்தபோது,

2இராஜா 10:13 யூதாவின் ராஜாவாகிய அகசியாவின் சகோதரரை அங்கே கண்டு, நீங்கள் யார் என்று கேட்டான். அவர்கள்: நாங்கள் அகசியாவின் சகோதரர்; நாங்கள் ராஜாவின் பிள்ளைகளையும் ராஜஸ்திரீயின் பிள்ளைகளையும் வினவுகிறதற்குப் போகிறோம் என்றார்கள்.

2இராஜா 10:14 அப்பொழுது அவன்: இவர்களை உயிரோடே பிடியுங்கள் என்றான்; அவர்களை உயிரோடே பிடித்து, நாற்பத்திரண்டு பேர்களாகிய அவர்களை ஆட்டுமயிர் கத்தரிக்கிற துரவண்டையிலே வெட்டிப் போட்டார்கள்; அவர்களில் ஒருவனையும் அவன் மீதியாக விடவில்லை.

II இராஜாக்கள் - தொகுப்புரை

10 அதிகாரம்

9. ஆகாபின் வீட்டாரில் மீதமுள்ளோரை யெகூ கொன்று போடுகிறான் - (1இராஜா 21:21-24)

2இராஜா 10:15 அவன் அவ்விடம்விட்டுப் புறப்பட்டபோது, தனக்கு எதிர்ப்பட்ட ரேகாபின் குமாரனாகிய யோனதாபைச் சந்தித்து, அவனை உபசரித்து: என் இருதயம் உன் இருதயத்தோடே செம்மையாய் இருக்கிறதுபோல உன் இருதயமும் செம்மையாயிருக்கிறதா என்று கேட்டான். அதற்கு யோனதாப்: அப்படியே இருக்கிறது என்றான்; அப்படியிருக்கிறதானால், உன் கையைத் தா என்று சொன்னான்; அவன் தன் கையைக் கொடுத்தபோது, அவனைத் தன்னிடத்தில் இரதத்தின்மேல் ஏறிவரச் சொல்லி,

2இராஜா 10:16 நீ என்னோடே கூடவந்து கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்திவைராக்கியத்தைப் பார் என்றான்; அப்படியே இவனை அவன் இரதத்தின் மேல் ஏற்றினார்கள்.

2இராஜா 10:17 அவன் சமாரியாவுக்கு வந்தபோது, கர்த்தர் எலியாவோடே சொன்ன வார்த்தையின்படியே, சமாரியாவில் ஆகாபுக்கு மீதியான யாவரையும் அழித்துத் தீருமளவும் சங்காரஞ்செய்தான்.

"யோனதாப்" **(Jehonadab)** - இவன் ஒரு கேனியன். மோசேயின் மாமனுடைய சந்ததியில் வந்திருக்கிறவன். (1நாளா 2:55; நியா 1:16; நியா 4:11; 1சாமு 15:6; எரே 35).

"சமாரியாவில் ஆகாபுக்கு மீதியான யாவரையும் அழித்துத் தீருமளவும் சங்காரஞ் செய்தான்" - இஸ்ரவேலின் சிம்மாசனம் ஒம்ரியின் வீட்டாரிடமிருந்து நிம்சியின் வீட்டாருக்கு மாறுகிறது. இதனால் ஏற்பட்ட அரசியல் கலவரங்கள் அனைத்தும் ஒடுக்கப் படுகிறது. சமாரியாவில் ஆகாபுக்கு மீதியான யாவரையும் அழித்துத் தீருமளவும் சங்காரஞ் செய்தான். இதுவரையிலும் தனக்கு எதிராக இருந்த ராஜவம்சத்தாரை எல்லாம் யெகூ அழித்துப் போட்டான். இதன் பின்பு, பாகாலைப் பின்பற்றுகிறவர்களையும் யெகூ சங்காரம் பண்ணினான்.(2இராஜா 10:18-28).

10. பாகாலை வழிபடுவோர் எல்லோரையும் யெகூ கொன்று போடுகிறான் - அவர்களுடைய தெய்வங்களைச்சுட்டெரிக்கிறான்

2இராஜா 10:18 பின்பு யெகூ ஜனங்களையெல்லாம் கூட்டி, அவர்களை நோக்கி: ஆகாப் பாகாலைச் சேவித்தது கொஞ்சம், யெகூ அவனைச் சேவிப்பது மிகுதி.

2இராஜா 10:19 இப்போதும் பாகாலின் சகல தீர்க்கதரிசிகளையும், அவனுடைய சகல பணிவிடைக்காரரையும், அவனுடைய சகல ஆசாரியரையும் என்னிடத்தில் அழைப்பியுங்கள்; ஒருவனும் குறையலாகாது; நான் பாகாலுக்குப் பெரிய பலியிடப்போகிறேன்; வராதவன் எவனோ அவன் உயிரோடிருப்பதில்லை என்றான்; பாகாலின் பணிவிடைக்காரரை அழிக்கும்படி யெகூ இதைத் தந்திரமாய்ச் செய்தான்.

2இராஜா 10:20 பாகாலுக்குப் பண்டிகையின் ஆசரிப்பைக் கூறுங்கள் என்று யெகூ சொன்னான்; அப்படியே கூறினார்கள்.

2இராஜா 10:21 யெகூ இஸ்ரவேல் தேசமெங்கும் அதைச் சொல்லி யனுப்பின படியினால், பாகாலின் பணிவிடைக்காரர் எல்லாரும் வந்தார்கள்; வராதவன் ஒருவனுமில்லை; அவர்கள் பாகாலின் கோவிலுக்குள் பிரவேசித்ததினால் பாகாலின் கோவில் நாற்சாரியும் நிறைந்திருந்தது.

2இராஜா 10:22 அப்பொழுது அவன், வஸ்திரசாலை விசாரிப்புக்காரனை நோக்கி: பாகாலின் பணிவிடைக் காரருக்கெல்லாம் வஸ்திரங்களை எடுத்துக்கொண்டுவா என்றான்; அவர்களுக்கு வஸ்திரங்களை எடுத்துக் கொண்டுவந்தான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

10 அதிகாரம்

2இராஜா 10:23 பின்பு யெகூ: ரேகாபின் குமாரனாகிய யோனதாபோடுங்கூடப் பாகாலின் கோவிலுக்குள் பிரவேசித்து, பாகாலின் பணிவிடைக்காரரை நோக்கி: பாகாலின் ஊழியக்காரரே அல்லாமல் கர்த்தரின் ஊழியக்காரரில் ஒருவரும் இங்கே உங்களோடு இராதபடிக்குத் திட்டமாய்ப் பாருங்கள் என்றான்.

2இராஜா 10:24 அவர்கள் பலிகளையும் சர்வாங்க தகனங்களையும் செலுத்த உட்பிரவேசித்த பின்பு, யெகூ வெளியிலே எண்பது பேரைத் தனக்கு ஆயத்தமாக வைத்து: நான் உங்கள் கையில் ஒப்புவிக்கிற மனுஷரில் ஒருவனை எவன் தப்பவிடுகிறானோ அவனுடைய ஜீவனுக்குப் பதிலாக அவனைத் தப்பவிட்டவனுடைய ஜீவன் ஈடாயிருக்கும் என்றான்.

2இராஜா 10:25 சர்வாங்க தகனபலியிட்டுத் தீர்ந்தபோது, யெகூ சேவகரையும் சேர்வைக்காரரையும் நோக்கி: உள்ளேபோய், அவர்களை வெட்டிப் போடுங்கள்; ஒருவரையும் வெளியே விடவேண்டாம் என்றான்; அப்படியே பட்டயக்கருக்கினால் சேவகரும் சேர்வைக் காரரும் அவர்களை வெட்டி எறிந்து போட்டு, பாகால் கோவிலைச் சேர்ந்த ஸ்தலம் எங்கும் போய்,

2இராஜா 10:26 பாகால் கோவில் விக்கிரகங்களை வெளியே எடுத்துவந்து, அவைகளைத் தீக்கொளுத்தி,

2இராஜா 10:27 பாகாலின் சிலையைத் தகர்த்து, பாகாலின் கோவிலை இடித்து, அதை இந்நாள்வரைக்கும் இருக்கிறது போல மலஜலாதி இடமாக்கினார்கள்.

2இராஜா 10:28 இப்படியே யெகூ பாகாலை இஸ்ரவேலில் இராதபடிக்கு அழித்துப்போட்டான்.

“யெகூ ஜனங்களையெல்லாம் கூட்டி” - யெகூ ஒரு தந்திரம் பண்ணுகிறான். தன்னைப் பாகாலை ஆராதிக்கிறவன்போல காண்பிக்கிறான். பாகாலுக்கு ஒரு பண்டிகை ஆசரிப்பதுபோல ஒரு நாளை நியமித்து, அதற்கு பாகாலை ஆராதிக்கிறவர்களையும், பாகாலின் தீர்க்கதரிசிகளையும் அழைக்கிறான். இஸ்ரவேலில் பாகாலை ஆராதிக்கிறவர்கள் அனைவரையும் அழித்துப்போட வேண்டுமென்பதே யெகூவின் திட்டம். (2இராஜா 10:18-19). கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் யாரும் பாகாலின் கோவிலுக்குள் வராமல் தடைபண்ணுகிறான். பாகாலை ஆராதிக்கிறவர்களை மட்டும் அந்தக் கோவிலுக்குள் வரவழைத்து யெகூ அவர்களைக் கொன்றுபோட்டான். (2இராஜா 10:20-23).

“பாகாலின் பணிவிடைக்காரருக்கெல்லாம் வஸ்திரங்களை எடுத்துக்கொண்டுவா” - கர்த்தருடைய ஆசாரியர்களைப்போல பாகாலின் பணிவிடைக்காரருக்கும் விசேஷித்த வஸ்திரங்கள் இருந்தன. இந்த வஸ்திரங்களை அவர்கள் அணியும்போது, கர்த்தருடைய பிள்ளைகளிடமிருந்து அவர்கள் வேறுபட்டுக் காணப்படுவார்கள்.

“பாகாலின் ஊழியக்காரரே அல்லாமல்” - பாகாலின் கோவிலுக்குள் பாகாலின் ஊழியக்காரரே அல்லாமல் கர்த்தரின் ஊழியக்காரரில் ஒருவரும் இராதபடிக்கு திட்டம் பண்ணிக் கொண்டான். ஒரு மார்க்க ஆராதனையில் மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பொதுவாகப் பங்கு பெறுவதில்லை. கர்த்தரின் ஊழியக்காரரைப் பாகாலின் கோவிலை விட்டு வெளியே அகற்றியபோது, இதனால் யாரும் சந்தேகப்படவில்லை.

II இராஜாக்கள் – தொகுப்புரை

10 அதிகாரம்

“யெகூ வெளியிலே எண்பது பேரைத் தனக்கு ஆயத்தமாக வைத்து” - பாகாலின் கோவிலுக்கு வெளியே யெகூ எண்பது பேரைத் தனக்கு ஆயத்தமாக வைக்கிறான். அவர்கள் பட்டயங்களோடு இருக்கிறார்கள். பாகாலை ஆராதிக்கிறவர்கள் அனைவரையும் அவர்கள் வெட்டிப்போடவேண்டும். இது யெகூவின் கட்டளை. பாகாலின் மனுஷரில் எவனையாவது தப்ப விட்டுவிட்டால், அவனுடைய ஜீவனுக்குப் பதிலாக அவனைத் தப்பவிட்டவனுடைய ஜீவன் ஈடாயிருக்கும் என்றும் யெகூ கட்டளையிட்டான். எண்பதுபேரும் யெகூவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, பாகாலின் பணிவிடைக்காரர்கள் எல்லோரையும் வெட்டி எறிந்துபோட்டார்கள். பாகால் கோவிலைச் சேர்ந்த ஸ்தலம் எங்கும் போய், பாகால் கோவில் விக்கிரகங்களை வெளியே எடுத்துவந்து, அவைகளைத் தீக்கொளுத்திப் போட்டார்கள். பாகாலின் சிலையைத் தகர்த்து, பாகாலின் கோவிலை இடித்துப்போட்டார்கள். இப்படியே யெகூ பாகாலை இஸ்ரவேலில் இராதபடிக்கு அழித்துப்போட்டான். (2இராஜா 10:24-28).

11. யெகூ விக்கிரகராதானையை தொடர்கிறான்-(1இராஜா 21:21-24)

2இராஜா 10:29 ஆனாலும் பெத்தேலிலும் தாணிலும் வைத்த பொற்கன்றுக் குட்டிகளால், இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை யெகூ விட்டு விலகவில்லை.

2இராஜா 10:30 கர்த்தர் யெகூவை நோக்கி: என் பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச் செய்து, என் இருதயத்தில் இருந்தபடியெல்லாம் ஆகாபின் குடும்பத்துக்குச் செய்த படியினால், உன் குமாரர் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள் என்றார்.

2இராஜா 10:31 ஆனாலும் யெகூ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தின்படி தன் முழு இருதயத்தோடும் நடக்கக் கவலைப்பட வில்லை; இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின யெரொபெயாமின் பாவங்களை விட்டு அவன் விலகவும் இல்லை.

“யெரொபெயாமின் பாவங்களை யெகூ விட்டு விலகவில்லை” - யெகூ பாகாலை இஸ்ரவேலில் இராதபடிக்கு அழித்துப்போட்டான். ஆனாலும் அவன் யெரொபெயாமின் பாவங்களை விட்டு விலகவில்லை. யெரொபெயாம் பெத்தேலிலும் தாணிலும் இரண்டு பொற்கன்றுக் குட்டிகளை வைத்திருந்தான். யெகூ இந்தப் பொன்கன்றுக் குட்டிகளையும் ஆராதித்தான். ஆனாலும் யெகூ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்ததினாலும், ஆகாபின் குடும்பத்தை அழித்ததினாலும் யெகூவின் குமாரர் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணினார். (2இராஜா 10:29-31).

யெகூவின் நான்கு தலைமுறைகள்

1. யோவாகாஸ் (2இராஜா 10:34-36; 2இராஜா 13:1-9)
2. யோவாஸ் (2இராஜா 13:10-25; 2இராஜா 14:16)
3. இரண்டாம் யெரொபெயாம் (2இராஜா 14:16-29)
4. சகரியா (2இராஜா 14:28-29; 2இராஜா 15:8-12)

தீர்க்கதரிசன எண் - 15

“உன் குமாரர் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள்” (2இராஜா 10:30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

10 அதிகாரம்

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தின் படி தன் முழு இருதயத்தோடும் நடக்கக் கவலைப்படவில்லை" - யெகூ இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப் பண்ணின யெரொபெயாமின் பாவங்களை விட்டு விலகவில்லை. கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தையும் கைக்கொள்ளவில்லை. இதனால் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்து போகப்பண்ணினார்.

12. இஸ்ரவேலின்மீது தேவன் தமது நியாயத்தீர்ப்பை துவங்குகிறார் - தேசத்தை விட்டு அவர்களைத் துரத்துகிறார் - (8:12-13; லேவி 26:14-44; உபா 28:15-68)

2இராஜா 10:32 அந்நாட்கள்முதல் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்துபோகப் பண்ணினார்; ஆசகேல் அவர்களை இஸ்ரவேலின் எல்லைகளிலெல்லாம் முறிய அடித்து,

2இராஜா 10:33 யோர்தான் துவக்கிக் கிழக்கிலுள்ள அர்னோன் நதிக்குச் சமீபமான ஆரோவேர் முதற் கொண்டிருக்கிற கீலேயாத்திலும் பாசானிலுமுள்ள காதியர், ரூபேனியர், மனாசேயர் இவர்களுடைய தேசமாகிய கீலேயாத் முழுவதையும் முறிய அடித்தான்.

"கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்துபோகப் பண்ணினார்" - இஸ்ரவேலின் ராஜ்யபாரம் யெகூவின் காலத்திலிருந்து குறைந்துபோய், பின்பு முடிந்து போயிற்று. (2இராஜா 17) யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள தங்கள் தேசங்களை இஸ்ரவேல் புத்திரர் முதலாவதாக இழந்தார்கள். (2இராஜா 10:33).

13. யெகூவின் மரணம் - யோவாகாஸ் இராஜாவானான் - இஸ்ரவேலின் பன்னிரெண்டாவது இராஜா - (13:1-9)

2இராஜா 10:34 யெகூவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், அவனுடைய எல்லா வல்லமையும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 10:35 யெகூ தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைச் சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள்; அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய யோவாகாஸ் ராஜாவானான்.

2இராஜா 10:36 யெகூ சமாரியாவிலே இஸ்ரவேலின் மேல் ராஜ்யபாரம்பண்ணின நாட்கள் இருபத்தெட்டு வருஷம்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

11 அதிகாரம்

V. **யூதாவின் இராஜாக்கள்** - (11:1-12:21)

1. **அத்தாலியாளின் அரசாட்சி - யூதாவிலும் இஸ்ரவேலிலும் ஒரே பெண் ஆட்சியாளர்** - (11:1-21; 2நாளா 22:10-12)

(1) ஆட்சிக்கு வருவதும் அவளுடைய சுபாவமும்

2இராஜா 11:1 அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் தன் குமாரன் இறந்து போனதைக் கண்டபோது, எழும்பி ராஜவம்சஸ்தர் யாவரையும் சங்காரம் பண்ணினாள்.

2இராஜா 11:2 யோராம் என்னும் ராஜாவின் குமாரத்தியும் அகசியாவின் சகோதரியுமாகிய யோசேபாள், கொலையுண்ணப்படுகிற ராஜகுமாரரின் நடுவிலிருக்கிற அகசியாவின் மகனாகிய யோவாசைக் களவாய் எடுத்தாள்; அவன் கொல்லப்படாதபடி, அவனையும் அவன் தாதியையும் அத்தாலியாளுக்குத் தெரியாமல் பள்ளிஅறையில் ஒளித்து வைத்தார்கள்.

2இராஜா 11:3 இவளோடேகூட அவன் ஆறுவருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தான்; அத்தாலியாள் தேசத்தின்மேல் ராஜ்யபாரம் பண்ணினாள்.

"அத்தாலியாள்" (Athaliah) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் வலிமையுள்ளவர்" "Jehovah is strong" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அத்தாலியாள்"கள்

1. பென்யமீன் கோத்திரத்தான் (1நாளா 8:26)
2. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (எஸ்றா 8:7)
3. யூதாவுக்கும், இஸ்ரவேலுக்கும் ராணியாக இருந்தவள்.

அத்தாலியாள்

இவள் ஒம்ரியின் பேத்தி. (2நாளா 22:2) ஆகாப், யேசபேல் ஆகியோரின் குமாரத்தி. யூதாவின் ராஜாவாகிய யோராம் யேசபேலின் குமாரத்தியாகிய அத்தாலியாளை விவாகம் பண்ணுகிறான். யூதாவில் விக்கிரகாராதனையை நுழைப்பதற்குச் சாத்தான் இவர்களுடைய விவாகத்தைப் பயன்படுத்துகிறான். யேசபேல் இஸ்ரவேலில் செய்த அநியாயங்களை அத்தாலியாள் யூதாவில் செய்கிறாள்.

யோசபாத் இஸ்ரவேலுக்கு எதிராகத் தன்னைப் பலப்படுத்தி தன் ராஜ்யபாரத்தை ஆரம்பித்தான். (2நாளா 17:1) ஆனால் தன் மகன் யோராமிற்கோ யேசபேலின் குமாரத்தியை விவாகம் பண்ணி வைத்து விடுகிறான். மேசியாவின் வம்ச வித்தை அழித்துப்போட வேண்டுமென்று சாத்தான் தந்திரமாக முயற்சி பண்ணுகிறான்.

யூதாவின் ராஜாவாகிய யோராம் தன் சகோதரர் எல்லோரையும் கொன்றுபோட்டான். (2நாளா 21:4). இதன்பின்பு, அரபியர் வந்து அவனுடைய குமாரரையெல்லாம் கொன்று போடுகிறார்கள். அவனுடைய இளைய குமாரனாகிய அசரியா மட்டுமே அரபியருக்குத் தப்புகிறான். (2நாளா 22:1). அகசியாவின் மரணத்திற்குப் பின்பு, அத்தாலியாள் அவனுடைய குமாரரையெல்லாம் கொன்றுபோடுகிறாள். அல்லது கொன்றுபோட்டதாக நினைக்கிறாள். (2இராஜா 11:1-2; 2நாளா 23:3) அகசியாவின் மகனாகிய யோவாஸ் காப்பாற்றப்படுகிறான். மேசியாவின் சந்ததியில் இவன் ஒருவன் மட்டுமே மீந்திருக்கிறான். யோசேபாள் யோவாசை ஆறு வருஷம் பாதுகாப்பாக வைத்திருந்தாள். அத்தாலியாள் தேசத்தின்மேல் ராஜ்யபாரம்பண்ணினாள். அதன் பின்பு ஏழாம் வருஷத்தில் யோவாஸ் ஜனங்களுக்குக் காண்பிக்கப்பட்டு, அவன் ராஜாவானான்.

"யோசேபாள்" (Jehosheba) - இவள் பிரதான ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி. இவள் யோராம், அத்தாலியாள் ஆகியோரின் குமாரத்தி. யோய்தா யோவாசின் மாமன். (2நாளா 22:11).

11 அதிகாரம்

"கர்த்தருடைய ஆலயம்" - தேசத்தில் கர்த்தருடைய ஆராதனை ஒழிந்துபோயிற்று. எல்லாமே பாகால் ஆராதனை ஆயிற்று. தேவாலயத்திலிருந்து எல்லாவற்றையும் வெளியே எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். ஆகையினால், யோவாசைக் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைப்பது மிகவும் எளிதானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருந்தது. (2நாளா 24:7). அத்தாலியாளை ராஜ்ய பாரத்திலிருந்து இறக்கிவிட்டு, கர்த்தரை ஆராதிக்கும் வேறொருவனை ராஜாவாக்க வேண்டுமென்று யோய்தா திட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறான். தன் திட்டத்தின்படி அகசியாவின் குமாரனாகிய யோவாசை யோய்தா ராஜாவாக்குகிறான். தேசத்தில் கர்த்தரை ஆராதிப்பது மறுபடியும் துவங்குகிறது.

(2) யோய்தாவின் கலகம் - (2நாளா 23:1-11; 2இராஜா 25:25)

2இராஜா 11:4 ஏழாம் வருஷத்திலே யோய்தா நூறு பேருக்கு அதிபதிகளையும் தலைவரையும் காவலாளரையும் அழைப்பித்து, அவர்களைத் தன்னிடத்தில் கர்த்தருடைய ஆலயத்திலே வரச் சொல்லி, அவர்களோடு உடன்படிக்கை பண்ணி, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்திலே ஆணையிடுவித்துக் கொண்டு, அவர்களுக்கு ராஜாவின் குமாரனைக் காண்பித்து,

2இராஜா 11:5 அவர்களை நோக்கி: நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், ஓய்வுநாளில் முறைப்படி இங்கே வருகிற உங்களில் மூன்றில் ஒருபங்கு ராஜாவின் அரமனைக் காவல் காக்கவேண்டும்.

2இராஜா 11:6 மூன்றில் ஒருபங்கு சூர் என்னும் வாசலிலும், மூன்றில் ஒருபங்கு காவலாளரின் காவலின் பிறகே இருக்கிற வாசலிலுமிருந்து ஆலயக்காவலைப் பத்திரமாய்க் காக்கவேண்டும்.

2இராஜா 11:7 இப்படியே ஓய்வுநாளில் முறைப்படியே உங்களில் இரண்டுபங்கு பேர், ராஜாவினிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் காவல் காக்கவேண்டும்.

2இராஜா 11:8 நீங்கள் அவரவர் தங்கள் ஆயுதங்களைக் கையிலே பிடித்தவர்களாய், ராஜாவைச் சுற்றிலும் வரிசையாய் நின்று கொண்டிருக்க வேண்டும்; வரிசைகளுக்குள் புகுந்துவருகிறவன் கொலைசெய்யப் படக்கடவன்; ராஜா வெளியே போகும்போதும் உள்ளே வரும்போதும் நீங்கள் அவரோடே இருங்கள் என்றான்.

2இராஜா 11:9 ஆசாரியனாகிய யோய்தா கட்டளையிட்டபடியெல்லாம் நூறுபேருக்கு அதிபதிகள் செய்து, அவரவர் ஓய்வுநாளில் முறைப்படி வருகிறவர்களும் முறைப்படி போகிறவர்களுமாகிய தங்கள் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, ஆசாரியனாகிய யோய்தாவினிடத்தில் வந்தார்கள்.

2இராஜா 11:10 ஆசாரியன் கர்த்தரின் ஆலயத்தில் தாவீதுராஜா வைத்திருந்த ஈட்டிகளையும் கேடகங்களையும் நூறுபேருக்கு அதிபதிகளிடத்தில் கொடுத்தான்.

2இராஜா 11:11 காவலாளர் அவரவர் தங்கள் ஆயுதங்களைப் பிடித்தவர்களாய், ஆலயத்தின் வலதுபக்கம்தொடங்கி அதின் இடதுபக்கமட்டும், பலிபீடத்திற்கு எதிராகவும் ஆலயத்திற்கு எதிராகவும் ராஜாவைச் சுற்றிலும் நின்றார்கள்.

2இராஜா 11:12 அப்பொழுது அவன்: ராஜகுமாரனை வெளியே கொண்டுவந்து, கிரீடத்தை அவன்மேல் வைத்து, சாட்சியின் ஆகமத்தை அவன் கையிலே கொடுத்தான்; இப்படி அவனை ராஜாவாக்கி அபிஷேகம் பண்ணி: ராஜா வாழ்க என்று சொல்லி கைகொட்டினார்கள்.

யோவாசை ராஜாவாக்கி அபிஷேகம் பண்ணிய சம்பவம்

1. யோய்தா ராஜகுமாரனை வெளியே கொண்டுவந்தான்.

11 அதிகாரம்

2. கிரீடத்தை அவன்மேல் வைத்தான்.

3. சாட்சியின் ஆகமத்தை அவன் கையிலே கொடுத்தான். (யாத் 31:18; யாத் 32:15; யாத் 34:29)

4. அவனை ராஜாவாக அறிவித்தான்.

5. யோவாசை ராஜாவாக அபிஷேகம் பண்ணினான்.

6. ஜனங்கள் ராஜா வாழ்க என்று வாழ்த்தினார்கள்.

7. ஜனங்கள் ராஜாவைக் கைக்கொட்டி வாழ்த்தினார்கள்.

"சாட்சியின் ஆகமம்" **(testimony)** - யோவாசை ராஜாவாக அபிஷேகம் பண்ணும்போது, யோய்தா யோவாசின் கையில் மோசேயின் சாட்சியின் ஆகமத்தைக் கையில் கொடுக்கிறான். யோவாஸ் இதன் பிரகாரம் ஆட்சி புரிந்து, ஜனங்களை நியாயம் விசாரிக்க வேண்டும். (உபா 17:18). பத்துக் கற்பனைகள் "ஆகமம்" **"the testimony"** என்று அழைக்கப் படுகிறது. (யாத் 25:16,21; யாத் 27:21; யாத் 30:6; யாத் 31:18; யாத் 32:15; யாத் 34:29; யாத் 40:20.

(3) அத்தாலியாள் கொலைசெய்யப் படுகிறாள் - (2நாளா 23:12-15)

2இராஜா 11:13 ஓடிவருகிற ஜனங்கள் செய்த ஆரவாரத்தை அத்தாலியாள் கேட்டபோது: அவள் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஜனங்களிடத்தில் வந்து,

2இராஜா 11:14 இதோ, ராஜா முறைமையின்படியே தூணண்டையிலே நிற்கிறதையும், ராஜாவண்டையில் நிற்கிற பிரபுக்களையும், எக்காளம் ஊதுகிறவர்களையும், தேசத்து ஜனங்கள் எல்லாரும் சந்தோஷப்பட்டு எக்காளம் ஊதுகிறதையும் கண்டவுடனே, அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: துரோகம் துரோகம் என்று கூவினாள்.

2இராஜா 11:15 ஆசாரியனாகிய யோய்தா இராணுவத்தலைவராகிய நூறுபேருக்கு அதிபதிகளானவர் களுக்குக் கட்டளையிட்டு: இவளை வரிசைகளுக்குப் புறம்பே கொண்டுபோங்கள்; இவளைப் பின்பற்றுகிறவனைப் பட்டயத்தாலே வெட்டிப்போடுங்கள் என்றான். கர்த்தருடைய ஆலயத்தில் அவளைக் கொல்லலாகாது என்று ஆசாரியன் சொல்லியிருந்தான்.

2இராஜா 11:16 அவர்கள் அவளுக்கு இடம் உண்டாக்கினபோது, ராஜாவின் அரமனைக்குள் குதிரைகள் பிரவேசிக்கிற வழியிலே அவள் போகையில், அவளைக் கொன்று போட்டார்கள்.

"அவள் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஜனங்களிடத்தில் வந்து" - அத்தாலியாள் எதிர்பாராத சம்பவம் இங்கு நடைபெறுகிறது. ராஜவம்சத்தார் அனைவரையும் சங்காரம் பண்ணிவிட்டதாக அத்தாலியாள் நினைத்தாள். ஆனால் இங்கு யோவாஸ் உயிரோடு இருக்கிறான்.

"துரோகம் துரோகம்" - அத்தாலியாள் யோவாசையும், மற்ற பிரபுக்களையும், ஜனங்களையும் பார்த்தபோது, துரோகம், துரோகம் என்று கூவினாள். ஆனால் அத்தாலியாள் செய்த துரோகத்திற்கு இங்கு நீதி கிடைத்திருக்கிறது. (2இராஜா 11:1-2,15). தான் செய்த குற்றங்களுக்குத் தண்டனையாக அத்தாலியாள் கொல்லப்படுகிறாள். (2இராஜா 11:15-16) கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததற்காக அவள் நரகத்திலும் தண்டனை அனுபவிப்பாள்.

(4) யோய்தாவின் மூலமாக எழுப்புதல் - (2நாளா 23:16-21)

2இராஜா 11:17 அப்பொழுது யோய்தா, அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும் படிக்கு, ராஜாவும் ஜனங்களும் கர்த்தரோடே உடன்படிக்கைபண்ணவும், ராஜாவும் ஜனங்களும் ஒருவரோடொருவர் உடன்படிக்கைபண்ணவும் செய்து,

11 அதிகாரம்

2இராஜா 11:18 பின்பு தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் பாகாலின் கோவிலில் போய், அதை இடித்து, அதின் பலிபீடங்களையும் அதின் விக்கிரகங்களையும் முற்றிலும் உடைத்து, பாகாலின் பூஜாசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொன்று போட்டார்கள். ஆசாரியன் கர்த்தருடைய ஆலயத்தை விசாரிக்கும் உத்தியோகஸ்தரை ஏற்படுத்தினான்.

2இராஜா 11:19 நூறுபேருக்கு அதிபதிகளையும் தலைவரையும் காவலாளரையும் தேசத்தின் ஜனங்களையும் கூட்டி, ராஜாவைக் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து இறங்கப் பண்ணி, அவனைக் காவலாளரின் வாசல் வழியாய் ராஜ அரமனைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்; அங்கே அவன் ராஜாக்களுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தான்.

2இராஜா 11:20 தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் மகிழ்ந்து நகரம் அமைதலாயிற்று. அத்தாலியாளையோ ராஜாவின் அரமனையண்டையில் பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள்.

2இராஜா 11:21 யோவாஸ் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்தான்.

யோய்தாவின் காலத்தில் உயிர்மீட்சி

1. கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, ராஜாவும் ஜனங்களும் கர்த்தரோடே உடன்படிக்கை பண்ணினார்கள்.
2. ராஜாவும் ஜனங்களும் ஒருவரோடொருவர் உடன்படிக்கை பண்ணினார்கள்.
3. தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் பாகாலின் கோவிலை இடித்தார்கள். (2இராஜா 11:18)
4. பாகாலின் பலிபீடங்களை இடித்தார்கள்.
5. பாகாலின் விக்கிரகங்களை முற்றிலும் அழித்தார்கள்.
6. பாகாலின் பூஜாசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொன்று போட்டார்கள்.
7. கர்த்தருடைய ஆலயத்தை விசாரிக்கும் உத்தியோகஸ்தரை யோய்தா ஏற்படுத்தினான். (2இராஜா 11:18)
8. யோவாஸ் ராஜாக்களுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தான்.

"பாகாலின் கோவில்" - யோராமும், அத்தாலியாளும் இந்தக் கோவிலைக் கட்டினார்கள். (2நாளா 24:7).

"நகரம் அமைதலாயிற்று" - தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள். யோய்தாவின் காலத்தில் உண்டான உயிர்மீட்சியின் விளைவினால் நகரத்தில் சந்தோஷமும், சமாதானமும் உண்டாயிற்று.

"யோவாஸ்" **(Jehoash)** - இந்தப் பெயருக்கு "கர்த்தரால் கொடுக்கப்பட்டவர்" **"given by Jehovah"** என்று பொருள்.

"யோவாஸ்" என்னும் பெயரில் இரண்டு ராஜாக்கள்

1. அகசியாவின் குமாரன். யூதாவின் பதினொறாவது ராஜா. (2இராஜா 11:1-12:18; 2இராஜா 14:13); மறுபெயர் **"Joash"** (2இராஜா 11:2)
2. பத்துக் கோத்திரத்தாரின் பன்னிரண்டாவது ராஜா

"யோவாஸ் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்தான்" - இஸ்ரவேல் தேசத்தில் இவனே இளவயதில் ராஜாவானவன். நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான். இவனுடைய 47 ஆவது வயதில் இவனுடைய ஊழியக் காரர்கள் இவனைக் கொன்றுபோட்டார்கள். (2இராஜா 12:19-21).

14 அதிகாரம்

3. அமத்சியாவின் ஆட்சி - யூதாவின் எட்டாவது இராஜா - இருபத்தைந்து வருஷங்கள் - (2இராஜா 14:1-19)

(1) யூதாவின் நான்காவது நல்ல இராஜா - (2நாளா 25:1-4)

2இராஜா 14:1 இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாசின் குமாரன் யோவாசுடைய இரண்டாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியா ராஜாவானான்.

2இராஜா 14:2 அவன் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்; எருசலேம் நகரத்தாளான அவன் தாயின்பேர் யொவதானாள்.

2இராஜா 14:3 அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனாகிய தாவீதைப்போலல்ல; தன் தகப்பனாகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்தான்.

2இராஜா 14:4 மேடைகள்மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின் மேல் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தார்கள்.

2இராஜா 14:5 ராஜ்யபாரம் அவன் கையிலே ஸ்திரப்பட்ட போது, அவனுடைய தகப்பனாகிய ராஜாவைக் கொன்றுபோட்ட தன் ஊழியக்காரரைக் கொன்று போட்டான்.

2இராஜா 14:6 ஆனாலும் பிள்ளைகளினிமித்தம் பிதாக்கள் கொலை செய்யப்படாமலும் பிதாக்களினிமித்தம் பிள்ளைகள் கொலைசெய்யப்படாமலும், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்படவேண்டும் என்று மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் கட்டளையிட்டபிரகாரம் கொலை செய்தவர்களின் பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான்.

2இராஜா 14:7 அவன் உப்புப் பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பதினாயிரம்பேரை மடங்கடித்து, யுத்தஞ் செய்து சேலாவைப் பிடித்து, அதற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிற யொக்தியேல் என்னும் பேரைத் தரித்தான்.

"அமத்சியா ராஜாவானான்" - இவன் யூதாவின் ராஜா. 2இராஜா 13:10 ஆவது வசனத்தின்படி இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், யூதாவின் ராஜாவாகிய யோவாசின் 37 ஆம் வருஷத்தில் ராஜ்யபாரம் பண்ணினான் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக இவ்விரண்டு ராஜாக்களும் மூன்று வருஷங்களாக ஒரே காலத்தில் ஆட்சி புரிந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

"ஆனாலும் தன் தகப்பனாகிய தாவீதைப் போலல்ல" - ராஜாக்கள் புஸ்தகத்திலும், நாளாகமம் புஸ்தகத்திலும் ராஜாக்கள் அனைவரும் தாவீதோடு ஒப்பிடப் பட்டிருக்கிறார்கள். தேவனுடைய பார்வையில் அவர்கள் தாவீதைப் போன்று இருந்தார்களா என்னும் ஒரு வாக்கியம் ஒவ்வொரு ராஜாவைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. (2இராஜா 16:2; 2இராஜா 18:3; 2இராஜா 22:2; 1இராஜா 3:14; 1இராஜா 11:6,33,38; 1இராஜா 14:8; 1இராஜா 15:3,6; 2நாளா 7:17; 2நாளா 28:1; 2நாளா 29:2; 2நாளா 34:2). மனுஷன் பாவங்களையும், தோல்வியையுமே பார்ப்பான். ஆனால் கர்த்தரோ தாவீதின் உண்மையான சுபாவத்தையும், உண்மையுள்ள இருதயத்தையும் பார்க்கிறார். விக்கிரகாராதனையிலிருந்து விலகி ஜீவித்து, தாவீது கர்த்தரையே ஆராதித்தான். கர்த்தருக்கு ஏற்ற இருதயம் தாவீதிடம் இருந்தது.

14 அதிகாரம்

"ராஜ்யபாரம் அவன் கையிலே ஸ்திரப்பட்ட போது" - தன்னுடைய தகப்பனைக் கொலை செய்தவர்களை உடனடியாகப் பழிவாங்காமல், அமத்சியா பொறுமையோடும், ஞானத்தோடும் காத்திருக்கிறான். பிள்ளைகளினிமித்தம் பிதாக்கள் கொலைசெய்யப்படாமலும் பிதாக்களினிமித்தம் பிள்ளைகள் கொலை செய்யப்படாமலும், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப் படவேண்டும் என்னும் மோசேயின் பிரமாணத்தை அமத்சியா கடைப்பிடிக்கிறான். தன்னுடைய தகப்பனாகிய ராஜாவைக் கொன்றுபோட்ட தன் ஊழியக்காரரை மட்டுமே அமத்சியா கொன்றுபோட்டான். கொலை செய்தவர்களின் பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான். (2இராஜா 14:5-6).

"மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி" - (உபா 24:16; எசே 18:4-20)

"உப்புப்பள்ளத்தாக்கு" **(valley of salt)** - சவக்கடலின் தெற்குக் கடைசியில் உள்ள பள்ளத்தாக்கு. இதன் வடமேற்கு மூலையில் உப்பு மலை உள்ளது. இந்த மலைக்கும், கடலுக்கும் நடுவில் உப்புத்தண்ணீர் ஊற்றுக்கள் உள்ளன.

"ஏதோமியரில் பதினாயிரம்பேரை மடங்கடித்து" - (2நாளா 25:5-11)

"சேலா" **(Selah)** - இது ஏதோமின் தலைநகரம். கற்பாறைகள் மிகுந்த இடம். பொதுவாக இதன் பாறை அமைப்புகளால் இதன் அருகில் போவதே சிரமமாயிருக்கும். ஆனாலும் அமத்சியா இந்தச் சேலாவைப் பிடித்து, இதற்கு யொக்தியேல் **(Joktheel)** என்னும் பெயரைத் தரித்தான். இந்தப் பெயருக்கு "தேவனால் அடக்கப்பட்டிருக்கிறது" **"subdued by God"** என்று பொருள். தனக்கு ஜெயத்தைத் தந்த கர்த்தரை அமத்சியா மேன்மைப்படுத்தினான்.

(2) இஸ்ரவேலின் யோவாகாஸோடு யுத்தம் - உள்நாட்டு குழப்பம் - (2நாளா 25:5-25; 2இராஜா 25:25)

2இராஜா 14:8 அப்பொழுது அமத்சியா யெகூவின் குமாரனாகிய யோவாகாசின் குமாரன் யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி: நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா என்று சொல்லச்சொன்னான்.

2இராஜா 14:9 அதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கு ஆள் அனுப்பி: லீபனோனிலுள்ள முட்செடியானது, லீபனோனிலுள்ள கேதுரு மரத்தை நோக்கி, நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ் செய்துகொடு என்று சொல்லச் சொல்லிற்று; ஆனாலும் லீபனோனிலுள்ள ஒரு காட்டுமிருகம் அந்த வழி போகையில் ஓடி அந்த முட்செடியை மிதித்துப்போட்டது.

2இராஜா 14:10 நீ ஏதோமியரை முறிய அடித்ததினால் உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப்பண்ணினது; நீ பெருமைபாராட்டிக் கொண்டு உன் வீட்டிலே இரு; நீயும் உன்னோடேகூட யூதாவும் விழும்படிக்கு, பொல்லாப்பைத் தேடிக்கொள்வானேன் என்று சொல்லச் சொன்னான்.

2இராஜா 14:11 ஆனாலும் அமத்சியா செவிகொடாதேபோனான்; ஆகையால் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் வந்தான்; யூதாவிலுள்ள பெத்ஷிமேசிலே அவனும், யூதாவின் ராஜா அமத்சியாவும், தங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கிறபோது,

2இராஜா 14:12 யூதா ஜனங்கள் இஸ்ரவேலருக்கு முன்பாக முறிந்து அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

14 அதிகாரம்

2இராஜா 14:13 அகசியாவின் குமாரனாகிய யோவாசின் குமாரன் அமத்சியா என்னும் யூதாவின் ராஜாவையோ, இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் பெத்ஷிமேசிலே பிடித்து, எருசலேமுக்கு வந்து, எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல் தொடங்கி மூலைவாசல்மட்டும் நானூறு முழ நீளம் இடித்துப்போட்டு,

2இராஜா 14:14 கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட பொன் வெள்ளி யாவையும், சகல பணி முட்டுகளையும், கிரியிருப்பவர்களையும் பிடித்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப்போனான்.

"யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி" - ஏதோமின்மீது வெற்றி பெற்றதினால் அமத்சியாவிற்குப் பெருமை உண்டாயிற்று. வடக்கு ராஜ்யத்தில் தனக்கு இணையானவன் யாருமில்லை என்று அமத்சியா பெருமைப் பட்டான். ஆனால் யோவாஸ் இவனை முறியடித்தான். எருசலேமின் அலங்கத்தை உடைத்துப் போட்டான். தேவாலயத்தைக் கொள்ளையிட்டு, சமாரியாவிற்கு எடுத்துக் கொண்டு போய்விட்டான். (2இராஜா 14:8-14). அமத்சியா பெருமைப்படாமல் அமைதியாக இருந்திருந்தால், அவனுக்கு இந்தப் பேரிழப்பு ஏற்பட்டிருக்காது.

"நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா" - இது எபிரெயரின் வழக்குச் சொல். பட்டயங்களை எடுத்து நேருக்கு நேர் யுத்தம் பண்ணி நமக்குள் யார் பலவான் என்பதை உறுதிபண்ணுவோம் என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும்.

"லீபனோனிலுள்ள முட்செடியானது, லீபனோனிலுள்ள கேதுருமரத்தை நோக்கி" - இதுபோன்ற உவமை நியா 9:8 ஆவது வசனத்திலும் உள்ளது.

"உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப் பண்ணினது" - அமத்சியா ஏதோமியரை முறியடித்ததினால், அவனுடைய இருதயம் அவனைக் கர்வங்கொள்ளப் பண்ணிற்று. "அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி 16:18)

"பெத்ஷிமேஸ்" **(Beth-shemesh)** - இந்தப் பெயருக்கு "சூரியனின் வீடு" **"house of the sun'** என்று பொருள். இது யூதாவுக்கும், தாணுக்கும் இடையிலுள்ள எல்லைப் பட்டணமாகும். எருசலேமிற்கு மேற்கே 15 மைல் தூரத்திலுள்ளது. (யோசு 15:10). இது ஆசாரியரின் பட்டணமாக இருந்தது. (யோசு 21:9-16) ஆனாலும் பிற்காலத்தில் இங்கு விக்கிரகாராதனை நிறைந்திருந்தது. (எரே 43:13).

"தங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கிறபோது" - யுத்தம் பண்ணினார்கள். (2இராஜா 14:8,11)

"எருசலேமின் அலங்கத்திலே...... இடித்துப் போட்டு" - யோவாஸ் எருசலேமின் அலங்கத்தை இடித்துப் போட்டான். எப்பிராயீம் வாசல் தொடங்கி மூலைவாசல்மட்டும் நானூறு முழ நீளத்துக்கு அதாவது 600 அடி நீளத்துக்கு அலங்கத்தை இடித்துப்போட்டு விட்டான். பட்டணம் பாதுகாப்பில்லாமல் இருக்கிறது. யோவாசின் அனுமதியில்லாமல் அமத்சியா எருசலேமின் அலங்கத்தை மறுபடியும் கட்ட முடியாது.

"எப்பிராயீம் வாசல்" **(gate of Ephraim)** - அலங்கத்திலுள்ள வாசல்கள் வழியாக ஒவ்வொரு ஊருக்கும் போகலாம். அதன் அடிப்படையில் அந்தந்த வாசலுக்குப் பெயர்சூட்டப்பட்டிருக்கும். எப்பிராயீம் வாசல் என்பது அந்த வாசல்வழியாக எப்பிராயீம் பட்டணத்துக்குப் போகலாம். பென்யமீன் வாசல் என்பது பென்யமீன் பட்டணத்துக்குப் போகும் வழியாகும். (எரே 37:13; சக 14:10).

"கிரியிருப்பவர்களையும் பிடித்துக் கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப்போனான்" - இந்த வசனத்திலும், 2நாளா 25:24 ஆவது வசனத்திலும், மனுஷரை அடிமையாகப் பிடித்துக் கொண்டு போவது பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் தோல்வி பெற்றவர்களை அவமானப்படுத்துவார்கள்.

14 அதிகாரம்

அவர்கள் மறுபடியும் யுத்தம் பண்ண எழும்ப முடியாதபடி அவர்களுடைய யுத்த ஆயுதங்களையெல்லாம் அழித்துப்போடுவார்கள். யுத்தம் பண்ணும் மனுஷரையும் கொன்றுபோடுவார்கள். அல்லது அடிமைகளாக்கிவிடுவார்கள். யூதாவின் ராஜாவாகிய அமத்சியா பெருமைப்படாமல், அமைதியாக இருந்திருந்தால், அவனுக்கு இந்த இழப்பு ஏற்பட்டிருக்காது. யூதா யுத்தத்தில் தோல்வியுற்றது. எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டு விட்டது. அரமனை பொக்கிஷங்களும், ஆலயத்திலுள்ள பொன்னும், வெள்ளியும், பணிமுட்டுகளும் எல்லாம் சமாரியாவுக்குப் போய்விட்டது.

(3) யோவாகாசின் மரணம் - (13:1-25)

2இராஜா 14:15 யோவாஸ் செய்த மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய வல்லமையும், அவன் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவோடு யுத்தம் பண்ணின விதமும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 14:16 யோவாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், சமாரியாவில் இஸ்ரவேலின் ராஜாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய யெரொபெயாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"யெரொபெயாம்" - இவன் இரண்டாம் யெரொபெயாம் ஆவான். வடக்கு ராஜ்யத்தின் 13 ஆவது ராஜா.

(4) அமத்சியாவின் மரணம் - அசரியா அல்லது உசியா இராஜாவானான் - (2இராஜா 15:1-7)

2இராஜா 14:17 இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாசின் குமாரன் யோவாஸ் மரணமடைந்தபின், யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியா பதினைந்துவருஷம் உயிரோடிருந்தான்.

2இராஜா 14:18 அமத்சியாவின் மற்ற வர்த்தமானங்கள் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 14:19 எருசலேமிலே அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணினார்கள்; அப்பொழுது லாகீசுக்கு ஓடிப்போனான்; ஆனாலும் அவர்கள் அவன் பிறகே லாகீசுக்கு மனுஷரை அனுப்பி, அங்கே அவனைக் கொன்று போட்டு,

2இராஜா 14:20 குதிரைகள்மேல் அவனை எடுத்துக் கொண்டுவந்தார்கள்; அவன் எருசலேமில் இருக்கிற தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

2இராஜா 14:21 யூதா ஜனங்கள் யாவரும் பதினாறு வயதுள்ள அசரியாவை அழைத்துவந்து அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள்.

2இராஜா 14:22 ராஜா தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின்பு, இவன் ஏலாதைக்கட்டி, அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக் கொண்டான்.

"அமத்சியாவின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 25)

"அசரியா" **(Azariah)** - இந்தப் பெயருக்கு "கர்த்தர் உதவி புரிந்திருக்கிறார்" **"Jehovah has helped"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அசரியா"க்கள்

1. சவுலின் காலத்திலிருந்து இஸ்ரவேலில் ஆட்சி புரிந்த 13 ஆவது ராஜா. இஸ்ரவேல் ராஜ்யம் பிளவுண்ட பின்பு, யூதாவின் பத்தாவது ராஜா. (2இராஜா 14:21-15:7); மறுபெயர் உசியா **(Uzziah)** (2நாளா 26; ஏசா 1:1; சக 14:5)
2. சாதோக்கின் குமாரன் (1இராஜா 4:2)
3. நாத்தானின் குமாரன் (1இராஜா 4:5)

II இராஜாக்கள் - தொகுப்புரை

14 அதிகாரம்

4. யூதா கோத்திரத்தான் (1நாளா 2:8)

5. யெகூவின் குமாரன் (1நாளா 2:38-39)

6. சாதோக்கின் பௌத்திரன் (1நாளா 6:9)

7. யோகனானின் குமாரன் (1நாளா 6:10-11)

8. இல்க்கியாவின் குமாரன் (1நாளா 6:13-14; 1நாளா 9:11)

9. ஒரு லேவியன் (1நாளா 6:36)

10. ஒரு தீர்க்கதரிசி (2நாளா 15:1)

11. யோசபாத்தின் குமாரன் (2நாளா 21:2)

12. யோசபாத்தின் மற்றொரு குமாரன் (2நாளா 21:2)

13. யோராமின் குமாரன் (2நாளா 22:6; 2நாளா 23:1)

14. ஒபேத்தின் குமாரன் (2நாளா 23:1)

15. பிரதான ஆசாரியன் (2நாளா 26:17,20)

16. யோகனானின் குமாரன் (2நாளா 28:12)

17. யோவேலின் தகப்பன் (2நாளா 29:12)

18. எசேக்கியாவின் கீழிருந்த லேவியன் (2நாளா 29:12)

19. பிரதான ஆசாரியன் (2நாளா 31:10,13)

20. மெராயோத்தின் குமாரன் (எஸ்றா 7:3)

21. மாசேயாவின் குமாரன் (நெகே 3:23-24)

22. சிறையிருப்புக்குப் போனவன் (நெகே 7:7)

23. ஓர் ஆசாரியன் (நெகே 8:7; நெகே 10:2)

24. யூதாவின் பிரபுக்களில் ஒருவன் (நெகே 12:33)

25. ஒசாயாவின் குமாரன் (நெகே 12:32)

26. எபிரெயரில் ஓர் அடிமை (தானி 1:6-19; தானி 2:17)

"ஏலாத்" (Elath) - செங்கடலில் உள்ளது. (2இராஜா 16:6).

4. இரண்டாம் யெரொபெயாமின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினான்காவது இராஜா - நாற்பத்தொரு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும்

2இராஜா 14:23 யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியாவின் பதினைந்தாம் வருஷத்தில், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் யெரொபெயாம் ராஜாவாகி சமாரியாவில் நாற்பத்தொரு வருஷம் அரசாண்டு,

2இராஜா 14:24 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்கள் ஒன்றையும் அவன் விட்டு விலகவில்லை.

"யெரொபெயாமின் பாவங்கள்" - யெரொபெயாம் ஆட்சி புரிந்து 166 வருஷங்களுக்குப் பின்பும் அவனுடைய விக்கிரகாராதனைப் பாவம் தொடர்கிறது.

(2) யோனாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது - பதினைந்தாவது சீரிய யுத்தம் - (2இராஜா 16:5)

2இராஜா 14:25 காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரன் யோனா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு இஸ்ரவேலின் தேவனாகிய

14 அதிகாரம்

கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின் படியே, அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல் மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக்கொண்டான்.

2இராஜா 14:26 இஸ்ரவேலின் உபத்திரவம் மிகவும் கொடிது என்றும், அடைபட்டவனுமில்லை, விடுபட்டவனுமில்லை, இஸ்ரவேலுக்கு ஒத்தாசை செய்கிறவனுமில்லை என்றும் கர்த்தர் பார்த்தார்.

2இராஜா 14:27 இஸ்ரவேலின் பேரை வானத்தின் கீழிருந்து கொலைத்துப் போடுவேன் என்று கர்த்தர் சொல்லாமல், யோவாசின் குமாரனாகிய யெரொபெயாமின் கையால் அவர்களை ரட்சித்தார்.

"யோனா" **(Jonah)** - யோனா புஸ்தகத்தின் ஆசிரியர். இவர் ஒரு கற்பனை பாத்திரம் அல்ல. வரலாற்றில் இடம் பெற்றிருக்கிற நபர். (மத் 12:39-40).

தீர்க்கதரிசன எண் - 17

"அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல்மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக்கொண்டான்" (2இராஜா 14:25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இஸ்ரவேலின் எல்லைகளைக் கர்த்தர் மீட்டுத்தருவார் என்று யோனா முன்னுரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இஸ்ரவேலின் பேரை வானத்தின் கீழிருந்து கொலைத்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லாமல்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை முழுவதுமாக அழித்துப்போடவில்லை. அவர்களில் ஒரு கூட்டத்தினரைக் கர்த்தர் தமக்காக இரட்சித்திருக்கிறார்.

(3) இரண்டாம் யெரொபெயாமின் மரணம் - சகரியா இராஜாவானான் - (15:8-12)

2இராஜா 14:28 யெரொபெயாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், அவன் யுத்தம்பண்ணி, யூதாவுக்கு இருந்த தமஸ்குவையும் ஆமாத்தையும் இஸ்ரவேலுக்காகத் திரும்பச் சேர்த்துக் கொண்ட அவனுடைய வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 14:29 யெரொபெயாம் இஸ்ரவேலின் ராஜாக்களாகிய தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய சகரியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"தமஸ்குவையும் ஆமாத்தையும் இஸ்ரவேலுக்காகத் திரும்பச் சேர்த்துக்கொண்ட அவனுடைய வல்லமை" - இவ்விரண்டு பட்டணங்களும் தாவீதின் ராஜ்யத்திலும், சாலொமோனின் ராஜ்யத்திலும் இருந்தன. (1இராஜா 4:21). ரேத்சீன் தமஸ்குவைக் கைப்பற்றினான். (2இராஜா 16:5-18; ஏசா 7:1-9).

"சகரியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" - அசரியாவின் 38 ஆவது வருஷ ராஜ்யபாரத்தில் சகரியா வடக்கு ராஜ்யத்தின்மீது ராஜாவானான். இவன் 6 மாதங்கள் ஆட்சி புரிந்தான். (2இராஜா 15:18).

II இராஜாக்கள் - தொகுப்புரை

15 அதிகாரம்

5. அசரியா அல்லது உசியாவின் ஆட்சி - யூதாவின் ஒன்பதாவது இராஜா - ஐம்பத்திரண்டு வருஷங்கள் - *(14:20-22; 2நாளா 26)*

(1) யூதாவின் ஐந்தாவது நல்ல இராஜா - *(2நாளா 26:1-5)*

2இராஜா 15:1 இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் இருபத்தேழாம் வருஷத்தில், யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவின் குமாரன் அசரியா ராஜாவானான்.

2இராஜா 15:2 அவன் ராஜாவாகிறபோது பதினாறு வயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; எருசலேம் நகரத்தாளான அவன் தாயின் பேர் எக்கோலியாள்.

2இராஜா 15:3 அவன் தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

2இராஜா 15:4 மேடைகள்மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகள் மேல் பலியிட்டுத் தூபங் காட்டிவந்தார்கள்.

"கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" - இவனுடைய ஆரம்பம் நன்றாக இருந்தது. ஆனாலும் இவனுடைய பாவத்தின் நிமித்தம் கடைசியில் இவன் குஷ்டரோகியானான். *(2நாளா 26:3-23)*.

(2) உசியாவின் குஷ்டரோகம் - *(2நாளா 26:6-21; சக 14:5)*

2இராஜா 15:5 கர்த்தர் இந்த ராஜாவை வாதித்ததினால், அவன் தன் மரணநாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்து, தனித்து ஒரு வீட்டிலே வாசம் பண்ணினான்; ராஜாவின் குமாரனாகிய யோதாம் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரித்தான்.

"கர்த்தர் இந்த ராஜாவை வாதித்ததினால், அவன் தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகி யாயிருந்து" - கர்த்தர் அசரியாவைக் குஷ்டரோகத்தால் வாதித்ததற்கான காரணம் 2நாளா 26:16-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

(3) உசியாவின் மரணம் - யோதாம் இராஜாவானான் - *(2நாளா 26:22-23)*

2இராஜா 15:6 அசரியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 15:7 அசரியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்திலே அவன் பிதாக்களண்டையிலே அடக்கம் பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய யோதாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"அசரியாவின் மற்ற வர்த்தமானங்கள்" - *(2நாளா 26)* ஏசாயா, ஓசியா, யோவேல், ஆமோஸ், யோனா, மீகா ஆகிய புஸ்தகங்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன.

6. சகரியாவின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினைந்தாவது இராஜா - ஆறு மாதங்கள் - *(14:28-29)*

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும்

2இராஜா 15:8 யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் முப்பத்தெட்டாம் வருஷத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய சகரியா இஸ்ரவேலின்மேல் சமாரியாவிலே ஆறுமாதம் ராஜ்யபாரம் பண்ணி,

2இராஜா 15:9 தன் பிதாக்கள் செய்தது போல, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை அவன் விட்டு விலகவில்லை.

15 அதிகாரம்

(2) சகரியாவின் மரணம் - தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் - (2இராஜா 25:25)

2இராஜா 15:10 யாபேசின் குமாரனாகிய சல்லூம் அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணி, ஜனத்தின் முன்பாக அவனை வெட்டிக் கொன்றுபோட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

2இராஜா 15:11 சகரியாவின் மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 15:12 உன் குமாரர் நாலாம் தலைமுறைமட்டும் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்கள் என்று கர்த்தர் யெகூவோடே சொன்ன வார்த்தை இதுதான்; அப்படியே ஆயிற்று.

"உன் குமாரர் நாலாம் தலைமுறைமட்டும் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்கள்" - யெகூவுக்குக் கூறப் பட்டிருக்கிற தீர்க்கதரிசனம் இங்கு மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. (2இராஜா 10:30) சகரியாவின் மரணத்தோடு இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவு பெறுகிறது. சகரியா யெகூவின் நான்காம் சந்ததியில் வருகிறான். (2இராஜா 10:29)

7 சல்லூமின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினாறாவது இராஜா - ஒரு மாதம் - உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

2இராஜா 15:13 யூதாவின் ராஜாவாகிய உசியாவின் முப்பத்தொன்பதாம் வருஷத்தில் யாபேசின் குமாரனாகிய சல்லூம் ராஜாவாகி, சமாரியாவில் ஒரு மாதம் அரசாண்டான்.

2இராஜா 15:14 காதியின் குமாரனாகிய மெனாகேம் திர்சாவிலிருந்து சமாரியாவுக்கு வந்து, யாபேசின் குமாரனாகிய சல்லூமைச் சமாரியாவிலே வெட்டிக் கொன்றுபோட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

2இராஜா 15:15 சல்லூமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்த கட்டுப்பாடும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"திர்சா" (Tirzah) - பத்துக் கோத்திரத்தாரின் வடக்கு ராஜ்யத்திற்குத் திர்சா ஆரம்பத்தில் தலைநகரமாக இருந்தது. இந்த ஊரில் மெனாகேம் பிறந்தபடியினால், இந்த ஊர் மறுபடியும் முக்கியத்துவம் பெறுகிறது. மெனாகேமின் மரணத்திற்குப் பின்பு அவன் குமாரனாகிய பெக்காகியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். (2இராஜா 15:22).

8. மெனாகேமின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினேழாவது இராஜா - பத்து வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும் - உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

2இராஜா 15:16 அப்பொழுது மெனாகேம் திப்சா பட்டணத்தையும், அதிலுள்ள யாவையும், திர்சாதொடங்கி அதின் எல்லைகளையும் முறிய அடித்தான்; அவர்கள் தனக்கு வாசலைத் திறக்கவில்லை என்று அவர்களை வெட்டி, அவர்களுடைய கர்ப்பவதிகளையெல்லாம் கீறிப்போட்டான்.

2இராஜா 15:17 யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் முப்பத்தொன்பதாம் வருஷத்தில், காதியின் குமாரனாகிய மெனாகேம் இஸ்ரவேல்மேல் ராஜாவாகி சமாரியாவிலே பத்துவருஷம் ராஜ்யபாரம் பண்ணி, அவன் தன் நாட்களிலெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2இராஜா 15:18 இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை விட்டு விலகாதிருந்தான்.

"மெனாகேம் திப்சா பட்டணத்தை ...... முறிய அடித்தான்" - மெனாகேம் கொலைபண்ணி, கலகம்பண்ணி, ராஜ்யத்திற்கு வந்தவன். மெனாகேமைப் பற்றிய வர்த்தமானங்கள் 2இராஜா 15:14-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

15 அதிகாரம்

(2) இஸ்ரவேலின்மீது அசீரியாவின் முதலாவது படையெடுப்பு - (வசனம் 29; 16:7-18; 17:3-41; 18:13; 2நாளா 33:11-13)

2இராஜா 15:19 அசீரியாவின் ராஜாவாகிய பூல், தேசத்திற்கு விரோதமாய் வந்தான்; அப்பொழுது மெனாகேம் பூலின் உதவியினால் ராஜ்யபாரத்தை தன் கையில் பலப்படுத்தும்பொருட்டு, அவனுக்கு ஆயிரம் தாலந்து வெள்ளி கொடுத்தான்.

2இராஜா 15:20 இந்தப் பணத்தை அசீரியாவின் ராஜாவுக்குக் கொடுக்கும் படி, மெனாகேம் இஸ்ரவேலில் பலத்த ஐசுவரியவான்களிடத்தில் ஆள் ஒன்றிற்கு ஐம்பது வெள்ளிச் சேக்கல் தண்டினான்; அப்படியே அசீரியாவின் ராஜா தேசத்திலே நிற்காமல் திரும்பிப் போனான்.

"அசீரியாவின் ராஜாவாகிய பூல்" (Pul) - அசீரியரின் கல்வெட்டுகளில் பூலின் பெயர் காணப்படவில்லை. இவனும் திகிலாத்-பிலேசரும் (Tiglath-pileser) ஒரே நபர் என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால் 1நாளா 5:26 ஆவது வசனத்தில் இவ்விருவரும் தனித்தனியாகக் கூறப்பட்டிருக்கிறார்கள்.

"அசீரியாவின் ராஜாவாகிய பூல், தேசத்திற்கு விரோதமாய் வந்தான்" - முதல் முறையாக அசீரியரின் படையெடுப்பைக் குறித்து, இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. சுமார் 100 ஆண்டு காலமாக அசீரியர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு ஐபிராத்து நதி வரையிலும் வந்துவிடுகிறார்கள். இதன் பின்பு, இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு அசீரியரோடும், பாபிலோனியரோடும் சேர்த்தே கூறப் பட்டிருக்கிறது. அசீரியர்கள் இஸ்ரவேல்மீது ஏழுமுறை யுத்தம் பண்ணியிருக்கிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு:

1. பூலின் படையெடுப்பு (2இராஜா 15:19-20)
2. திகிலாத்-பிலேசரின் படையெடுப்பு (2இராஜா 15:29)
3. திகிலாத்-பிலேசரின் இரண்டாம் படையெடுப்பு (2இராஜா 15:29; 2இராஜா 16:7-18)
4. சல்மனாசாரின் படையெடுப்பு (2இராஜா 17:3)
5. சல்மனாசாரின் இரண்டாம் படையெடுப்பு. இதில் வடக்கு இஸ்ரவேல் ராஜ்யம் முழுவதுமாக அழிந்தது. (2இராஜா 17:4-41)
6. யூதாவுக்கு எதிராக சனகெரிப்பின் படையெடுப்பு (2இராஜா 18:13-19:35; 2நாளா 32; ஏசா 37:38)
7. மனாசே பாபிலோனுக்கு சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டபோது, அசீரியரின் படையெடுப்பு (2நாளா 33:11-13)

"தன் கையில் பலப்படுத்தும்பொருட்டு" - மெனாகேம் தன் ராஜ்யபாரத்தைப் பலப்படுத்த விரும்பினான். இதற்காக அசீரியாவின் ராஜாவாகிய பூலின் உதவியை நாடினான். இதற்கு மெனாகேம் பூலுக்கு ஆயிரம் தாலந்து வெள்ளி கொடுத்தான். யூதாவின் ராஜாக்கள் இதுபோல அந்நிய தேசத்தாரின் உதவியினால் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ள முயற்சி செய்திருக்கிறார்கள். (2இராஜா 15:19-20; 2இராஜா 12:18; 2இராஜா 16:8; 2இராஜா 18:15).

(3) மெனாகேமின் மரணம் - பெக்காகியா இராஜாவானான்

2இராஜா 15:21 மெனாகேமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 15:22 மெனாகேம் தன் பிதாக்களோடு நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய பெக்காகியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

15 அதிகாரம்

"அவன் குமாரனாகிய பெக்காகியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" - கடைசி ஐந்து ராஜாக்களில் இவன் மட்டுமே தன் தகப்பனுடைய ஸ்தானத்தில் ராஜாவானவன். மற்றவர்கள் எல்லாம் யாரையாவது கொலைசெய்து விட்டு, சிங்காசனத்தில் அமர்ந்தவர்கள். (2இராஜா 15:10,14,22, 25,30).

9. பெக்காகியாவின் ஆட்சி - இஸ்ரவேலின் பதினெட்டாவது இராஜா - இரண்டு வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும்

2இராஜா 15:23 யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் ஐம்பதாம் வருஷத்தில், மெனாகேமின் குமாரனாகிய பெக்காகியா இஸ்ரவேலின் மேல் ராஜாவாகி சமாரியாவிலே இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணி,

2இராஜா 15:24 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை விட்டு விலகவில்லை.

(2) பெக்காகியாவின் மரணம் - உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

2இராஜா 15:25 ஆனாலும் ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா என்னும் அவனுடைய சேர்வைக்காரன் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு பண்ணி, கீலேயாத் புத்திரரில் ஐம்பது பேரைக் கூட்டிக்கொண்டு, அவனையும் அர்கோபையும் ஆரியேயையும் ராஜாவின் வீடாகிய அரமனையிலே சமாரியாவில் வெட்டிக் கொன்றுபோட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

2இராஜா 15:26 பெக்காகியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"பெக்காகியாவின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 28:5-15)

"இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகம்" - (2இராஜா 15:21)

10. பெக்காவின் ஆட்சி - இஸ்ரவேலின் பத்தொன்பதாவது இராஜா - இருபது வருஷங்கள்

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும்

2இராஜா 15:27 யூதாவின் ராஜாவாகிய அசரியாவின் ஐம்பத்திரண்டாம் வருஷத்தில், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி சமாரியாவிலே இருபதுவருஷம் ராஜ்யபாரம்பண்ணி,

2இராஜா 15:28 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை அவன் விட்டு விலகவில்லை.

"பெக்கா இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி சமாரியாவிலே இருபதுவருஷம் ராஜ்யபாரம் பண்ணி" - அசீரியருடைய கல்வெட்டுகளில் பெக்கா நான்கு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான் என்று எழுதப்பட்டிருக்கிறது. தோல்சுருளில் எழுதப்பட்டிருப்பதைவிட கல்லில் எழுதப்பட்டிருப்பது உறுதியானது, நிலைத்து நிற்கக்கூடியது. ஆனாலும் கல்வெட்டுக்களிலும், பிழைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. பெக்காவின் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது அவன் சமாரியாவில் 20 வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான் என்று கூறுவதே பொருத்தமாக உள்ளது.

15 அதிகாரம்

(2) இஸ்ரவேலின்மீது அசீரியாவின் இரண்டாவது படையெடுப்பு - (வசனம் 19)

2இராஜா 15:29 இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவின் நாட்களில் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத் பிலேசர் வந்து, ஈயோனையும், பெத்மாக்கா என்னும் ஆபேலையும், யனோவாகையும், கேதேசையும், ஆத்சோரையும், கீலேயாத்தையும், கலிலேயாவாகிய நப்தலி தேசமனைத்தையும் பிடித்து, குடிகளைச் சிறையாக அசீரியாவுக்குக் கொண்டு போனான்.

"திகிலாத்பிலேசர்" (Tiglath-pileser) - (2இராஜா 15:19)

"ஈயோனையும், பெத்மாக்கா என்னும் ஆபேலையும், யனோவா கையும், கேதேசையும், ஆத்சோரையும், கீலேயாத்தையும், கலிலேயாவாகிய நப்தலி தேசமனைத்தையும் பிடித்து" - திகிலாத்பிலேசரின் கல்வெட்டுக்களில் இந்தப் பெயர்கள் எல்லாமே காணப்படுகிறது.

"குடிகளைச் சிறையாக அசீரியாவுக்குக் கொண்டுபோனான்" - முதல் முறையாக இஸ்ரவேல் புத்திரர்கள் அசீரியரின் சிறையிருப்புக்குப் போகிறார்கள். இவர்களுடைய சிறையிருப்பு தொடர்கிறது. முடிவில் வடக்கு ராஜ்யம் முழுவதுமாக அழிக்கப்படுகிறது. (2இராஜா 17). இதன் பின்பு, மனாசேயின் நாட்களில் அசீரியர்கள் யூதாவிலிருந்தும் சிலரைச் சிறைப்பிடித்துச் சென்றார்கள். (2நாளா 33:11-13). இவற்றிற்குப் பின்பு, யோயாக்கீன், சிதேக்கியா ஆகியோருடைய நாட்களில் யூதாவின்குடிகள் அனைவரும் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டார்கள். (2இராஜா 24-25, ஏசா 9:1-2)

(3) பெக்காவின் மரணம் - ஓசெயா இராஜாவானான் - உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 17; 25:25)

2இராஜா 15:30 ஏலாவின் குமாரனாகிய ஓசெயா ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவுக்கு விரோதமாய் கட்டுப்பாடு பண்ணி, அவனை உசியாவின் குமாரனாகிய யோதாமின் இருபதாம் வருஷத்தில் வெட்டிக்கொன்றுபோட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

2இராஜா 15:31 பெக்காவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"யோதாமின் இருபதாம் வருஷத்தில்" - இவனுடைய இருபதாம் வருஷம் இவனுடைய தகப்பன் உசியா குஷ்டரோகத்தில் வியாதியாகப் படுத்த நாளிலிருந்து ஆரம்பமாகிறது. (2இராஜா 15:5) யோதாம் உசியாவோடு நான்கு வருஷங்களும், உசியாவின் மரணத்திற்குப் பின்பு தானே தனியாக 16 வருஷங்களும் ராஜ்யபாரம் பண்ணினான். (2இராஜா15:30,33).

"பெக்காவின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 28:5-15)

"இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகம்" - (2இராஜா 15:21)

VII. யூதாவின் இராஜாக்கள் - (15:32-16:20)

1. யோதாமின் ஆட்சி - யூதாவின் பதினொராவது இராஜா - பதினாறு வருஷங்கள்

(1) யூதாவின் ஆறாவது நல்ல இராஜா - (2நாளா 27)

2இராஜா 15:32 இஸ்ரவேலின் ராஜாவாகிய ரெமலியாவின் குமாரன் பெக்காவின் இரண்டாம் வருஷத்தில், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் குமாரன் யோதாம் ராஜாவானான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

15 அதிகாரம்

2இராஜா 15:33 அவன் ராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே பதினாறுவருஷம் அரசாண்டான்; சாதோக்கின் குமாரத்தியாகிய அவன் தாயின் பேர் எருசாள்.

2இராஜா 15:34 அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; தன் தகப்பனாகிய உசியா செய்தபடியெல்லாம் செய்தான்.

2இராஜா 15:35 மேடைகள்மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தார்கள்; இவன் கர்த்தருடைய ஆலயத்தின் உயர்ந்த வாசலைக் கட்டினான்.

(2) பதினாறாவது சீரிய யுத்தம் - (2நாளா 16:5)

2இராஜா 15:36 யோதாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 15:37 அந்நாட்களிலே கர்த்தர் சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனையும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவையும் யூதாவுக்கு விரோதமாக அனுப்பத்தொடங்கினார்.

"யோதாமின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 27)

(3) யோதாமின் மரணம் - ஆகாஸ் இராஜாவானான் - யூதாவின் பன்னிரெண்டாவது இராஜா - (2நாளா 27:7-9)

2இராஜா 15:38 யோதாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், தன் தகப்பனாகிய தாவீதின் பட்டணத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஆகாஸ் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"கர்த்தர் ...... யூதாவுக்கு விரோதமாக அனுப்பத்தொடங்கினார்" - யோதாமின் நாட்களிலேயே யுத்த அச்சுறுத்தல்கள் வந்தன. ஆனாலும் ஆகாசின் நாட்களில் யுத்தம் ஆரம்பமாயிற்று. (2இராஜா 16:5-18; 2நாளா 28; ஏசா 7).

16 அதிகாரம்

2. ஆகாசின் ஆட்சி - யூதாவின் பன்னிரெண்டாவது இராஜா - பதினாறு வருஷங்கள் - (2நாளா 28)

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயங்களும்

2இராஜா 16:1 ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவின் பதினேழாம் வருஷத்தில் யூதாவின் ராஜாவாகிய யோதாமின் குமாரன் ஆகாஸ் ராஜாவானான்.

2இராஜா 16:2 ஆகாஸ் ராஜாவாகிற போது இருபது வயதாயிருந்து, எருசலேமிலே பதினாறு வருஷம் அரசாண்டான்; அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல் தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல்,

2இராஜா 16:3 இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரனை முதலாய்த் தீக்கடக்கப் பண்ணினான்.

2இராஜா 16:4 மேடைகளிலும் மலைகளின் மேலும் பச்சையான சகல மரத்தின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தான்.

"ஆகாஸ்" **(Ahaz)** - இந்தப் பெயருக்கு "கர்த்தர் பாதுகாக்கிறார்" **"Jehovah sustains"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஆகாஸ்கள்"

1. பென்யமீன் கோத்திரத்தான் (1நாளா 8:35-36;1நாளா 9:41-42)
2. யூதாவின் ராஜா (2இராஜா 15:38; 2இராஜா 16:1-20; 2இராஜா 17:1; 2இராஜா 18:1; 2இராஜா 20:11; 2இராஜா 23:12; 1நாளா 3:13; 2நாளா 27:9; 2நாளா 28:1-27; 2நாளா 29:19; ஏசா 1:1; ஏசா 7:1-12; ஏசா 14:28; ஓசி 1:1; மீகா 1:1).

யூதாவின் ராஜாக்களில் ஆகாஸ் மிகவும் பொல்லாதவனாக இருந்தான். பத்துக் கோத்திரங்களின் ராஜாக்களாகிய ஆகாப், அகசியா ஆகியோரைப் போலவே ஆகாசும் பொல்லாப்பு செய்தான். யூதாவில் பாகால் ஆராதனையை மறுபடியும் ஸ்தாபித்தான். பத்துக் கோத்திரங்களில் யெகூ பாகால் ஆராதனையை அகற்றிப்போட்டான். (2இராஜா 10:19-31) யூதாவில் யோய்தா பாகால் ஆராதனையை அகற்றிப்போட்டான். (2இராஜா 11:17-21). ஆனால் ஆகாசோ பாகால் ஆராதனையை யூதாவில் மறுபடியும் ஸ்தாபிக்கிறான். தன்னுடைய குமாரரையும், தீக்கடக்கப் பண்ணுகிறான். மேடைகளிலும் மலைகளின் மேலும் பச்சையான சகல மரத்தின்கீழும் பலியிட்டுத் தூபங்காட்டி வருகிறான். (2இராஜா 16:2-4). இவனுக்குப் பின்பு மனாசே அகசியாவைப்போல கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்தான். (2இராஜா 21:6; 2இராஜா 23:10; லேவி 18:21; எரே 7:31; எசே 20:26).

(2) உள்நாட்டு குழப்பம் - யூதா அல்லது இஸ்ரவேலோடு சீரியாவின் கடைசி யுத்தம் - (2இராஜா 25:25; 1சாமு 14:47; 2சாமு 8:5; 10:1; 1இராஜா 15:20; 20:1,23; 22:1; 2இராஜா 6:8,13,24; 8:28; 12:17; 13:3,22; 14:25; 15:36)

2இராஜா 16:5 அப்பொழுது சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனும், இஸ்ரவேலின் ராஜாவாகிய ரெமலியாவின் குமாரன் பெக்காவும், எருசலேமின்மேல் யுத்தம் பண்ண வந்து ஆகாசை முற்றிக்கை போட்டார்கள்; ஆனாலும் ஜெயிக்க மாட்டாதே போனார்கள்.

2இராஜா 16:6 அக்காலத்திலே சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீன் ஏலாத்தைத் திரும்பச் சீரியாவோடே சேர்த்துக் கொண்டு, யூதரை ஏலாத்திலிருந்து துரத்தினான்; சீரியர் ஏலாத்திற்கு வந்து இந்நாள் வரைக்கும் அவ்விடத்திலே குடியாயிருக்கிறார்கள்.

"ரேத்சீன்" **(Rezin)** - இந்தப் பெயருக்கு "நல்ல சித்தம்" **"good will"** என்று பொருள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

16 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ரேத்சீன்"கள்

1. தமஸ்குவின் கடைசி ராஜா (2இராஜா 15:37; 2இராஜா 16:5-9; ஏசா 7:1-8; ஏசா 8:6; ஏசா 9:11)

2. நிதனீமியர் குடும்பத்தின் ஸ்தாபகர் (எஸ்றா 2:48; நெகே 7:50)

"பெக்கா" **(Pekah)** - இந்தப் பெயருக்கு "விழிப்புணர்வு" **"watchfulness"** என்று பொருள். இவன் பத்துக் கோத்திரத்தாரின் 18 ஆவது ராஜா. (2இராஜா 15:25-37; 2இராஜா 16:1,5; 2நாளா 28:6; ஏசா 7:1).

"ஆகாசை முற்றிக்கை போட்டார்கள்" - ஏசா 7:6 ஆவது வசனத்தில் ரேத்சீனையும், பெக்காவையும் "புகைகிற கொள்ளிக்கட்டைகள்" **"firebrands"** என்று கூறப்பட்டிருக்கிறது. 2இராஜா 16:5-9 ஆவது வசனங்களும், 2நாளா 28:5-20 ஆகிய வசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பது போன்று தெரிகிறது. ஆனால் இதில் எவ்விதக் குழப்பமும் இல்லை. 2நாளா 28:5-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் ஒரு வருஷத்திற்கு முன்பு நடைபெற்றதாகும். ரேத்சீனும், பெக்காவும் தனித்தனியாக யுத்தம் பண்ணி ஜெயித்தார்கள். ஆனால் இவ்விருவரும் ஒன்றுசேர்ந்து யுத்தம் பண்ணிய போதோ இவர்களால் ஜெயிக்க முடியவில்லை.

"ஆனாலும் ஜெயிக்கமாட்டாதே போனார்கள்" - கர்த்தருடைய வாக்குத்தத்தம் தாவீதின் வீட்டாருக்குப் பிரசித்தமாக இருக்கிறது. ஆகையினால் இவ்விரு ராஜாக்களாலும் ஆகாசை ஜெயிக்க முடியவில்லை. (ஏசா 7:7,16).

"ஏலாத்" - அசீரியா ஏலாத்தை யூதாவோடு திரும்பவும் சேர்த்துக் கொண்டான். (2இராஜா 14:22) ஆனாலும் ஆகாசின் ஆட்சிக் காலத்தில் சீரியர்கள் ஏலாத்தைக் கைப்பற்றினார்கள். ராஜாக்களின் புஸ்தகம் எழுதப்படும் காலம் வரையிலும் சீரியர் ஏலாத்தில் குடியிருக்கிறார்கள்.

(3) ஆகாஸ் அசீரியாவோடு உடன்படிக்கை பண்ணுகிறான் - *(2நாளா 28:16-20)*

2இராஜா 16:7 ஆகாஸ் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நான் உம்முடைய அடியானும் உம்முடைய குமாரனுமாயிருக்கிறேன்; நீர் வந்து, எனக்கு விரோதமாயெழும்பின சீரியா ராஜாவின் கைக்கும், இஸ்ரவேல் ராஜாவின் கைக்கும் என்னை நீங்கலாக்கி விடும் என்று சொல்லச்சொல்லி,

2இராஜா 16:8 கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட வெள்ளியையும் பொன்னையும் எடுத்து, அசீரியாவின் ராஜாவுக்குக் காணிக்கையாக அனுப்பினான்.

"ஆகாஸ் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி" - ஏசாயா தீர்க்கதரிசி ஆகாசின் இந்தச் செய்கையை எதிர்க்கிறார். (ஏசா 7:17). மேலும் ஏசா 7:20 ஆவது வசனத்தில் திகிலாத்பிலேசர் "சவரகன்கத்தி" **"razor"** என்று அழைக்கப் பட்டிருக்கிறார். அசீரியருடைய கல்வெட்டுக்களில் திகிலாத் பிலேசர் தன்னைப் பற்றி பெருமையாக எழுதி வைத்திருக்கிறான்.

(4) மூன்றாவது அசீரிய படையெடுப்பு

2இராஜா 16:9 அசீரியா ராஜா அவனுக்குச் செவிகொடுத்து, தமஸ்குவுக்குப் போய் அதைப்பிடித்து, அதின் குடிகளைக் கீர்பட்டணத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோய், ரேத்சீனைக் கொன்றுபோட்டான்.

16 அதிகாரம்

"அசீரியா ராஜா அவனுக்குச் செவி கொடுத்து, தமஸ்குவுக்குப்போய் அதைப்பிடித்து" - யூதாவின் ராஜா அசீரியாவின் ராஜாவுக்குப் பணிகிறான். இதனால் அசீரியரின் ஆதிக்கம் அதிகரிக்கிறது. அசீரியாவின் ராஜா யுத்த களத்தில் ரேத்சீனைச் சந்தித்து, அவனைக் கொன்றுபோட்டான். இதன் பின்பு, பெக்காவின் மீது யுத்தம் பண்ணி, இஸ்ரவேல் புத்திரரில் அநேகரை அசீரியாவின் ராஜா சிறைப்பிடித்துச் சென்றான். (1நாளா 5:26). அசீரியாவின் ராஜா தமஸ்குவிற்கும் வந்தான். அங்கே ரேத்சீனின் குமாரன் சீரியரால் சிங்காசனத்தில் அமர்த்தப் பட்டிருக்கிறான். அசீரியாவின் ராஜா தமஸ்குவை முற்றிக்கையிட்டு, அதைக் கைப்பற்றி, ரேத்சீனின் குமாரனைக் கொன்றுபோட்டான். இந்தக் காலத்தில் தமஸ்குவில் அசீரியாவின் ராஜா தன்னுடைய ராஜ விசாரிப்பை ஸ்தாபித்தான். அங்கு யூதா, ஏதோம், அம்மோன், மோவாப், காசா, எஸ்கலோன், தீரு ஆகிய தேசத்தின் ராஜாக்கள் அசீரியாவின் ராஜாவிற்குப் பணிந்து தங்களுடைய காணிக்கைகளைச் செலுத்தினார்கள். இந்த நிகழ்ச்சிகள் அசீரியரின் கல் வெட்டுக்களில் காணப்படுகிறது.

(5) ஆகாசின் விக்கிரகாராதனையின் பலிபீடம் - *(2நாளா 28:23-25)*

2இராஜா 16:10 அப்பொழுது ராஜாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலுள்ள அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசருக்கு எதிர்கொண்டு போய்த் தமஸ்குவிலுள்ள பலிபீடத்தைக் கண்டான். ராஜாவாகிய ஆகாஸ் அந்தப் பலிபீடத்தின் சாயலையும், அதினுடைய சகல வேலைப்பாடாகிய அதின் மாதிரியையும் ஆசாரியனாகிய உரியாவுக்கு அனுப்பினான்.

2இராஜா 16:11 ராஜாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருந்து வருகிறதற்குள் ஆசாரியனாகிய உரியா அப்படிக்கொத்த பலிபீடத்தைக் கட்டி, ராஜாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருந்து அனுப்பின கட்டளையின்படியெல்லாம் செய்தான்.

2இராஜா 16:12 ராஜா தமஸ்குவிலிருந்து வந்தபோது, அவன் அந்தப் பலிபீடத்தைப் பார்த்து, அந்தப் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, அதின் மேல் பலியிட்டு,

2இராஜா 16:13 தன் சர்வாங்க தகனபலியையும் தன்போஜனபலியையும் தகனித்து, தன் பானபலியை வார்த்து, தன் சமாதானபலிகளின் இரத்தத்தை அந்தப் பலிபீடத்தின்மேல் தெளித்தான்.

2இராஜா 16:14 கர்த்தரின் சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடத்தை அவன் தன் பலிபீடத்திற்கும் கர்த்தரின் ஆலயத்திற்கும் நடுவே ஆலயத்தின் முகப்பிலிருந்து எடுத்து, அதைத் தன் பலிபீடத்திற்கு வடபுறமாய் வைத்தான்.

2இராஜா 16:15 ராஜாவாகிய ஆகாஸ் ஆசாரியனாகிய உரியாவை நோக்கி: இந்தப் பெரிய பலிபீடத்தின்மேல் நீ காலைச் சர்வாங்க தகனபலியையும், மாலைப்போஜனபலியையும், ராஜாவின் சர்வாங்க தகனபலியையும், அவருடைய போஜனபலியையும், தேசத்தினுடைய சகல ஜனத்தின் சர்வாங்க தகனபலியையும், அவர்கள் போஜனபலியையும், அவர்கள் பானபலிகளையும் செலுத்தி, அதின்மேல் சர்வாங்க தகனங்களின் சகல இரத்தத்தையும், பலிகளின் சகல இரத்தத்தையும் தெளிப்பாயாக; அந்த வெண்கலப் பலிபீடமோ, நான் சன்னதம் கேட்கிறதற்கு உதவும் என்றான்.

2இராஜா 16:16 ராஜாவாகிய ஆகாஸ் கட்டளையிட்ட படியெல்லாம் ஆசாரியனாகிய உரியா செய்தான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

16 அதிகாரம்

"ஆகாஸ் தமஸ்குவிலுள்ள அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசருக்கு எதிர் கொண்டுபோய்" - ஆகாஸ் திகிலாத்பிலேசருக்கு வெகுமதியைக் கொடுப்பதற்காகத் தமஸ்குவிற்குப் போனான். அங்குள்ள பலிபீடத்தைக் கண்டான். தன்னுடைய பாகால் ஆராதனைக்கு அதுபோல ஒரு பலிபீடம் கட்ட வேண்டுமென்று விரும்பினான். ஆகாஸ் அந்தப் பலிபீடத்தின் சாயலையும், அதினுடைய சகல வேலைப்பாடாகிய அதின் மாதிரியையும் ஆசாரியனாகிய உரியாவுக்கு அனுப்பினான். அதேபோல ஒரு பலிபீடத்தை எருசலேமில் கட்டி, அந்தப் பலிபீடத்தின்மீது பலியிட்டான். (2இராஜா 16:10-13) தேவாலயத்தில் இருந்த வெண்கலப் பலிபீடத்தைக் கொண்டுவந்து, அதைத் தன்னுடைய புதிய பலிபீடத்தின் வடக்குப் புகுதியில் வைத்தான். தன்னுடைய ஆசாரியரிடம் இந்தப் பெரிய பலிபீடத்தின்மேல் "காலைச் சர்வாங்க தகனபலியையும், மாலைப்போஜனபலியையும், ராஜாவின் சர்வாங்க தகனபலியையும், அவருடைய போஜனபலியையும், தேசத்தினுடைய சகல ஜனத்தின் சர்வாங்க தகனபலியையும், அவர்கள் போஜனபலியையும், அவர்கள் பானபலிகளையும் செலுத்தி, அதின்மேல் சர்வாங்க தகனங்களின் சகல இரத்தத்தையும், பலிகளின் சகல இரத்தத்தையும் தெளிக்குமாறு" கட்டளையிட்டான். (2இராஜா 16:15-16).

"ஆசாரியனாகிய உரியா" - உரியா என்னும் பெயரில் எந்த பிரதான ஆசாரியனின் பெயரும் காணப்படவில்லை. ஆகையினால் இவன் ஏசா 8:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் உரியாவாக இருக்கலாம். அல்லது பாகால் ஆராதனையில் நியமிக்கப்பட்டிருக்கும் விசேஷித்த ஆசாரியனாக இருக்கலாம்.

(6) ஆகாஸ் தேவாலயத்தை அசுசிப் படுத்துகிறான் - (வசனம் 14; 2நாளா 28:21-22)

2இராஜா 16:17 பின்னும் ராஜாவாகிய ஆகாஸ் ஆதாரங்களின் சவுக்கைகளை அறுத்துவிட்டு, அவைகளின் மேலிருந்த கொப்பரைகளை எடுத்து, கடல் தொட்டியைக் கீழே நிற்கிற வெண்கல ரிஷபங்களின் மேலிருந்து இறக்கி, அதைக் கற்களின் தளவரிசையிலே வைத்து,

2இராஜா 16:18 ஆலயத்தின் அருகே கட்டியிருந்த ஓய்வுநாளின் மண்டபத்தையும், ராஜா பிரவேசிக்கும் மண்டபத்தையும், அசீரியருடைய ராஜாவினிமித்தம் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து அப்புறப்படுத்தினான்.

"ஆகாஸ் ஆதாரங்களின் சவுக்கைகளை அறுத்துவிட்டு" - ஆகாஸ் வெண்கலப் பலிபீடத்தை அகற்றினான். அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. கடல்தொட்டிக்குக் கீழே வெண்கல ரிஷபங்கள் உள்ளன. அந்த வெண்கல ரிஷபங்களை அகற்றிவிட்டு, அவற்றை அசீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தான். கடல் தொட்டியைக் கற்கள்மீது நிறுத்தி வைத்தான். (2இராஜா 16:17-18).

(7) ஆகாசின் மரணம் - எசேக்கியா இராஜாவானான் - யூதாவின் பதிமூன்றாவது இராஜா - (2இராஜா 18-20; 2நாளா 28:26)

2இராஜா 16:19 ஆகாஸ் செய்த மற்ற வர்த்தமானங்கள் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 16:20 ஆகாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"ஆகாஸ் செய்த மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 28)

17 அதிகாரம்

III. அசீரியர் இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தாரைச் சிறை பிடித்துச் செல்லுகிறார்கள் - (15:19)

1. ஒசெயாவின் ஆட்சி - இஸ்ரவேலின் இருபதாவது இராஜா - (15:30)

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும்

2இராஜா 17:1 யூதாவின் ராஜாவாகிய ஆகாசின் பன்னிரண்டாம் வருஷத்தில், ஏலாவின் குமாரனாகிய ஓசெயா இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, சமாரியாவிலே ஒன்பதுவருஷம் ராஜ்யபாரம்பண்ணி,

2இராஜா 17:2 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; ஆனாலும் தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களைப்போல் செய்யவில்லை.

"ஆனாலும் தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களைப்போல் செய்ய வில்லை" - இஸ்ரவேலின் மற்ற ராஜாக்களைப் போல இவன் அதிக பொல்லாப்பு செய்யவில்லை. ஆனால் இவனும் பொல்லாப்பு செய்தான். கர்த்தர் நீடிய பொறுமையோடு இருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களும், பொல்லாப்புக்களும் மிகுதியாகவே கர்த்தர் அவர்கள்மீது தமது நியாயத்தீர்ப்பை அனுப்பினார். பத்துக்கோத்திரங்களின் வடக்கு தேசத்தில் 19 ராஜாக்கள் 260 வருஷங்களாக ராஜ்யபாரம் பண்ணினார்கள். இவர்களில் ஒரு ராஜாகூட கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்யவில்லை. இஸ்ரவேலில் பாவங்கள் அதிகரித்தது. ஜனங்கள் எச்சரிப்புக்குச் செவிகொடுக்கவில்லை. மனந்திரும்பவில்லை. ஆகையினால் கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தைத் தமது கிருபையிலிருந்து அகற்றி அந்நியருடைய சிறையிருப்புக்கு அனுப்பிவிட்டார். உண்மையான மனந்திரும்புதல் இருந்தால் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து துணிகரமான பாவங்களைச் செய்தால், கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பே வரும்.

(2) இஸ்ரவேலரின்மீது அசீரியரின் நான்காவது படையெடுப்பு - (15:19)

2இராஜா 17:3 அவனுக்கு விரோதமாக அசீரியாவின் ராஜாவாகிய சல்மனாசார் வந்தான்; அப்பொழுது ஓசெயா அவனைச் சேவிக்கிறவனாகி, அவனுக்குப் பகுதிகட்டினான்.

"அவனுக்கு விரோதமாக அசீரியாவின் ராஜாவாகிய சல்மனாசார் வந்தான்" - ஒசெயாவின் முதலாவதாக ராஜ்யபார வருஷத்திலேயே சல்மனாசார் இவன்மீது யுத்தம் பண்ண வருகிறான். தீருவின் பழங்கால சுவடிகளில் சல்மனாசாரின் யுத்தத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. பொனிஷியாவின்மீது சல்மனாசார் யுத்தம் பண்ணி, அவர்களுடைய கலகத்தை அடக்கினான். அதன் பின்பு, அசீரியர் கலிலேயாவிற்கு வந்தார்கள். அங்கு பெத்தார்பேல் **(Beth-arbel)** மீது யுத்தம் பண்ணி, அதிலுள்ள ஜனங்களை மிகவும் ஒடுக்கினார்கள். (ஓசி 10:14) ஒசெயாவை எச்சரிப்பதற்காக இந்த யுத்தம் நடைபெற்றது. ஒசெயாவும், சல்மனாசாருக்குப் பயந்து, அவனுக்குப் பகுதிப்பணம் கட்டினான். இதன் பின்பு, சல்மனாசார் அசீரியாவுக்குத் திரும்பிப் போனான். (2இராஜா 15:19)

(3) இஸ்ரவேலரின்மீது அசீரியரின் ஐந்தாவது படையெடுப்பு - இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தாரை அசீரியர் சிறைப்பிடித்துச் செல்லுகிறார்கள் - (15:19)

2இராஜா 17:4 ஓசெயா எகிப்தின் ராஜாவாகிய சோ என்பவனிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பினதும், தனக்கு வருஷந்தோறும் செய்ததுபோல், பகுதி அனுப்பாதே போனதுமான கலக யோசனையை அசீரியாவின் ராஜா ஒசெயாவினிடத்திலே கண்டு, அவனைப் பிடித்துக் கட்டிச் சிறைச்சாலையிலே வைத்தான்.

17 அதிகாரம்

2இராஜா 17:5 அசீரியா ராஜா தேசம் எங்கும்போய், சமாரியாவுக்கும் வந்து அதை மூன்று வருஷம் முற்றிக்கை போட்டிருந்தான்.

2இராஜா 17:6 ஓசெயாவின் ஒன்பதாம் வருஷத்தில் அசீரியா ராஜா சமாரியாவைப் பிடித்து, இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோய், அவர்களைக் கோசோன் நதி ஓரமான ஆலாகிலும் ஆபோரிலும் மேதியரின் பட்டணங்களிலும் குடியேற்றினான்.

“இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோய்” - ஓசெயா தன்னுடைய ஏழாம் வருஷ ராஜ்யபாரக்காலத்தில் அசீரியாவுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். அசீரியாவின் ராஜாவுக்கு வெகுமதிகளை அனுப்பாமல் எகிப்தின் ராஜாவுக்கு வெகுமதிகளை அனுப்பினான். இதனால் கோபமடைந்த அசீரியர் சமாரியாவின்மீது யுத்தம் பண்ணினார்கள். மூன்று வருஷமாக அசீரியர் சமாரியாவுக்கு எதிராக முற்றிக்கை போட்டிருந்தார்கள். ஓசெயாவின் ஒன்பதாம் வருஷத்தில் அசீரியா ராஜா சமாரியாவைப் பிடித்தான். இஸ்ரவேல் புத்திரரை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோனான். அவர்களைக் கோசோன் நதி ஓரமான ஆலாகிலும் ஆபோரிலும் மேதியரின் பட்டணங் களிலும் குடியேற்றினான். (2இராஜா 17:4-6).

2. இஸ்ரவேலர் சிறைப்பிடித்து செல்லப் பட்டதற்குக் காரணமான பத்து பாவங்கள்

2இராஜா 17:7 எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுடைய கையின்கீழிருந்த தங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் பாவஞ்செய்து, அந்நிய தேவர்களுக்குப் பயந்துநடந்து,

2இராஜா 17:8 கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளின் வழிபாடுகளிலும் இஸ்ரவேல் ராஜாக்களின் வழிபாடுகளிலும் நடந்து கொண்டிருந்தார்கள்.

2இராஜா 17:9 செய்யத்தகாத காரியங்களை இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இரகசியத்தில் செய்ததுமன்றி, காவல்காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான பட்டணங்கள்மட்டுமுள்ள தங்கள் ஊர்களிலெல்லாம் தங்களுக்கு மேடைகளையும் கட்டி,

2இராஜா 17:10 உயரமான சகல மேட்டின்மேலும் பச்சையான சகல மரத்தின்கீழும் தங்களுக்குச் சிலைகளையும் விக்கிரகத் தோப்புகளையும் நிறுத்தி,

2இராஜா 17:11 கர்த்தர் தங்களை விட்டுக் குடிவிலக்கின ஜாதிகளைப்போல, சகல மேடைகளிலும் தூபங்காட்டி, கர்த்தருக்குக் கோபமுண்டாகத் துர்க்கிரியைகளைச் செய்து,

2இராஜா 17:12 இப்படிச் செய்யத்தகாது என்று கர்த்தர் தங்களுக்குச் சொல்லியிருந்தும், நரகலான விக்கிரகங்களைச் சேவித்துவந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள்

1. தங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் பாவஞ்செய்து, அந்நிய தேவர்களுக்குப் பயந்துநடந்தார்கள். (2இராஜா 17:7)
2. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளின் வழிபாடுகளில் நடந்து கொண்டிருந்தார்கள். (2இராஜா 17:8)
3. இஸ்ரவேல் ராஜாக்களின் பொன்கன்றுக் குட்டி வழிபாடுகளில் நடந்து கொண்டிருந்தார்கள். (2இராஜா 17:8; 1இராஜா 12:25-33)

II இராஜாக்கள் - தொகுப்புரை

17 அதிகாரம்

4. செய்யத்தகாத காரியங்களை இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக இரகசியத்தில் செய்தார்கள். 2இராஜா 17:9)

5. தங்கள் எல்லா ஊர்களிலும் காவல்காக்கிற கோபுரங்களையும், மேடைகளையும் கட்டினார்கள்.

6. உயரமான சகல மேட்டின்மேலும் பச்சையான சகல மரத்தின்கீழும் தங்களுக்குச் சிலைகளை நிறுத்தினார்கள். (2இராஜா 17:10)

7. விக்கிரகத் தோப்புகளையும் நிறுத்தினார்கள்.

8. கர்த்தர் தங்களை விட்டுக் குடிவிலக்கின ஜாதிகளைப்போல, சகல மேடைகளிலும் தூபங்காட்டினார்கள். (2இராஜா 17:11)

9. கர்த்தருக்குக் கோபமுண்டாகத் துர்க்கிரியைகளைச் செய்தார்கள்.

10. கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாக நரகலான விக்கிரகங்களைச் சேவித்து வந்தார்கள். (2இராஜா 17:12)

11. அவர்கள் கர்த்தருக்குச் செவிகொடுக்க வில்லை. (2இராஜா 17:14)

12. தங்கள் பிதாக்களைப்போல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்.

13. தங்கள் தேவனாகிய கர்த்தர்மேல் விசுவாசியாமற்போனார்கள்.

14. கர்த்தருடைய கட்டளைகளை வெறுத்து விட்டார்கள். (2இராஜா 17:15)

15. அவர் தங்கள் பிதாக்களோடே பண்ணின அவருடைய உடன்படிக்கையை வெறுத்து விட்டார்கள்.

16. அவர் தங்களுக்குத் திடச்சாட்சியாய்க் காண்பித்த அவருடைய சாட்சிகளையும் வெறுத்துவிட்டார்கள்.

17. வீணான விக்கிரகங்களைப் பின்பற்றினார்கள்.

18. வீணரானார்கள்.

19. அவர்களைச் சுற்றிலும் இருக்கிற ஜாதிகளுக்குப் பின்சென்றார்கள்.

20. தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டு விட்டார்கள். (2இராஜா 17:16)

21. வானத்தின் சேனைகளாகிய சந்திரன், சூரியன் மற்றும் பல கிரகங்களை யெல்லாம் பணிந்து கொண்டார்கள்.

22. பாகாலைச் சேவித்தார்கள். (2இராஜா 17:16)

23. அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப் பண்ணினார்கள். (2இராஜா 17:17)

24. குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்தார்கள்.

25. கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப் போட்டார்கள்.

3. இஸ்ரவேலரோடு தேவன் மன்றாடியது அவர்களுடைய இருதயக்கடினப்படுத்தியது - இஸ்ரவேலரின் பதினெட்டு பாவங்கள் - (வசனம் 7)

2இராஜா 17:13 நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டதும், என் ஊழியக் காரராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பினதுமான நியாயப் பிரமாணத்தின் படியெல்லாம் என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் தீர்க்கதரிசிகள் ஞானதிருஷ்டிக்காரர் எல்லாரையுங் கொண்டு இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் திடச்சாட்சியாய் எச்சரித்துக் கொண்டிருந்தும்,

II இராஜாக்கள் - தொகுப்புரை

17 அதிகாரம்

2இராஜா 17:14 அவர்கள் செவிகொடாமல், தங்கள் தேவனாகிய கர்த்தர்மேல் விசுவாசியாமற்போன கடினக் கழுத்துள்ள தங்கள் பிதாக்களைப்போல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி,

2இராஜா 17:15 அவருடைய கட்டளைகளையும், அவர் தங்கள் பிதாக்களோடே பண்ணின அவருடைய உடன்படிக்கையையும், அவர் தங்களுக்குத் திடச்சாட்சியாய்க் காண்பித்த அவருடைய சாட்சிகளையும் வெறுத்துவிட்டு, வீணான விக்கிரகங்களைப் பின்பற்றி வீணராகி, அவர்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களைப் போல, செய்ய வேண்டாமென்று கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டு விலக்கியிருந்த ஜாதிகளுக்குப் பின்சென்று,

2இராஜா 17:16 தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு கன்றுக்குட்டிகளாகிய வார்ப்பித்த விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டாக்கி, விக்கிரகத் தோப்புகளை நாட்டி, வானத்தின் சேனைகளை எல்லாம் பணிந்துகொண்டு, பாகாலைச் சேவித்தார்கள்.

2இராஜா 17:17 அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப் பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப்போட்டார்கள்.

2இராஜா 17:18 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டு அகற்றினார்; யூதா கோத்திரமாத்திரமே மீதியாயிற்று.

பத்துக்கோத்திரங்களாகிய இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரித்துக் கூறிய தீர்க்கதரிசிகள் - 14 பேர்

1. தேவனுடைய மனுஷன் (1இராஜா 13:1-32)
2. அகியா (1இராஜா 14:1-18)
3. யெகூ (1இராஜா 16:1-4)
4. எலியா (1இராஜா 17:1-2இராஜா 2:11)
5. எலிசா (1இராஜா 19:19-21; 2இராஜா 2:1-13:25)
6. பெயர் அறியப்படாத தீர்க்கதரிசி (1இராஜா 20:13-14,22)
7. தேவனுடைய மனுஷன் (1இராஜா 20:28)
8. தீர்க்கதரிசிகளின் குமாரன் (1இராஜா 20:35-42)
9. மிகாயா (1இராஜா 22:17-28)
10. தீர்க்கதரிசிகளின் குமாரன் (2இராஜா 9:1-10)
11. யெகூ (2இராஜா 10:30)
12. யோனா (2இராஜா 14:25)
13. இத்தோ (2நாளா 9:29)
14. ஓபேத் (2நாளா 28:9-15)

யூதா புத்திரருக்கு எச்சரித்துக் கூறிய 10 தீர்க்கதரிசிகளும், ஒரு தீர்க்கதரிசினியும்

1. செமாயா (2நாளா 12:7-8)
2. ஓபேத் (2நாளா 15:1-7)
3. அனானி (2நாளா 16:7-9)
4. யெகூ (2நாளா 19:1-3)
5. யகாசியேல் (2நாளா 20:14-17)
6. எலியேசர் (2நாளா 20:37)
7. எலியா (2நாளா 21:12-15)

17 அதிகாரம்

8. சகரியா (2நாளா 24:20)

9. தேவனுடைய மனுஷன் (2நாளா 25:7-16)

10. உல்தாள் - தீர்க்கதரிசினி (2நாளா 34:22-28)

11. ஏசாயா (2இராஜா 19:6-7,20-34)

"யூதாகோத்திர மாத்திரமே மீதியாயிற்று" - பென்யமீன்புத்திரரும், லேவியரும், மேலும் பத்துக் கோத்திரத்திலும் இருந்து வந்த ஆயிரக்கணக்கான ஜனங்களும் யூதா கோத்திரமாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

4. யூதாவும் தன்னுடைய பாவங்களுக்காக சிறையாக கொண்டுபோகப்படுவாள்

2இராஜா 17:19 யூதா ஜனங்களும் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் இஸ்ரவேல் உண்டாக்கின வழிபாடுகளில் நடந்தார்கள்.

2இராஜா 17:20 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேல் சந்ததியாரையெல்லாம் புறக்கணித்து, அவர்களைத் தமது முகத்தைவிட்டுத் தள்ளுமட்டாக ஒடுக்கி, அவர்களைக் கொள்ளைக்காரர் கையில் ஒப்புக் கொடுத்தார்.

"யூதா ஜனங்களும் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளாமல்" - பத்துக் கோத்திரங்களாகிய வடக்கு ராஜ்யம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. (2இராஜா 17:18-19) யூதா கோத்திரம் மாத்திரமே கர்த்தருடைய தேசமாக எஞ்சி நிற்கிறது. ஆனால் யூதா ஜனங்களும் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் இஸ்ரவேல் உண்டாக்கின விக்கிரக வழிபாடுகளில் நடந்தார்கள். கர்த்தர் பத்துக் கோத்திரத்தாரை அழித்து, 133 வருஷங்களுக்குப் பின்பு, யூதா ஜனங்களையும் அழித்துப் போட்டார்.

"அவர்களைக் கொள்ளைக்காரர் கையில் ஒப்புக்கொடுத்தார்" - இந்த வாக்கியம் இஸ்ரவேல் சந்ததியாரையும், யூதா ஜனங்களையும் குறிக்கும். இஸ்ரவேலின் பிளவுண்ட இவ்விரண்டு ராஜ்யமும் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு உட்பட்டது. (2இராஜா 24-25). கர்த்தர் பட்சபாதம் இல்லாதவர். இஸ்ரவேல் தேசத்தை அழித்ததுபோலவே, யூதா தேசத்தையும் அதின் பாவங்களுக்காக அழித்துப்போட்டார்.

யூதா தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு தாமதமாக வந்தது. யூதா தேசத்தின் 20 ராஜாக்களில் 8 ராஜாக்கள் கர்த்தருக்குப் பிரியமானபடி நடந்து கொண்டார்கள். இந்த ராஜாக்களின் காலத்தில் ஆவிக்குரிய உயிர்மீட்சி உண்டாயிற்று. ஆனாலும் யூதாவின் பாவத்தின் நிமித்தமாகக் கர்த்தர் யூதா ஜனங்களையும் நியாயந்தீர்த்தார்.

பத்துக் கோத்திரத்தாரும் சிறையிருப்புக்குப் போன பின்பு, யூதாஜனங்கள் அதிகமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தர் இவர்களையும் அழித்து சிறையிருப்புக்கு அனுப்பிவிட்டார். இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் பாபிலோனிய சிறையிருப்புக்கு உட்படுகிறார்கள். பத்துக் கோத்திரத்தார் முதலாவதாக அசீரியரின் சிறையிருப்புக்குபோனார்கள். பாபிலோனியர் அசீரியரை மேற்கொண்டதினால் அவர்கள் பாபிலோனியின் சிறையிருப்புக்கு உட்படுகிறார்கள்.

இதற்குப் பின்பு, கோரேசு பாபிலோனைத் தோற்கடித்தான். இஸ்ரவேல் புத்திரர்கள் தங்கள் சொந்தத் தேசத்திற்குப் போவதற்கும், எருசலேமின் தேவாலயத்தையும் மறுபடியும் கட்டுவதற்கும் அனுமதி கொடுத்தான். இஸ்ரவேல் கோத்திரத்தார் மறுபடியும் ஒரே தேசமாக இணைந்து, ஜீவிப்பதற்குக் கர்த்தர் வாய்ப்பு கொடுக்கிறார்.

5. தேவனுடைய நீதியினால் இஸ்ரவேல் தண்டிக்கப்பட்டது

2இராஜா 17:21 இஸ்ரவேல் தாவீது வம்சத்தை விட்டுப்பிரிந்து, நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமை ராஜாவாக்கினார்கள்; அப்பொழுது யெரொபெயாம் இஸ்ரவேலைக் கர்த்தரை விட்டுப் பின்வாங்கவும், பெரிய பாவத்தைச் செய்யவும் பண்ணினான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

17 அதிகாரம்

2இராஜா 17:22 அப்படியே இஸ்ரவேல் புத்திரர் யெரொபெயாம் செய்த எல்லாப் பாவங்களிலும் நடந்து,

2இராஜா 17:23 கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரர் எல்லாரையும் கொண்டு சொல்லியிருந்தபடி, அவர்களைத் தமது சமுகத்தை விட்டு அகற்றுகிறவரைக்கும், அவைகளை விட்டு விலகாதிருந்தார்கள்; இப்படியே இஸ்ரவேலர் தங்கள் தேசத்திலிருந்து அசீரியாவுக்குக் கொண்டு போகப்பட்டு இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள்.

"இஸ்ரவேல் தாவீது வம்சத்தை விட்டுப்பிரிந்து" - சாலொமோனின் பாவங்களின் நிமித்தமாக இந்தப் பிரிவினை உண்டாயிற்று. (1இராஜா 11-12).

"யெரொபெயாம் இஸ்ரவேலைக் கர்த்தரை விட்டுப்பின்வாங்கவும்" -(1இராஜா 12:25-33)

"அவர்களைத் தமது சமுகத்தைவிட்டு அகற்றுகிறவரைக்கும்" - பத்துக் கோத்திரத்தாரின் சிறையிருப்பைக் குறிப்பிடுகிறது. (2இராஜா 17:1-18,21-41).

"இந்நாள்வரைக்கும்" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் அந்நியரின் சிறையிருப்புக்கு உட்படுகிறார்கள். (2இராஜா 24-25) இந்தக் காலத்திற்குப் பின்பு ராஜாக்களின் புஸ்தகம் எழுதப் பட்டிருக்கிறது என்பதற்கு இது சான்றாகும்.

6. இஸ்ரவேலின் பட்டணங்களில் அசீரியர்கள் மறுபடியும் ஜனங்களைக் குடியமர்த்தினார்கள் - புதிய ஏற்பாட்டுக்கால சமாரியரின் வரலாறு ஆரம்பம்

2இராஜா 17:24 அசீரியா ராஜா, பாபிலோனிலும், கூத்தாவிலும், ஆபாவிலும், ஆமாத்திலும், செப்பர்வாயிமிலும் இருந்து மனுஷரை வரப்பண்ணி, அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்குப் பதிலாகச் சமாரியாவின் பட்டணங்களிலே குடியேற்றினான்; இவர்கள் சமாரியாவைச் சொந்தமாய்க் கட்டிக்கொண்டு அதின் பட்டணங்களிலே குடியிருந்தார்கள்.

"அசீரியா ராஜா, பாபிலோனிலும்...... இருந்து மனுஷரை வரப்பண்ணி" - இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் மனுஷர்களெல்லாம் சமாரியாவின் பட்டணங்களிலே குடியேறினார்கள். பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பு திரும்பி வந்த யூதர்கள் சமாரியாவில் ஏற்கெனவே இருந்த புறஜாதி ஜனங்களோடு கலந்தார்கள். (நெகே 13:3,23-31) இதன் விளைவாக சமாரியர் என்னும் இனம் உண்டாயிற்று. புதிய ஏற்பாட்டில் இவர்கள் "அந்நியரும், பரதேசிகளும்" **"strangers and foreigners"** என்று அழைக்கப் பட்டிருக்கிறார்கள். (எபே 2:19; லூக்கா 17:18)

"கூத்தா" **(Cuthah)** - பாபிலோனுக்கு வடக்கே 15 மைல் தூரத்திலுள்ள பட்டணம். சர்போனுக்கும் இந்தப் பட்டணத்துக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றதினால் கூத்தாவின் ஜனங்களை அசீரியாவின் ராஜா சமாரியாவில் குடியேற்றினான்.

7. இஸ்ரவேலில் புதிதாக குடி பெயர்ந்துள்ளவர்கள் மத்தியில் தேவன் சிங்கங்களை அனுப்பினார்

2இராஜா 17:25 அவர்கள் அங்கே குடியேறினது முதல், கர்த்தருக்குப் பயப்படாததினால், கர்த்தர் அவர்களுக்குள்ளே சிங்கங்களை அனுப்பினார்; அவைகள் அவர்களில் சிலரைக் கொன்றுபோட்டது.

2இராஜா 17:26 அப்பொழுது ஜனங்கள் அசீரியா ராஜாவை நோக்கி: நீர் இங்கேயிருந்து அனுப்பி, சமாரியாவின் பட்டணங்களிலே குடியேற்றுவித்த ஜாதிகள் அந்த தேசத்து தேவனுடைய காரியத்தை அறியாத படியினால், அவர் அவர்களுக்குள்ளே சிங்கங்களை அனுப்பினார்; அந்த தேசத்து தேவனுடைய காரியத்தை அவர்கள் அறியாதபடியினால், அவைகள் அவர்களைக் கொன்று போடுகிறது என்று சொன்னார்கள்.

"கர்த்தர் அவர்களுக்குள்ளே சிங்கங்களை அனுப்பினார்" - சமாரியாவில் புதிதாக வந்திருக்கும் ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்க வேண்டும். கர்த்தருடைய பூமியில் சிங்கங்கள் தங்கள்மீது நியாயத்தீர்ப்பாக அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை இந்த ஜனங்கள் அங்கிகரிக்கிறார்கள். (2இராஜா 17:25-26).

II இராஜாக்கள் - தொகுப்புரை

17 அதிகாரம்

8. இஸ்ரவேலின் தேவனை சமாதானப் படுத்துவதற்கு அசீரியரின் பரிகாரம்

2இராஜா 17:27 அதற்கு அசீரியா ராஜா: நீங்கள் அங்கேயிருந்து கொண்டுவந்த ஆசாரியர்களில் ஒருவனை அங்கே அழைத்துக்கொண்டு போங்கள்; அவர்கள் அங்கே குடியிருக்கும்படிக்கு, அவன் அவர்களுக்கு அந்த தேசத்து தேவனுடைய காரியத்தைப் போதிக்கக்கடவன் என்று கட்டளையிட்டான்.

2இராஜா 17:28 அப்படியே அவர்கள் சமாரியாவிலிருந்து கொண்டு போயிருந்த ஆசாரியர்களில் ஒருவன் வந்து, பெத்தேலிலே குடியிருந்து, கர்த்தருக்குப் பயந்து நடக்கவேண்டிய விதத்தை அவர்களுக்குப் போதித்தான்.

"நீங்கள் அங்கேயிருந்து கொண்டுவந்த ஆசாரியர்களில் ஒருவனை அங்கே அழைத்துக்கொண்டு போங்கள்" - இஸ்ரவேலின் ஆசாரியரில் ஒருவனை அசீரியாவின் ராஜா சமாரியாவிற்கு அனுப்புகிறான். அவன் சமாரியாவிற்கு வந்து, பெத்தேலிலே குடியிருந்து, கர்த்தருக்குப் பயந்து நடக்க வேண்டிய விதத்தை அவர்களுக்குப் போதித்தான். (2இராஜா 17:27-28). ஆனாலும் அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் தங்களுடைய அந்நிய தெய்வங்களையே ஆராதித்தார்கள். (2இராஜா 17:30-31)

9. விக்கிரகாராதனை செய்வதற்காக தேவன் இஸ்ரவேலை தண்டித்தார் - அவர்கள் அதே பாவத்தை தொடர்ந்து செய்கிறார்கள்

2இராஜா 17:29 ஆனாலும் அந்தந்த ஜாதி தங்கள் தங்கள் தேவர்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி, அந்தந்த ஜாதியார் குடியேறின தங்கள் தங்கள் பட்டணங்களில் சமாரியர் உண்டு பண்ணின மேடைகளின் கோவில்களில் வைத்தார்கள்.

2இராஜா 17:30 பாபிலோனின் மனுஷர் சுக்கோத் பெனோத்தையும், கூத்தின் மனுஷர் நேர்காலையும், ஆமாத்தின் மனுஷர் அசிமாவையும்,

2இராஜா 17:31 ஆவியர் நிபேகாசையும் தர்தாக்கையும் உண்டாக்கினார்கள், செப்பர்வியர் செப்பர்வாயிமின் தேவர்களாகிய அத்ரமலேக்குக்கும் அன்னமலேக்குக்கும் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்து வந்தார்கள்.

2இராஜா 17:32 அவர்கள் கர்த்தருக்குப் பயந்ததுமன்றி, மேடைகளிலுள்ள கோவில்களில் தங்களுக்காக ஆராதனை செய்கிறதற்கு, தங்களுக்குள் ஈனமானவர்களை ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தினார்கள்.

2இராஜா 17:33 அப்படியே கர்த்தருக்குப் பயந்தும், தாங்கள் விட்டுவந்த ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள்.

2இராஜா 17:34 இந்நாள்வரைக்கும் அவர்கள் தங்கள் முந்தின முறைகளின் படியே செய்து வருகிறார்கள்; அவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறதுமில்லை; தங்கள் சுயதிட்டங்கள் முறைமைகளின் படியாகிலும், கர்த்தர் இஸ்ரவேல் என்று பேரிட்ட யாக்கோபின் புத்திரருக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் ஒத்தபடியாகிலும் செய்கிறதுமில்லை.

II இராஜாக்கள் - தொகுப்புரை

17 அதிகாரம்

2இராஜா 17:35 கர்த்தர் இவர்களோடே உடன்படிக்கைபண்ணி, இவர்களுக்குக் கற்பித்தது என்னவென்றால்: நீங்கள் அந்நிய தேவர்களுக்குப் பயப்படாமலும், அவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்களுக்குப் பலியிடாமலும்,

2இராஜா 17:36 உங்களை மகா வல்லமையினாலும் ஓங்கிய புயத்தினாலும் எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருக்கே பயந்து, அவரையே பணிந்துகொண்டு, அவருக்கே பலியிட்டு,

2இராஜா 17:37 அவர் உங்களுக்கு எழுதிக்கொடுத்த திட்டங்களின்படியும், முறைமைகளின்படியும், நியாயப் பிரமாணத்தின்படியும், கற்பனைகளின் படியும், நீங்கள் சகல நாளும் செய்கிறதற்குக் கவனமாயிருந்து அந்நிய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

2இராஜா 17:38 நான் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை நீங்கள் மறவாமலும், அந்நிய தேவர்களுக்குப் பயப்படாமலும்,

2இராஜா 17:39 உங்கள் தேவனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக; அப்பொழுது அவர் உங்கள் எல்லாச் சத்துருக்களின் கைக்கும் உங்களைத் தப்புவிப்பார் என்று அவர்களுக்குச் சொல்லியிருந்தார்.

2இராஜா 17:40 ஆனாலும் அவர்கள் செவிகொடாமல் தங்கள் முந்தின முறைமைகளின்படியே செய்தார்கள்.

2இராஜா 17:41 அப்படியே அந்த ஜாதிகள் கர்த்தருக்குப் பயந்தும், தங்கள் விக்கிரகங்களைச் சேவித்தும் வந்தார்கள்; அவர்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் தங்கள் பிதாக்கள் செய்தபடியே இந்நாள் வரைக்கும் செய்துவருகிறார்கள்.

"கர்த்தருக்குப் பயந்தும்...... தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள்" - சமாரியாவின் ஜனங்கள் கர்த்தருக்கும் பயப்படுகிறார்கள். அதேவேளையில் தங்களுடைய தெய்வங்களையும் ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய கற்பனைகளையும், பிரமாணங்களையும் அவர்கள் கைக்கொள்ளவில்லை. (2இராஜா 17:34-41). யூதர்கள் தேவாலயத்தைத் திரும்பக் கட்டியபோது, சமாரியர்கள் கர்த்தரிடத்தில் கிட்டிச்சேர்ந்தார்கள். சமாரியர்கள் கெர்சீம் மலையில் கி.மு. 409 ஆம் வருஷத்தில் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினார்கள். தங்களுடைய விக்கிரகங்களையெல்லாம் அகற்றினார்கள். பஞ்சாகமத்தைத் தங்களுடைய மார்க்க நூலாக அங்கிகரித்து, கர்த்தருடைய பிரமாணத்தைக் கைக்கொண்டார்கள். ஆனாலும் யூதர்கள் சமாரியரோடு எந்தச் சம்பந்தமும் கலவாமல் அவர்களை விட்டுப் பிரிந்தே ஜீவித்தார்கள். சமாரியர்கள் பிறஜாதி கலப்புடையவர்களாதலால் யூதர்கள் இவர்களோடு எந்தச் சம்பந்தமும் கலக்கவில்லை. (யோவான் 4:9).

II இராஜாக்கள் – தொகுப்புரை

18 அதிகாரம்

IX. யூதாவின் இராஜாக்கள் - இஸ்ரவேலர் சிறைப்பட்டுப் போனதற்கும் யூதா சிறையாக போவதற்கும் இடைப்பட்ட காலம் - (18:1-23:37)

1. எசேக்கியாவின் ஆட்சி - யூதாவின் பதிமூன்றாவது இராஜா - இருபத்தொன்பது வருஷங்கள் - (16:19; 2நாளா 29:1-32:33)

(1) யூதாவின் ஏழாவது நல்ல இராஜா - (2நாளா 29:1-2)

2இராஜா 18:1 இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய ராஜாவின் குமாரனாகிய எசேக்கியா ராஜாவானான்.

2இராஜா 18:2 அவன் ராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான்; சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் ஆபி.

2இராஜா 18:3 அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

"ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே" - மூலஎபிரெய பாஷையில் இந்த அதிகாரத்தின் முதல் வார்த்தை "இப்பொழுது" என்று ஆரம்பமாகிறது. சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யத்தின் வரலாறு இதுவரையிலும் கூறப்பட்டு முடிந்து விட்டது. சமாரியருடைய மார்க்கத்தைப் பற்றியும் ஓரளவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் பின்பு ராஜாக்கள் புஸ்தகத்தின் ஆசிரியர் யூதா ராஜ்யத்தின் வரலாற்றை விவரிக்கிறார். பத்துக் கோத்திரத்தார் சிறையிருப்புக்குப் போய் விட்டார்கள். அதன் பின்பு, யூதாவில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் இனிமேல் இந்த அதிகாரத்தில் ஆரம்பமாகிறது. (2இராஜா 18:1-25:30). ஓசெயாவின் மூன்றாம் வருஷத்தில் என்பது பத்துக் கோத்திரத்தாரும் சிறையிருப்புக்குப் போவதற்கு ஆறு வருஷங்களுக்கு முன்பு என்று பொருள்படும். அல்லது யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் ஆறாம் வருஷ ராஜ்யகாலத்தில் என்றும் பொருள்கூறலாம். (2இராஜா 18:1; 2இராஜா 17:1-6; 2இராஜா 18:9-12).

"ஓசெயா" (Hoshea) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் இரட்சிப்பாயிருக்கிறார்" "Jehovah is salvation" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஓசெயா"க்கள்

1. பத்துக் கோத்திரத்தாரின் கடைசி ராஜா (2இராஜா 15:30; 2இராஜா 17:1-6; 2இராஜா 18:1,9-10)
2. யோசுவா (உபா 32:44) யோசுவாவின் பெயர் ஆரம்பத்தில் ஓசெயா என்றிருந்தது.
3. எப்பிராயீம் கோத்திரத்தான். (1நாளா 27:20)
4. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (நெகே 10:23)

"எசேக்கியா" (Hezekiah) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் பெலனாயிருக்கிறார்" "Jehovah is strength" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "எசேக்கியா"க்கள்

1. யூதாவின் ராஜா. (2இராஜா 16:20; 2இராஜா 18:1-21:3; 1நாளா 3:19; 1நாளா 4:41; 2நாளா 28:27; 2நாளா 29:1-33:3; நீதி 25:1; ஏசா 1:1; ஏசா 36:1-39:8; எரே 15:4; எரே 26:18-19; ஓசி 1:1; மீகா 1:1)
2. நெயாரியாவின் குமாரன் (1நாளா 3:23)
3. சிறையிருப்புக்குப் போனவன் (எஸ்றா 2:16; நெகே 7:21)

II இராஜாக்கள் - தொகுப்புரை

18 அதிகாரம்

எசேக்கியா செய்த செம்மையான காரியங்கள்

1. தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். *(2இராஜா 18:3)*
2. மேடைகளை அகற்றினான் *(2இராஜா 18:4)*
3. சிலைகளைத் தகர்த்தான்.
4. விக்கிரகத்தோப்புகளை வெட்டினான்.
5. மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்.
6. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் நம்பிக்கை வைத்தான். *(2இராஜா 18:5)*
7. கர்த்தரைச் சார்ந்திருந்தான். *(2இராஜா 18:6)*
8. கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரையே பின்பற்றினான்.
9. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான்

(2) எசேக்கியாவின்கீழ் எழுப்புதல் (18:4-6) - *(2நாளா 29:3-31:21)*

2இராஜா 18:4 அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான்.

2இராஜா 18:5 அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை.

2இராஜா 18:6 அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான்.

"மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பம்" - இந்த வெண்கலச் சர்ப்பம் ஸ்தாபிக்கப்பட்டு 900 வருஷமாயிற்று. இதை இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு விக்கிரகமாக வழிபட ஆரம்பித்து விட்டார்கள்.

(3) எசேக்கியா அசீரியாவுக்கு எதிராக கலகம் பண்ணுகிறான் - *(16:7,18)*

2இராஜா 18:7 ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்.

எசேக்கியாவிற்குக் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர் அவனோடிருந்தார்
2. அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று.
3. எசேக்கியா அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்.
4. பெலிஸ்தரை முறியடித்தான். *(2இராஜா 18:8)*

"அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்" - எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ் அசீரியாவின் ராஜாவுக்குப் பகுதி கட்டினான். *(2இராஜா 16:7-20)*. ஆனால் எசேக்கியாவோ அசீரியா ராஜாவிற்குப் பகுதி கட்ட மறுத்துவிடுகிறான்.

18 அதிகாரம்

(4) எசேக்கியா பெலிஸ்தரை முறியடிக்கிறான் -(2 நாளா 28:16-19)

2 இராஜா 18:8 அவன் பெலிஸ்தரைக் காசாமட்டும் அதின் எல்லைகள் பரியந்தமும், காவலாளர் காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான நகரங்கள் பரியந்தமும் முறிய அடித்தான்.

(5) எசேக்கியா யூதாவில் நான்காம் வருஷம் ஆட்சி செய்தபோது அசீரியர் இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தாரையும் சிறைப் பிடித்துச் சென்றார்கள் - (15:19)

2 இராஜா 18:9 இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஓசெயாவின் ஏழாம் வருஷத்திற்குச் சரியான எசேக்கியா ராஜாவின் நாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சல்மனாசார் சமாரியாவுக்கு விரோதமாய் வந்து அதை முற்றிக்கை போட்டான்.

2 இராஜா 18:10 மூன்று வருஷம் சென்றபின்பு, அவர்கள் அதைப் பிடித்தார்கள்; எசேக்கியாவின் ஆறாம் வருஷத்திலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஓசெயாவின் ஒன்பதாம் வருஷத்திலும் சமாரியா பிடிபட்டது.

2 இராஜா 18:11 அசீரியா ராஜா இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறை பிடித்துக் கொண்டுபோய், கோசான் நதியோரமான ஆலாகிலும் ஆபோரிலும் மேதியரின் பட்டணங்களிலும் குடியேற்றினான்.

2 இராஜா 18:12 அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல், அவருடைய உடன்படிக்கையையும் கர்த்தரின் தாசனாகிய மோசே கற்பித்த யாவற்றையும் மீறி, அதற்குச் செவிகொடாமலும் அதின்படி செய்யாமலும் போனார்கள்.

"அசீரியா ராஜா இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறைபிடித்துக் கொண்டுபோய்" - அசீரியர்கள் யுத்தத்தில் ஜெயிக்கும்போது, தோற்றுப்போன தேசத்தின் ஜனங்களைச் சிறைப்பிடித்துச் செல்வது வழக்கம். ஜனங்களைச் சிறைப்பிடித்து வேறு இடங்களில் குடியேற்றி விடுவார்கள். கல்தேயர்களை அர்மேனியாவிலும், யூதர்களை அசீரியாவிலும், மேதியாவிலும், அரபியரையும், பாபிலோனியரையும், பெர்சியரையும், சமாரியாவிலும் குடியேற்றினார்கள். இதனால் அவர்களுடைய கலகக்குணம் குறைந்து போயிற்று. ஏதாவது ஒரு ஜாதி கலகம் பண்ணினால், அவர்களை வேறு ஊரில் குடியேற்றிவிடுவார்கள். (2 இராஜா 17:1-23)

இஸ்ரவேல் தேசம் சிறைப்பட்டதற்குக் காரணம்

1. தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை.
2. கர்த்தருடைய உடன்படிக்கையை மீறினார்கள்.
3. மோசே கற்பித்த யாவற்றையும் மீறினார்கள்.
4. மோசே கற்பித்ததற்கு செவிகொடாமலும் அதின்படி செய்யாமலும் போனார்கள்.

(6) பத்து வருஷ சமாதானத்தின் முடிவு - யூதாவின்மீது அசீரியரின் முதலாவது படையெடுப்பு - (வசனம் 9; 2 நாளா 32; ஏசா 36:1; 2 இராஜா 15:19)

2 இராஜா 18:13 யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் பதினாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாய் வந்து அவைகளைப் பிடித்தான்.

18 அதிகாரம்

"எசேக்கியாவின் பதினாலாம் வருஷத்திலே" - பத்துக் கோத்திரத்தார் சிறையிருப்புக்குப் போய் எட்டு வருஷங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. எசேக்கியா அசீரிய ராஜாவிடம் பகுதி கட்ட சம்மதிக்கிறான். அசீரிய ராஜாவுக்கு எசேக்கியா எதிர்த்துநின்றிருந்தால், சனகெரிப் யூதா ஜனங்களையும் சிறைப்பிடித்துச் சென்றிருப்பான். எசேக்கியா கர்த்தரை விசுவாசித்தான். கர்த்தர் அவனுக்கு அசீரியர்மீது வெற்றியைத் தந்தார். ஆனாலும் 125 வருஷங்களுக்குப் பின்பு, யூதர்கள் பாபிலோன் தேசத்திற்கு அடிமைகளானார்கள். (2இராஜா 24-25).

"யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்கள்" - எருசலேம் பட்டணம் தவிர. (2இராஜா 19:24).

(7) எசேக்கியா கீழ்ப்படிந்து அசீரியருக்கு பகுதிப்பணம் கட்டுகிறான் - ஆனால் அது போதவில்லை

2இராஜா 18:14 அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா லாகீசிலுள்ள அசீரியா ராஜாவுக்கு ஆள் அனுப்பி: நான் குற்றஞ்செய்தேன்; என்னைவிட்டுத் திரும்பிப்போம்; நீர் என்மேல் சுமத்துவதைச் சுமப்பேன் என்று சொன்னான்; அப்படியே அசீரியா ராஜா யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின்மேல் முந்நூறு தாலந்து வெள்ளியையும் முப்பது தாலந்து பொன்னையும் சுமத்தினான்.

2இராஜா 18:15 ஆதலால் எசேக்கியா கர்த்தரின் ஆலயத்திலும் ராஜாவுடைய அரமனை பொக்கிஷங்களிலும் அகப்பட்ட எல்லா வெள்ளியையும் கொடுத்தான்.

2இராஜா 18:16 அக்காலத்திலே யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா கர்த்தருடைய ஆலயக்கதவுகளிலும் நிலைகளிலும் தான் அழுத்தியிருந்த பொன் தகடுகளைக் கழற்றி அவைகளை அசீரியா ராஜாவுக்குக் கொடுத்தான்.

"நான் குற்றஞ்செய்தேன்; என்னைவிட்டுத் திரும்பிப்போம்" - அசீரியா ராஜா யூதாவின் அரணான சகல பட்டணங்களையும் பிடித்துக் கொண்டான். (2இராஜா 18:13) அசீரியாவிற்கு எதிராகத் தான் கலகம் செய்ததை எசேக்கியா ஒப்புக்கொள்கிறான். அசீரியா ராஜா கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்வதாகவும் கூறுகிறான். அசீரியா ராஜா யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின்மேல் முந்நூறு தாலந்து வெள்ளியையும் முப்பது தாலந்து பொன்னையும் சுமத்தினான்.

(8) யூதா நிந்திக்கப்பட்டது - (2நாளா 32:9-16; ஏசா 36:4-10)

2இராஜா 18:17 ஆகிலும் அசீரியா ராஜா லாகீசிலிருந்து தர்தானையும் ரப்சாரீசையும் ரப்சாக்கேயையும் பெரிய சேனையோடே எருசலேமுக்கு எசேக்கியா ராஜாவினிடத்தில் அனுப்பினான்; அவர்கள் எருசலேமுக்கு வந்து, வண்ணார் துறையின் வழியிலுள்ள மேல்குளத்துச் சாலகத்தண்டையிலே நின்று,

2இராஜா 18:18 ராஜாவை அழைப்பித்தார்கள்; அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை விசாரிப்புக்காரனும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரனாகிய யோவாக் என்னும் கணக்கனும் அவர்களிடத்திற்குப் புறப்பட்டுப் போனார்கள்.

2இராஜா 18:19 ரப்சாக்கே அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவாகிய மகா ராஜாவானவர் உரைக்கிறதும், நீங்கள் எசேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியதும் என்னவென்றால்: நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?

II இராஜாக்கள் - தொகுப்புரை

18 அதிகாரம்

2இராஜா 18:20 யுத்தத்திற்கு மந்திராலோசனையும் வல்லமையும் உண்டென்று நீ சொல்லுகிறாயே, அது வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல; நீ என்னை விரோதிக்கும்படி யார்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய்?

2இராஜா 18:21 இதோ, நெரிந்த நாணல்கோலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய்; அதின்மேல் ஒருவன் சாய்ந்தால், அது அவன் உள்ளங்கையில் பட்டு உருவிப்போம்; எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்கும் இப்படியே இருப்பான்.

2இராஜா 18:22 நீங்கள் என்னிடத்தில்: எங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புகிறோம் என்று சொல்லுவீர்களாகில், அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் அல்லவோ எசேக்கியா அகற்றி, யூதாவையும் எருசலேமையும் நோக்கி: எருசலேமிலிருக்கிற இந்தப் பலிபீடத்தின்முன் பணியுங்கள் என்றானே.

2இராஜா 18:23 நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன்; நீ அவைகள்மேல் ஏறத் தக்கவர்களைச் சம்பாதிக்கக் கூடுமானால் அசீரியா ராஜாவாகிய என் ஆண்டவனோடே சபதங்கூறு.

2இராஜா 18:24 கூறாதேபோனால், நீ என் ஆண்டவனுடைய ஊழியக்காரரில் ஒரே ஒரு சிறிய தலைவனின் முகத்தை எப்படித் திருப்புவாய்? இரதங்களோடு குதிரைவீரரும் வருவார்கள் என்று எகிப்தையா நம்புகிறாய்?

2இராஜா 18:25 இப்போதும் கர்த்தருடைய கட்டளையில்லாமல் இந்த ஸ்தலத்தை அழிக்கவந்தேனோ? இந்த தேசத்திற்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப்போடு என்று கர்த்தர் என்னோடே சொன்னாரே என்றான்.

"அசீரியா ராஜா லாகீசிலிருந்து .... பெரிய சேனையோடே எருசலேமுக்கு எசேக்கியா ராஜாவினிடத்தில் அனுப்பினான்" - அசீரியருடைய ஆவணங்களின் பிரகாரம் அசீரியரின் ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியாவின் பகுதியை அங்கிகரித்து, அவன்மீது யுத்தம் பண்ணுவதைத் தவிர்த்து, நினிவேக்குத்திரும்பிச் சென்று விடுகிறான். யுத்தம் தவிர்க்கப்படுவதினால் எசேக்கியாவிற்கு மறுபடியும் தைரியம் பிறக்கிறது. எசேக்கியா அசீரிய ராஜாவோடு செய்த ஒப்பந்தத்தை மீறி எகிப்தின் ராஜாவோடு ஒப்பந்தம் பண்ண ஆரம்பிக்கிறான். (2இராஜா 18:21,24; ஏசா 30:3-6; ஏசா 31:1) இது அசீரியருக்கு எதிரான கலகமாகும். ஆகையினால் சனகெரிப் பாலஸ்தீனத்தின்மீது மற்றொரு யுத்தத்திற்கு ஆயத்தமாகிறான். அசீரியாவின் ராஜா லாகீசை முற்றிக்கையிட்டான். எகிப்தின்மீதும் படையெடுத்துச் சென்றான். போகும் வழியில் யூதர்கள் தனக்குக் கட்டுப்பட்டு இருக்கிறார்களாக என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காகச் சனகெரிப் எருசலேமுக்கும் தன் சேனையை அனுப்பினான். (2இராஜா 18:17-25).

"தர்தான்" **(Tartan)** - படைத்தளபதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டப்பெயர்.

"ரப்சாரீஸ்" **(Rab-saris)** - சேனைத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டப்பெயர்.

"ரப்சாக்கே" **(Rab-shakeh)** - சேனையின் சிறிய தலைவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டப்பெயர்.

"நீ என்னை விரோதிக்கும்படி யார்மேல் நம்பிக்கைவைத்திருக்கிறாய்?" - அசீரியர் யூதாவை அவமானப்படுத்துகிறார்கள். எகிப்தையும், கர்த்தரையும் நம்பி தங்களை எதிர்ப்பதற்காகத் தகுந்த பாடம் கற்பிப்போம் என்று அச்சுறுத்துகிறார்கள். யூதருக்கு யுத்தம் பண்ணுவதற்கு வலிமை இல்லை என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். அசீரியர்கள் இரண்டாயிரம் குதிரைகளை யூதருக்குக் கொடுத்தாலும் அவைகள்மேல் ஏறத் தக்கவர்களை அவர்களால் சம்பாதிக்க முடியாது என்று அவமானப்படுத்துகிறார்கள். (2இராஜா 18:23). இஸ்ரவேலின் கர்த்தரே தங்களை இங்கு அனுப்பி, எருசலேமை அழிக்கச் சொன்னார் என்றும் பெருமை பேசுகிறார்கள். (2இராஜா 18:25).

II இராஜாக்கள் - தொகுப்புரை

18 அதிகாரம்

"அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் அல்லவோ எசேக்கியா அகற்றி" - அசீரியருக்குக் கர்த்தரைப் பற்றி சரியாகத் தெரியவில்லை. எசேக்கியா பாகாலின் பலிபீடங்களையும், மேடைகளையும் அகற்றினான்.

"இந்த தேசத்திற்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப்போடு என்று கர்த்தர் என்னோடே சொன்னாரே" - அசீரியர் பெருமையோடு கூறினார்களா அல்லது கர்த்தருடைய தீர்க்கதரிசனங்களைக் கேட்டார்களா என்று தெரியவில்லை. (ஏசா 10:5-19)

(9) யூதாவின் பதில் - (ஏசா 36:11)

2இராஜா 18:26 அப்பொழுது இல்க்கியாவின் குமாரன் எலியாக்கீமும் செப்னாவும் யோவாகும் ரப்சாக்கேயைப் பார்த்து: உமது அடியாரோடே சீரிய பாஷையிலே பேசும், அது எங்களுக்குத் தெரியும்; அலங்கத்திலிருக்கிற ஜனத்தின் செவிகள் கேட்க எங்களோடே யூதபாஷையிலேபேசவேண்டாம்என்றார்கள்.

"உமது அடியாரோடே சீரியபாஷையிலே பேசும்" - எருசலேம் பட்டணத்திற்குள் இருக்கும் ஜனங்கள் அசீரியருடைய பேச்சைக் கேட்டுப் பயப்படுகிறார்கள். அசீரியர் யூதபாஷையில் பேசுவதினால் எருசலேம் ஜனங்கள் அதைப் புரிந்து கொள்கிறார்கள். ஆகையினால் யூதபாஷையில் பேசாமல், எருசலேம் ஜனத்தாருக்குப் புரியாத சீரிய பாஷையிலே பேசுமாறு கூறுகிறார்கள்.

(10) அசீரியர் தேவனை நிந்தித்தார்கள்- (2நாளா 32:17-19; ஏசா 36:12-21)

2இராஜா 18:27 அதற்கு ரப்சாக்கே: உங்களோடுங்கூடத் தங்கள் மலத்தைத் தின்னவும் தங்கள் நீரைக் குடிக்கவும் அலங்கத்திலே தங்கியிருக்கிற மனுஷரண்டைக்கே அல்லாமல், உன் ஆண்டவனண்டைக்கும் உன்னண்டைக்குமா என் ஆண்டவன் இந்த வார்த்தைகளைப் பேச என்னை அனுப்பினார் என்று சொல்லி,

2இராஜா 18:28 ரப்சாக்கே நின்றுகொண்டு யூதபாஷையிலே உரத்த சத்தமாய்: அசீரியா ராஜாவாகிய மகாராஜாவுடைய வார்த்தையைக் கேளுங்கள்.

2இராஜா 18:29 எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள்; அவன் உங்களை என் கையிலிருந்து தப்புவிக்க மாட்டான்.

2இராஜா 18:30 கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார்; இந்த நகரம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, எசேக்கியா உங்களைக் கர்த்தரை நம்பப்பண்ணுவான்; அதற்கு இடங் கொடாதிருங்கள் என்று ராஜா சொல்லுகிறார்.

2இராஜா 18:31 எசேக்கியாவின் சொல்லைக் கேளாதிருங்கள்; அசீரியா ராஜா சொல்லுகிறதாவது: நீங்கள் என்னோடே ராசியாகி, காணிக்கையோடே என்னிடத்தில் வாருங்கள்; நான் வந்து, உங்களை உங்கள் தேசத்துக்கு ஒப்பான தானியமும் திராட்சதோட்டமுமுள்ள தேசமும், அப்பமும் திராட்சரசமுமுள்ள தேசமும், ஒலிவஎண்ணெயும் தேனுமுள்ள தேசமுமாகிய சீமைக்கு அழைத்துக் கொண்டுபோகுமளவும்,

2இராஜா 18:32 அவனவன் தன்தன் திராட்சச்செடியின் கனியையும் தன்தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவனவன் தன்தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள்; இவ்விதமாய் நீங்கள் சாகாமால் பிழைப்பீர்கள்; கர்த்தர் நம்மைத் தப்புவிப்பார் என்று உங்களைப் போதனைசெய்ய எசேக்கியாவுக்குச் செவிகொடாதிருங்கள்.

2இராஜா 18:33 ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ?

2இராஜா 18:34 ஆமாத், அர்பாத் பட்டணங்களின் தேவர்கள் எங்கே? செப்பர்வாயிம், ஏனா, ஈவாப் பட்டணங்களின் தேவர்கள் எங்கே? அவர்கள் சமாரியாவை என் கைக்குத் தப்புவித்ததுண்டோ?

18 அதிகாரம்

2இராஜா 18:35 கர்த்தர் எருசலேமை என் கைக்குத் தப்புவிப்பார் என்பதற்கு, அந்த தேசங்களுடைய எல்லா தேவர்களுக்குள்ளும் தங்கள் தேசத்தை என் கைக்குத் தப்புவித்தவன் யார் என்கிறார் என்று சொன்னான்.

2இராஜா 18:36 ஆனாலும் ஜனங்கள் அவனுக்கு ஒரு வார்த்தையும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்; அவனுக்கு மறுஉத்தரவு சொல்லவேண்டாம் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான்.

2இராஜா 18:37 அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை விசாரிப்புக் காரனும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரன் யோவாக் என்னும் கணக்கனும் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, எசேக்கியாவினிடத்தில் வந்து, ரப்சாக்கேயின் வார்த்தைகளை அவனுக்குத் தெரிவித்தார்கள்.

“உன் ஆண்டவனண்டைக்கும் உன்னண்டைக்குமா” - ஆனால் அசீரிய அதிகாரிகளோ யூதபாஷையில் அதிக சத்தத்தோடு பேசுகிறார்கள். கர்த்தரையும் ராஜாவையும் நிந்திக்கிறார்கள். (2இராஜா 18:27-37)

எசேக்கியாவினுடைய நம்பிக்கையின் ஆதாரம்

1. யுத்தம் பண்ணுவதற்கு அவனுடைய சொந்த பெலன்.
2. தன்னோடு உடன்படிக்கை பண்ணியிருக்கும் தேசத்தாரின் உதவி (2இராஜா 18:21)
3. கர்த்தருடைய தெய்வீக உதவி (2இராஜா 18:30; ஏசா 30:31; ஏசா 31:4-9)

“நான் வந்து, உங்களை உங்கள் தேசத்துக்கு ஒப்பான .... சீமைக்கு அழைத்துக்கொண்டு போகுமளவும்” - யூதர்கள் அனைவரையும் சிறையிருப்புக்குக் கொண்டுபோகும் எண்ணம் அசீரிய ராஜாவிடம் உள்ளது என்பது தெரிய வருகிறது.

“ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது” - அந்நிய தேசங்களில் ஜீவனுள்ள தேவன் இல்லை. அங்கு இருப்பதெல்லாம் விக்கிரகங்களே. இப்போது ஜாதிகளுடைய தேவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு எதிராக வருகின்றன. கர்த்தருடைய வல்லமையினால் ஒரே நாள் இரவில் 1,85,000 பேர் மடிந்து விடுகிறார்கள். கர்த்தருடைய வல்லமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை. (2இராஜா 19:35-37).

“ஆமாத், அர்பாத் பட்டணங்களின் தேவர்கள் எங்கே?” - அசீரியர்கள் யுத்தம் பண்ணும்போது, யுத்தத்தில் தோல்வியுற்ற தேசத்தில் பிரதானமாக இருக்கும் விக்கிரகங்களைத் தங்களுடைய தேசத்திற்குக் கொண்டு வந்துவிடுவார்கள். அந்தத் தெய்வங்களைப்போலவே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும் ஒரு தெய்வமாக நினைக்கிறார்கள். கர்த்தர் சமாரியாவைப் புறஜாதியாரின் சிறையிருப்புக்கு அனுமதித்தார். அவர்களைத் தப்புவிக்கவில்லை. அதுபோல யூதாவையும் கர்த்தர் தப்புவிக்கமாட்டார் என்று அசீரியர் கூறுகிறார்கள். (2இராஜா 18:34-35).

“வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு” - எருசலேமிலுள்ள ஜனங்கள் மௌனமாக இருக்கிறார்கள். (2இராஜா 18:36) அரமனை அதிகாரிகள் தங்களுக்கு வந்த இக்கட்டை நினைத்து தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டார்கள். (2இராஜா 19:1).

19 அதிகாரம்

(11) உதவிக்காக எசேக்கியா தேவனை நோக்கிப் பார்த்தான் - (ஏசா 37:1-4)

2இராஜா 19:1 ராஜாவாகிய எசேக்கியா அதைக்கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்திக்கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து,

2இராஜா 19:2 அரமனை விசாரிப்புக் காரனாகிய எலியாக்கீமையும், சம்பிரதியாகிய செப்னாவையும், ஆசாரியர்களின் மூப்பரையும், ஆமோத்தின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசியினிடத்துக்கு இரட்டு உடுத்திக்கொண்டவர்களாக அனுப்பினான்.

2இராஜா 19:3 இவர்கள் அவனை நோக்கி: இந்த நாள் நெருக்கமும் கண்டிதமும் தூஷணமும் அநுபவிக்கிற நாள்; பிள்ளைபேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை.

2இராஜா 19:4 ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படி அசீரியா ராஜாவாகிய தன் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளையெல்லாம் உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிறார்; உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிற வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்வார்; ஆகையால் இன்னும்மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ்செய்வீராக என்று எசேக்கியா சொல்லச்சொன்னார் என்றார்கள்.

"தன் வஸ்திரங்களைக் கிழித்து" - எசேக்கியா ராஜா தன்னுடைய இக்கட்டான சூழ்நிலையில் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டாலும் கர்த்தரிடத்தில் அவன் வைத்திருக்கும் விசுவாசம் குறையவில்லை. தன் ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுப்பார் என்று பூரணமாக நம்புகிறான்.

"ஏசாயா" (Isaiah) - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் உதவி புரிகிறவர்" **"Jehovah is helper"** என்று பொருள். பழைய ஏற்பாட்டில் 32 தடவையும் (2இராஜா 19:2-20:19; 2நாளா 26:22; 2நாளா 32:20,32; ஏசா 1:1; ஏசா 2:1; ஏசா 7:3; ஏசா 13:1; ஏசா 20:2-3; ஏசா 37:2-39:8). புதிய ஏற்பாட்டில் 21 இடங்களிலும் இந்தப் பெயர் வந்திருக்கிறது. (மத் 3:3; மத்4:14; மத் 8:17; மத் 12:17; மத் 13:14; மத் 15:7; மாற்கு 7:6; லூக்கா 3:4; லூக்கா 4:17; யோவான் 1:23; யோவான் 12:38-41; அப் 8:28-30; அப் 28:25; ரோமர் 9:27-29; ரோமர் 10:16-20; ரோமர் 15:12). புதிய ஏற்பாட்டில் ஏசாயா என்னும் பெயர் ஆங்கிலத்தில் **"Esaias"** என்றுள்ளது.

வரலாற்றுப் புஸ்தகங்களில் ஏசாயாவின் பெயர் முதன் முறையாக இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயினும் ஏசாயா எசேக்கியாவிற்கு முன்பாகவே மூன்று ராஜாக்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான். (ஏசா 1:1) ஏசாயாவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் ராஜாக்கள் புஸ்தகத்தில் 2இராஜா 10:5-19; 2இராஜா 14:24-27; 2இராஜா 22:1-25; 2இராஜா 36:1-37:38 ஆகிய வசனங்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளாகும்.

எசேக்கியாவின் மனுஷர் ஏசாயாவிடம் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. இந்த நாள் நெருக்கமான நாள்.
2. இந்த நாள் கண்டிதமான நாள்.
3. இந்த நாள் தூஷணமான நாள்.
4. பிள்ளைபேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை.
5. ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படி அசீரியா ராஜா சொன்ன வார்த்தைகளைக் கர்த்தர் கேட்டிருக்கிறார். (2இராஜா 19:4)
6. தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிற வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்வார்.
7. இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ்செய்வீராக.

II இராஜாக்கள் - தொகுப்புரை

19 அதிகாரம்

(12) அசீரியர் தோல்வியடைவார்கள் என்னும் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் - (ஏசா 37:5-7)

2இராஜா 19:5 இவ்விதமாய் எசேக்கியா ராஜாவின் ஊழியக்காரர் ஏசாயாவினிடத்தில் வந்து சொன்னார்கள்.

2இராஜா 19:6 அப்பொழுது ஏசாயா அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்.

2இராஜா 19:7 இதோ, அவன் ஒரு செய்தியைக்கேட்டு, தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப் பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்பதை உங்கள் ஆண்டவனிடத்தில் சொல்லுங்கள் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 18

"அசீரியா ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்......." (2இராஜா 19:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அவன் ஒரு செய்தியைக்கேட்பான். (2இராஜா 19:7)
2. தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்புவேன்.
3. அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன்.

(13) சனகெரிப் தேவனைத் தூஷிக்கிறான் - (ஏசா 37:8-13)

2இராஜா 19:8 அசீரியா ராஜா லாகீசைவிட்டுப் புறப்பட்டான் என்று கேள்விப்பட்டு, ரப்சாக்கே திரும்பிப்போய்,அவன் லிப்னாவின்மேல் யுத்தம் பண்ணுகிறதைக் கண்டான்.

2இராஜா 19:9 இதோ, எத்தியோப்பியா ராஜாவாகிய தீராக்கா உம்மோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டான் என்று சொல்லக் கேள்விப்பட்டான்; அப்பொழுது அவன் திரும்ப எசேக்கியாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி:

2இராஜா 19:10 நீங்கள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், எருசலேம் அசீரியா ராஜாவின் கையில், ஒப்புக் கொடுக்கப்படுவதில்லையென்று நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை எத்த ஒட்டாதே.

2இராஜா 19:11 இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்கரித்த செய்தியை நீ கேட்டிருக்கிறாயே, நீ தப்புவாயோ?

2இராஜா 19:12 என் பிதாக்கள் அழித்து விட்ட கோசேனையும் ஆரானையும் ரேத்சேப்பையும், தெலாசாரிலிருந்த ஏதேனின் புத்திரரையும் அவர்களுடைய தேவர்கள் தப்புவித்ததுண்டோ?

2இராஜா 19:13 ஆமாத்தின் ராஜாவும், அர்பாத்தின் ராஜாவும், செப்பர்வாயிம் ஏனா ஈவா பட்டணங்களின் ராஜாவும் எங்கே? என்று சொல்லுங்கள் என்றான்.

"எத்தியோப்பியா ராஜாவாகிய தீராக்கா உம்மோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டான் என்று சொல்லக்கேள்விப்பட்டான்" - ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாகக் கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறிற்று. அசீரியாவின் ராஜா ஒரு செய்தியைக் கேள்விப்படுகிறான். (2இராஜா 19:7)

19 அதிகாரம்

(14) எசேக்கியா மறுபடியும் ஜெபிக்கிறான் - (வசனம் 1; 2நாளா 32:20; ஏசா 37:14-20)

2இராஜா 19:14 எசேக்கியா ஸ்தானாபதிகளின் கையிலிருந்து நிருபத்தை வாங்கி வாசித்தபின்பு, அவன் கர்த்தரின் ஆலயத்திற்குப்போய், அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்து,

2இராஜா 19:15 கர்த்தரை நோக்கி: கேருபீன்களின் மத்தியில் வாசம் பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்.

2இராஜா 19:16 கர்த்தாவே, உமது செவியைச்சாய்த்துக் கேளும்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும்; சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகளைக் கேளும்.

2இராஜா 19:17 கர்த்தாவே, அசீரியா ராஜாக்கள் அந்த ஜாதிகளையும் அவர்கள் தேசத்தையும் நாசமாக்கி,

2இராஜா 19:18 அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்டது மெய்தான்; அவைகள் தேவர்கள் அல்லவே, மனுஷர் கைவேலையான மரமும் கல்லும்தானே; ஆகையால் அவைகளை நிர்த்தூளியாக்கினார்கள்.

2இராஜா 19:19 இப்போதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம் பண்ணினான்.

"அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்து" - அசீரிய ராஜாவின் நிருபத்தை எசேக்கியா வாசித்து, அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்து ஜெபிக்கிறான். தன்னுடைய பிரச்சனையைக் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான். இது எசேக்கியாவிடம் காணப்பட்ட நல்ல சுபாவமாகும். (2இராஜா 19:1,2,14; 2இராஜா 20:2).

எசேக்கியாவின் விண்ணப்பம்

1. கர்த்தாவே, உமது செவியைச்சாய்த்துக் கேளும்.
2. கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும்.
3. சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தை களைக்கேளும்.
4. எங்களை சனகெரிப்பின் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் (2இராஜா 19:19)

(15) ஏசாயாவின் இரண்டாவது தீர்க்கதரிசனம் - அசீரியர் தோல்வியடைவார்கள் - (ஏசா 37:21-35; 2இராஜா 19:5-7)

2இராஜா 19:20 அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா எசேக்கியாவுக்குச் சொல்லி யனுப்பினது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், அசீரியா ராஜாவாகிய சனகெரிப்பின்நிமித்தம் நீ என்னை நோக்கிப்பண்ணின விண்ணப்பத்தைக் கேட்டேன்.

2இராஜா 19:21 அவனைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிற வசனமாவது: சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ உன்னை இகழ்ந்து, உன்னைப் பரிகாசம்பண்ணுகிறாள்; எருசலேம் குமாரத்தி உன் பின்னாலே தலையைத்துலுக்குகிறாள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

19 அதிகாரம்

2இராஜா 19:22 யாரை நிந்தித்துத் தூஷித்தாய்? யாருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தினாய்? நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாயல்லவோ உன் கண்களை மேட்டிமையாக ஏறெடுத்தாய்?

2இராஜா 19:23 உன் ஸ்தானாபதிகளைக் கொண்டு நீ ஆண்டவரை நிந்தித்து: என் இரதங்களின் திரளினாலே நான் மலைகளின் கொடுமுடிகளுக்கும் லீபனோனின் சிகரங்களுக்கும் வந்து ஏறினேன்; அதின் உயரமான கேதுருமரங்களையும், உச்சிதமான தேவதாரி விருட்சங்களையும் நான் வெட்டி, அதின் கடையாந்தரத் தாபரமட்டும், அதின் செழுமையான வனமட்டும் வருவேன் என்றும்,

2இராஜா 19:24 நான் அந்நியதேசங்களில் கிணறுவெட்டி தண்ணீர் குடித்தேன்; என் உள்ளங்கால்களினால் அரணிப்பான இடங்களின் அகழிகளையெல்லாம் வறளவும் பண்ணினேன் என்றும் சொன்னாய்.

2இராஜா 19:25 நான் வெகு காலத்திற்கு முன் அதைநியமித்து, பூர்வநாட்கள்முதல் அதைத்திட்டம் பண்ணினேன் என்பதை நீ கேட்டதில்லையோ? இப்பொழுது நீ அரணான பட்டணங்களைப் பாழான மண்மேடுகள் ஆக்கும்படிக்கு நானே அதைச் சம்பவிக்கப்பண்ணினேன்.

2இராஜா 19:26 அதினாலே அவைகளின் குடிகள் கையிளைத்தவர்களாகி, கலங்கி வெட்கப்பட்டு, வெளியின் பூண்டுக்கும், பச்சிலைக்கும், வீடுகளின்மேல் முளைக்கும் புல்லுக்கும், ஓங்கிவளருமுன் தீய்ந்துபோன பயிருக்கும் சமானமானார்கள்.

2இராஜா 19:27 உன் இருப்பையும், உன் போக்கையும், உன் வரவையும், நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன்.

2இராஜா 19:28 நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளித்து, வீரியம் பேசினது என் செவிகளில் ஏறினபடியினால், நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன் வாயிலும் போட்டு, நீ வந்தவழியே உன்னைத் திருப்பிக் கொண்டு போவேன் என்று அவனைக்குறித்துச் சொல்லுகிறார்.

2இராஜா 19:29 உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்: இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள்; மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.

2இராஜா 19:30 யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள்.

2இராஜா 19:31 மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலும் இருந்து புறப்படுவார்கள்; சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச் செய்யும்.

2இராஜா 19:32 ஆகையால் கர்த்தர் அசீரியா ராஜாவைக்குறித்து: அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்குமுன் கேடகத்தோடே வருவதுமில்லை; இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை.

2இராஜா 19:33 அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான்.

2இராஜா 19:34 என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு, இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லியனுப்பினான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

19 அதிகாரம்

"ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா எசேக்கியாவுக்குச் சொல்லியனுப்பினது" - எசேக்கியா அசீரிய ராஜாவின் நிருபத்தைக் கர்த்தருடைய சமுகத்தில் சமர்ப்பித்து ஜெபிக்கிறான். அப்போது கர்த்தருடைய வார்த்தை ஏசாயாவின் மூலமாக எசேக்கியாவிற்கு வருகிறது. (2 இராஜா 19:20-34).

"நீ என்னை நோக்கிப்பண்ணின விண்ணப்பத்தைக் கேட்டேன்" - கர்த்தரை முழுவதுமாக நம்பி, அவரிடத்தில் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களைக் கர்த்தர் கேட்டு, அதற்கு ஏற்ற பதிலையும் தருகிறார். தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரம் ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்குக் கர்த்தர் எப்போதுமே ஆம் என்றும், ஆமென் என்றும் பதில் தருகிறார். எசேக்கியாவைப் பாதுகாப்பதாகவும், அவனுக்கு தாம் என்ன செய்யப்போகிறோம் என்பதையும் குறித்து கர்த்தர் ஏற்கெனவே வாக்குப் பண்ணியிருக்கிறார். (2 இராஜா 19:7). எசேக்கியாவின் விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் கர்த்தருடைய வார்த்தை ஆதாரமாக இருக்கிறது. நாமும் கர்த்தருடைய வார்த்தையின்படி ஜெபிக்கும்போது, கர்த்தர் நமது ஜெபத்திற்கும் பதில் கொடுப்பார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:4-8; 1யோவான் 1:13-14; 1யோவான் 5:21-22).

"இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய ல்லவோ" - அசீரியர் தமக்கு எதிராகத் தூஷண வார்த்தை பேசுகிறதைக் கேட்டு, கர்த்தர் அவர்களை நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருக்கிறார். (2 இராஜா 19:22-24).

"நான் வெகுகாலத்திற்குமுன் அதை நியமித்து, பூர்வநாட்கள்முதல் அதைத்திட்டம் பண்ணினேன்" - அசீரியருக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகள் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் கர்த்தர் அனுமதித்திருக்கும் வெற்றிகளாகும். இஸ்ரவேலைச் சிட்சிப்பதற்காகக் கர்த்தர் அசீரியரைப் பயன்படுத்தியிருக்கிறார். (2 இராஜா 19:25-26). கர்த்தர் சர்வ சிருஷ்டிக்கும் எஜமானாக இருக்கிறார். தம்முடைய சித்தத்தை உலகம் முழுவதிலும் தமது விருப்பத்தின் பிரகாரம் நிறைவேற்றுகிறார். ஆகையினால் கர்த்தருடைய சித்தம் நிறைவேறும்போது அதில் மனுஷர் பெருமைப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. (1கொரி 15:24-28; எபே 1:10; எபே 3:11).

எல்லா மனுஷரைப் பற்றியும் கர்த்தர் அறிந்திருக்கும் காரியங்கள்

1. மனுஷருடைய இருப்பு
2. மனுஷருடைய போக்கு
3. மனுஷருடைய வரவு
4. தமக்கு விரோதமாய்க் கொந்தளிப்பது.

தீர்க்கதரிசன எண் - 19

"நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளித்து, வீரியம் பேசினது என் செவிகளில் ஏறின படியினால்,............" (2 இராஜா 19:28-34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எசேக்கியாவிற்கும், சனகெரிப்பிற்கும் கர்த்தருடைய முன்னறிவிப்புக்கள்

1. நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன் (சனகெரிப்) வாயிலும் போட்டு, நீ வந்தவழியே உன்னைத் திருப்பிக் கொண்டு போவேன் (2 இராஜா 19:28)
2. (இஸ்ரவேலே நீங்கள்) இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள் (2 இராஜா 19:29)
3. (இஸ்ரவேலே நீங்கள்) மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப்புசிப்பீர்கள்.
4. யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள். (2 இராஜா 19:30)

II இராஜாக்கள் - தொகுப்புரை

19 அதிகாரம்

5. மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலும் இருந்து புறப்படுவார்கள் (2இராஜா 19:31)

6. அவன் (அசீரியாவின் ராஜா) இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை (2இராஜா 19:32)

7. (அசீரியாவின் ராஜா) இதின்மேல் அம்பு எய்வதுமில்லை. இதற்குமுன் கேடகத்தோடே வருவதுமில்லை.

8. இதற்கு எதிராகக் (அசீரியாவின் ராஜா) கொத்தளம் போடுவதுமில்லை.

9. அவன் (அசீரியா ராஜா) இந்த நகரத்திற்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான். (2இராஜா 19:33)

10. என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு, இதற்கு ஆதரவாயிருப்பேன். (2இராஜா 19:34)

"நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன் வாயிலும் போட்டு" - அசீரியரும், பாபிலோனியரும் தங்களுடைய கைதிகளின் மூக்கில் துறட்டையும், வாயில் கடிவாளத்தையும் போடுவது வழக்கம். இந்தக் கடிவாளங்களை ஒரு கயிற்றில் கட்டி, கைதிகளை இழுத்துச் செல்வார்கள். அசீரியர் கீழ் உதடுகளிலும், பாபிலோனியர் மூக்கிலும் துறடுகளைப் போடுவது வழக்கம். மற்றவர்களுக்குக் கொடுத்த அதே தண்டனையைக் கர்த்தர் சனகெரிப்பிற்குக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். ஆனால் கர்த்தர் சனகெரிப்பின் மூக்கில் துறட்டையோ, அவன் வாயில் கடிவாளத்தையோ போடவில்லை. சனகெரிப்பின் தோல்வியும், தாழ்த்தப்படுவதும் இங்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது.

"உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்" - இஸ்ரவேல் தேசம் அசீரியரின் பிடியிலிருந்து விடுதலையாகும் என்பதற்குக் கர்த்தர் அடையாளத்தையும் கொடுக்கிறார். வயல்வெளிகளுக்குச் சென்று தானியங்களைச் சேகரிக்கும் அளவிற்கு இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலை உண்டாயிருக்கும். இரண்டு வருஷங்களுக்கு அவர்களை ஒடுக்குவார் யாரும் இருக்கமாட்டார்கள். மூன்றாம் வருஷத்திலோ அவர்களே விதைத்து, அறுத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். மீதியாயிருக்கிறவர்கள் யூதாவில் இயல்பான வாழ்க்கை வாழ்வார்கள். (2இராஜா 19:30-31). முன்னறிவித்த பிரகாரம் இந்தச் சம்பவம் நிறைவேறுகிறது. 125 வருஷங்களுக்குப் பின்பே யூதாவின் ஜனங்கள் சிறையிருப்புக்குப் போகிறார்கள். (2இராஜா 24-25).

"அசீரியா ராஜா..... அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை" - இந்த வாக்கியம் 2இராஜா 19:35-37 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று.

வேதாகமத்தில் "நிமித்தம்" "Sake" என்னும் வார்த்தையின் பயன்பாடு

1. யோசேப்பின் நிமித்தம் (ஆதி 39:5)

2. இஸ்ரவேலின் நிமித்தம் (யாத் 18:8; 2சாமு 5:12)

3. தாவீதின் நிமித்தம் (1இராஜா 11:12,13, 32,34; 1இராஜா 15:4; 2இராஜா 8:19; 2இராஜா 19:34; 2இராஜா 20:6)

4. தேவன் நிமித்தம் (2இராஜா 19:34; 2இராஜா 20:6)

5. அவருடைய நாமத்தின் நிமித்தம் (சங் 23:3; எசே 20:9,14,22; மத் 10:22; 1யோவான் 2:12)

6. தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் நிமித்தம் (மத் 24:22)

7. இயேசுவின் நிமித்தம் (2கொரி 4:5,11)

8. கிறிஸ்துவின் நிமித்தம் (2கொரி 12:10; எபே 4:32; ரோமர் 15:30)

9. சுவிசேஷத்தின் நிமித்தம் (2கொரி. 9:23)

II இராஜாக்கள் - தொகுப்புரை

19 அதிகாரம்

10. மனச்சாட்சியின் நிமித்தம் (ரோமர் 13:5; 2கொரி 10:25,27,28)

11. அவருடைய சரீரத்தின் நிமித்தம் (கொலோ 1:24)

12. அன்பின் நிமித்தம் (பிலே 1:9)

13. கர்த்தரின் நிமித்தம் (1பேதுரு 2:13)

14. நீதியின் நிமித்தம் (1பேதுரு 3:14)

15. சத்தியத்தின் நிமித்தம் (2யோவான் 1:2)

16. என்னுடைய நாமத்தின் நிமித்தம் (வெளி 2:3)

(16) **அசீரியர்கள் அற்புதத்தினால் தோல்வியடைந்தார்கள்** - (2நாளா 32:21; ஏசா 37:36; 2இராஜா 19:5,20)

2இராஜா 19:35 அன்று இராத்திரியில் சம்பவித்தது என்னவென்றால்: கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம்பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்.

2இராஜா 19:36 அப்பொழுது அசீரியா ராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டு, திரும்பிப்போய் நினிவேயில் இருந்து விட்டான்.

2இராஜா 19:37 அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்து கொள்ளுகிறபோது, அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டு, ஆரராத் தேசத்திற்குத் தப்பி ஓடிப்போனார்கள்; அவன் குமாரனாகிய எசரேத்தோன் அவன் பட்டத்திற்கு வந்து அரசாண்டான்.

"அன்று இராத்திரியில்" - 2இராஜா 19:28-34 ஆகிய வசனங்களில் உள்ள தீர்க்கதரிசனம் கூறப்பட்ட அன்று இரவில். கர்த்தர் தமது தூதனை அனுப்பி, அசீரியரில் 1,85,000பேரைக் கொன்றுபோட்டார். இதனால் சனகெரிப் எருசலேமின்மீது யுத்தம் பண்ணாமல் திரும்பிப்போய்விட்டான். 2இராஜா 19:32-34 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (2இராஜா 19:35-37).

"நினிவேயில் இருந்துவிட்டான்" - சனகெரிப் நினிவேயில் இருந்தாலும் அதன் பின்பு, பாபிலோன் போன்ற தேசங்கள்மீது யுத்தம் பண்ணினான். பாலஸ்தீனத்திற்கு எதிராக அவன் மறுபடியும் யுத்தம் பண்ண வரவில்லை.

"தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்துகொள்ளுகிறபோது" - பாலஸ்தீனத்தின்மீது யுத்தம் பண்ண வந்து, பின்பு, நினிவேக்குத் திரும்பிப்போன சில வருஷங்களுக்குப் பின்பு சனகெரிப்பை அவனுடைய குமாரர் பட்டயத்தினால் வெட்டிக் கொன்றுபோட்டார்கள்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

20 அதிகாரம்

(17) எசேக்கியாவின் வியாதியும் அவன் குணமாவதுபற்றிய தீர்க்கதரிசனமும் - (2நாளா 32:24-25; ஏசா 38:1-6)

2இராஜா 20:1 அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 20:2 அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி:

2இராஜா 20:3 ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்.

2இராஜா 20:4 ஏசாயா பாதி முற்றத்தை விட்டு அப்புறம் போகிறதற்குமுன்னே, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர் சொன்னது:

2இராஜா 20:5 நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய்.

2இராஜா 20:6 உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என்நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின்நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல் என்றார்.

2இராஜா 20:7 பின்பு ஏசாயா: அத்திப்பழத்து அடையைக் கொண்டு வாருங்கள் என்றான்; அதை அவர்கள் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப் போட்டபோது அவன் பிழைத்தான்.

“எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்” - எசேக்கியாவின் 14 ஆம் வருஷ ராஜ்யபாரத்தில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. சனகெரிப் எசேக்கியாவின்மீது யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறான். (2இராஜா 18:13) இந்த நிகழ்ச்சி 2இராஜா 19:35-37 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் மீட்புக்கு முன்பாக நடைபெறுகிறது. எசேக்கியாவிற்கு வியாதி வந்துவிடுகிறது. மரணப் படுக்கையில் இருக்கிறான். தீர்க்கதரிசியாகிய ஏசாயா எசேக்கியாவைப் பார்த்து, “நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்” என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறான். ஆனால் எசேக்கியாவோ கர்த்தருடைய சமுகத்தில் அழுது விண்ணப்பம் பண்ணுகிறான். கர்த்தர் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு அவனுடைய வியாதியைக் குணமாக்கி, அவனுடைய ஜீவனுக்கு 15 வருஷத்தைக் கூட்டித் தருகிறார். இதனால் எசேக்கியா மொத்தம் 29 வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணுகிறான். (2இராஜா 18:2,13; 2இராஜா 20:6).

தீர்க்கதரிசன எண் - 20

“நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்கு படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்” (2இராஜா 20:1) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ஜெபத்தின் வல்லமையினால் தீர்க்கதரிசன வார்த்தை மாற்றமடையும் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு. (2இராஜா 20:1 = 2இராஜா 20:3-6).

20 அதிகாரம்

"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து" - ஏசாயா தீர்க்கதரிசனம் கூறியவுடன் எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ண ஆரம்பித்து விடுகிறான். ஏசாயா பாதி முற்றத்தைக்கூட இன்னும் கடந்து செல்லவில்லை. *(2இராஜா 20:4).* அதற்குள் எசேக்கியாவின் ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுத்து விடுகிறார்.

எசேக்கியாவின் விண்ணப்பம்

1. நான் உமக்கு முன்பாக உண்மையாய் நடந்தேன்.
2. மன உத்தமுமாய் நடந்தேன்.
3. உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன்.

தீர்க்கதரிசன எண் - 21

"உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்..............." *(2இராஜா 20:5-6)* இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உன்னைக் குணமாக்குவேன்,
2. உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன் *(2இராஜா 20:6)*
3. உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவிப்பேன்.
4. என்நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின்நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன்

"உன் தகப்பனாகிய தாவீது" - எசேக்கியாவிற்குப் பின்பு அவனுடைய சிங்காசனத்தில் அமர்வதற்கு அவனுக்கு வாரிசு இல்லை. மனாசே ராஜ்யபாரம் பண்ணிய போது, அவனுக்கு 12 வயது ஆயிற்று. *(2இராஜா 21:1)* ஆகையினால், எசேக்கியா இந்த ஜெபத்தை ஏறெடுத்தபோது, அவனுக்கு இன்னும் பிள்ளை எதுவும் பிறக்கவில்லை. கர்த்தர் எசேக்கியாவினுடைய ஜீவியத்தில் 15 வருஷத்தைக் கூட்டிக் கொடுக்கிறார். 2சாமு 7:12-16 ஆகிய வசனங்களில் கர்த்தர் தாவீதுக்குக் கொடுத்த வார்த்தைகளை எசேக்கியா நினைவுகூர்ந்து, அதன் பிரகாரம் ஜெபிக்கிறான்.

"அத்திப்பழத்து அடை" - அத்திப்பழத்து அடையைப் போட்டதினால் எசேக்கியாவின் ஜீவன் 15 வருஷம் கூடவில்லை. அவனுடைய சரீரத்திலுள்ள வியாதியைச் சுத்திகரிப்பதற்கே இந்த அடை போடப்படுகிறது.

(18) எசேக்கியாவின் குணமாதலுக்கு அற்புதஅடையாளம்-*(ஏசா 38:7-8)*

2இராஜா 20:8 எசேக்கியா ஏசாயாவை நோக்கி: கர்த்தர் என்னைக் குணமாக்குவதற்கும், மூன்றாம் நாளிலே நான் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவதற்கும் அடையாளம் என்ன என்றான்.

2இராஜா 20:9 அதற்கு ஏசாயா: கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின் படியே செய்வாரென்பதற்கு, கர்த்தரால் உனக்கு உண்டாகும் அடையாளமாகச் சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போக வேண்டுமோ, பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவேண்டுமோ என்று கேட்டான்.

2இராஜா 20:10 அதற்கு எசேக்கியா: சாயை பத்துப் பாகை முன்னிட்டுப்போகிறது லேசானகாரியம்; அப்படி வேண்டாம்; சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவேண்டும் என்றான்.

2இராஜா 20:11 அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்.

20 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 22

"கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு" (2இராஜா 20:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (2இராஜா 20:11).

"சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்ப வேண்டும்" - இந்த அற்புதம் நடைபெற வேண்டுமென்றால், அந்த நாளில் பூமியானது பத்துப்பாகை பின்னோக்கிச் செல்ல வேண்டும். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் பூமியை முன்னாகவோ, பின்னாகவோ திருப்புவதற்கு வல்லவர். பூமி கர்த்தருடைய சிருஷ்டிப்பு. அவருடைய வார்த்தைக்குச் சர்வ சிருஷ்டியும் கீழ்ப்படியும்.

(19) யூதாவின் சிறையிருப்பைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனம் - (2நாளா 32:31; ஏசா 39:1-8)

2இராஜா 20:12 அக்காலத்தில் பலாதானின் குமாரனாகிய பெரோதாக்பலாதான் என்னும் பாபிலோனின் ராஜா எசேக்கியா வியாதிப்பட்டிருக்கிறதைக் கேட்டு, அவனிடத்துக்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான்.

2இராஜா 20:13 எசேக்கியா அவர்களை அங்கிகரித்து, பின்பு அவர்களுக்குத் தன் பொக்கிஷசாலை அனைத்தையும், வெள்ளியையும், பொன்னையும்,கந்த வர்க்கங்களையும், நல்ல பரிமள தைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும் தன் பொக்கிஷ சாலைகளிலுள்ள எல்லாவற்றையும் காண்பித்தான்; தன் அரமனையிலும் தன் ராஜ்யத்தில் எங்கும் எசேக்கியா அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை.

2இராஜா 20:14 அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவினிடத்தில் வந்து: அந்த மனுஷர் என்ன சொன்னார்கள் எங்கேயிருந்து உம்மிடத்தில் வந்தார்கள் என்று கேட்டான். அதற்கு எசேக்கியா: பாபிலோன் என்னும் தூரதேசத்திலிருந்து வந்தார்கள் என்றான்.

2இராஜா 20:15 அப்பொழுது அவன்: உம்முடைய வீட்டில் என்னத்தைப் பார்த்தார்கள் என்று கேட்டான். அதற்கு எசேக்கியா: என் வீட்டிலுள்ள எல்லாவற்றையும் பார்த்தார்கள்; என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை என்றான்.

2இராஜா 20:16 அப்பொழுது ஏசாயா எசேக்கியாவை நோக்கி: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்.

2இராஜா 20:17 இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும்.

2இராஜா 20:18 நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2இராஜா 20:19 அப்பொழுது எசேக்கியா ஏசாயாவை நோக்கி: நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான் என்று சொல்லி, என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே என்றான்.

"அக்காலத்தில்" - கர்த்தர் எசேக்கியாவைக் குணப்படுத்தி இருக்கிறார். பெரோதாக்பலாதான் என்பவன் பாபிலோனின் ராஜாவாக இருக்கிறான். எசேக்கியா குணமானதற்காக இந்த ராஜா அவனுக்கு வெகுமதிகளை அனுப்புகிறான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

20 அதிகாரம்

இதனால் மகிழ்ச்சியடைந்த எசேக்கியா பெரோதாக்பலாதானின் சேவகர்களுக்குத் தன்னுடைய பொக்கிஷச் சாலையிலுள்ள எல்லாவற்றையும் ஒன்றையும் மறைக்காமல் காண்பித்தான். (2இராஜா 20:12-13). அவர்கள் போனபின்பு, கர்த்தர் ஏசாயாவை எசேக்கியாவினிடத்திற்கு அனுப்பினார். "நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள்" என்னும் கர்த்தருடைய வார்த்தையை ஏசாயா எசேக்கியாவிற்கு அறிவிக்கிறான். (2இராஜா 20:14-19).

"பெரோதாக்பலாதான்" **(Berodach-baladan)** - சில பதிப்புக்களில் இவனுடைய பெயர் "மெரோதாக்பலாதான்" **(Merodach-baladan)** என்று எழுதப்பட்டிருக்கிறது. இக் காலத்தில் பாபிலோனும், நினிவேயும் தங்களில் எது பெரிய பட்டணம் என்று காண்பிப்பதற்காகப் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. இந்தப் பிரச்சனையை நெபோபொலேசரும் **(Nebopolassar)** அவனுடைய குமாரன் நேபுகாத்நேச்சாரும் தீர்த்து வைக்கிறார்கள். நினிவேயின் அதிகாரத்தை அகற்றிவிட்டு, அசீரியப் பேரரசின்மீது ஆளுகை செய்யும் அதிகாரத்தை இவர்கள் பாபிலோனுக்குக் கொடுக்கிறார்கள்.

"பொக்கிஷசாலை" - கிழக்குத் தேசத்து ராஜாக்கள் ஏராளமான பொக்கிஷங்களைச் சேர்த்து, அவற்றைத் தங்களுடைய பொக்கிஷச் சாலையில் காட்சிப் பொருளாக அலங்கரித்து வைத்திருப்பார்கள்.

"என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை" - அசீரியாவின் ராஜாவிற்கு எசேக்கியா ஏற்கெனவே வெகுமதிகளைக் கொடுத்திருக்கிறான். தன்னுடைய பொக்கிஷங்களையெல்லாம் கொடுத்து, தன் தேசத்தின்மீது யுத்தம் பண்ணாமல் இருக்குமாறு வேண்டிக் கொண்டான். (2இராஜா 18:13-16). இப்போது எசேக்கியா ராஜா காண்பித்த பொக்கிஷங்கள் எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. சனகெரிப்பிடமிருந்து கர்த்தர் எருசலேமை மீட்டுக் கொண்டார். இதனால் கர்த்தருக்கும், எசேக்கியாவிற்கும் எருசலேமைச் சுற்றிலுமிருந்த ஜனத்தார் ஏராளமான வெகுமதிகளைக் கொண்டு வந்தார்கள்.இதன் மூலமாக எசேக்கியாவின் பொக்கிஷச்சாலை நிரம்பிருந்திருக்க வேண்டும். (2நாளா 32:22-30)

"ஏசாயா எசேக்கியாவை நோக்கி" - ஏசாயா எசேக்கியாவுக்குத் தீர்க்கதரிசியாகவும், ஆலோசகராகவும் இருக்கிறான். தாவீதுக்கு நாத்தான் இருந்ததுபோலவே எசேக்கியாவுக்கு ஏசாயா இருக்கிறான். (2சாமு 12:1).

தீர்க்கதரிசன எண் - 23

"கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்......" (2இராஜா 20:16-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். (2இராஜா 20:17)

2. உனக்குக் குமாரர்கள் பிறப்பார்கள். (2இராஜா 20:18)

3. உன்னுடைய குமாரர்களில் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள்.

"நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர்" - குமாரர் என்பது எசேக்கியாவின் சந்ததியாரைக் குறிக்கும். இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 125 வருஷங்களுக்குப் பின்பு பாபிலோன் ராஜாவின் அரமனையில் தானியேலும், மற்ற ராஜகுமாரரும் அரமனை வேலைக்காரராயிருக்கிறார்கள். (தானி 1).

"நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான்" - எசேக்கியா கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறான். ஏலியைப் போல கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை எசேக்கியாவும் மனத்தாழ்மையோடு ஏற்றுக் கொள்கிறான். (1சாமு 3:18; 1இராஜா 21:29).

20 அதிகாரம்

(20) எசேக்கியாவின் மரணம் - மனாசே இராஜாவானான் - *(2 நாளா 32:32)*

2 இராஜா 20:20 எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா வல்லமையும், அவன் ஒரு குளத்தையும் சாலகத்தையும் உண்டாக்கினதினாலே தண்ணீரை நகரத்திற்குள்ளே வரப் பண்ணினதும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2 இராஜா 20:21 எசேக்கியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்கள்" - *(2 நாளா 29:1-32:33)*

"வல்லமை" - சீலோவாம் குளத்திற்கு கீகோனிலிருந்து கால்வாய்கள் வழியாகத் தண்ணீரைக் கொண்டுவந்து நிரப்பியது எசேக்கியாவின் ஞானமுள்ள செயலாகும். இது குறித்து ஒரு கல்வெட்டிலும் எழுதப்பட்டிருக்கிறது. *(2 நாளா 32:30)*.

"மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" - *(2 இராஜா 20:5)*

21 அதிகாரம்

2. மனாசேயின் ஆட்சி - யூதாவின் பதினான்காவது இராஜா - ஐம்பத்தைந்து வருஷங்கள் - (2நாளா 33:1-20)

(1) ஆட்சிக்கு வருவதும் அவனுடைய பதினாறு பாவங்களும் - (2நாளா 33:1-10)

2இராஜா 21:1 மனாசே ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து, ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின்பேர் எப்சிபாள்.

2இராஜா 21:2 கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து,

2இராஜா 21:3 தன் தகப்பனாகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டி, பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் செய்ததுபோல விக்கிரகத்தோப்பை உண்டாக்கி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு அவைகளைச் சேவித்தான்.

2இராஜா 21:4 எருசலேமிலே என் நாமத்தை விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லிக்குறித்த கர்த்தருடைய ஆலயத்திலே அவன் பலிபீடங்களைக் கட்டி,

2இராஜா 21:5 கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டி,

2இராஜா 21:6 தன் குமாரனைத் தீமிதிக்கப்பண்ணி, நாள்பார்க்கிறவனும் நிமித்தம்பார்க்கிறவனுமாயிருந்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான்.

2இராஜா 21:7 இந்த ஆலயத்திலும், நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்துகொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றைக்கும் விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் சொல்லிக் குறித்த ஆலயத்திலே அவன் பண்ணின தோப்புவிக்கிரகத்தை வைத்தான்.

2இராஜா 21:8 நான் அவர்களுக்குக் கற்பித்த எல்லாவற்றின்படியேயும், என் தாசனாகிய மோசே அவர்களுக்குக் கற்பித்த எல்லா நியாயப் பிரமாணத்தின் படியேயும், செய்ய ஜாக்கிரதையாய் இருந்தார்களேயானால், நான் இனி இஸ்ரவேலின் காலை அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தை விட்டு அலையப்பண்ணுவதில்லை என்று சொல்லியிருந்தார்.

2இராஜா 21:9 ஆனாலும் அவர்கள் கேளாதேபோனார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள் செய்த பொல்லாப்பைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களை ஏவிவிட்டான்.

"மனாசே" (Manasseh) - இந்தப் பெயருக்கு "மறதி" "forgetting" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "மனாசே"கள்

1. யூதாவின் 14 ஆவது ராஜா. (2இராஜா 20:21-21:20; 2இராஜா 23:12, 26; 2இராஜா 24:3; 1நாளா 3:13; 2நாளா 32:33-33:23; எரே 15:4); மறுபெயர் "Manasses" (மத் 1:10)

2. யோசேப்பின் மூத்த குமாரன் (ஆதி 41:51; ஆதி 46:20; ஆதி 48:1-20; எண் 1:10,34-35; எண் 32:33-41; யோசு 17:1-17)

3. யோனத்தானின் தாத்தா (நியா 18:30)

4. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (எஸ்றா 10:30)

II இராஜாக்கள் - தொகுப்புரை

21 அதிகாரம்

5. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த வேறொருவன். (எஸ்றா 10:33)

"ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்" - இஸ்ரவேல் தேசத்தில் அதிக வருஷம் ஆட்சி புரிந்த ராஜா மனாசே தான். (2இராஜா 20:1). இவனுக்கு அடுத்தபடியாக உசியா 52 வருஷங்கள் ஆட்சி புரிந்து, இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறான்.

"எப்சிபாள்" **(Hephzibah)** - இந்தப் பெயருக்கு "என் பிரியம் அவளில் இருக்கிறது" **"my delight is in her"** என்று பொருள். (ஏசா 62:4).

"அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து" - இவன் தன்னுடைய தகப்பனாகிய எசேக்கியாவைப் போல கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யவில்லை. யூதாவை ஆட்சி புரிந்த ராஜாக்களில் இவன் மிகுந்த துன்மார்க்கனாக இருந்தான்.

மனாசே செய்த அருவருப்புக்கள்

1. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2. தன் தகப்பனாகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டினான். (2இராஜா 21:3)

3. பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்தான்.

4. விக்கிரகத்தோப்பை உண்டாக்கினான்.

5 வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டான்.

6. அவைகளைச் சேவித்தான்.

7. கர்த்தருடைய ஆலயத்திலே அவன் வானத்தின் சேனைகளுக்குப் பலி பீடங்களைக் கட்டினான்.

8. தன் குமாரனைத் தீமிதிக்கப் பண்ணினான். (2இராஜா 21:6)

9. நாள்பார்க்கிறவனாக இருந்தான்.

10. நிமித்தம்பார்க்கிறவனாக இருந்தான்.

11. அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் வைத்திருந்தான்.

12. கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான்.

13. ஆலயத்திலே அவன் பண்ணின தோப்பு விக்கிரகத்தை வைத்தான். (2இராஜா 21:7)

14. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள் செய்த பொல்லாப்பைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களை ஏவிவிட்டான். (2இராஜா 21:9,11)

15. எமோரியர் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் கேடாக அருவருப்புகளைச் செய்தான். (2இராஜா 21:11)

16. குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான். (2இராஜா 21:16)

"எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகள்" - (2இராஜா 18:4,22)

"இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் செய்ததுபோல" - (2இராஜா 11:18)

"வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு அவைகளைச் சேவித்தான்" - யூதாவில் இதற்கு முன்பு இதுபோன்ற பாவத்தை யாரும் செய்யவில்லை. (உபா 4:19; உபா 17:3)

"ஆலயத்தின் இரண்டு பிராகாரங்கள்" - (1இராஜா 7:12)

"தன் குமாரனைத் தீமிதிக்கப்பண்ணி" - ஆகாபைப்போல பாவம் செய்கிறான். (2இராஜா 16:3; 2இராஜா 23:10; உபா 18:10; செப் 1:5)

21 அதிகாரம்

"நாள்பார்க்கிறவனும் நிமித்தம் பார்க்கிறவனுமாயிருந்து" - (லூக்கா 12:29)

தீர்க்கதரிசன எண் - 24

"இந்த ஆலயத்திலும், நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்து கொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றைக்கும் விளங்கப்பண்ணுவேன்" (2இராஜா 21:7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (எசே 43:7; எசே 48:35; சக 6:12-13).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. இந்த ஆலயத்திலும், நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்து கொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றைக்கும் விளங்கப்பண்ணுவேன்.
2. இனி இஸ்ரவேலின் காலை அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தை விட்டு அலையப்பண்ணுவதில்லை. (2இராஜா 21:8)

"ஆலயத்திலே அவன் பண்ணின தோப்புவிக்கிரகத்தை வைத்தான்" - மனாசே அசேரா என்னும் தோப்பு விக்கிரகத்தைச் செய்தான். இவனுடைய குமாரனாகிய யோசியா இந்த விக்கிரகத்தை மறுபடியும் அகற்றிப் போட்டான். (2இராஜா 23:6)

"மோசே அவர்களுக்குக் கற்பித்த எல்லா நியாயப்பிரமாணத்தின்படியேயும், செய்ய ஜாக்கிரதையாய் இருந்தார்களேயானால்" - இங்கு கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் வருங்காலத்தில் நிறைவேறும். இப்போது நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி நடந்து கொள்ளவில்லை. பாவத்தில் ஜீவித்தார்கள். ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கவில்லை. அவர்களுக்கு நித்திய ஆலயமும், நித்திய நகரமும் இப்பொழுது தரப்படுவதில்லை. மேசியா வரும்பொழுது இஸ்ரவேல் மனந்திரும்பும். அப்போது இந்தத் தீர்க்கதரிசனங்கள் பிரத்தியட்சமாய் நிறைவேறும். (2இராஜா 21:7,8; எசே 37; எசே 43:7; எசே 48:35; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

"ஜாதிகள் செய்த பொல்லாப்பைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களை ஏவிவிட்டான்" - வேறு எந்த யூதாவின் ராஜாவைக் குறித்தும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக் கூறப்படவில்லை. தானும் பாவம் செய்தான். மற்றவர்களையும் இவன் பாவம் செய்ய ஏவினான்.

(2) மனாசேயின்மீது நியாயத்தீர்ப்பு பற்றிய தீர்க்கதரிசனம்

2இராஜா 21:10 ஆகையால் கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு உரைத்தது:

2இராஜா 21:11 யூதாவின் ராஜாவாகிய மனாசே தனக்கு முன்னிருந்த எமோரியர் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் கேடாக இந்த அருவருப்புகளைச் செய்து, தன் நரகலான விக்கிரகங்களால் யூதாவையும் பாவஞ்செய்யப்பண்ணினபடியினால்,

2இராஜா 21:12 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, கேட்கப்போகிற யாவருடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்படியான பொல்லாப்பை நான் எருசலேமின்மேலும் யூதாவின்மேலும் வரப்பண்ணி,

2இராஜா 21:13 எருசலேமின்மேல் சமாரியாவின் மட்டநூலையும் ஆகாப் வீட்டின் தூக்குநூலையும் பிடிப்பேன்; ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்துவைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன்.

2இராஜா 21:14 அவர்கள் தங்கள் பிதாக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, எனக்குக் கோபம் மூட்டிவந்த படியினால், என் சுதந்தரத்தில் மீதியானதைக் கைவிட்டு, அவர்கள் பகைஞரின் கையில் அவர்களை ஒப்புக்கொடுப்பேன்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

21 அதிகாரம்

2இராஜா 21:15 தங்கள் பகைஞருக்கெல்லாம் கொள்ளையும் சூறையுமாய்ப் போவார்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 25

"கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு உரைத்தது............" (2இராஜா 21:10-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கேட்கப்போகிற யாவருடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும்படியான பொல்லாப்பை நான் எருசலேமின்மேலும் யூதாவின் மேலும் வரப்பண்ணுவேன். (2இராஜா 21:12)
2. எருசலேமின்மேல் சமாரியாவின் மட்டநூலையும் ஆகாப் வீட்டின் தூக்குநூலையும் பிடிப்பேன் (2இராஜா 21:13)
3. ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்துவைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன்.
4. என் சுதந்தரத்தில் மீதியானதைக் கைவிட்டுவிடுவேன். (2இராஜா 21:14)
5. அவர்கள் பகைஞரின் கையில் அவர்களை ஒப்புக்கொடுப்பேன்.
6. தங்கள் பகைஞருக்கெல்லாம் அவர்கள் கொள்ளையும் சூறையுமாய்ப் போவார்கள். (2இராஜா 21:15)

"கேட்கப்போகிற யாவருடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும் படியான பொல்லாப்பு" - (1சாமு 3:11)

அழிவைப் பற்றிய உருவக விளக்கம்

1. "எருசலேமின்மேல் சமாரியாவின் மட்டநூல்" என்பதற்கு சமாரியாவைப் போல எருசலேமும் அழிக்கப்படும் என்று பொருள். (2இராஜா 17:1-9)
2. "ஆகாப் வீட்டின் தூக்குநூல்" என்பதற்கு ஆகாபின் வீட்டாரைப்போல எருசலேமின் குடிகளும் அழிக்கப்படுவார்கள் என்று பொருள். (2இராஜா 9:4-10:30)
3. "ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்துவைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன்" என்பதற்கு கர்த்தர் தம்முடைய கிரியையைப் பரிபூரணமாகச் செய்து முடித்துவிடுவார் என்று பொருள்.

"என் சுதந்தரத்தில் மீதியானது" - 2இராஜா 18:13-19:37 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இக்கட்டுக்களில் தப்பித்தவர்கள். ஆனாலும் யூதாவின்மீதும், எருசலேமின்மீதும் வரப்போகிற நியாயத் தீர்ப்பிலிருந்து இவர்கள் பாதுகாக்கப் படுவதில்லை.

அழிவிற்குக் காரணம்

1. மனாசேயின் பாவங்கள். (2இராஜா 21:11)
2. எமோரியர் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் கேடாக மனாசே இந்த அருவருப்புகளைச் செய்தான்.
3. யூதாவின் பாவங்கள்
4. யூதா ஜனங்கள் தங்கள் பிதாக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள்முதற் கொண்டு இந்நாள்வரைக்கும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள். (2இராஜா 21:16)

21 அதிகாரம்

(3) மனாசேயின் தொடர்ந்த பாவம் - (2 நாளா 33:11-19)

2 இராஜா 21:16 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யும்படியாக, மனாசே யூதாவைப் பாவஞ்செய்யப் பண்ணின அந்தப் பாவமும் தவிர, அவன் எருசலேமை நாலு மூலைவரையும் இரத்தப்பழிகளால் நிரப்பத்தக்கதாய், குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான்.

"குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான்" - யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் மனாசேயைப் பற்றியும் எழுதியிருக்கிறார். இவன் பல தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டான். ஏசாயாவையும் மனாசேயே கொன்றுபோட்டான் என்று ஒரு கருத்து உள்ளது.

(4) மனாசேயின் மரணம் - ஆமோன் இராஜாவானான் - (2 நாளா 33:20)

2 இராஜா 21:17 மனாசேயின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், அவன் செய்த பாவமும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2 இராஜா 21:18 மனாசே தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் ஊசாவின் தோட்டமாகிய தன் அரமனைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய ஆமோன் ராஜாவானான்.

"மனாசேயின் மற்ற வர்த்தமானங்கள்" - (2 நாளா 33)

3. ஆமோனின் ஆட்சி - யூதாவின் பதினைந்தாவது இராஜா - இரண்டு வருஷங்கள் - (2 நாளா 33:21)

(1) ஆட்சிக்கு வருவதும் அவனுடைய குணாதிசயமும்

2 இராஜா 21:19 ஆமோன் ராஜாவான போது இருபத்திரண்டு வயதாயிருந்து, இரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; யோத்பா ஊரானாகிய ஆரூத்சின் குமாரத்தியான அவன் தாயின்பேர் மெசல்லேமேத்.

2 இராஜா 21:20 அவன் தன் தகப்பனாகிய மனாசே செய்ததுபோல, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து,

2 இராஜா 21:21 தன் தகப்பன் நடந்த எல்லா வழியிலும் நடந்து, தன் தகப்பன் சேவித்த நரகலான விக்கிரகங்களைச் சேவித்து அவைகளைப் பணிந்துகொண்டு,

2 இராஜா 21:22 கர்த்தரின் வழியிலே நடவாமல், தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டான்.

"ஆமோன்" (Amon) - இந்தப் பெயருக்கு "பாதுகாப்பு" "security" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஆமோன்"கள்

1. யூதாவின் 15 ஆவது ராஜா (2 இராஜா 21:18-25; 1 நாளா 3:14; 2 நாளா 33:20-25; மத் 1:10)
2. சமாரியாவின் பட்டணத்து தலைவன் (1 இராஜா 22:26; 2 நாளா 18:25)
3. சாலொமோனின் ஊழியக்காரன் (நெகே 7:39); மறுபெயர் ஆமி (Ami) (எஸ்றா 2:57)

21 அதிகாரம்

"தன் தகப்பன் நடந்த எல்லா வழியிலும் நடந்து" - மனாசேயைப் போல இவனும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதனதைச் செய்தான். தன்னுடைய தந்தையின்மீது வந்த நியாயத்தீர்ப்பை உணர்ந்து, இவன் திருந்தியிருந்திருக்க வேண்டும். ஆனால் ஆமோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி தொடர்ந்து பொல்லாப்பு செய்தான்.

ஆமோனின் பாவங்கள்

1. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். (2இராஜா 21:20)
2. தன் தகப்பன் நடந்த எல்லா பாவவழிகளிலும் நடந்தான்.
3. தன் தகப்பன் சேவித்த நரகலான விக்கிரகங்களைச் சேவித்தான்.
4. அவைகளைப் பணிந்துகொண்டான். (2இராஜா 21:21)
5. கர்த்தரின் வழியிலே நடக்கவில்லை. (2இராஜா 21:22)
6. பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டான்.

(2) ஆமோனின் மரணம் - யோசியா இராஜாவானான் - உள்நாட்டு குழப்பம் - *(2நாளா 33:24-25; 2இராஜா 25:25)*

2இராஜா 21:23 ஆமோனின் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, ராஜாவை அவன் அரமனையிலே கொன்றுபோட்டார்கள்.

2இராஜா 21:24 அதினால் தேசத்து ஜனங்கள் ராஜாவாகிய ஆமோனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு பண்ணினவர்களையெல்லாம் வெட்டிப் போட்டு, அவன் குமாரனாகிய யோசியாவை அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள்.

2இராஜா 21:25 ஆமோன் செய்த மற்ற வர்த்தமானங்கள் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2இராஜா 21:26 அவன் ஊசாவின் தோட்டத்திலுள்ள அவனுடைய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய யோசியா ராஜாவானான்.

"ஆமோன் செய்த மற்ற வர்த்தமானங்கள்" - *(2நாளா 33:21-25)*

22 அதிகாரம்

4. யோசியாவின் ஆட்சி - யூதாவின் பதினாறாவது இராஜா - முப்பத்தொரு வருஷங்கள் - (நாளா 34:1-35:27)

(1) யூதாவின் எட்டாவது இராஜாவும் கடைசி இராஜாவும் - (2நாளா 34:1-7)

2இராஜா 22:1 யோசியா ராஜாவாகிற போது, எட்டு வயதாயிருந்து, முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; போஸ்காத் ஊரானாகிய அதாயாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் எதிதாள்.

2இராஜா 22:2 அவன் கர்த்தரின் பார்வைக்குப் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான்.

"யோசியா ராஜாவாகிறபோது, எட்டு வயதாயிருந்து" - யோவாஸ் ராஜாவாகிறபோது 7 வயதாக இருந்தான்(2இராஜா 11:4). இவனே இஸ்ரவேலில் குறைந்த வயதில் ராஜாவானவன். அதற்குப் பின்பு, யோசியா இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறான். பக்தியுள்ள எசேக்கியாவின் கீழ் மனாசே வளர்க்கப்பட்ட போதிலும் இவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்புக்களைச் செய்தான். யோசியாவின் தகப்பன் ஆமோன் ஒரு துன்மார்க்கன். ஆனால் யோசியாவோ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். நீதியுள்ள பெற்றோருக்குத் துன்மார்க்கமான பிள்ளைகளும், துன்மார்க்கமான பெற்றோர்களுக்கு நீதியுள்ள பிள்ளைகளும் பிறப்பதற்கு வாய்ப்புள்ளது. (எசே 18)

"போஸ்காத்" (Boscath) - யூதாவிலுள்ள ஓர் ஊர். (யோசு 15:39).

யோசியா செய்த செம்மையான காரியங்கள்

1. கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.
2. தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான்.

"தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான்" - யூதாவின் ராஜாக்களில் யோசியாவைப் பற்றி மட்டுமே இவ்வாறு சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

(2) தேவாலயம் பழுதுபார்க்கப்பட்டது - (2நாளா 34:8-13)

2இராஜா 22:3 ராஜாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே, ராஜா மெசுல்லாமின் குமாரனாகிய அத்சலியாவின் மகன் சாப்பான் என்னும் சம்பிரதியைக் கர்த்தரின் ஆலயத்துக்கு அனுப்பி:

2இராஜா 22:4 நீ பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவினிடத்தில் போய், கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் வாசல் காக்கிறவர்கள் ஜனத்தின் கையிலே வாங்கப்பட்டதுமான பணத்தை அவன் தொகைபார்த்து,

2இராஜா 22:5 பிற்பாடு அவர்கள் அதைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்து, அவர்கள் அதைக் கர்த்தரின் ஆலயத்தைப் பழுது பார்க்கிறதற்காக அதிலிருக்கிற வேலைக்காரராகிய,

2இராஜா 22:6 தச்சருக்கும், சிற்பாசாரிகளுக்கும், கொற்றருக்கும், ஆலயத்தைப் பழுது பார்க்கும்படி வேண்டிய மரங்களையும் வெட்டின கற்களையும் வாங்குகிறதற்கும் செலவழிக்கவேண்டும்.

22 அதிகாரம்

2இராஜா 22:7 ஆகிலும் அந்தப் பணத்தைத் தங்கள் கையில் ஒப்புவித்துக்கொள்ளுகிறவர்களோ காரியத்தை உண்மையாய் நடப்பிக்கிறபடியினால், அவர்களிடத்தில் அதின் கணக்கைக் கேட்கவேண்டியதில்லை என்று சொல் என்றான்.

"யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே" - இந்த வருஷத்தில் தேவாலயத்தின் பராமரிப்புப் பணி நிறைவு பெறுகிறது. மேலும் பல புதிய வேலைகள் ஆரம்பமாகிறது. (2இராஜா 23:23). யோசியாவின் 12 ஆம் வருஷத்தில் தேவாலயத்தைப் பழுதுபார்க்கும் வேலை ஆரம்பமாயிற்று. (2நாளா 34:3-8). எரேமியா தீர்க்கதரிசியாக அழைக்கப்படுவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எரே 1:2; எரே 25:3). யோசியாவின் காலத்தில் எரேமியா தீர்க்கதரிசன ஊழியம் செய்கிறான்.

"சாப்பான்" (Shaphan) - இந்தப் பெயருக்கு "குழிமுயல்" (coney) என்று பொருள். இவன் ஒரு சம்பிரதி (scribe) (2இராஜா 22:3-14; 2நாளா 34:8-20; எரே 36:10-12; எசே 8:11) இவனுடைய குடும்பத்தார் யூதாவில் இரண்டு சந்ததியாக முக்கிய பங்கு வகித்திருக்கிறார்கள்.

யூதாவில் முக்கிய பங்கு வகித்த சாப்பானின் குடும்பத்தார்

1. அத்சலியா - சாப்பானின் தகப்பன் (2இராஜா 22:3)
2. மெசுல்லாம் - சாப்பானின் தாத்தா (2இராஜா 22:3)
3. அகிக்காம் - சாப்பானின் குமாரன் (2இராஜா 22:12; 2இராஜா 25:22; 2நாளா 34:20; எரே 26:24; எரே 39:14; எரே 40:5; எரே 41:2; எரே 43:6)
4. கெமரியா - சாப்பானின் குமாரன் (எரே 36:10)
5. எலெயாசார் - சாப்பானின் குமாரன் (எரே 29:3)
6. யசனியா - சாப்பானின் குமாரன் (எசே 8:11)
7. மிகாயா - சாப்பானின் பௌத்திரன் (எரே 36:11-13)
8. கெதலியா - சாப்பானின் பௌத்திரன் (எரே 39:14)

"அவர்களிடத்தில் அதின் கணக்கைக் கேட்க வேண்டியதில்லை" - ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் நம்பிக்கைக் குரியவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களிடத்தில் கணக்கை விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போயிற்று. (2இராஜா 22:7,9).

(3) நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டு பிடிக்கப்பட்டது - (2நாளா 34:14-17)

2இராஜா 22:8 அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி: நான் கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டு பிடித்தேன் என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பானிடத்தில் கொடுத்தான்; அவன் அதை வாசித்தான்.

2இராஜா 22:9 அப்பொழுது சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு மறு உத்தரவு சொல்லி, ஆலயத்திலே தொகையிட்டுக் கண்ட பணத்தை உமது அடியார் சேர்த்துக் கட்டி, அதைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள்.

2இராஜா 22:10 சம்பிரதியாகிய சாப்பான் பின்னையும் ராஜாவை நோக்கி: ஆசாரியனாகிய இல்க்கியா என்னிடத்தில் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்தான் என்று அறிவித்து, அதை ராஜாவுக்கு முன்பாக வாசித்தான்.

22 அதிகாரம்

"நியாயப்பிரமாண புஸ்தகம்" - இது உடன்படிக்கைப் பெட்டிக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த பஞ்சாகமப் புஸ்தகத்தின் மூலப்பிரதியாக இருக்கலாம். (உபா 31:24-26). மனாசேயும், ஆமோனும் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்தார்கள். ஆகையினால் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நியாயப் பிரமாண புஸ்தகம் மறைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். (2இராஜா 21:16,21).

"அதை ராஜாவுக்கு முன்பாக வாசித்தான்" - நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசித்து, அதிலுள்ள செய்திகளையெல்லாம் யோசியாவின் காலத்தில் நடைபெறும் வர்த்தமானங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். (லேவி 26, உபா 28). நியாயப்பிரமாணத்தை மீறியதற்காகக் கர்த்தருடைய உபத்திரவம் தங்கள்மீது வரும் என்பதை யோசியா புரிந்து கொள்கிறான். யோசியா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தன்னுடைய வேலைக்காரர்களிடம் கர்த்தரிடத்தில் விசாரிக்குமாறு கூறுகிறான். அவர்கள் உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை விசாரித்தார்கள். (2இராஜா 22:11-14).

(4) பாவம் உணர்த்தப்படுகிறது - உண்மையான மனந்திரும்புதல் - (2நாளா 34:18-21)

2இராஜா 22:11 ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு,

2இராஜா 22:12 ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும், சாப்பானின் குமாரனாகிய அகீக்காமுக்கும், மிகாயாவின் குமாரனாகிய அக்போருக்கும், சம்பிரதியாகிய சாப்பானுக்கும், ராஜாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் ராஜா கட்டளையிட்டது.

2இராஜா 22:13 கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவும் ஜனத்திற்காகவும் யூதாவனைத்திற்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்; நமக்காக எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்ய நம்முடைய பிதாக்கள் இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதபடியினால், நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது என்றான்.

2இராஜா 22:14 அப்பொழுது ஆசாரியனாகிய இல்க்கியாவும், அகீக்காமும், அக்போரும், சாப்பானும், அசாயாவும், அர்காசின் குமாரனாகிய திக்வாவின் மகனான சல்லூம் என்னும் வஸ்திரசாலை விசாரிப்புக்காரன் மனைவியாகிய உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்திற்குப் போய் அவளோடே பேசினார்கள்; அவள் எருசலேமின் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள்.

இரண்டாம் வகுப்பு (college) - מִשְׁנֶה - mish-neh' - 4932

ஆண்பால் பெயர்ச்சொல் - இரண்டாம், இரட்டிப்பு, இரண்டத்தனை, பிரதி, நியாயப் பிரமாணம், இளையவன், இரண்டாந் தரமானவன், இரண்டாவதாயிருத்தல் a (repetition; duplicate; double; second; twice as much) - எருசலேமின் அரண்மனையை ஒட்டியுள்ள இரண்டாம் வரிசைத்தெரு அல்லது இரண்டாம் வரிசைக் கட்டிடங்கள் என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

(5) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு பற்றிய உல்தாளின் தீர்க்கதரிசனம் - (2நாளா 34:22-28)

2இராஜா 22:15 அவள் அவர்களை நோக்கி: உங்களை என்னிடத்தில் அனுப்பினவர்களிடத்தில் நீங்கள் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்:

II இராஜாக்கள் - தொகுப்புரை

22 அதிகாரம்

2இராஜா 22:16 இதோ, யூதாவின் ராஜா வாசித்த புஸ்தகத்தின் வார்த்தைகளி லெல்லாம் காட்டியிருக்கிற பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின்மேலும், அதின் குடிகளின்மேலும் வரப்பண்ணுவேன்.

2இராஜா 22:17 அவர்கள் என்னைவிட்டு, தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றிலும் எனக்குக் கோபமுண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் இந்த ஸ்தலத்தின் மேல் பற்றியெரியும்; அது அவிந்து போவது இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லுங்கள்.

2இராஜா 22:18 கர்த்தரிடத்தில் விசாரிக்கிறதற்கு உங்களை அனுப்பின யூதாவின் ராஜாவினிடத்தில் நீங்கள் போய்: நீர் கேட்ட வார்த்தைகளைக் குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

2இராஜா 22:19 நான் இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாக, அவர்கள் பாழும் சாபமுமாவார்கள் என்று சொன்னதை நீ கேட்டபோது, உன் இருதயம் இளகி, நீ கர்த்தருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி, உன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, எனக்குமுன்பாக அழுத படியினால் நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்.

2இராஜா 22:20 ஆகையால், இதோ, நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேர்த்துக் கொள்ளுவேன்; நீ சமாதானத்தோடே உன் கல்லறையில் சேர்வாய்; நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதைச் சொல்லுங்கள் என்றாள்; இந்த மறுஉத்தரவை அவர்கள் போய் ராஜாவுக்குச் சொன்னார்கள்.

தீர்க்கதரிசன எண் - 26

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்..........." (2இராஜா 22:15-20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதாவின் ராஜா வாசித்த புஸ்தகத்தின் வார்த்தைகளிலெல்லாம் காட்டியிருக்கிற பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின் மேலும், அதின் குடிகளின்மேலும் வரப் பண்ணுவேன் (2இராஜா 22:16)
2. என் உக்கிரம் இந்த ஸ்தலத்தின் மேல் பற்றியெரியும்; அது அவிந்து போவது இல்லை (2இராஜா 22:17)
3. நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேர்த்துக் கொள்ளுவேன் (2இராஜா 22:20)
4. நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லை.

யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரக்காரணம்

1. யூதா ஜனங்கள் கர்த்தரை விட்டு விட்டார்கள்.
2. கர்த்தருக்குக் கோபமுண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினார்கள்.

யோசியா நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குக் காரணம்

1. யோசியாவின் இருதயம் இளகிற்று.
2. அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினான்.
3. தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான்.
4. கர்த்தருக்கு முன்பாக அழுதான்.

23 அதிகாரம்

(6) ஜனங்களுக்கு நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுகிறது - (2நாளா 34:29-30)

2இராஜா 23:1 அப்பொழுது ராஜா யூதாவிலும் எருசலேமிலும் இருந்த மூப்பரையெல்லாம் அழைப்பித்தான்; அவர்கள் அவனிடத்தில் கூடினபோது,

2இராஜா 23:2 ராஜாவும், அவனோடு யூதாவின் மனுஷர் யாவரும் எருசலேமின் குடிகள் அனைவரும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சிறியோர்துவக்கிப் பெரியோர் மட்டுமுள்ள சகலரும் கர்த்தரின் ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப் பட்ட உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான்.

"மூப்பரையெல்லாம் அழைப்பித்தான்" - யோசியா யூதாவிலும் எருசலேமிலும் இருந்த மூப்பரையெல்லாம் அழைப்பித்தான். அவர்கள் எல்லோரும் கர்த்தரின் ஆலயத்துக்குப் போனார்கள். கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளெல்லாம் வாசிக்கப் படுகிறது. (2இராஜா 23:1-2). யோசியா தூண் அருகே நின்று கொண்டிருக்கிறான். ஜனங்களோடு ஓர் உடன்படிக்கை பண்ணினான். ஜனங்களும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள். (2இராஜா 23:3).

யோசியாவின் காலத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

1. உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான். (2இராஜா 23:1-2)
2. கர்த்தரைப் பின்பற்றி, நடக்கவும், அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணினான். (2இராஜா 23:3)
3. பாகாலுக்கு பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்கினான். (2இராஜா 23:4)
4. விக்கிரகத்தோப்புக்கு பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்கினான்
5. வானத்தின் சகல சேனைகளுக்கும் பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்கினான். (2இராஜா 23:4)
6. அவைகளை எருசலேமுக்குப் புறம்பாய்க் கீதரோன் வெளிகளில் சுட்டெரித்தான்.
7. அவைகளின் சாம்பலைப் பெத்தேலுக்குக் கொண்டுபோகப்பண்ணினான்.
8. மேடைகளின்மேல் தூபங்காட்ட, யூதாவின் ராஜாக்கள் வைத்த பூஜாசாரிகளை அகற்றிவிட்டான். (2இராஜா 23:5)
9. பாகாலுக்கு தூபங்காட்டினவர்களையும் அகற்றிவிட்டான்.
10. சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் தூபங்காட்டினவர்களை அகற்றிவிட்டான்.
11. தோப்பு விக்கிரகத்தை கர்த்தரின் ஆலயத்திலிருந்து வெளியேற்றினான். (2இராஜா 23:6)

23 அதிகாரம்

12. அதை எருசலேமுக்குப் புறம்பே சுட்டெரித்தான்.

13. அதைத் தூளாக்கினான்.

14. அந்தத் தூளை ஜனபுத்திரருடைய பிரேதக் குழிகளின்மேல் போடுவித்தான்.

15. கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக்குக் கூடாரங்களை நெய்த இடத்திலுள்ள இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப்போட்டான். (2 இராஜா 23:7)

16. விக்கிரகங்களின் ஆசாரியர்களைப் பட்டணங்களைவிட்டு வெளியேற்றினான். (2 இராஜா 23:8)

17. ஆசாரியர்கள் தூபங்காட்டியிருந்த மேடைகளைத் தீட்டாக்கினான்.

18. ஒலிமுகவாசல்களின் மேடைகளை இடித்துப்போட்டான்.

19. தோப்பேத் என்னும் ஸ்தலத்தையும் அவன் தீட்டாக்கினான். இதனால் ஒருவனும் மோளேகுக்கென்று தன் குமாரனையாகிலும் தன் குமாரத்தியையாகிலும் தீக்கடக்கப் பண்ணாதபடிக்குச் செய்தான். (2 இராஜா 23:10)

20. யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை அகற்றினான். (2 இராஜா 23:11)

21. சூரியனின் இரதங்களை அக்கினியில் சுட்டெரித்தான்.

22. யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கினதும், ஆகாசுடைய மேல்வீட்டில் இருந்ததுமான பலி பீடங்களை இடித்தான். (2 இராஜா 23:12)

23. மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலிபீடங்களை இடித்தான்.

24. அவைகளின் தூளை அங்கேயிருந்து எடுத்துக் கீதரோன் ஆற்றில் கொட்டினான்.

25. சாலொமோன் தன் மனைவிகளுக்குக் கட்டிய மேடைகளைத் தீட்டாக்கினான். (2 இராஜா 23:13)

26. சிலைகளை உடைத்தான். (2 இராஜா 23:14)

27. விக்கிரகத்தோப்புகளை நிர்மூலமாக்கினான்.

28. அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்பினான்.

29. யெரொபெயாம் பெத்தேலில் பலிபீடமும் மேடையும் ஆகிய அவ்விரண்டையும் அவன் இடித்தான். (2 இராஜா 23:15)

30. மேடையைச் சுட்டெரித்தான்.

31. அதைத் தூளாக்கினான்.

32. விக்கிரகத்தோப்பைச் சுட்டெரித்தான்.

33. யெரொபெயாம் பெத்தேலில் கட்டிய பலிபீடத்தின்மேல் கல்லறைகளிலுள்ள எலும்புகளைச் சுட்டெரித்து அதைத் தீட்டாக்கினான். (2 இராஜா 23:16-18)

34. இஸ்ரவேலின் ராஜாக்கள் சமாரியாவின் பட்டணங்களில் உண்டாக்கியிருந்த மேடைகளின் கோவில்களையெல்லாம் தகர்த்தான். (2 இராஜா 23:19)

35. மேடைகளின் ஆசாரியர்களையெல்லாம் பலி பீடங்களின்மேல் கொன்றுபோட்டான். (2 இராஜா 23:20)

36. மேடைகளின் பலிபீடங்களின்மேல் மனுஷரின் எலும்புகளைச் சுட்டெரித்தான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

23 அதிகாரம்

37. உடன்படிக்கையின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள் என்று சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டான். (2 இராஜா 23:21-23)

38. புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படிக்கு அசுத்த ஆவிகளின் கிரியைகளை அகற்றினான். (2 இராஜா 23:24)

39. அஞ்சனக்காரரையும், குறி சொல்லுகிறவர்களையும் நிர்மூலமாக்கினான்.

40. சுரூபங்களை நிர்மூலமாக்கினான்.

41. விக்கிரகங்களை நிர்மூலமாக்கினான். (2 இராஜா 23:24)

42. யூதாதேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்கினான்.

43. கர்த்தரிடத்துக்குத் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு பலத்தோடும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான் (2 இராஜா 23:25)

(7) யோசியா தேவனோடு செய்து கொண்ட உடன்படிக்கை - (2 நாளா 34:31-32)

2 இராஜா 23:3 அப்பொழுது ராஜா, தூண் அருகே நின்று, கர்த்தரைப் பின்பற்றி, நடக்கவும், அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணினான்; ஜனங்கள் எல்லாரும் உடன்படிக்கைக்கு உட் பட்டார்கள்.

உடன்படிக்கையின் சாராம்சம்

1. கர்த்தரைப் பின்பற்றி நடக்க வேண்டும்.
2. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.
3. கர்த்தருடைய சாட்சிகளைக் கைக்கொள்ள வேண்டும்.
4. கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும்.
5. மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்ற வேண்டும்.
6. இவற்றை முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ள வேண்டும்.

(8) மேலும் இருபது சீர்திருத்தங்கள் - (2 நாளா 34:33)

(அ) பாகால் ஆராதனையும் அதன் ஆசாரியர்களும் அழிக்கப் பட்டார்கள்

2 இராஜா 23:4 பின்பு ராஜா: பாகாலுக்கும் விக்கிரகத்தோப்புக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்க, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும் இரண்டாம் வகுப்பிலுள்ள ஆசாரியர்களுக்கும் வாசல் காக்கிறவர்களுக்கும் கட்டளையிட்டு, அவைகளை எருசலேமுக்குப் புறம்பாய்க் கீதரோன் வெளிகளில் சுட்டெரித்து அவைகளின் சாம்பலைப் பெத்தேலுக்குக் கொண்டுபோகப்பண்ணினான்.

23 அதிகாரம்

2இராஜா 23:5 யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமைச் சுற்றிலும் மேடைகளின்மேல் தூபங்காட்ட, யூதாவின் ராஜாக்கள் வைத்த பூஜாசாரிகளையும், பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் தூபங் காட்டினவர்களையும் அகற்றிவிட்டான்.

2இராஜா 23:6 தோப்பு விக்கிரகத்தை கர்த்தரின் ஆலயத்திலிருந்து எருசலேமுக்குப் புறம்பே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோய், அதைத் கீதரோன் ஆற்று ஓரத்திலே சுட்டெரித்து, அதைத் தூளாக்கி, அந்தத் தூளை ஜனபுத்திரருடைய பிரேதக் குழிகளின்மேல் போடுவித்தான்.

ஆலயத்திலிருந்து புறம்பாக்கிய பணிமுட்டுகள்

1. பாகாலுக்குப் பயன்படுத்தப்பட்ட பணிமுட்டுகள்
2. விக்கிரகத்தோப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பணிமுட்டுகள்
3. வானசேனைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பணிமுட்டுகள்

"சுட்டெரித்து" - உபா 7:25 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறபடி இவை சுட்டெரிக்கப்படுகிறது.

"அவைகளின் சாம்பலைப் பெத்தேலுக்குக் கொண்டுபோகப்பண்ணினான்" - யெரொபெயாமின் பலிபீடத்தைத் தீட்டுப் படுத்துவதற்காக இந்தச் சாம்பல் பெத்தேலுக்குக் கொண்டுபோகப்படுகிறது. 348 வருஷங்களுக்கு முன்பாகவே இந்தத் தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. (1இராஜா 13:2)

பூஜாசாரி (idolatrous priests) - כֹּהֵן - ko-hane' - 3548

ஆ.பெ.சொ. - ஆசாரியன், மந்திரி, பிரதானி, ஆசாரியர், பூஜாசாரி, பூசாரி, பிரதானமந்திரி - எபிரெய பாஷையில் இரண்டு வார்த்தைகள் பூஜாசாரியைக் குறிக்கிறது. கர்த்தரால் நியமிக்கப்பட்ட ஆசாரியருக்கு "கோஹன்" (kohen) என்னும் வார்த்தையும், மனுஷரால் நியமிக்கப்படும் விக்கிரகங்களின் ஆசாரியருக்கு "கமர்" (kamar) என்னும் வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஓசி 10:5; செப் 1:4)

"மேடைகளின்மேல் தூபங்காட்ட, யூதாவின் ராஜாக்கள் வைத்த பூஜாசாரிகளையும்" - ஒவ்வொரு விக்கிரகத்திற்கும் பூஜாசாரிகள் தனித்தனியாக இருந்தார்கள். பாகாலுக்குத் தூபங்காட்டவும், மேடைகளுக்குத் தூபங் காட்டவும், வானசேனைகளுக்குத் தூபங் காட்டவும் பூஜாசாரிகள் தனித்தனியாக இருந்தார்கள்.(1இராஜா 12:31).

கிரகங்கள் (planets) - מַזָּל - maz-zaw-law' - 4208

பெ.பெ.சொ.-கிரகங்கள், ராசிகள் (யோபு 38:32)

"தோப்பு விக்கிரகம்" - இது சாதாரண தோட்டமல்ல. மரங்களே விக்கிரகங்களாக இங்கு ஆராதிக்கப்படுகிறது.

"ஜனபுத்திரருடைய பிரேதக் குழிகள்" - (2இராஜா 22:20)

(ஆ) இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப்போட்டான்

2இராஜா 23:7 கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக்குக் கூடாரங்களை நெய்த இடத்திலுள்ள இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப் போட்டான்.

23 அதிகாரம்

"கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக்குக் கூடாரங்களை நெய்த இடம்" - இங்குள்ள ஸ்திரீகள் ஆசேரா (Asherah) விக்கிரகத்தை வழிபடும் தாசிகளாவார்கள். ஆசேரா தெய்வத்திற்குக் கூடாரங்களை நெய்து தருவது இவர்களுடைய வேலை.

"இலச்சையான புணர்ச்சிக்காரர்" - இவர்கள் ஆண்புணர்ச்சிக்காரர்கள். இந்தத் தோப்பு விக்கிரகங்கள் நடுவே இவர்களும் இருக்கிறார்கள். கர்த்தர் அருவருக்கும் பாவங்களில் இதுவும் ஒன்று.

(இ) விக்கிரகாராதனையின் மேடைகளை இடித்துப்போட்டான்

2இராஜா 23:8 அவன் யூதாவின் பட்டணங்களிலுள்ள எல்லா ஆசாரியரையும் வரச்சொல்லி, கேபாமுதல் பெயெர்செபாமட்டும் ஆசாரியர்கள் தூபங்காட்டியிருந்த மேடைகளைத் தீட்டாக்கி, ஒலி முகவாசல்களின் மேடைகளையும், பட்டணத்து வாசலுக்குப்போகும் வழிக்கு இடது புறமாயிருக்கிற பட்டணத்தலைவனாகிய யோசுவாவின் வாசற்படியில் இருந்த மேடையையும் இடித்துப்போட்டான்.

2இராஜா 23:9 மேடைகளின் ஆசாரியர்கள் எருசலேமிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலி யிடாமல், தங்கள் சகோதரருக்குள்ளே புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கிறதற்குமாத்திரம் உத்தாரம் பெற்றார்கள்.

"அவன் யூதாவின் பட்டணங்களிலுள்ள எல்லா ஆசாரியரையும் வரச்சொல்லி" - மேடைகளிலும், தோப்புக்களிலும் தூபங்காட்டி வந்த எல்லா பூஜாசாரிகளையும் யோசியா அகற்றிப்போட்டான். கர்த்தருடைய பலிபீடத்தில் பணிவிடை செய்வதற்கு இவர்களைத் தகுதியற்றவனாக்கினான். இவர்களை எருசலேமிற்கு வரவழைத்து, இவர்களுடைய எல்லா நடவடிக்கைகளையும் கவனித்தான். இந்த பூஜாசாரிகளுக்குக் கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிட அனுமதியில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் சகோதரருக்குள்ளே புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கிறதற்கு மாத்திரம் உத்தாரம்பெற்றார்கள்.

(ஈ) மோளேகுக்கு தீக்கடக்கப் பண்ணியதை அழித்தான்

2இராஜா 23:10 ஒருவனும் மோளேகுக் கென்று தன் குமாரனையாகிலும் தன் குமாரத்தியையாகிலும் தீக்கடக்கப் பண்ணாதபடிக்கு, இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலிருக்கிற தோப்பேத் என்னும் ஸ்தலத்தையும் அவன் தீட்டாக்கி,

தோப்பேத் (Topheth) - תֹּפֶה - tofe - 8596

ஆ.பெ.சொ. - மேள தாளம், தம்புரா, கீதவாத்தியம், வீணை, மேளவாத்தியம் (a drum, tabret) இந்த மேளத்தின் சத்தம் மிகவும் அதிகமாக இருக்கும். மோளேகுக்குச் சிறுபிள்ளைகளை அக்கினியில் பலியாகச் செலுத்துவது வழக்கம். அக்கினியில் பிள்ளைகளைச் சுட்டெரிக்கும்போது, அந்தப் பிள்ளைகளின் அழுகைச் சத்தம் வெளியே கேட்காமல் இருப்பதற்காக இந்த மேளங்களைப் பலத்த சத்தமாக ஒலிப்பார்கள்.

(உ) சூரிய ஆராதனையையும் அதன் குதிரைகளையும் இரதங்களையும் அக்கினியில் சுட்டெரித்தான்

2இராஜா 23:11 கர்த்தரின் ஆலயத்திற்குள் போகிற இடந்தொடங்கி, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கிற நாத்தான்மெலெக் என்னும் பிரதானியின் அறைவீடுமட்டும் யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை அகற்றி, சூரியனின் இரதங்களை அக்கினியில் சுட்டெரித்தான்.

23 அதிகாரம்

"யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகள்" - சூரியனை ஆராதிப்பது பெர்ஷியருடைய வழக்கம். பெர்ஷிய ராஜா சூரியனை ஆராதிக்கும்போது அதற்கு ஒரு வெள்ளைக் குதிரையைக் காணிக்கையாகக் கொடுத்தான். மனாசே இந்தப் பழக்கத்தை இஸ்ரவேல் தேசத்திற்கும் கொண்டு வந்துவிட்டான்.

(ஊ) விக்கிரகராதனையின் பலி பீடங்களை அழித்தான்

2இராஜா 23:12 யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கினதும், ஆகாசுடைய மேல்வீட்டில் இருந்ததுமான பலி பீடங்களையும், மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலி பீடங்களையும் ராஜா இடித்து, அவைகளின் தூளை அங்கேயிருந்து எடுத்துக் கீதரோன் ஆற்றில் கொட்டினான்.

"யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கினது" - ஆகாஸ், மனாசே, ஆமோன் ஆகிய ராஜாக்கள் யூதாவிற்கு விக்கிரகாராதனை பழக்க வழக்கங்களைக் கொண்டு வந்தார்கள். யோசியா இந்த இடங்களையெல்லாம் இடித்து, தேசத்திலிருந்து விக்கிரகாராதனையை அழித்துப்போட்டான்.

"மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலிபீடங்கள்" - (2இராஜா 21:5,21-22; 2நாளா 33:15)

(எ) மற்ற விக்கிரக தெய்வங்களை அழித்தான்

2இராஜா 23:13 எருசலேமுக்கு எதிரே இருக்கிற நாசமலையின் வலதுபுறத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தரோத்திற்கும், மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்கும் கட்டியிருந்த மேடைகளையும் ராஜா தீட்டாக்கி,

2இராஜா 23:14 சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை நிர்மூலமாக்கி, அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்பினான்.

"நாசமலை" (mount of corruption) - இது ஒலிவமலையைக் குறிக்கும். ஆனாலும் விக்கிரகாராதனையோடு இது தொடர்புடையதாக இருப்பதினால் இது நாசமலை என்று அழைக்கப்படுகிறது. சாலொமோன் தன் புறஜாதி மனைவிகளுக்கு இங்கு விக்கிரகக்கோவிலைக் கட்டினான். யோசியா இந்த மலையில் இருந்த விக்கிரகங்களையும், மேடைகளையும் தீட்டுப் படுத்தினான். இந்த ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்பினான். (2இராஜா 23:13-14).

(ஏ) யெரொபெயாமின் பலிபீடத்தையும் பெத்தேலிலிருந்த மேடையையும் அழித்தான் - (1இராஜா 13:2-3)

2இராஜா 23:15 இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் பெத்தேலில் உண்டாக்கியிருந்த பலிபீடமும் மேடையும் ஆகிய அவ்விரண்டையும் அவன் இடித்து, அந்த மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி, விக்கிரகத்தோப்பையும் சுட்டெரித்தான்.

2இராஜா 23:16 யோசியா திரும்பிப் பார்க்கிறபோது அங்கே அந்த மலையிலிருக்கிற கல்லறைகளைக் கண்டு, ஆட்களை அனுப்பி, அந்தக் கல்லறைகளிலுள்ள எலும்புகளை எடுத்து வரச்செய்து, இப்படி நடக்கும் என்று தேவனுடைய மனுஷன் கூறின கர்த்தருடைய வார்த்தையின்படியே, அவைகளை அந்தப் பலிபீடத்தின்மேல் சுட்டெரித்து அதைத் தீட்டாக்கினான்.

23 அதிகாரம்

2இராஜா 23:17 அப்பொழுது அவன்: நான் காண்கிற அந்தக் குறிப்படையாளம் என்ன என்று கேட்டதற்கு, அந்தப் பட்டணத்து மனுஷர்: அது யூதாவிலிருந்து வந்து, நீர் செய்த இந்தக் கிரியைகளைப் பெத்தேலின் பலிபீடத்திற்கு விரோதமாய்க் கூறி, அறிவித்த தேவனுடைய மனுஷனின் கல்லறை என்றார்கள்.

2இராஜா 23:18 அதற்கு அவன்: இருக்கட்டும், ஒருவனும் அவன் எலும்புகளைத் தொடவேண்டாம் என்றான்; அப்படியே அவன் எலும்புகளைச் சமாரியாவிலிருந்து வந்த தீர்க்கதரிசியின் எலும்புகளோடு விட்டுவிட்டார்கள்.

"மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி, விக்கிரகத்தோப்பையும் சுட்டெரித்தான்" - யெரொபெயாம் பெத்தேலில் உண்டாக்கியிருந்த பலிபீடத்தையும் மேடையையும் யோசியா இடித்துப் போட்டான். ஆசேராவைச் சுட்டெரித்தான். அதைத் தூளாக்கினான். விக்கிரகத்தோப்புக்களின் பலிபீடத்தின்மேல் மரித்துப்போன மனுஷரின் எலும்புகளை எரித்தான். இதனால் 1இராஜா 13:1-3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (2இராஜா 23:15- 16).

"அது யூதாவிலிருந்து வந்து, நீர் செய்த இந்தக் கிரியைகளைப் பெத்தேலின் பலிபீடத்திற்கு விரோதமாய்க் கூறி, அறிவித்த தேவனுடைய மனுஷனின் கல்லறை" - 1இராஜாக்கள் 13 ஆம் அதிகாரத்தில் இந்த நிகழ்ச்சி எழுதப்பட்டிருக்கிறது. இது 348 வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவமாகும்.

(ஐ) சமாரியா எங்குமுள்ள மேடைகளை அழித்தான் - விக்கிரகாராதனையின் ஆசாரியர்களைக் கொன்றான்

2இராஜா 23:19 கர்த்தருக்குக் கோபமுண்டாக்க இஸ்ரவேலின் ராஜாக்கள் சமாரியாவின் பட்டணங்களில் உண்டாக்கியிருந்த மேடைகளின் கோவில்களையெல்லாம் யோசியா தகர்த்து, பெத்தேலிலே தான் செய்த செய்கைகளின்படியே அவைகளுக்குச் செய்து,

2இராஜா 23:20 அவ்விடங்களில் இருக்கிற மேடைகளின் ஆசாரியர்களை யெல்லாம் பலிபீடங்களின்மேல் கொன்றுபோட்டு, அவைகளின்மேல் மனுஷரின் எலும்புகளைச் சுட்டெரித்து, எருசலேமுக்குத் திரும்பினான்.

(ஒ) பஸ்கா பண்டிகையைப் புதுப்பித்தான் - (2நாளா 35:1-19)

2இராஜா 23:21 பின்பு ராஜா: இந்த உடன்படிக்கையின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள் என்று சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டான்.

2இராஜா 23:22 இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளின் நாட்கள் தொடங்கி, இஸ்ரவேலின் ராஜாக்கள் யூதாவின் ராஜாக்கள் ஆகிய அவர்களுடைய சகல நாட்களிலும் இந்தப் பஸ்காவைப்போல் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை.

2இராஜா 23:23 ராஜாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே கர்த்தருக்கு இந்தப் பஸ்கா எருசலேமிலே ஆசரிக்கப்பட்டது.

"தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள்" - எருசலேமிலும், சமாரியாவிலும், பெத்தேலிலும் தன்னுடைய ராஜ்யத்திலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் விக்கிரகங்களையும், தோப்புக்களையும் யோசியா அழித்துப்போட்டான். அதன் பின்பு, தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள் என்று சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டான். இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளின் நாட்கள் தொடங்கி, இஸ்ரவேலின் ராஜாக்கள், யூதாவின் ராஜாக்கள் ஆகிய அவர்களுடைய சகல நாட்களிலும் இந்தப் பஸ்காவைப்போல் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை. (2இராஜா 23:21-23). எசேக்கியாவின் காலத்திலும் இதுபோன்று ஒரு பஸ்கா ஆசரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. (2நாளா 30:26, 2நாளா 35:1).

II இராஜாக்கள் - தொகுப்புரை

23 அதிகாரம்

(ஒ) அஞ்சனக்காரர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் அழித்தான்

2இராஜா 23:24 ஆசாரியனாகிய இல்க்கியா கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படிக்கு, யோசியா அஞ்சனக்காரரையும், குறி சொல்லுகிறவர்களையும், சுரூபங்களையும் நரகலான விக்கிரகங்களையும், யூதா தேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்கினான்.

2இராஜா 23:25 கர்த்தரிடத்துக்குத் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு பலத்தோடும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான்; அவனைப் போலொத்த ராஜா அவனுக்குமுன் இருந்ததுமில்லை, அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை.

ஆசாரியனாகிய இல்க்கியா கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்த புஸ்தகம் மோசேயின் நியாயப்பிரமான வார்த்தைகள் என்பதற்குச் சான்றுகள்

1. யூதருடைய பாரம்பரிய சுவடிகள்.
2. அக்காலத்தில் பிரமாணங்களை மனப்பாடமாக ஒப்பிக்கக்கூடியவர்கள்.
3. தீர்க்கதரிசிகளின் புத்திரரிடத்தில் காணப்பட்ட மற்ற ஆவணங்கள்.
4. வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கும் வசனங்கள்.

(ஓ) யோசியாவின் மறுமலர்ச்சிக்கு நடுவிலும் யூதாவிற்கு பிரச்சனை வந்தது

2இராஜா 23:26 ஆகிலும், மனாசே கர்த்தருக்குக் கோபமுண்டாக்கின சகல காரியங்களினிமித்தமும் அவர் யூதாவின்மேல்கொண்ட தம்முடைய மகா கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பாமல்:

2இராஜா 23:27 நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் என் முகத்தை விட்டுத் தள்ளி, நான் தெரிந்துகொண்ட இந்த எருசலேம் நகரத்தையும், என் நாமம் விளங்கும் என்று நான் சொன்ன ஆலயத்தையும் வெறுத்துவிடுவேன் என்று கர்த்தர் சொன்னார்.

2இராஜா 23:28 யோசியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"ஆகிலும், மனாசே கர்த்தருக்குக் கோபமுண்டாக்கின சகல காரியங்களினிமித்தமும்" - யோசியாவின் காலத்தில் பல மறுமலர்ச்சிகள் நடைபெற்றன. ஆனாலும் கர்த்தர் யூதாவின்மேல்கொண்ட தம்முடைய மகா கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பவில்லை. யோசியாவின் காலம் வரையிலும் மட்டுமே யூதா ஜனங்கள் தமக்குப் பயந்து ஜீவிப்பார்கள் என்றும், அதற்குப் பின்பு அவர்கள் தம்மை விட்டுப் பின்வாங்கிப் போவார்கள் என்றும் கர்த்தர் தெரிந்து வைத்திருந்தார். ஆகையினால் யூதாவின் அழிவைக் கர்த்தர் ஏற்கெனவே தீர்மானம் பண்ணிவிட்டார். (2இராஜா 23:27). ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து தங்கள் பாவ வழிகளை விட்டு விலகி ஜீவித்தால், கர்த்தர் தமது மனதைமாற்றி, அவர்களை அழிக்காமல் இரட்சித்திருப்பார். (எரே 41:9-22).

தீர்க்கதரிசன எண் - 27

"நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் என் முகத்தை விட்டுத் தள்ளி, நான் தெரிந்துகொண்ட இந்த எருசலேம் நகரத்தையும், என் நாமம் விளங்கும் என்று நான் சொன்ன ஆலயத்தையும் வெறுத்து விடுவேன்" (2இராஜா 23:27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

II இராஜாக்கள் - தொகுப்புரை

23 அதிகாரம்

(10) யோசியாவின் மரணம் - யோவாகாஸ் இராஜாவானான்

2இராஜா 23:29 அவன் நாட்களில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ அசீரியா ராஜாவுக்கு விரோதமாய் ஐபிராத்து நதிக்கு போகிறபோது ராஜாவாகிய யோசியா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான்; பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது, அவனைக்கொன்றுபோட்டான்.

2இராஜா 23:30 மரணமடைந்த அவனை அவனுடைய ஊழியக்காரர் ரதத்தின்மேல் ஏற்றி, மெகிதோவிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுவந்து, அவனை அவன் கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள்; அப்பொழுது தேசத்தின் ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை அபிஷேகம்பண்ணி, அவன் தகப்பன் ஸ்தானத்தில் அவனை ராஜாவாக்கினார்கள்.

"பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது, அவனைக் கொன்றுபோட்டான்" - யோசியா பார்வோன்நேகோவிற்கு எதிராக ஏன் போனான் என்று தெரியவில்லை. ஒருவேளை எகிப்தின் சேனை யூதாவின் வழியாகப் போயிருந்திருக்கலாம். (2இராஜா 23:29-30).

5. யோவாகாசின் ஆட்சி - யூதாவின் பதினேழாவது இராஜா - மூன்று மாதங்கள் - (2நாளா 36:1-4)

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும்

2இராஜா 23:31 யோவாகாஸ் ராஜாவாகிறபோது இருபத்துமூன்று வயதாயிருந்து, மூன்று மாதம் எருசலேமில் அரசாண்டான்; லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் அமுத்தாள்.

2இராஜா 23:32 அவன் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

"யோவாகாஸ்" (Jehoahaz) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் தாங்குகிறார்" **"Jehovah upholds"** என்று பொருள். இவன் யூதாவின் 17 ஆவது ராஜா. (2இராஜா 23:31-32; 2நாளா 25:17,25). பத்துக் கோத்திரத்தாரின் 11 ஆவது ராஜாவின் பெயரும் யோவாகாஸ் என்பதாகும். (2இராஜா 10:34-36; 2இராஜா 13:1-9; 2இராஜா 14:8-14; 2நாளா 25:17,25).

(2) இஸ்ரவேலும் எகிப்தும் நடத்திய நான்காவது யுத்தம் - யோவாகாசின் மரணம் - யோயாக்கீம் இராஜாவானான் - (வசனம் 29-30; யாத் 14:5-28; 1இராஜா 14:25-30; 2நாளா 36:5-7; 23:36-25:30; 2நாளா 36:5-23)

2இராஜா 23:33 அவன் எருசலேமில் அரசாளாதபடிக்கு, பார்வோன்நேகோ அவனை ஆமாத் தேசமான ரிப்லாவிலே பிடித்துக் கட்டுவித்து, தேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியையும் ஒரு தாலந்து பொன்னையும் அபராதமாகச் சுமத்தி,

2இராஜா 23:34 யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமை அவன் தகப்பனாகிய யோசியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக வைத்து, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றி, யோவாகாசைக் கொண்டுபோய் விட்டான்; இவன் எகிப்திலே போய் அங்கே மரணமடைந்தான்.

2இராஜா 23:35 அந்த வெள்ளியையும் பொன்னையும் யோயாக்கீம் பார்வோனுக்குக் கொடுத்தான்; ஆனாலும் பார்வோனுடைய கட்டளையின்படி அந்தப் பணத்தைக் கொடுக்கும்படி அவன் தேசத்தை மதிப்பிட்டு, அவரவர் மதிப்பின்படி அந்த வெள்ளியையும், பொன்னையும் பார்வோன் நேகோவுக்குக் கொடுக்கத்தக்கதாக தேசத்து ஜனங்களின் கையிலே தண்டினான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

23 அதிகாரம்

"யோயாக்கீம்" (Jehoiakim) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் எழுப்புகிறார்" **"Jehovah raises up"** என்று பொருள். இவன் ஆட்சிக்கு வந்தபோது இவனுக்கு 25 வயதாயிற்று. (2இராஜா 23:36) யோவாசின் நல்ல ஆட்சிக்குப் பின்பு, இவனும் இவன் சகோதரனும் துன்மார்க்கமாக ஆட்சி புரிகிறார்கள். இதனால் கர்த்தர் தம்முடைய கோபத்தின் உக்கிரத்தை யூதாவைவிட்டு அகற்றவில்லை. (2இராஜா 23:26-27). யோசியாவே யூதாவின் ராஜாக்களில் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்த கடைசி ராஜா. யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தில் யூதா தேசத்திற்குள் புறஜாதி பழக்கவழக்கங்கள் மறுபடியும் திரும்ப வந்துவிட்டது. இவன் கர்த்தரை அவமதித்து, இவனுக்குக் கூறப்பட்ட தீர்க்கதரிசனச் சுருளையும் சுட்டெரித்துப் போட்டான். (எரே 36). யோயாக்கீம் பார்வோனுக்கு பகுதிப்பணம் கட்டினான். இதற்காக அவன் யூதா முழுவதிலும் விசேஷித்த வரிகளை வசூலித்தான். (2இராஜா 23:35).

"இவன் எகிப்திலே போய் அங்கே மரணமடைந்தான்" - எரே 22:11-12 ஆவது வசனத்தில் முன்னறிவிக்கப்பட்ட மரித்துப் போகிறான்.

X. யூதா பாபிலோனுக்குச் சிறைபிடித்துச் செல்லப்பட்டது

1. யோயாக்கீமின் ஆட்சி - யூதாவின் பதினெட்டாவது இராஜா - பதினொரு வருஷங்கள் - (2நாளா 36:5-7)

2இராஜா 23:36 யோயாக்கீம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; ரூமா ஊரானாகிய பெதாயாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் செபுதாள்.

2இராஜா 23:37 அவன் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

"யோயாக்கீம் .... பதினொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்" - யோசியாவின் நல்ல ஆட்சிக்குப் பின்பு, யோயாக்கீமும், சிதேக்கியாவும், யோவாகாசும், யோயாக்கீனும், ஆட்சி புரிந்தார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசம் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு 111 வருஷங்களுக்கு முன்பே போய்விட்டார்கள். அந்தத் தேசத்தைப் போலவே யூதா தேசமும் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போகும் நாள் சமீபித்திருக்கிறது. (2இராஜா 23:31,36; 2இராஜா 24:8-16).

24 அதிகாரம்

2. யோயாக்கீமின் கீழ்ப்படிதலும் பாபிலோனுக்கு எதிரான கலகமும்

2இராஜா 24:1 அவன் நாட்களிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்தான்; யோயாக்கீம் மூன்று வருஷம் அவனைச் சேவித்து, பின்பு அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்.

"நேபுகாத்நேச்சார்" (Nebuchadnessar) - இந்தப் பெயருக்கு "நெபோ எல்லையைப் பாதுகாப்பான்" **"Nebo defend the boundary"** என்று பொருள். இவன் நெபோ பொலாசாரின் (Nabopolasser) குமாரன். பாபிலோனின் ராஜா. கர்த்தர் யூதாவைச் சிட்சிக்கும்போது அவர் நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தியதினால் வேதாகமத்தில் இவன் முக்கியத்துவம் பெறுகிறான். ஆங்கிலத்தில் நேபுகாத்நேச்சாருக்கு இரண்டு விதமான பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: **"Nebuchadnezzar"** 60 தடவைகள் (2இராஜா 24:1,10-11; 2இராஜா 25:1-22; 1நாளா 6:15; 2நாளா 36; எஸ்றா 1:7; எஸ்றா 2:1; எஸ்றா 5:12-14; எஸ்றா 6:5; நெகே 7:6; எஸ் 2:6; எரே 27:6-8,20; எரே 28:3-14; எரே 29:1-3; எரே 34:1; எரே 39:5; தானி 1:1-5:18) **"Nebuchadrezzar"** 31 தடவைகள் (எரே 21:2-7; எரே 22:25; எரே 27:1; எரே 25:1-9; எரே 29:21; எரே 32:1,28; எரே 35:11; எரே 37:1; எரே 39:1,11; எரே 43:10; எரே 44:30; எரே 46:2,13,26; எரே 49:28-30;எரே 50:17; எரே 51:34; எரே 52:4-30; எசே 26:7; எசே 29:18-19; எசே 30:10).

யோயாக்கீமின் நான்காம் வருஷத்தில் பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் இவனுக்கு எதிராக வந்தான். (எரே 25:1; எரே 46:2). தானியேலின் புஸ்தகத்தில் யோயாக்கீமின் மூன்றாம் வருஷத்தில் வந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. (2இராஜா1:1) தானியேல் பாபிலோனிலிருந்து நேபுகாத்நேச்சாரைப் பற்றி எழுதுகிறான். நான்காம் வருஷம் என்பது யோயாக்கீமிற்கு விரோதமாகவந்த வருஷமும், பாபிலோனுக்கு யோயாக்கீமை அடிமைப்படுத்திய வருஷமுமாகும். யோயாக்கீம் மூன்று வருஷம் நேபுகாத்நேச்சாரைச் சேவித்தான். பின்பு அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்

3. யூதாவின் இராஜ்ஜியபார முடிவு ஆரம்பமாகிறது - பாபிலோனுக்கு யூதாவின் முதலாவது சிறையிருப்பு - *(2நாளா 36:5-7)*

2இராஜா 24:2 அப்பொழுது கர்த்தர் கல்தேயரின் தண்டுகளையும், சீரியரின் தண்டுகளையும், மோவாபியரின் தண்டுகளையும், அம்மோன் புத்திரரின் தண்டுகளையும் அவன் மேல் வரவிட்டார்; தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அவர் அவைகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிட்டார்.

2இராஜா 24:3 மனாசே தன் எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படி கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடந்தது.

2இராஜா 24:4 அவன் சிந்தின குற்றமற்ற இரத்தத்திற்காகவும் எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தால் நிரப்பினதற்காகவும் கர்த்தர் மன்னிக்கச் சித்தமில்லாதிருந்தார்.

"கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அவர் அவைகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிட்டார்" - கர்த்தர் யோயாக்கீமின்மேல் கல்தேயரின் தண்டுகளையும், சீரியரின் தண்டுகளையும், மோவாபியரின் தண்டுகளையும், அம்மோன் புத்திரரின் தண்டுகளையும் வரவிட்டார். தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த பிரகாரமாக இந்தத் தண்டுகள் யூதாவை அழிக்கத் தொடங்கினார்கள். இதன் பின்பு நேபுகாத்நேச்சார் யோயாக்கீமுக்கு விரோதமாக வருகிறான். யூதாவையும், எருசலேமையும் அழிப்பதற்கு இவன் வருவான் என்று கர்த்தர் முன்னறிவித்திருக்கிறார். (2இராஜா 24:2-3; எரே 27:6-8). யூதாவை அழிக்க வேண்டுமென்றும், பாலஸ்தீன தேசத்திலிருந்து அவர்களை அகற்றிப் போட வேண்டுமென்றும் கர்த்தர் கட்டளை யிட்டிருக்கிறார். மனாசேயின் பாவங்களும், இஸ்ரவேலின் மற்ற ராஜாக்களின் பாவங்களும் கர்த்தர் அவர்கள்மீது கோபமடைவதற்குக் காரணமாயிற்று. (2இராஜா 24:3-4).

24 அதிகாரம்

4. யோயாக்கீமின் மரணம் - யோயாக்கீன் இராஜாவானான் - (2 நாளா 36:8-10)

2 இராஜா 24:5 யோயாக்கீமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2 இராஜா 24:6 யோயாக்கீம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய யோயாக்கீன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"யோயாக்கீமின் மற்ற வர்த்தமானங்கள்" - (2 நாளா 36:5-7)

"யோயாக்கீம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்" - (1இராஜா 14:20) இவனுடைய முற்பிதாக்களைப் போல இவன் அடக்கம் பண்ணப்படவில்லை. இவனுடைய சரீரம் வெளிநிலத்தில் கிடந்தது. ஒரு மிருகத்தைப் போல இவன் அடக்கம் பண்ணப் பட்டான். (எரே 22:18-19; எரே 36:30-31).

5. பாபிலோன் எகிப்தின்மீது வெற்றி பெற்றது

2 இராஜா 24:7 எகிப்தின் ராஜா அப்புறம் தன் தேசத்திலிருந்து புறப்பட்டு வரவில்லை; எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதிமட்டும் எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்திருந்தான்.

"எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதிமட்டும் எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்திருந்தான்" - பாபிலோன் ராஜா எகிப்து தேசத்தைப் பிடித்து விட்டான். ஆகையினால் யூதா தேசத்திற்கு எகிப்திலிருந்து எந்தவித இராணுவ உதவியும் வரவில்லை. இதன் பின்பு, நேபுகாத்நேச்சார் யூதாவுக்கு விரோதமாக வந்தான். இவன் மூலமாக வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பல தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று.

6. யோயாக்கீனின் ஆட்சி - யூதாவின் பத்தொன்பதாவது இராஜா - மூன்று மாதங்கள் - (2 நாளா 36:8-10)

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும்

2 இராஜா 24:8 யோயாக்கீன் ராஜாவாகிற போது பதினெட்டு வயதாயிருந்து, எருசலேமிலே மூன்று மாதம் அரசாண்டான்; எருசலேம் ஊரானாகிய எல்நாத்தானின் குமாரத்தியான அவன் தாயின்பேர் நெகுஸ்தாள்.

2 இராஜா 24:9 அவன் தன் தகப்பன் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

"யோயாக்கீன்" (Jehoiachin) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் ஸ்தாபிக்கிறார்" **"Jehovah establishes"** என்று பொருள். இவன் யூதாவின் 19ஆவது ராஜா. பாபிலோனுக்கு இவனைச் சிறைப்பிடித்துச் சென்றார்கள். 37 வருஷம் அங்கு சிறையிருப்பில் இருந்தான். அதன் பின்பு விடுவிக்கப்பட்டான். (2 இராஜா 24:8-15; 2 இராஜா 25:27; 2 நாளா 36:8-9; எரே 52:31) மறுபெயர்கள் கோனியா **"Coniah"** (எரே 22:24-28) எகோனியா **"Jeconiah"** (1நாளா 3:16-17; எஸ் 2:6; எரே 24:1; எரே 27:20; எரே 28:4; எரே 29:2) எகொனியா **"Jechonias"** (மத் 1:11-12).

"யோயாக்கீன் ராஜாவாகிறபோது பதினெட்டு வயதாயிருந்து" - 2 நாளா 36:9 ஆவது வசனத்தில் எட்டு வயது என்று கூறப் பட்டிருக்கிறது. இது பிரதியெடுத்தவர் செய்த பிழையாக இருக்கலாம். இவனுக்கு மனைவிகள் இருந்தார்கள். (2 இராஜா 24:15). ஆகையினால் இவனுக்கு பதினெட்டு வயது என்று கூறுவதே பொருத்தமாக உள்ளது.

24 அதிகாரம்

7. பாபிலோனுக்கு யூதாவின் இரண்டாவது சிறையிருப்பு - (2 நாளா 36:5-10)

2 இராஜா 24:10 அக்காலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் சேவகர் எருசலேமுக்கு வந்தார்கள்; நகரம் முற்றிக்கை போடப்பட்டது.

2 இராஜா 24:11 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய சேவகர் நகரத்தை முற்றிக்கை போடுகையில் அவன் தானும் அதற்கு விரோதமாய் வந்தான்.

2 இராஜா 24:12 அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனும், அவன் தாயும், அவன் ஊழியக்காரரும், அவன் பிரபுக்களும், பிரதானிகளும் பாபிலோன் ராஜாவினிடத்திற்குப் புறப்பட்டுப் போனார்கள்; அவனைப் பாபிலோன் ராஜா தன் ஆளுகையின் எட்டாம் வருஷத்திலே பிடித்துக் கொண்டான்.

2 இராஜா 24:13 அங்கேயிருந்து கர்த்தருடைய ஆலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் உண்டாக்கியிருந்த பொன் பணிமுட்டுகளையெல்லாம், கர்த்தர் சொல்லியிருந்தபடியே உடைத்துப்போட்டு,

2 இராஜா 24:14 எருசலேமியர் அனைவரும் சகல பிரபுக்களும் சகல பராக்கிரமசாலிகளுமாகிய பதினாயிரம் பேரையும், சகல தச்சரையும் கொல்லரையும் சிறைபிடித்துக் கொண்டுபோனான்; தேசத்தில் ஏழை ஜனங்களே அல்லாமல் வேறொருவரும் மீதியாயிருக்கவில்லை.

2 இராஜா 24:15 அவன் யோயாக்கீனையும், ராஜாவின் தாயையும், ராஜாவின் ஸ்திரீகளையும், அவன் பிரதானிகளையும், தேசத்தின் பராக்கிரமசாலிகளையும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துக் கொண்டுபோனான்.

2 இராஜா 24:16 இப்படியே பாபிலோன் ராஜா பராக்கிரமசாலிகளான மனுஷராகிய ஏழாயிரம்பேரையும், தச்சரும் கொல்லருமாகிய ஆயிரம்பேரையும், யுத்தம்பண்ணத்தக்க பலசாலிகளையும் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக் கொண்டுபோனான்.

"பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் சேவகர் எருசலேமுக்கு வந்தார்கள்" - யோயாக்கீம் மரித்துப்போனான். யோயாக்கீன் ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்து இருக்கிறான். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் எட்டாம் வருஷ ஆளுகையின்போது அவனுடைய சேவகர் எருசலேமுக்கு வந்தார்கள். நகரம் முற்றிக்கை போடப்பட்டது. யோயாக்கீன் மூன்று மாதம் ஆட்சி புரிந்தான். நேபுகாத்நேச்சார் எருசலேமிற்கு எதிராக வந்தபோது யோயாக்கீனும், அவன் தாயும், அவன் ஊழியக்காரரும், அவன் பிரபுக்களும், பிரதானிகளும் நேபுகாத்நேச்சாரைச் சந்திப்பதற்குப் புறப்பட்டுப் போனார்கள். நேபுகாத்நேச்சார் இவர்கள் எல்லோரையும் கைது பண்ணினான். (2 இராஜா 24:8-12; எரே 25:1; எரே 22:25).

நேபுகாத்நேச்சார் எடுத்துக் கொண்டவைகளும், பிடித்துக் கொண்டவர்களும்

1. கர்த்தருடைய ஆலயத்தின் சகல பொக்கிஷங்கள். (2 இராஜா 24:13)
2. ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்கள்.
3. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் உண்டாக்கியிருந்த பொன் பணிமுட்டுகள்
4. எருசலேமியர் அனைவரும் (2 இராஜா 24:14)
5. சகல பிரபுக்களும்

24 அதிகாரம்

6. சகல பராக்கிரமசாலிகளும்

7. சகல தச்சரும் கொல்லரும்

8. யோயாக்கீன் (2இராஜா 24:15)

9. யோயாக்கீனின் தாய்

10. ராஜாவின் ஸ்திரீகள்

11. அவன் பிரதானிகள்

12. தேசத்தின் பராக்கிரமசாலிகள்

“இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் உண்டாக்கியிருந்த பொன் பணிமுட்டுகளையெல்லாம்” - இஸ்ரவேலின் ராஜாக்கள் தேவாலயத்தின் பொக்கிஷங்களையெல்லாம் அசீரியருக்கும், எகிப்தியருக்கும், மேலும் பல ராஜாக்களுக்கும் பகுதியாகச் செலுத்தினார்கள். இவை எல்லாவற்றையும் இஸ்ரவேலின் ராஜாக்கள் மறுபடியும் மீட்டு தேவாலயத்திற்குத் திரும்பக் கொண்டு வந்து சேர்த்திருக்க வேண்டும். அல்லது தேவாலயத்தில் மீதமாக இருந்த பணிமுட்டுகள் எல்லாவற்றையும் நேபுகாத்நேச்சார் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

8. சிதேக்கியாவின் ஆட்சி - யூதாவின் இருபதாவது இராஜாவும் கடைசி இராஜாவும் - பதினொரு வருஷங்கள் - (2நாளா 36:11-21)

(1) ஆட்சிக்கு வருவதும் குணாதிசயமும் - (2நாளா 36:11-14)

2இராஜா 24:17 அவனுக்குப் பதிலாகப் பாபிலோன் ராஜா அவன் சிறியதகப்பனாகிய மத்தனியாவை ராஜாவாக வைத்து, அவனுக்குச் சிதேக்கியா என்று மறுபேரிட்டான்.

2இராஜா 24:18 சிதேக்கியா ராஜாவாகிறபோது இருபத்தொரு வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் அமுத்தாள்.

2இராஜா 24:19 யோயாக்கீம் செய்த படியெல்லாம் அவனும் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

“அவன் சிறியதகப்பனாகிய மத்தனியா” - இவன் யோயாக்கீனின் தகப்பனுடைய சகோதரன். தாவீதின் ராஜவம்சமும், மேசியாவின் வம்சமும் யோயாக்கீனுடன் முடிவு பெறுகிறது.

9. சிதேக்கியா பாபிலோனுக்கு எதிராக கலகம் பண்ணுகிறான் - (2நாளா 36:13)

2இராஜா 24:20 எருசலேமையும் யூதாவையும் கர்த்தர் தம்முடைய சமுகத்தைவிட்டு அகற்றித் தீருமளவும், அவைகளின்மேலுள்ள அவருடைய கோபத்தினால் இப்படி நடந்ததும் அல்லாமல், சிதேக்கியா பாபிலோனிலே ராஜாவுக்கு விரோதமாகக் கலகமும் பண்ணினான்.

“சிதேக்கியா பாபிலோனிலே ராஜாவுக்கு விரோதமாகக் கலகமும்பண்ணினான்” - பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ண கர்த்தர் சிதேக்கியாவை அனுமதித்தார். யூதா அழிந்துபோக வேண்டும். கர்த்தருக்கு விரோதமாக அது செய்த பாவத்தின் நிமித்தம் அந்தத் தேசத்தார் சிறையிருப்புக்குப் போகவேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாயிற்று. யோயாக்கீமும், சிதேக்கியாவைப் போல பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். இதன் விளைவாக நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றிக்கை போட்டான். (2இராஜா 24:1). இப்போது சிதேக்கியாவும், பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறான். இது யூதாவின் கடைசிக் கலகமாகும். ஏனெனில் இந்தக் கலகத்தினால் கோபமடைந்த நேபுகாத்நேச்சார் யூதா தேசத்தார் எல்லோரையும் தன்னுடைய தேசத்திற்குச் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டான். தேசத்தில் பயிரிடுவதற்காக ஒருசில ஏழைகளை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லோரையும் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் சென்றான்.

25 அதிகாரம்

10. பாபிலோனுக்கும் இஸ்ரவேலுக்கும் ஏற்பட்ட ஐந்தாவது யுத்தமும், கடைசி யுத்தமும் - *(24:6-10; ஆதி 14; நியா 3:8)*

2இராஜா 25:1 அவன் ராஜ்யபாரம் பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிரே பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள்.

2இராஜா 25:2 அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருந்தது.

2இராஜா 25:3 நாலாம் மாதம் ஒன்பதாந்தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்திற்கு ஆகாரம் இல்லாமற் போயிற்று; நகரத்தின் மதிலில் திறப்பு கண்டது.

"பத்தாம் மாதம்" - இந்த மாதத்திற்கு "தேபேத்" **(Tebeth)** என்று பெயர். (எரே 30-44) நேபுகாத்நேச்சார் முற்றிக்கை போடும் நாளைப் பாபிலோனிலிருந்த எசேக்கியேலுக்குக் கர்த்தர் வெளிப்படுத்தினார். *(எசே 24:1)*.

"நாலாம் மாதம்" - இந்த மாதத்திற்கு "தம்மூஷ்" **(Tammuz)** என்று பெயர்.

" பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்திற்கு ஆகாரம் இல்லாமற் போயிற்று" - லேவி 26:29; உபா 28:53-57; எரே 15:2; எரே 27:13; புல 2:20-22; எசே 4:16 ஆகிய வசனங்கள் நிறைவேறுகின்றன.

"நகரத்தின் மதிலில் திறப்பு கண்டது." - இதற்கு முன்பு எகிப்தின் சேனை யூதாவுக்கு உதவி புரிய வந்தது. இதனால் பாபிலோனியர் பின்வாங்கிப் போனார்கள். (எரே 37:5-11) ஆனால் இது முன்னறிவிக்கப்பட்டபடி தற்காலிகமாக நடைபெற்ற சம்பவமாகும். பாபிலோனியர் தொடர்ந்து முற்றிக்கையிட்டு எருசலேமைப் பிடித்தார்கள். சிதேக்கியாவைக் கைதுபண்ணிவிட்டார்கள்.

11. இஸ்ரவேலின் தோல்வி - சிதேக்கியா பாபிலோனுக்கு சிறைப்பிடித்துச் செல்லப்படுகிறான் - *(2நாளா 36:15-21)*

2இராஜா 25:4 அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரி காலத்தில் ராஜாவுடைய தோட்டத்தின் வழியாய் இரண்டு மதில்களுக்கு நடுவான வாசலால் தப்பி, அவர்களும் ராஜாவுமாய் சமனான பூமியை நோக்கி ஓடிப் போனார்கள்.

2இராஜா 25:5 கல்தேயரின் இராணுவத்தார் ராஜாவைப் பின் தொடர்ந்து எரிகோவின் சமனான பூமியில் அவனைப் பிடித்தார்கள்; அப்பொழுது அவனுடைய இராணுவமெல்லாம் அவனை விட்டுச் சிதறிப்போயிற்று.

2இராஜா 25:6 அவர்கள் ராஜாவைப் பிடித்து, அவனை ரிப்லாவிலிருக்கிற பாபிலோன் ராஜாவினிடத்துக்குக் கொண்டுபோய், அவனை நியாயந்தீர்த்து,

2இராஜா 25:7 சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டி, சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டு, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள்.

"சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி" - சிதேக்கியாவால் பாபிலோனைப் பார்க்க முடியாதபடிக்கு, அவனுடைய கண்களைக் குருடாக்கிப் போட்டார்கள். அவன் பாபிலோனில் மரித்தான். இவனுக்கு முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (2இராஜா 25:7; எசே 12:13) ஆனாலும் முன்னறிவிக்கப் பட்டபடி சிதேக்கியா பாபிலோன் ராஜாவைத் தன் கண்களால் பார்த்தான். *(எரே 32:4; எரே 34:3)*. கிழக்கு தேசங்களில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் கண்களைக் குருடாக்கிப் போடுவது வழக்கம். *(நியா 16:21; 1சாமு 11:2)*.

25 அதிகாரம்

12. எருசலேமும் தேவாலயமும் அழிக்கப் படுகிறது - (2நாளா 36:19)

2இராஜா 25:8 ஐந்தாம் மாதம் ஏழாந்தேதியிலே நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் பத்தொன்பதாம் வருஷத்திலே, பாபிலோன் ராஜாவின் ஊழியக்காரனாகிய நெபுசராதான் என்னும் காவல் சேனாபதி எருசலேமுக்கு வந்து,

2இராஜா 25:9 கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமின் சகல கட்டடங்களையும், பெரிய வீடுகள் எல்லாவற்றையும் அக்கினியால் சுட்டெரித்து விட்டான்.

2இராஜா 25:10 காவல் சேனாபதியோடிருந்த கல்தேயரின் இராணுவத்தாரெல்லாரும் எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப்போட்டார்கள்.

“ஏழாந்தேதியிலே” - எரே 52:12 ஆவது வசனத்தில் பத்தாம் தேதி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஏழாம் தேதியில் எருசலேம் பட்டணத்தைத் தீயிட்டுக் கொளுத்தியிருக்க வேண்டும். அது பத்தாம் தேதி வரையிலும் எரிந்திருக்க வேண்டும். (2இராஜா 25:8-9).

13. பாபிலோனுக்கு யூதாவின் மூன்றாவதும் கடைசியுமான சிறையிருப்பு - (2நாளா 36:15-21)

2இராஜா 25:11 நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன் ராஜாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும், மற்ற ஜனக்கூட்டத்தையும், காவல் சேனாபதியாகிய நெபுசராதான் சிறைகளாகக் கொண்டு போனான்.

2இராஜா 25:12 தேசத்தில் ஏழையான சிலரைத் திராட்சத்தோட்டக்காரராகவும் பயிரிடுங்குடிகளாகவும் விட்டிருந்தான்.

“திராட்சத்தோட்டக்காரராகவும் பயிரிடுங் குடிகளாகவும் விட்டிருந்தான்” - தேசத்திலுள்ள நிலங்களைப் பயிரிடுவதற்காகச் சில ஏழை ஜனங்களைப் பாபிலோன் ராஜா யூதா தேசத்தில் விட்டுவிட்டான். இவர்களால் யுத்தம் பண்ண முடியாது. பாபிலோனுக்கு எதிராக இவர்களால் எழும்பிக் கலகம் பண்ணவும் முடியாது.

14. தேவாலயத்தின் தட்டுமுட்டுக்களும் பாத்திரங்களும் பாபிலோனுக்கு எடுத்துச்செல்லப்பட்டன - (2நாளா 36:18)

2இராஜா 25:13 கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலத் தூண்களையும், அதிலிருந்த ஆதாரங்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலக் கடல் தொட்டியையும், கல்தேயர் உடைத்துப் போட்டு, அவைகளின் வெண்கலத்தைப் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்.

2இராஜா 25:14 செப்புச்சட்டிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், கத்திகளையும், தூபகலசங்களையும், ஆராதனைக்கடுத்த சகல வெண்கலப் பணிமுட்டுகளையும் எடுத்துக்கொண்டார்கள்.

2இராஜா 25:15 சுத்தப் பொன்னும் சுத்த வெள்ளியுமான தூபகலசங் களையும் கலங்களையும் காவல் சேனாபதி எடுத்துக்கொண்டான்.

2இராஜா 25:16 சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகப் பண்ணுவித்த இரண்டு தூண்களும், ஒரு கடல்தொட்டியும் ஆதாரங்களுமாகிய அந்தச் சகல பணிமுட்டுகளுடைய வெண்கலத்திற்கும் நிறையில்லை.

2இராஜா 25:17 ஒரு தூணின் உயரம் பதினெட்டு முழமாயிருந்தது; அதின்மேல் அதற்கு மூன்றுமுழ உயரமான வெண்கலத் தலைப்பும் உண்டாயிருந்தது; குமிழிலே சுற்றிலும் செய்யப்பட்டிருந்த பின்னலும் மாதளம்பழங்களும் எல்லாம் வெண்கலமாயிருந்தது; மற்றத் தூணும் அதின் பின்னலும் அதைப்போல் இருந்தது.

25 அதிகாரம்

"அவைகளின் வெண்கலத்தைப் பாபிலோனுக்கு எடுத்துக் கொண்டுபோனார்கள்" - தேவாலயத்திலுள்ள மற்ற பொக்கிஷங்களை ஏற்கெனவே எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். (2இராஜா 24:13). இப்போது வெண்கலம் மட்டுமே அங்கு மீதியாக இருக்கிறது. எரே 52:17-23 ஆகிய வசனங்களில் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களின் மொத்த அட்டவணையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெண்கலம் தவிர தேவாலயத்தில் காணப்பட்ட பொன்னையும், வெள்ளியையும் பாபிலோனுக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். (2இராஜா 25:13-17).

15. நேபுகாத்நேச்சார் பிரதான ஆசாரியஸரையும் மற்றவர் களையும் கொன்றுபோடுகிறான்

2இராஜா 25:18 காவல் சேனாபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசல்காக்கும் மூன்று காவற்காரரையும் பிடித்தான்.

2இராஜா 25:19 நகரத்திலே அவன் யுத்த மனுஷரின் விசாரிப்புக்காரனாகிய பிரதானி ஒருவனையும், ராஜாவின் மந்திரிகளிலே நகரத்தில் அகப்பட்ட ஐந்துபேரையும், தேசத்தின் ஜனத்தைச் சேவகம் எழுதுகிற தலைவனான இராணுவச் சம்பிரதியையும், தேசஜனத்திலே நகரத்தில் அகப்பட்ட அறுபதுபேரையும் பிடித்தான்.

2இராஜா 25:20 அவர்களைக் காவல் சேனாபதியாகிய நெபுசராதான் பிடித்து, ரிப்லாவில் இருக்கிற பாபிலோன் ராஜாவினிடத்துக்குக் கொண்டு போனான்.

2இராஜா 25:21 அவர்களைப் பாபிலோன் ராஜா ஆமாத் தேசத்தின் பட்டணமான ரிப்லாவிலே வெட்டிக் கொன்று போட்டான்; இப்படியே யூதா ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறையிருப்புக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

"இப்படியே யூதா ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறையிருப்புக்குக் கொண்டு போகப்பட்டார்கள்" - யூதாவின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறுகிறது. பல நூறு வருஷங்களாகக் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் இப்போது பரிதாபமாக இருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களும், இருதயக்கடினமும் அவர்களுக்குக் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை வரவழைத்தது. எழுபது வருஷங்களுக்குப் பின்பு கர்த்தர் அவர்களை மறுபடியும் மீட்டுக் கொள்ள முயற்சி பண்ணினார். ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் தொடர்ந்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால் கிபி. 70 ஆம் வருஷத்தில் அவர்களுடைய தேசம் அழிந்துபோவதற்கு அனுமதித்தார். (லூக்கா 21:20-24).

16. மீதமுள்ள யூதர்களுக்கு கெதலியா ஆளுநராக நியமிக்கப்படுகிறான்

2இராஜா 25:22 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதேயாதேசத்தில் மீதியாக வைத்தஜனத்தின்மேல், சாப்பானின் குமாரனாகிய அகீக்காமின் மகன் கெதலியாவை அதிகாரியாக வைத்தான்.

2இராஜா 25:23 பாபிலோன் ராஜா கெதலியாவை அதிகாரியாக வைத்ததை, சகல இராணுவச் சேர்வைக்காரரும் அவர்களுடைய மனுஷரும் கேட்டபோது, அவர்கள் மிஸ்பாவில் இருக்கிற கெதலியாவினிடத்தில் வந்தார்கள்; அவர்கள் யாரெனில், நெத்தனியாவின் குமாரன் இஸ்மவேலும், கரேயாவின் குமாரன் யோகனானும், நெத்தோப்பாத்தியனாகிய தன்கூமேத்தின் குமாரன் செராயாவும், மகாத்தியனான ஒருவனுடைய குமாரன் யசனியாவும் அவர்கள் மனுஷருமே.

2இராஜா 25:24 அப்பொழுது கெதலியா அவர்களுக்கும் அவர்கள் மனுஷருக்கும் ஆணையிட்டு: நீங்கள் கல்தேயரைச் சேவிக்கப் பயப்பட வேண்டாம்; தேசத்திலிருந்து பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு நன்மை உண்டாகும் என்றான்.

II இராஜாக்கள் - தொகுப்புரை

25 அதிகாரம்

"அகீக்காம்" (Ahikam) - இவன் எரேமியாவுடன் நட்பாகப் பழகினான். (எரே 26:24).

"அவர்கள் மிஸ்பாவில் இருக்கிற கெதலியாவினிடத்தில் வந்தார்கள்" - இந்தச் சம்பவத்தின் விவரம் எரே 40:7-43:13 ஆகிய வசனங்களில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

"இஸ்மவேல்" (Ishmael) - இவன் ராஜவம்சத்தைச் சேர்ந்தவன். யூதாவின் சிங்காசனத்தில் அமர்வதற்கு முயற்சி பண்ணினான். (எரே 40:8; எரே 41:1-18).

"யோகனான்" (Johanan) - இஸ்மவேலின் துரோகச்செயலை யோகனானும், மற்றவர்களும் எடுத்துக் கூறி கெதலியாவை எச்சரித்தார்கள். (எரே 40:13; எரே 41:15).

"நீங்கள் கல்தேயரைச் சேவிக்கப் பயப்பட வேண்டாம்" - கெதலியா இந்தச் சூழ்நிலையில் நல்ல ஆலோசனை கூறுகிறான். ஆனால் இஸ்மவேலோ கெதலியாவை மிஸ்பாவில் கொன்றுபோட்டான். அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ் என்பவனின் ஆலோசனைப் படி இஸ்மவேல் கெதலியாவைக் கொன்று போடுகிறான். அவர்களுக்கு மறுபடியும் தலைவர் இல்லாமல் போயிற்று. (எரே 40:7-43:13). இதனால் யூதா ஜனங்களுக்கு மேலும் பல உபத்திரவங்கள் உண்டாயிற்று. பலர் எகிப்து தேசத்தில் மரித்துப் போனார்கள். கர்த்தருக்கும், அவருடைய தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாமற்போன படியினால் யூதருக்கு இந்த வாதை உண்டாயிற்று.

17. இஸ்ரவேலில் குழப்பம் - (யோசு 22:1; நியா 8:1; 9:1; 12:1; 20:1; 1சாமு 22:11; 23:13; 24:1; 26:2; 2சாமு 2:12; 3:1; 15:1; 20:41; 1இராஜா 12:16; 15:16,27; 16:9,15,21; 2இராஜா 9:14; 11:4; 14:8; 15:10,13,16,25,30; 16:5; 21:23)

2இராஜா 25:25 ஏழாம் மாதத்திலே, ராஜவம்சத்திலே பிறந்த எலிசாமாவின் குமாரனாகிய நெத்தனியாவின் குமாரன் இஸ்மவேல் பத்து மனுஷரோடேகூட வந்து, கெதலியாவையும், அவனோடே மிஸ்பாவிலிருந்த யூதரையும், கல்தேயரையும் வெட்டிக்கொன்று போட்டான்.

18. மீதமுள்ளோர் எகிப்துக்கு ஓடிப் போகிறார்கள்

2இராஜா 25:26 அப்பொழுது சிறியோரும் பெரியோருமாகிய ஜனங்கள் யாவரும் சேனாபதிகளும் கல்தேயருக்குப் பயந்ததினாலே எழுந்து புறப்பட்டு எகிப்திற்குப் போனார்கள்.

"எகிப்திற்குப் போனார்கள்" - (எரே 42-43). எகிப்தும் நேபுகாத்நேச்சாரிடம் ஒப்புக் கொடுக்கப்படும் என்றும் எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தான். அவர்கள் எகிப்துக்கு ஓடிப்போனாலும் பாபிலோனின் ஆளுகையிலேயே இருக்கிறார்கள். (எரே 44:29-30).

19. பாபிலோனில் யோயாக்கீன் விடுதலையாகிறான்

2இராஜா 25:27 யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தேழாந்தேதியிலே, ஏவில் மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து புறப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி,

2இராஜா 25:28 அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய சிங்காசனத்தைத் தன்னோடே பாபிலோனிலிருந்த ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு உயரமாக வைத்து,

2இராஜா 25:29 அவனுடைய சிறைச் சாலை வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் நித்தம் தனக்கு முன்பாகப் போஜனம் பண்ணும்படி செய்தான்.

25 அதிகாரம்

2இராஜா 25:30 அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுடைய செலவுக்காக, ராஜாவினால் கட்டளையான அநுதினத் திட்டத்தின்படி, அநுதினமும் கொடுக்கப் பட்டுவந்தது.

"ஏவில் மெரொதாக்" **(Evil-merodach)** - இவன் பாபிலோனின் ராஜா. இவன் தன்னுடைய முதலாம் வருஷ ஆட்சிக் காலத்தில் யோயாக்கீனை உயர்த்தினான். அவனைச் சிறையிருப்பிலிருந்து விடுவித்தான். தன்னோடு போஜனம் பண்ணும்படி செய்தான். (2இராஜா 25:27-29).